# முகிழ்

මුගිලි - MUGIZHI






## 25 வெள்ளிவிழா

## சிறப்பு மலர்

பழைய மாணவர் ஒன்றியம்

மமா/ஹவ/கெர்கஸ்வோல்ட் இல.02 தமிழ் வித்தியாலயம்

பொகவந்தலாவ

# முகிழ்

முகிழ் - MUGIZHI

மமா/ ஹவ/ கெர்கஸ்வோல்ட் இல.02 தமிழ் வித்தியாலயம்
பொகவந்தலாவ

25

## வெள்ளிவிழா
## சிறப்பு மலர்

வெளியீடு
பழைய மாணவர் ஒன்றியம்

# முகிழ்

## வெள்ளிவிழா சிறப்பு மலர் - ௨0ா௭


பதிப்பாசிரியர்கள்
சுப்பையா கமலதாசன்
பழனியாண்டி விஜயகாந்தன்



வெளியீடு
பழைய மாணவர் ஒன்றியம்
கெர்கஸ்வொல்ட் இல.02 தமிழ் வித்தியாலயம்
பொகவந்தலாவை

புத்தக நியம எண்: 978 955 7382 00 5

*Designed and Printed by*
**GOD Creative Lab**
132/4, Vivekananda Hill, Colombo 13
Phone: 0774 184 489

# உள்ளடக்கம்


- அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் ஆசிச் செய்தி 7
- கௌரவ பிரதமர் அவர்களின் ஆசிச் செய்தி 8
- கல்வி அமைச்சர் அவர்களின் ஆசிச் செய்தி 9
- கல்வி இராஜாங்க அமைச்சர் அவர்களின் ஆசிச் செய்தி 10
- பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின் ஆசிச் செய்தி 11
- மாகாண அமைச்சர் அவர்களின் ஆசிச் செய்தி 14
- வலய கல்விப் பணிப்பாளர் அவர்களின் ஆசிச் செய்தி 15
- கோட்டக் கல்விப் பணிப்பாளர் அவர்களின் ஆசிச் செய்தி 16
- பாடசாலை அதிபரின் வாழ்த்துச் செய்தி 17
- முன்னாள் அதிபர் - ஏ.லோகநாதன் 18
- முன்னாள் அதிபர் - ஏ.வேலுசாமி 20
- முன்னாள் அதிபர் - S. செல்வராஜ் 21
- மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் அவர்களின் வாழ்த்துரை 23
- பதிப்புரை 26
- மீனாட்சியம்மாள் நடேசய்யர் (இலங்கையின் மாற்றத்திற்கான முதலாவது பெண்குரல்) 27
- இருபத்தோராம் நூற்றாண்டுக்கான பாடசாலைகள்.வகுப்பறைகள். ஆசிரியர்கள் 34
- மலையக மாற்றத்தில் ஆசிரியர்களின் வகிபாகம் 42
- மனிதவிருத்தியில் தென்னாசியாவில் முன்னிற்கும் இலங்கை 46
- யாப்பு திருத்திற்கான தனிநபர் பிரேரணை 50
- மலையக மக்களின் அடையாளம் எது 54
- மலையகத் தேசியம் அண்மைக்கால முன்னெடுப்புக்களும் அடுத்தக்கட்ட நகர்வுகளும் 58
- ஆரம்பக் கல்வி பிள்ளைகளுக்கான விஞ்ஞானக் கல்வியின் அவசியம் 62
- நல்லிணக்க பொறிமுறைகள் தொடர்பான கலந்தாலோசனை செயலணியின் அறிக்கைக்கு என்ன நடக்கப்போகிறது 67
- மலையகத்தவர்களை சிங்களவர்களாக மாறக் கோரியநேரு- கொத்தலாவல ஒப்பந்தம் 72
- வரலாற்றின் வழித்தடம் தேடி 78
- மலையக தேசிய பல்கலைக்கழகத்தின் முக்கியத்துவம் 83
- மலையக எழுச்சிக்கான போராளிகளின் மறைவு 85
- ஊடகத்துறையின் உண்மைத்தன்மை இன்று வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றதா 88
- சமூகமாற்றத்தின் கருவூலமாய் கந்தலோயா 94
- கொலைச்சிந்தும் கலகக்குரலும் 95
- காமன்கூத்து 100
- இறைச்சிப் பெட்டிக்காரன் 109
- முறிந்து செல்லும் முதுகெழும்புகள் 112
- ஜோனையா 114
- எலிப் பொறியில் பூனை 119
- மனங்கொள்வோம் மகுட வாசகத்தை 128
- கவிதைகள் 130
- தாயின் மணிக்கொடி 135
- கடந்துவந்த சுவடுகள் 137

# பாடசாலை கீதம்

மலைமேகம் தழுவிடும் மலையகத்தில்
மாண்புடன் விளங்கும் கலையகமாம்
அரத்தோட்டம் சமவெளி தீரத்தில்
அழகுறும் கெர்கஸ்வோல்ட் தேஞ்சோலை

இந்து கத்தோலிக்கம் இஸ்லாமும்
இணைந்தே கரம் கோர்த்து ஒற்றமையாய்
சுந்தரத் தமிழில் நேயமுடன் பயிலும்
கேர்கஸ்வோல்ட் தமிழ் வித்தியாலயம்

இயலும் இசையும் நாடகமும்
இணைந்தே வளரும் கலைக்கூடம்
அம்புலி அருந்ததி ஆதவன் என
ஆற்றல் காட்டும் நல் இல்லங்களும்

அதிபர் ஆசிரிய மாணவர்கள்
ஆர்வம் காட்டும் எம் கலைக்கூடம்
சாந்தி சமாதானம் பேரொளியாலே
தேசப்பெருமை காத்திடுமே

கடமை கண்ணியம் கட்டுப்பாடு
கற்றுத்தரும் அன்னைக் கலைக்கூடம்
கல்வியோடு கலை வளர்த்து - என்றும்
வாழிய வாழிய வாழியவே.



CP/HZ/KIRKOSWALD NO-02 TAMIL VIDYALAYAM

BOGAWANTHALAWA

கற்று உழைத்து உயர்

## நோக்கக் கூற்று (Vision)

எதிர்கால வாழ்வுக்கு நிகழ்கால தரமான கல்வி

## பணிக் கூற்று (Mission)

அர்ப்பணிப்புடன் கூடிய சேவையால்
அறிவு, திறன், மனப்பாங்குடன் கூடிய
விழுமியங்களைக் கொண்ட நற்பிரஜைகளை உருவாக்குதல்.

## மகுட வாசகம் (Moto)

கற்று உழைத்து உயர்



# அதிமேதகு ஜனாதிபதியின் ஆசிச் செய்தி

ශ්‍රී ලංකා ජනාධිපති

இலங்கை சனாதிபதி

President of Sri Lanka

**வாழ்த்துச் செய்தி**

பொகவந்தலாவை, கெர்கஸ்வோல்ட் இல-2 தமிழ் வித்தியாலயத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தினர் ஏற்பாடு செய்யும் மலர் வெளியீட்டுக்கு வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும், நவீன தொழில்நுட்பத்துடன் வேகமாக வளர்ச்சியடைந்து வரும் உலகத்துடன் போட்டிபோட்டு முன்னேறிச் செல்வதற்கு, கல்வியறிவானது அத்தியாவசியமானதாக காணப்படுகின்றது. கல்வியறிவு பெற்ற சமூகமே பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் முன்னோக்கிச் சென்றுகொண்டிருப்பதை நாம் கண்கூடாக பார்க்கிறோம்.

25 வருடங்களாக கெர்கஸ்வோல்ட் பிரதேசத்தின் மாணவ சமுதாயத்திற்கு கல்வி என்னும் அரும் பொக்கிஷத்தை வழங்கி, ஒழுக்கத்துடனும் பண்புடனும் கூடிய ஆளுமைமிக்க நற்பிரஜைகளை உருவாக்குவதற்கு உறுதுணையாக இருந்துவரும் இப்பாடசாலையின் முன்னாள் இந்நாள் அதிபர்கள் ஆசிரியர்களுடைய அர்ப்பணிப்பான சேவையினையும், கல்வி கற்ற பாடசாலையை மறக்காது தொடர்ந்தும் பாடசாலையோடு இணைந்து பயணிக்கும் பழைய மாணவர் சங்கத்தின் செயற்பாடுகளையும் இச்சந்தர்ப்பத்தில் நான் பாராட்டி நிற்கின்றேன்.

பொகவந்தலாவை, கெர்கஸ்வோல்ட் இல-2 தமிழ் வித்தியாலயம் எதிர்காலத்திலும் சிறப்பாக செயற்பட்டு கல்வியறிவு மிக்க பிரஜைகளை உருவாக்க அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமென எதிர்பார்ப்பதோடு, வெள்ளி விழா கொண்டாட்டங்கள் மற்றும் அதனுடன் ஒன்றிணைந்த செயற்பாடுகள் அனைத்தும் சிறப்பாக அமைய எனது வாழ்த்துக்கள்.

**மைத்ரிபால சிறிசேன**

**2017 மார்ச் 13 ஆம் திகதி**

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு

Democratic Socialist Republic of Sri Lanka



# கௌரவ பிரதமரின் ஆசிச் செய்தி

ශ්‍රී ලංකා අග්‍රාමාත්‍ය
இலங்கையின் பிரதம அமைச்சர்
**Prime Minister of Sri Lanka**

## MESSAGE FROM THE HON. PRIME MINISTER

I take pleasure in submitting a message of felicitations for the souvenir celebrating the Silver Jubilee of the Kirkoswald No 02 Tamil Vidyalaya, Hatton.

As a type II school with classes from Grade 1 -11, it commenced operations in 1992 and has rendered yeoman service to the plantations community, having contributed towards the empowerment of a great number of students of the area.

The endeavour of the Past Pupils to support their school is indeed admirable and must be commended as an effort that seeks to give back to their alma mater.

I take this opportunity to wish them all the very best.

**Ranil Wickremesinghe**
Prime Minister

13th March 2017



# கௌரவ கல்வி அமைச்சரின் ஆசிச் செய்தி

ලිපිනය / விலாசம் / Address

කාර්යාලය : අධ්‍යාපන අමාත්‍යාංශය, "ඉසුරුපාය", බත්තරමුල්ල.

அலுவலகம் : கல்வி அமைச்சு, "இசுருபாய", பத்தரமுல்ல.

Office : Ministry of Education, "Isurupaya", Battaramulla.

නීතිඥ අකිල විරාජ් කාරියවසම් (පා.ම.)
(බී.ඒ.) (එල්.එල්.බී.)
அகில விராஜ் காரியவசம் (பா.உ.)
(பீ.ஏ.) (எல்.எல்.பீ.) - சட்டத்தரணி
**AKILA VIRAJ KARIYAWASAM (M.P.)**
(B.A.) (L.L.B.) Attorney-at-Law
අධ්‍යාපන අමාත්‍ය
கல்வி அமைச்சர்
**Minister of Education**

දුරකථනය / தொலைபேசி / Telephone

කාර්යාලය / அலுவலகம் / Office - 011-2784848

ෆැක්ස් / தொலைநகல் / Fax - 011-2784825

විද්‍යුත් තැපෑල / மின்-அஞ்சல் / E-mail : akilavirajk@gmail.com

මගේ අංකය / எனது இல. / My No.

ඔබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date 13th March 2017

**CPHZ/KIRKOSWALD NO. 2 TAMIL VIDYALAYAM, BOGOWANTALAWA**

I am very pleased to send this message of felicitation to the Souvenir published to mark the Silver Jubilee of the Kirkoswald No. 2 Tamil Vidyalayam, Bogawantalawa.

The Kirkoswald No. 2 Tamil Vidyalayam was founded in the year 1992 to cater to the needs of the children of the workers in the Plantation Sector. Over the past 25 years, this school has extended its immense contribution to the needs of the children of this sector which is described as the backbone of the country's economy.

It is essential that the children of estate workers be educated in the best way possible to make them responsible citizens equal in all respects to the people of other sectors. It is also time for them to raise their children to become professionals such as doctors, lawyers, engineers etc.

As education is the greatest wealth of the nation the government is allocating a large percentage of its GDP to improve and make education accessible to all. Our government believes in paving equal opportunities to every student of this country irrespective of their race, religion, culture or the social standing. And there will be no exception to Kirkoswald No. 2 Tamil Vidyalayam, Bogawantalawa.

I do hope that the good services offered by the Kirkoswald No 2 Tamil Vidyalayam will continue in the years to come and I wish the Principal, Staff and Students of the Vidyalayam every success in all their endeavours.

The good governance has in its heart the principle of equality, justice and respect for all communities and religious groups that I can assure you that I will serve you without any prejudice.

May all beings be happy!

**Akila Viraj Kariyawasam (M.P.)**
**Minister of Education**



# கௌரவ கல்வி ராஜாங்க அமைச்சரின் ஆசிச் செய்தி

වී. එස්. රාධක්‍රිෂ්ණන් (පා.ම)
வி.எஸ். இராதாகிருஷ்ணன் (பா.உ)
**V. S. Radhakrishnan (M.P)**
අධ්‍යාපන රාජ්‍ය අමාත්‍ය
கல்வி இராஜாங்க அமைச்சர்
**State Minister of Education**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எமது இல.<br>My No. | MOE/SM/2016/LP/264 | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 2017.03.07 |

## இராஜாங்க கல்வி அமைச்சரின் வாழ்த்துச் செய்தி

மத்திய மலைநாட்டில் அட்டன் வலயத்திற்கு உட்பட்ட பொகவந்தலாவ கெர்கஸ்வோல்ட் இல – 2 தமிழ் வித்தியாலயத்தின் இருபது வருட பூர்த்தியை முன்னிட்டு வெளியிடப்படும் பாடசாலை பற்றிய நினைவு குறிப்பிற்கான வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் அகமகிழ்வடைகின்றேன்.
22.01.1992 ஆம் ஆண்டு **"கற்று உழைத்து உயர்"** என்ற வாசகத்துடன் ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை மலையக சமூகத்திற்கான கல்விப் பணியை சிறந்த முறையில் செய்து மாணவர்களை எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் தயார் படுத்தி வரும் பாடசாலைகளுள் முதன்மையாக திகழ்கின்றது. தோட்டப் பகுதிகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ள இவ்வித்தியாலயம் அங்கு வாழும் மாணவர்களின் கல்வியிலும் பாரம்பரியத்திலும் பெரியளவில் மாறுதலை ஏற்படுத்தியுள்ளது என்றால் அது மிகையாகாது

பாடசாலை கல்வி அடைவுகளான 05 ஆம் தர புலைமைப் பரிசில் பரீட்சை, (க.பொ.த) சாதாரண தரப் பரீட்சை மற்றும் (க.பொ.த) உயர்தர பரீட்சைகளிலும் தேசிய மட்டங்களில் குறிப்பிடத்தக்க வளர்ச்சிகளை அடைந்துள்ளதோடு விளையாட்டுத் துறை கலை கலாசார நாடகங்கள் போன்ற துறைகளிலும் நாட்டம் காட்டி பல்வேறு விருதுகளை தனதாக்கிக் கொண்டுள்ளது.
அதுமட்டுமல்லாது இப்பாடசாலையின் பழைய மாணவர்கள் கல்வி கற்று உயர் பதவிகளில் இருப்பதால் பாடசாலைக்கு பலதரப்பட்ட வழிகளில் ஆதரவளித்து வருகின்றமையை காணக்கூடியதாக உள்ளது.

இப்பாடசாலையின் ஆசிரியர் குழாம் வகுப்பறை முகாமைத்துவத்தை நன்கு திட்டமிட்டுச் செயற்படுத்துவதனால் பாடவிதான இணைப்பாட விதான செயற்பாடுகளில் கூடுதல் ஆர்வம் காட்டவும் மாணவர்களிடத்தே நல்ல பண்பாட்டு விழுமியங்களை வளர்க்கவும் ஏதுவானதாக அமையப் பெறுகின்றது.

இப் பாடசாலையின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்நாளில் வெற்றிக்கு உறுதுணையாக நின்ற மாணவர்களின் ஆர்வத்தினையும் அதிபர் , ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவர்களையும் பாராட்டுவதோடு சிறப்பான தலைமைத்துவத்தைக் கொண்டுள்ள இப்பாடசாலையானது பல தடைகளை தாண்டி மென்மேலும் வளர வேண்டும் என பிராத்திப்பதோடு இவ்விழாவை சிறப்புற கொண்டாட மனமார வாழ்த்துகின்றேன்.

**வீ.எஸ்.இராதாகிருஷ்ணன் பா.உ**
இராஜாங்க கல்வி அமைச்சர்

V. S. RADHAKRISHNAN M.P. (J.P.U.M.)
State Minister of Education
State Ministry of Education
4th Floor,
"Isurupaya", Battaramulla

Ministry of Education. 4th floor, "Isurupaya" Battaramulla, Colombo, Sri Lanka.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| රාජ්‍ය අමාත්‍ය<br>இராஜாங்க அமைச்சர்<br>State Minister | +94 11 2 784 836 (Ext. 1414) | ෆැක්ස්<br>பெக்ஸ்<br>Fax | +94 11 2 785 449 | විද්‍යුත් තැපෑල<br>மின்னஞ்சல்<br>E-mail | v.radhakishnan@gmail.com |



# கௌரவ நாடாளுடன்ற உறுப்பினரின் ஆசிச் செய்தி

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
**PARLIAMENT**

*Mylvaganam Thilakarajah*
*Member of Parliament – Nuwara Eliya District*

**My No:** **Your No:** **Date:**

கால்நூற்றாண்டில் கால்பதிக்கும் கெர்க்கஸ்வோல்ட் தமிழ் வித்தியாலயம் :

**எழுதப்படும் வரலாறு**

இலங்கை, மலையகத்தின் வரலாறு என்பது வித்தியாசமானதும் விசித்திரமானதுமானதும் ஒன்று. அண்டைய நாடான இந்தியாவில் குறிப்பாக தமிழ் நாட்டில் இருந்து இலங்கை மண்ணுக்கு 'கூலி' என்ற பெயரோடு பிரித்தானியரால் அழைத்துவரப்பட்ட இந்த மக்கள் கூட்டம் இன்று தன்னை 'மலையகத்தமிழர்' எனும் தனித் தேசிய இனமாக பிரகடனப்படுத்திக்கொள்வது என்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வளர்ச்சி. இந்த வரலாற்றுப்பணியில் பெரும்பாலானவர்களின் பெரும் உழைப்பு விதைக்கப்பட்டிருக்கின்றது. தான் வழங்கும் உடல் உழைப்புக்கான மொத்தக் கூலியை 'பெரியாங்கங்காணி' எனும் முகவர் ஊடாக (எஜண்ட்) பெற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்ட, அவர்களின் அடிமைகளாக வாழ்வை ஆரம்பித்த சமூகம் இற்றைக்கு சரியாக இருநூறு வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்த வாழ்க்கைப்போராட்டம் பல கோணங்களில் கூர்மையடைந்து வர்க்கப்போராட்டமாக, குடியுரிமைக்கான போராட்டமாக, வாக்குரிமைக்கான போராட்டமாக, கல்விக்கான போராட்டமாக, காணியுரிமைக்கான போராட்டமாக, வீட்டுரிமைக்கான போராட்டமாக பல தளங்களைக் கண்டு இன்று தன்னைத் தனியான தேசிய இனமாக அரசியல் ரீதியாக அங்கீகரிக்கக் கோரும் இனத் தேசியத்துக்கான போராட்டமாக ஜனநாயக வழியில் இயங்கிக்கொண்டிருக்கிறது.

இந்த போராட்டங்களுக்கு மத்தியில் கல்விக்கான போராட்டத்தை இந்த மக்கள் கூட்டம் முன்னெடுத்திருக்காதபட்சத்தில் இன்றும் கூட ஒரு கொத்தடிமைச் சமூகமாகவே வாழ்ந்திருக்கக் கூடும். எனினும் காலத்திற்கு காலம் கல்விக்கான தேவையை உணர்ந்து மலையக சமூகத்துக்குள் நடந்த கல்விப் புரட்சியானது இந்த நாட்டில் இன்னோரன்ன ஒடுக்குமுறைகளுக்கு மத்தியில் தம்மை ஒரு தனித்துவமான இனமாக அடையாளப்படுத்தும் வல்லமையை வழங்கியிருக்கின்றது.

'கூலிகளாக வந்தவர்களுக்கு படிப்பு எதற்கு?' என்ற நிலையில் இருந்து பெற்றோரின் உழைப்பைப் பெற்றுக்கொள்வதற்காக அவர்களின் பிள்ளைகளை பராமரிக்கும் ஒரு நிலையமாக உருவாக்கப்பட்ட 'பிள்ளைக்காம்பராக்கள்' (Creach) எனும் கொட்டகைகள்தான் பரிணாம வளர்ச்சி பெற்று இன்று மலையகத் தோட்டப்பாடசாலைகள் (Plantation Schools) எனும் பெயருடன் இயங்கி வருகின்றன. மறுபுறத்தில் 'பிள்ளைக்காம்பரா' கலாசாரத்தில் இருந்தும் இன்னும் முழுமையாக விடுதலை பெறவில்லை. அதன் தேவை என்ன எபது பற்றி வேறாக ஆராயப்பட வேண்டிய ஒன்று. அதேநேரம் இந்த தோட்டப்பாடசலைகளை உருவாக்குவதில் மலையக மக்களை அழைத்து வந்த பிரித்தானியர், பிரித்தானிய பாராளுமன்றில் விவாதித்திருக்கிறார்கள், அதன் பயனாகவே இங்கு பாடசாலைகள் உருப்பெறத் தொடங்கியுள்ளன என்பதும் அவதானத்துக்குரியது. இது பற்றிய பதிவுகளை இப்போது இங்கிலாந்தில் வசிக்கும் மு.நித்தியானந்தன் ஆதாரங்களுடனான பதிவுகளைச் செய்துள்ளார்.

இலங்கையின் இலவசக்கல்வி பெரிதும் போற்றி புகழப்படுகின்ற போதும் அது இலவசக்கல்வியாக இருந்ததே தவிர 'சமத்துவ கல்வியாக' இருக்கவில்லை என்பதற்கு இன்றும் கூட தோட்டப்பாடசாலை எனும் வகையறாவில் இலங்கை கல்வி அமைச்சின் கீழ், கல்வித் திணைக்களத்தின் கீழ் ஒரு துறை இருக்கின்றது என்பது சான்று. இன்றைய திகதியில் 844 பாடசாலைகள் தோட்டப்பாடசாலைகள் கொண்ட ஒரு பிரிவு தனிப்பிரிவாக கல்வி அமைச்சில் ஒரு அலகாக (Unit) தொழிற்படுகின்றது. தோட்டப்பாடசாலைகளை விருத்தி செய்யும் நோக்கோடு அந்த அலகு செயற்படுவது வாய்ப்பானது எனினும் அதன் மறுவடிவமாக தோட்டப்பாடசாலைகள் தேசிய கல்வித்துறை நீரோட்டத்திற்குள் இன்னும் முழுமையாக உள்வாங்கப்படவில்லை என்பதற்கான குறியீடும் அதுவாகவே இருக்கின்றது. எனவேதான் இலவசக்கல்வி – சமத்துவக்கல்வியாக இருக்கவில்லை என்கிற கருத்தை வலியுறுத்த வேண்டியிருக்கின்றது.

1948இல் சுதந்திரத்தின் தொடர்ச்சியாகவே இலங்கையில் இலவசக்கல்வி எனும் கோட்பாடு சி.டபிளயு. டபிள்யூ. கண்ணங்கர அவர்களினால் முன்வைக்கப்படும்போது 1972 ம் ஆண்டு காணி சுவீகரிப்புச்சட்டத்தின்

*No. B 1, M.P's Quarters, Madiwela*
*E-mail: thilakarajah_m@parliament.lk* *Telephone No: 0112778481*

பின்னர் தோட்டங்களை அரசு பொறுப் பேற்ற பின்னர் தான் படிப்படியாக தோட்டங்களுக்குள் இயங்கிய தோட்டப் பாடசாலைகள் அரசாங்க பாடசாலைகளாக மாற்றம் பெற்றன. அதுவரை தோட்ட முகாமையாளரின் சம்பளத்திற்கு வேலை செய்யும் அவர்களின் பாடத்திட்டத்தைப் போதிக்கும் ஒரு நிறுவனமயபட்ட முதலாளித்துவ தோட்ட நிர்வாகத்துக்கு தேவையான ஒரு தனியான கல்வி முறைமையிலேயே மலையகப் பெருந்தோட்ட மக்கள் வைக்கப்பட்டார்கள். எனவே இலவச கல்வி இலங்கையில் சமத்துவக் கல்வியாக இருக்கவில்லை என்பது கண்கூடு.

மறுபுறத்தில் இலவச கல்வியின் தந்தை சி.டபிள்யூ. டபிள்யூ. கண்ணங்கர தான் இலவசக் கல்விக்கொள்கையை வடிவமைக்கும்போது மலையகப் பெருந்தோட்டத்தில் இயங்கிய பாடசாலைகள் குறித்த கவனத்தை செலுத்தாமலும் இல்லை. அவ்வாறு இந்த தோட்டப் பாடசாலைகளை அரச இலவச பாடசாலைகளாக உள்வாங்குவதென்றால் அவற்றை சிங்கள மொழி மூல பாடசாலைகளாக செயற்பட வைப்பதற்கான ஒரு முயற்சியையே அவர் மனதில் கொண்டிருந்தார் எனவும் அறியக்கிடைக்கின்றது. அடிப்படிபார்க்கும்போதும் தமது தாய் மொழியில் கல்வி கற்கும் உரிமையை மறுக்கும் "இலவசக்கல்வி" சமத்துவக் கல்வியாக இருந்திருக்க வாய்ப்பில்லை.

எது எவ்வாறாயினும் இன்றைய இருநூற்றாண்டு கால மலையக வரலாற்றில் நூற்றாண்டு கடந்த வரலாற்றைக் கொண்ட பல பாடசாலைகள் மலையகத்திலே நாம் காணலாம். எனவே மலையக கல்விவரலாறு என்பது மலையக மக்களின் வாழக்கை வரலாற்றுடன் ஒன்றித்தே பயணித்துள்ளது. மலையகம் கல்வியில் பின்தங்கிய சமூகமோ கல்விக்காக பின்நிற்கும் சமூகமோ இல்லை. ஆனால், அந்த தொழில் துறையின் அந்த நிர்வாக முறையில் உள்ள கட்டமைப்பு அவர்களுக்கான கல்வி வாய்ப்பை குறைத்திருக்கிறது என்பதே உண்மையாகும். இந்த கல்வி வரலாற்று பின்பலம் தான் இன்று இலங்கையின் சட்டதுறையில் நீதிபதிகளாகவும், சட்டவாக்கத்துறையில் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும், நிரவாகத்துறையில் ஆணையாளர்களாகவும், அதிகாரிகளாகவும் ஊடகத் துறையில் பரவலாக பணியாற்றுபவர்களாகவும், பணிபுரியும் ஆற்றலை மலையகத்துக்கு வழங்கியிருக்கிறது. இதற்கெல்லாம் மேலாக மலையகத் தமிழ் இலக்கியம் எனும் ஒன்றை ஈழத்து இலக்கிய பரப்பில் வேரூன்ற செய்வதிலும் மலையக சமூகம் வெற்றி கண்டிருக்கின்றது.

மலையகத்தில் நூற்றாண்டைக்கடந்த அல்லது அதனை எட்டும் பாடசாலைகளின் வரலாற்று பின்புலத்தை அவதானித்தால் அவையெல்லாம் கத்தோலிக்க அல்லது கிறிஸ்தவ மிஷனரிகளால் நிர்வகிக்கப்பட்டவை என்பது தெளிவாகும். நுவரெலியா திரித்துவ கல்லூரி (175 ஆண்டுகள்), இறக்குவானை பரியோவான் கல்லூரி (130 ஆண்டுகள்), ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரி (125 வருடங்கள். இது முன்பு மெதடிஸட் கல்லூரி என்றே இயங்கியது. அப்போது கவிஞர் சி.வி.வேலுப்பிள்ளை இங்கே கல்வி கற்றிருக்கின்றார்), நுவரெலியா சென்சேவியர் கல்லூரி (97 ஆண்டுகள்), ஹட்டன் புனித பொஸ்கோ கல்லூரி (83ஆண்டுகள்) கந்தப்பளை மெதடிஸ்ட் கல்லூரி, இரத்தினபுரி சென்.ஜோக்கிம் தோட்டப் பாடசாலை (80 வருடங்கள்), தலவாக்கலை சென்.பெட்ரிக்ஸ் கல்லூரி (இது யாழ்ப்பாண பெட்ரிக்ஸ் கல்லூரியின் கிளையாக இயங்கியது), நுவரெலியா நல்லாயன் பெண்கள் கல்லூரி (80 ஆண்டுகள்) பொகவந்தலாவை சென்மேரிஸ் (98 ஆண்டுகள்), ஹொலிரோசரி மகா வித்தியாலயம், மஸ்கெலியா சென். ஜோசப் கல்லூரி (80 ஆண்டுகள்) போன்ற பாடசாலைகளின் வரிசையை அடையாளப்படுத்தலாம். இந்த பாடசாலைகளின் பெயர்களுக்கு முன்னால் கிறிஸ்தவ அல்லது கத்தோலிக்க பெயர்கள் இடம்பெறுவது ஒரு தற்செயல் நிகழ்வன்று.

இந்தப் பாடசாலைகள் இன்று அரசாங்க பாடசாலைகளாக மாற்றம் பெற்றபோதும் கிறிஸ்தவ அல்லது கத்தோலிக்க சபையினரது செல்வாக்கும் வரலாறும் இங்கு உண்டு. ஆக, ஒரு புறம் மத நிறுவனங்களாலும் மறுபுறம் தோட்ட கம்பனிகளாலும் பராமரிக்கப்பட்டு வந்த மலையக பெருந் தோட்ட மக்களின் கல்விப் பாரம்பரியம் விதிவிலக்காக சில தன்னார்வ சுயமுயற்சி பாடசாலைகளாக வரலாற்றில் இடம்பிடிக்கின்றன. அவையும் பின்னாளில் அரசாங்க பாடசாலைகளாகி உள்ளன. அவற்றுள், முன்னாள் நாவலப்பிட்டி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் (1947-1952) அமரர் கே.ராஜலிங்கம், அவர்களது குடும்பச் சொத்தை நன்கொடையாகவும் ஊர் ஊராக அலைந்து நிதிதேடியும் உருவாக்கிய புசல்லாவை சரஸ்வதி தேசிய பாடசாலை, பதுளை மூன்றாம் கட்டையில் அமைந்துள்ள பாரதி தமிழ் வித்தியாலயம் (இதனை உருவாக்கிய திரு. கந்தசாமி இன்றும்

பதுளையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். இவர் பாரதி கந்தசாமி என்றே விளிக்கப்படுகின்றார். (இர.சிவலிங்கத்திற்கு பிறகு மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்க தலைவராக இவர் செயற் பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது)

பூண்டுலோயா தமிழ் மகா வித்தியாலயம் (இது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்புவரை கந்தசாமி வித்தியாலயம் என்றே அழைக்கப்பட்டது. அமரர். கந்தசாமி (பூண்டுலோயா மோட்டர் ட்ரான்ஸ்போர்ட் - எனும் பெரியவர் தமது குடும்ப சொத்தை வழங்கி இந்த பாடசாலையை அமைத்துள்ளார்) போன்ற பாடசாலைகளை இந்த வரிசைக்குள் அடக்கலாம். மேலும் ஆய்வு செய்தால் இந்த வரிசை இன்னும் நீளமானதாகவும் அமையலாம். அத்தகைய ஒரு வரிசையின் நீட்சியாகவே நான் பொகவந்தலாவை, கெர்கஸ்வோல்ட் தமிழ் வித்தியாலயத்தின் உருவாக்கத்தைப் பார்க்கிறேன்.

கெர்கஸ்வோல்ட் தமிழ் வித்தியாலயம் கால்நூற்றாண்டில் கால்பதிக்கிறது என்றால் நான் உயர்தரம் கற்கும் காலத்தில்தான் இந்த பாடசாலை உதயமாகியிருக்கிறது. இதனை உருவாக் கியவர்கள் யார் என்பது போன்ற விபரங்கள் என்னால் இப்போதைக்கு அறிய முடியாத போதும் இந்த "முகிழி" சஞ்சிகை அதனை பதிவு செய்யும் என எண்ணுகிறேன். எனவே மலையகப் பெருந் தோட்ட பாடசாலைகளின் தோற்றம் வளர்ச்சியுடன் ஒப்பிட்டு நோக்குகையில் நமது காலத்தில் உருவாக்கப்பட்ட ஒரு எழுதப்படும் வரலாறாக இந்த கெர்கஸ்வோல்ட் தமிழ் வித்தியாலயம் கால் நூற்றாண்டு நிறைவு அமைகிறது என என்னால் கட்டியம் கூற முடியும். இந்த வரலாற்றுப் பணியில் பங்கேற்கும் பாடசாலை ஸ்தாபகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், பாடசாலை பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் மற்றும் சமூக ஆர்வலர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

கால் நூற்றாண்டினைக் காணும் கெர்கஸ்வோல்ட் தமிழ் வித்தியாலயம் நூற்றாண்டு காணும் நாளில் மலையக மைந்தர்களால் உருவாக்கப்பட்ட ஒரு மாபெரும் கல்லூரியாக மலையகத்தின் களங்கரை விளக்காக ஒளிவீச வேண்டும் எனும் அவாவுடன் எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களை வழங்குகிறேன்.

வாழ்த்துக்களுடன்

ம.திலகராஜா
பாராளுமன்ற உறுப்பினர்
நுவரெலியா மாவட்டம்

187, டிம்புள வீதி
ஹட்டன்
12.03.2017



# கௌரவ மத்திய மாகாண அமைச்சரின் ஆசிச் செய்தி

ஹட்டன் கல்வி வலயத்தில் அமைந்துள்ள கெர்கஸ்வோல்ட் இல.02 தமிழ் வித்தியாலயம் தனது இருபத்தைந்து வருடகால கல்விப் பணியில் வெள்ளி விழா காணும் இவ்வேளை, அதன் ஞாபகார்த் தமாக வெளியிடப்படுகின்ற சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் இந் நாட்டின் பொருளாதாரத்திற்கு வலு சேர்க்கின்ற பெருந்தோட்டத்துறை சார்ந்த மக்கட் பிரதிநிதி என்ற வகை யிலும், மத்திய மாகாண அமைச்சர் என்ற வகையிலும் இதயபூர்வமான மகிழ்வினைக் கொண்டுள்ளேன்.

ஒரு சமூகத்தின் வளர்ச்சியை அளவிடும் கருதுகோள்களில் ஒன்றாக கல்வி விளங்குகின்றது. அந்த வகையில் அமைவிட பிரதேசம் சார்ந்த மலையக மக்களின் கல்வித் தேவையினை பூர்த்தி செய்வதில் கடந்த 25 வருட காலம் பெரும் பணியாற்றுகின்ற இப் பாடசாலைக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதற்கு கடமைப்பட்டுள்ளேன்.

குறிப்பாக இப் பாடசாலையின் கல்வி அடைவு மட்டங்களை நோக்குகையில் முன்னேற்ற கரமான பெறுபேறுகளை பெற்றுத் தருகின்றமை பாடசாலைத் தரவுகளில் இருந்து தெரிய வருகி ன்றது. அத்துடன் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சிறந்து விளங்குவதனை அவதானிக்க முடிகின்றது. இந்த வெற்றிகளைப் பெற்று வருகின்ற மாணவர்கள், அவர்களைப் பயிற்றுவிக்கின்ற ஆசிரியர்கள், தலைமைத்துவத்தை வழங்குகின்ற அதிபர் என்றும் எனது பாராட்டுக்குரியவர்கள்.

வெள்ளி விழாவினை சிறப்புடன் நடாத்துவதில் பழைய மாணவர்களும் இணைந்து செயற் படுவதாக அறிந்தேன். அவர்களுக்கும், பாடசாலையின் சகல செயற்பாடுகளிலும் அர்ப்பணிப்புடன் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் பெற்றோருக்கும் எனது வாழ்த்துக்கள்.

வெள்ளி விழா கண்டிருக்கும் இப் பாடசாலையினது வெற்றிகள் என்றென்றும் தொடர்ந்திட இறை ஆசி வேண்டுகின்றேன்.

எம். ராமேஸ்வரன்
மத்திய மாகாண விவசாய, சிறிய நீர்ப்பாசன, விலங்கு உற்பத்தி
மற்றும் அபிவிருத்தி, கமநல அபிவிருத்தி, நன்னீர் மீன்பிடி, சுற்றாடல் விவகாரம்,
இந்து கலாசாரம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர்



# வலயக் கல்வி பணிப்பாளரின் ஆசிச் செய்தி

கெர்கஸ்வோல்ட் இல.02 தமிழ் மகா வித்தியாலயம் 1992ம் அண்டு சீடா செயற்றிட்டத்தின் கீழ் புதிதாக நிறுவப்பட்டு இவ்வருடம் வெள்ளிவிழாவினை கொண்டாடுவது சிறப்பு மிக்க விடயமாகும். இதனை முன்னிட்டு பாடசாலையின் பழைய மாணவர்களால் "வெள்ளி விழா சிறப்பு மலரும்" வெளியிடப்படுகின்றது.

இம்மலரானது மாணவர்களின் ஆக்கங்களை கொண்டு அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாக அமைகின்றது. பாடசாலைகளின் சிறப்புக்களை அள்ளித்தரும் இம்மலரானது பாடசாலையின் பழைய மாணவர்களின் கை வண்ணத்தால் உருவாக்கம் பெற்றமையும் பாடசாலை யின் அழியா புகழை பறைச்சாற்றுகின்றது. ஆசிரிய பெருந்தகைகளின் ஊக்குவிப்புடன் கூடிய இந்நூல் வெளியீடானது மாணவர்களை கலைநுட்பம் வாய்ந்தவர்களாகவும் சுய ஆற்றல்களில் அபிவிருத்தி அடைந்தவர்களாகவும் எதிர்கால உலகின் வெற்றியாளர்களாய் திகழவும் பாரிய உறுதுணையாக அமைகின்றது.

தமது இலட்சிய பாதையினை அமைத்துக் கொள்வதற்கும் மன உறுதியினை திடம் பெறச் செய்வதற்கும் இனிவரும் காலங்களிலும் முயற்சியோடு செயற்படவும் இவை பாரிய பங்காற்று கின்றன.

"மாற்றங்கள் ஒவ்வொன்றும் புதிய ஆரம்பத்திற்கு வித்திடும் கருவியேயாகும்."

மாணவ சமுதாயத்தின் நல்லெழுச்சிக்கு வித்திடும் இந்நூலானது சிறப்பாக அமைவதற்கும் இனி வரும் காலங்களிலும் இவ்வாறான மாணவர்களின் ஆளுமை திறன்களை விருத்தி செய்யக்கூடிய புதிய படைப்புக்களும் ஆக்கங்களும் வெளிவர என்மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி,

வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்

**P. ஸ்ரீதரன்**
வலயக் கல்வி பணிப்பாளர்
வலயக் கல்வி பணிமனை
ஹட்டன்



# கோட்டக் கல்வி பணிப்பாளரின் ஆசிச் செய்தி

பொகவந்தலாவ பிரதேசத்தில் ஹட்/ கெர்க்கஸ்வோல்ட் இல-02 பாடசாலை தனது 25 வது ஆண்டு வெள்ளிவிழா கொண்டாடுவதை நினைத்து மகிழ்ச்சியடைகின்றேன். இப்பாடசாலை யானது காலத்துக்குக் காலம் தனது கற்றல் சார் செயற்பாடுகளிலும் இணைபாடவிதான செயற்பாடு களிலும் திறமைகளை வெளிகாட்டுவது எல்லோரும் அறிந்ததே.

அவ்வகையில் கெர்கஸ்வோல்ட் இல-02 பாடசாலை 25 வருடகாலமாக வெறுமனே கட்டிடங் களால் மட்டும் அலங்கரிக்கப்படாமல் தனது சிறப்பான செயற்பாடுகளால் வலயத்தில் சிறப்புமிக்க ஓர் பாடசாலையாக காணப்படுவது பெருமைக்குரியதே.

உதாரணமாக இப்பாடசாலையானது சென்றவருட (2015) க.பொ.த (சா/த) பெறுபேற்றில் வலயமட்டத்தில் நான்காம் இடத்தையும் கோட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது. புலமைப் பரிசில் பரீட்சையில் மூன்று மாணவர்கள் சித்தியடைந்தமையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

இப்பாடசாலை தனது வெள்ளிவிழா கொண்டாடும் காலக்கட்டத்தில் நான் கோட்டம் 2ன் கோட்டக் கல்விப்பணிப்பாளராக இருப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். எதிர்காலத்தில் இப் பாடசாலை மென்மேலும் உயர்ந்து பல்வேறு சாதனைகளை படைக்க மனதார வாழ்த்துகிறேன்.

**துரைராஜ்**
கோட்டக் கல்வி பணிப்பாளர்
கோட்டம் 02
ஹட்டன் வலயம்



## பாடசாலை அதிபரின் வாழ்த்துச் செய்தி

கெர்கஸ்வோல்ட் இல. 02 தமிழ் வித்தியாலயம் கெர்கஸ்வோல்ட் பாடசாலை என்ற பெயரிலே வேறு ஒரு இடத்திலே இயங்கியுள்ளது. இது மிகபழைய கட்டிடத்தையும் ஒரேயொரு பாடசாலை பொறுப்பாசிரியரையும் கொண்டு தரம் 01-05 வரையான வகுப்புகளுடன் இயங்கியுள்ளது. அவ்வாசிரியர் ஆசிரிய பயிற்சிக்காக ஆசிரியர் கலாசாலை சென்றமையாலும் இக்கட்டிடம் மாணவரின் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு பொருத்தமின்மையாலும் சிலகாலம் மூடப்பட்டு பின்னர் அக்கட்டிடம் உடைக்கப்பட்டதாக அறிகின்றேன்.

ஆனால் அதற்கு பின்னரான காலத்தில் மலையக பெருந்தோட்ட பாடசாலைகள் அபிவிருத்திக்காக வந்த சீடா செயற்திட்டம் இப்பகுதியிலுள்ள சிறார்களின் எதிர்கால கல்வியையும் இரண்டாம் நிலைக் கல்வியையும் கருத்தில் கொண்டு புதிய இரண்டு கட்டிடங்களைக் கட்டி 1992ம் ஆண்டு தற்போது இயங்கும் இடத்திலேயே கெர்கஸ்வோல்ட் இல. 02 தமிழ் வித்தியாலயம் என்ற பெயரிலே தரம் 01-11 வரையான வகுப்புக்களை கொண்ட கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகின.

எனவே 1992ம் ஆண்டு தொடங்கி 25 வருடமாக மிகவும் சிறப்பாக இயங்கி வரும் இக்கல்லூரி தனது வெள்ளி விழாவை மிகசிறப்பாக கொண்டாடுகிறது. இந்த வெள்ளி விழாகாலத்தில் நான் அதிபராக இருப்பதை நினைத்து பெரும் மகிழ்ச்சிஅடைகின்றேன்.

இந்த இருபத்தைந்து வருட பாடசாலை ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது கல்வி கலை கலாச்சாரம் மற்றும் விளையாட்டுத் துறைகளில் பல்வேறு சாதனைகளை படைத்துள்ளது. ஒவ்வொரு வருடமும் உயர்தர கணித விஞ்ஞான பிரிவுகளுக்கு மாணவர்களை அனுப்புவதோடு செல்வன் S. குணதாசன் மருத்துவ பீடத்திற்கு தெரிவாகியுள்ளமையும் திரு.T. சிவனேசன் சிறந்த கலைஞருக்கான ஜனாதிபதிவிருது பெற்றமையும் குறிப்பிட வேண்டும்.

இக்கல்லூரியின் பழைய மாணவர்கள் இன்று அரச மற்றும் அரச சார்பற்ற பல்வேறு துறைகளில் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் மிளிர்வது இக்கல்லூரிக்கு பெருமை தருகிறது. இவ்வாறான இக்கல்லூரியின் பழைய மாணவர் ஒன்றியம் முன்னெடுக்கும் வெள்ளிவிழா சிறப்பாக நடைபெற வாழ்த்துவதோடு இக்கல்லூரி எதிர்காலத்தில் இன்னும் பலசாதனைகளைச் செய்து இப்பிரதேசத்திலே சிறந்த பாடசாலையாகத் திகழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

**திரு. நா.அருளானந்தன்**
**அதிபர்**



# முன்னாள் அதிபரின் ஆசிச் செய்தி

பொகவந்தலாவ கெர்கஸ்வோல்ட் இல.02 தமிழ் வித்தியாலயத்தின் பழைய மாணவர்களின் அனுசரணையோடு இடம்பெறும் வெள்ளிவிழா நிகழ்வினை சிறப்பிக்கும் நோக்கோடு வெளியீடு செய்யப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் புளகாங்கிதம் அடைகிறேன்.

1992ம் ஆண்டு முதன்முதல் அங்கு காலடி வைத்தபோது, ஆரம்ப காலத்தில் ஒருபாடசாலை இயங்கியதாகவும் பின்னர் அது மூடப்பட்டு, டியன்சின் தமிழ் வித்தியாலயத்தோடு இணைக் கப்பட்டு விட்டதாகவும் அங்கிருந்த முதியோர்களிடமிருந்து அறியக் கூடியதாகவிருந்தது. சரியான தகவல்களை அப்போது அறியமுடியாதிருந்தது. எனினும் இரண்டாவது அத்தியாயத்தில் இக்கல்விக் கூடத்தின் முதலாவது அதிபர் என்ற வகையில் ஒருசில விடயங்களைப் பகிர்ந்து கொள்வதில் பெருமிதம் அடைகிறேன்.

1992ம் ஆண்டு ஜனவரி மாதம் மத்திய மாகாணத்தின் சகல கௌரவ உறுப்பினர்களினதும் பிரசன்னத்தோடு அன்றைய மத்திய மாகாண கல்வியமைச்சர் கௌரவ எஸ். இராமநாதன் அவர் களின் பொற்கரங்களால் திறந்துவைக்கப்பட்ட கல்விக்கூடம் இன்று விருட்சமாக வளர்ந்து நிற்கிறது. இங்கு கல்வி பயின்று வெளியேறிய ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் இன்று ஆங்காங்கே பல்வேறு துறைகளில் வியாபித்திருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து இதுவரை காலமும் கல்விப் பணியாற்றிய சகல அதிபர்களையும் ஆசிரியர்களையும் ஒருசேர கௌரவிப்பது ஒரு உன்னதமான நிகழ்வு. அந்தவகையில் சிறந்த பண்பாடுமிக்க, பயனுறுதி வாய்ந்த, ஒழுக்க சீலத்துடன் கூடிய, சமூகக் கட்டமைப்பொன்றை உருவாக்க இக்கல்விக் கூடம் தன்னை அர்ப்பணித்து வந்துள்ளது என்பதை நினைக்கும்போது பெருமையாக உள்ளது.

சீடா செயற்றிட்டத்தின் ஊடாக நிர்மாணிக்கப்பட்ட ஒரு கட்டிடத்தோடு அன்று இப் பாடசாலை என்னிடம் கையளிக்கப்பட்டது. என்னோடு திரு. தியாகராஜா, திருமதி. தியாகராஜா, செல்வி. செல்வம் ஆகியோர் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர். அன்று நாம் முதலாம் வகுப்புக் கும் ஆறாம் வகுப்புக்கும் மாத்திரம் மாணவர்களை உள்வாங்கி வகுப்புக்களை ஆரம்பித்தோம். அன்று சீடா செயற்றிட்டத்தின் இயக்குநராகவிருந்த அமரர் திருவாளர் நவரட்ன அவர்கள், இப் பாடசாலையை ஒரு "வகை இரண்டு" (Type-2) பாடசாலையாக உருவாக்கிவிட வேண்டு என்பதில் அக்கறையாக செயற்பட்டதோடு, அதற்கான முழுமையான ஒத்துழைப்பையும் நல்கினார். அன்றைய வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. ரெங்கராஜ் அவர்களும் அடுத்தடுத்து ஆசிரியர்களை தேவைக்கேற்ப நியமித்து உதவினார்.

அதன்படியே அடுத்தடுத்த வருடங்களில் ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைகளில் படிப்படியாக ஒவ்வொரு வகுப்புகள் மேலதிகமாக ஆரம்பிக்கப்பட்டு 1997ம் ஆண்டு முதல் மாணவர்கள் க.பொ.த (சா.த.) பரீட்சைக்குத் தோற்றினார்கள். அதிகாரிகளின் சிறப்பான உதவிகள் ஆசிரியர்களின் நேரகாலம் பார்க்காத அயராத சேவை பெற்றோர்களின் முழுமையான பங்களிப்பு மற்றும் தோட்ட நிர்வாகத்தின் ஒத்துழைப்பு என்பன பாடசாலையின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவியாகவிருந்தது.

அந்தவகையிலே தமிழிலே இலட்சுமி தோட்டம் என அழைக்கப்படும் இங்கு இலட்சுமி கடாட்சம் மாத்திரமன்றி சரஸ்வதி கடாட்சமும் முழுமையாக நிறைந்திருக்கின்றது. இங்கு கற்ற பலர் அரச நிறுவனங்களிலே கடமையாற்றுகிறார்கள். எப்போதுமே இயற்கை எழில் கொஞ்சும் பசுமையான பிரதேசமாக காட்சிதரும் கெர்க்கஸ்வோல்ட் மத்திய பகுதியில் அமைந்துள்ள இல.2 தமிழ் வித்தியாலயத்தில் கற்பிக்க வந்த நாம் கற்றுச்சென்றது ஏராளம். இங்கு கிடைக்கப்பெற்ற

அனுபவங்களே அடுத்தடுத்து சென்ற பாடசாலைகளில் வெற்றிகரமான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு பெரிதும் உதவின என்றால் அதுமிகையாகாது.

ஒரு மனிதனுடைய வாழ்க்கை, அவனுக்கு பாடசாலை பருவத்தில் வாய்க்கப் பெற்ற ஆசிரியர்களை பொறுத்தே தீர்மானிக்கப்படுகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அவ்வகையிலே கெர்க்கஸ்வோல்ட் இல.2 பாடசாலை மிகச் சிறப்பான ஆசிரியர்களைக் கொண்டே இயங்கிவந்திருக்கிறது. சிறந்த கற்பித்தல் நுட்பங்களோடு வாண்மைச் சிறப்புமிக்கஆசிரியர்கள் வாய்த்து ஒழுக்க விழுமியங்களுடன் கூடிய மாணவ சமூகம் எப்போதுமே வெளியேற வேண்டும் என்பதே என் அவா. எனவே வருகின்ற ஒவ்வொரு ஆசிரியரும் திடசங்கற்பத்தோடு காத்திரமான கல்விப் பணியாற்ற முன்வரவேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இம்மலர் சிறப்பாக மலர்ந்து திக்கெட்டும் மணம் பரப்ப எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**ஏகாம்பரம் லோகநாதன்**
**கோட்டக் கல்விப் பணிப்பாளர்,**
**நுவரெலிய கல்வி வலயம்**



# முன்னாள் அதிபரின் ஆசிச் செய்தி

கெர்கஸ்வோலட் இல.02 தமிழ் வித்தியாலயத்தின் வெள்ளிவிழாவில் நானும் ஒருவனாய் பங்கேற்று வாழ்த்துரை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இப்பாடசாலையில் 2000-2003 ஆண்டு காலப்பகுதியில் மூன்று ஆண்டுகள் அதிபராகக் கடமை யாற்றியது எனது எதிர்கால செயற்பாடுகளுக்கு நீண்டதொரு அனுபவமாய் இருந்தது. ஆரம்ப பாடசாலையில் இருந்து இடைநிலைப் பாடசாலையான இப்பாடசாலைக்கு வந்தபோது முதலில் பாடசாலையின் பௌதீக வளங்கள் பெரும் சவாலாக இருந்தது. அதிலும் குறிப்பாகக் கட்டிடம் என்று குறிப்பிடும் போது 60-20 என்ற அளவில் இரண்டு கட்டிடங்கள் மாத்திரமே காணப்பட்டது. இதனுள்ளேயே க.பொ.தசா/த வரை வகுப்புக்கள் இருந்தன.

ஆனால் இதன் மூலம் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள், இணைப்பாடவிதான செயற்பாடுகள் என பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. தொடர்ச்சியாக விளையாட்டுப் போட்டி, பத்தாண்டு பூர்த்திவிழா, குளத்துப்பிள்ளையார் ஆலய நிர்மாணம் எனப் பல செயற்பாடுகள் முன் னெடுக்கப்பட்டன. அதில் சிறப்பாக பத்தாண்டு பூர்த்திவிழா மூன்று நாட்கள் கல்விக் கண்காட்சி, சஞ்சிகை வெளியீடு, திறந்த மைதான மேடையில் கலை நிகழ்ச்சிகள் என கொண்டாடப்பட்டன. அதற்கு அப்போதைய மத்திய மாகாண கல்விஅமைச்சரும் தற்போதைய கல்வி இராஜாங்க அமைச் சருமான கௌரவ வி. இராதாகிருஸ்ணன் பிரதம அதிதியாய் கலந்து கொண்டமையை ஒரு பாக்கிய மாய் நினைத்துப் பார்க்கின்றேன்.

அப்போதிருந்த ஆசிரியர்கள் தற்போது பல்வேறுபட்ட பதவிகளில் சிறந்து விளங்குவதுடன் அப்போதிருந்த மாணவர்கள் பலதுறை சார்ந்த பதவிகளில் ஆளுமையுடன் திகழ்வதற்கு இப் பாடசாலையின் செயற்பாடுகளே முதன்மையாக இருந்தது என்பது மறுக்க முடியாத உண்மை யாகும். முழுக்க பெருந்தோட்டத் துறையைச் சார்ந்தமாணவர்கள் கல்வி பயிலும் இப்பாடசாலை தற்போது பல சாதனைகளை நிலைநாட்டுவதுடன் தற்போது வெள்ளி விழாவை சிறப்பான ஏற் பாடுகளுடன் கொண்டாடப்படுவதனை எண்ணி மகிழ்கின்றேன். பல பௌதீக வளங்களு டனும், கல்வி வளர்ச்சியுடனும் திகழும் இப்பாடசாலை எதிர்காலத்தில் ஒரு உயர்தரப் பாடசாலையாக விளங்க வாழ்த்தி எதிர்காலம் சிறக்க பிரார்த்திக்கின்றேன்.

வாழ்த்துக்களுடன்

**ஆ.வேலுசாமி**
அதிபர்
சென்மேரிஸ் மத்திய கல்லூரி,
பொகவந்தலாவ



## முன்னாள் அதிபரின் ஆசிச் செய்தி

மமா/அட்/கெர்கஸ்வோல்ட் இலக்கம்-02 தமிழ் வித்தியாலத்தின் இருபத்தைந்தாண்டு பூர்த்தியானதை முன்னிட்டு, அதன் வெள்ளி விழாவுக்கு எனது வாழ்த்து செய்தியினை வழங்குவதில் நான் பாக்கியவனாகின்றேன். அதேவேளை, என்னுடைய அனுபவங்களையும் இங்கு பதிவு செய்யவிரும்புகின்றேன்.

இப்பிரதேசத்தில் 100 ஆண்டு விழாவை நோக்கி பல பாடசாலைகள் பயணித்துக் கொண்டி ருக்கும் நிலையில் இப்பாடசாலையானது. 25 வருடங்களை கொண்டாடுவது வினாக்களை வினவலாம். இப்பாடசாலைக்கும் மேற்படி வரலாறு உண்டாயினும் 1974ற்குப் பின் தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றதன் காரணமாக இப்பாடசாலை மமா/அட்/ தெரேசியா பாடசாலை, மமா/அட்/ டியன்சின் தமிழ் வித்தியாலயத்துடன் இணைப்பு செய்யப்பட்டு டியன்சின் பாடசாலையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கியது. தெரேசியா பாடசாலை தெரேசியாவிலேயே இயங்கி வந்தது. ஆனால், இப்பாடசாலையானது டியன்சின் தமிழ் வித்தியாலயத்துக்கே தமது மாணவர் களை அனுப்பி கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இந்நிலையில், சீடா செயற்றிட்டத்தின் மூலமாக இப்பாடசாலைக்கு இரு கட்டிடங்கள் அமைக் கப்பட்டு ஏறத்தாழ 20 வருடங்களின் பின் தனது சொந்த பூமியில் 1992ஆம் ஆண்டு மாணவர்கள் கல்விகற்ற தொடங்கியதை வரலாற்று தொடக்கமாக கொண்டு வெள்ளிவிழா கொண்டாடப் படுகின்றது.

ஏற்கனவே, பத்தாவது ஆண்டு பூர்த்தியைக் கொண்டாடிய இப்பாடசாலை பல்வேறு நற்குறியீடு களை அடையாளப்படுத்தியமை சமூகத்திற்கு காட்டவும் வருங்கால சமூகத்துக்கு இப்பாடசாலை யின் மீது நம்பிக்கை வளர்ப்பதற்கும் இது ஒரு வாய்ப்பைத் தரும் என்பது உள்ளங்கை நெல்லிக் கனியாகும்.

ஏனைய பாடசாலைகளுக்கு பல்வேறு முன் உதாரணங்கள் இருந்த போதும் இப்பாடசாலை தனது பல செயற்பாடுகளை பூச்சியத்திலிருந்தே ஆரம்பித்து. வளர்ச்சியையும் கண்டுள்ளது. இடப் பற்றாக்குறை, ஆசிரியர் பற்றைக்குறைகளையும் கொண்டிருந்ததாலும் அவற்றை காரணம் காட்டாது செயற்பாடுகளை ஆசிரியர் சமூகத்தினர் எடுத்து, மாணவர்களின் நலனில் தங்களுடைய செயற்பாடுகளை இரவு பகல் பராது செயற்படுத்தினர்.

குறிப்பாக நான் செயலாற்றிய 10ஆண்டுகால பயணத்தில் பெரும்பாலான ஆசிரியர்கள் ஆரம்பக் கல்விக்கு பயிற்றப்பட்டவர்களே ஆவர். அவர்கள் இடைநிலை வகுப்புகளுக்கும் பாடசாலை ஆசிரியர்களாக இருந்து பயிற்றப்பட்டவர்களை விடவும் சிறப்பாக செயற்பட்டனர். ஒப்பிட்டளவில் ஏனைய பாடசாலைகளையும் விட பெறுபேறுகளைக் காட்டியமையை ஆவணங்கள் நிரூபணம் செய்கின்றன. கலைத்திட்ட ரீதியாக மட்டுமல்ல இணைப்பாடவிதான செயற்பாடுகளை ஆசிரியர்கள் மிகத்திறம்பட செயற்படுத்தினர். நல்லபல ஆசிரியர்களை கொண்டு காணப்பட்டமை இப்பாடசாலையின் சிறப்பான அடையாளமாக நான் பார்க்கின்றேன். இன்றும் இப்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர் ஆலோசகராக காணப்படுகின்றனர்.

மேலும் அக்காலத்தில் கல்விகற்ற மாணவர்கள் பலர் தங்களின் பொறுப்புணர்ந்து செயல் பட்டனர். ஒரு மாணவனின் நிலைப்பாடு என்ன என அறிந்திருந்தனர். ஆசிரியர்களின் அர்ப்பணிப் புகளுக்கு அங்கீகாரம் வழங்கி, மதிப்பளித்து வந்தமை காணக்கூடியதாக இருந்தது. பலர் வாழ்கையில் வேறு பரிமாணத்தில் சங்கமிக்கவேண்டும் என்ற எண்ணமேலீட்டவர்களாக

காணப்பட்டனர். பாடசாலையை விட்டு விலகியபோதும், அவ்வப்போது பாடசாலையின் நிகழ்வுகளில் திடமான மனபூர்வமான பங்களிப்பை சிரத்தையுடன் செவ்வனே வழங்கினர். இவர்கள் இன்று சமூகத்தில் பல்வேறு துறைகளில் "பத்தோடு பதினொன்று அத்தோடு நானொன்று" என்று இல்லாமல் அடையாளப்படுத்தப்படும் குறியீடுகளாக இன்று காணப்படுவதோடு பாடசாலையை வளர்ப்பதிலும் ஆர்வம் கொண்டவர்களாக தங்களின் ஆசிரியர் பெருமக்களை மதிப்பவர்களாகவும் காணப்படுகின்றனர்.

பாடசாலையும் சமூகமும் நல்லவிதமான தொடர்புகளை கொண்டு காணப்பட்டது. குறிப்பாக பாடசாலை அபிவிருத்தி சங்கம் நல்லுறவை வளர்ப்பதில் மிகுந்த அக்கறை காட்டிவந்தது. பாடசாலையில் சமூக முரண்பாடு ஏற்படும் நேரத்தில் சமரசம் செய்துவைப்பதிலும் பாடசாலையின் தேவைகளை நிறைவேற்றுவதிலும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றியது. குறிப்பாக கட்டிட தேவையை பூர்த்தி செய்ய பல விதங்களில் உதவியதையும் நினைவுபடுத்தலாம். அப்போதிருந்த பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர்கள் சிறந்த பங்களிப்பை வழங்கினர்.

இன்று பல உதாரணங்களை கொண்டு இப்பாடசாலை காணப்படுகின்றது. பௌதீகவளங்கள் பாடசாலை ஆசிரியர்கள் பக்குவப்பட்ட பெற்றோர்கள் என பல நிறைவுகளை கொண்டு இப்பாடசாலை காணப்படுகின்றது. இத்தருணத்தில் 25வது ஆண்டு பூர்த்தியான வெள்ளிவிழா கொண்டாடுவது அர்த்தபூர்வமான விடயமாக கருதுகின்றேன்.

வெறுமனே **25** ஆண்டுகளை இது கடந்து வரவில்லை. பல்வேறு சவால்களை வென்று வந்துள்ளது. இத்தருணத்தில் நானும் சிறு அங்கமாக பயன்பட்டதை பிறவிப்பயனாக எண்ணி விழா சிறப்புற அருள்வேண்டி இறைவனை பிராத்திக்கின்றேன்.

எஸ்.செல்வராஜ்
முன்னாள் அதிபர்



## வாழ்த்துச் செய்தி

கால் நூற்றாண்டுகால வரலாற்றுப் பெருமிதம் கொள்ளும் பொகவந்தலாவை கெர்கஸ்வோல்ட் இல.02 தமிழ் வித்தியாலயம் நாற்பதுகளில் ஆங்கிலத் தோட்டத் துரைமாரின் ஆட்சி அதிகாரத்தின் கீழ் இயங்கிய ஒரு தோட்டத்துப் பாடசாலை. நாற்பதாண்டுகளின் பின் எண்பதுகளில் நாட்டுத் துரைமார்களின் ஆட்சி அதிகாரத்தில் இருந்த இடம் தெரியாமல் இல்லாமல் போய்விட்ட ஒரு பாடசாலை.

தொண்ணூறுகளில் தள்ளாடி, தள்ளாடி உயிர்தெழுந்து, நடை பயின்று இன்று தலை நிமிர்ந்து விஸ்வரூபம் எடுத்து இரண்டு மாடி கட்டிடம் அடங்கலாக, மூன்று கட்டிடங்கள், இருபதுக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், 300க்கும் மேற்பட்ட மாணவர்கள், தரம் பதினொன்று வரையான கல்வி என்று உயர்ந்து நிற்பது ஒரு வரலாற்றுப் பெறுமைதான்.

இந்த வித்தியாலயம் கால்நூற்றாண்டு வரலாறு கொண்டதல்ல. ஒரு நூற்றாண்டை எட்டித் தொட முயலும் மூன்று கால்நூற்றாண்டு எனும் சிறப்பான வரலாறு கொண்டது என்பது கவனத்துக்குரியது.

சமூக, கலை, கலாசார, இலக்கிய மற்றும் அரசியல் வாழ்க்கை மேம்பாட்டுக்கும் அவற்றைப் பயனுள்ள விதத்தில் வடிவமைத்து கொள்வதற்கும் கல்வி மிக முக்கியமானது. இந்த முக்கியத் துவத்தை உணராதவர்களாகவும் உணர்த்தப்படாமல் ஒடுக்கி வைக்கப்பட்டவர்களாகவுமே இந்த மக்கள் நூற்றாண்டு காலம் தனிமைப்படுத்தப்பட்டுக் கிடந்த வரலாறு நம்முடையது.

அவைகளை உடைத்துக் கொண்டு மேலெழும் மீட்சிக்கும் சக்திக்குமான உதாரணங்களில் ஒன்று இந்த கெர்கஸ்வோல்ட் இல.02 தமிழ் வித்தியாலயம்.

உழைக்கப் பிறந்த இவர்களுக்கான கல்வி, உழைப்பைக் கெடுக்கும் பொருளாதாரத்தைக் குலைக்கும் என்னும் அன்றைய பழமைவாதக் குரல்கள் இது போன்ற வளர்ச்சி பெறும் கல்விக் கூடங்களால் இல்லாததொழிக்கப்பட்டன,... படுகின்றன.

மக்கள் கல்வியறிவுடையோராக மாறும்போது அறிவுசார் பொருளாதாரத்தின் செல்நெறிகளை உலக நாடுகள் முக்கியம் வாய்ந்ததாக உணர்கின்றன.

ஆரம்பக் கல்வி, ஆரம்பக் கல்வியைப் பூர்த்தி செய்தல், மற்றும் வளர்ந்தோர் எழுத்தறிவு போன்றவற்றில், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் இலங்கை உயர் மட்டத்தில் இருப்பதாக கல்வியியல் ஆய்வாளர்கள் குறிக்கின்றனர்.

இவ்வாறான கல்விச் செயற்பாடுகளுக்கு பொகவந்தலாவை கெர்கஸ்வோல்ட் தமிழ் வித்தியால யமும் அடிகோலியிருக்கிறது... முன்நிற்கிறது என்பதை அதன் வரலாற்றுப் படிகள் சுட்டி நிற்கின்றன.

"1982ல் தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றது..." என்று இந்தப் பாடசா லையின் வரலாற்றுப் படிமங்களில் குறிக்கின்றார் அப்போதைய உப அதிபர் விக்டர் அவர்கள் (2002 விழா மலர்).

காணிச் சீர்திருத்தம் என்ற போர்வையில் அரசு பொறுப்பேற்ற பெரும்பாலான தோட்டங்கள் என்னவாயின என்பது நமக்குத் தெரிந்ததே. கல்விச் சீர்திருத்தம் என்று அரசு பொறுப்பேற்ற பெரும் பாலான பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டன என்பது வரலாறு. மண் மூடியும் வேரறுகாதிருந்த

கெர்கஸ்வோல்ட் பாடசாலை 1992ம் ஆண்டு மீண்டெழுந்தது ஒரு வரலாற்று விசாரணை. வரலாற்றைக் கேள்விக்குள்ளாக்கல்.

கல்மேல் கல் இல்லாதவாறு அழிந்துபோன ஒரு பள்ளிக்கூடம் உயர்ந்த கட்டிடத்துடன் எழுந்து நிற்பதற்கு, அசுர உழைப்பும் அதற்கான செயற்திட்டங்களை மேற்கொண்ட அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் அவர்தம் பெற்றோர் உறவுகள் அனைவருமே போற்றுதல்களுக்கு உரியவர்கள்.

காலப்போக்கில் மாணவர்கள் வரவின்மையால் மூடப்பட்டு கட்டிடம் அழிவுற்ற நிலையில் கிடந்தது. இந்நிலையில் மலையகத்தில் பெரும்பாலான பாடசாலைகளை புத்துயிர் ஊட்டும் வகையில் சீடா செயற்றிட்டம் அமைந்தது. பாடசாலைக்கான கட்டிடங்கள், தளபாடங்கள், வளங்கள் என்பன கிடைத்தன.

1992ல் ஆறாம் வகுப்பு வரை நடந்த இப்பாடசாலை 1997ல் கா.பொ.த. சாதாரண தரத்துக்கு மாணவர்களைத் தோற்றச் செய்யும் அளவுக்கு உயர்ந்துள்ளதையும், சுற்றி அமைந்துள்ள ஆறு ஆரம்பக் கல்வி பாடசாலைகளில் தரம் ஐந்தைப் பூர்த்தி செய்த மாணவர்களின் இடைநிலைக் கல்வியை வழங்கும் கல்வியகமாக இந்த கெர்கஸ்வோல்ட் இல.02 தமிழ் வித்தியாலயம் விளங்குவதையும் பதிவு செய்கின்றார் அப்போதைய இப்பாடசாலையின் அதிபர் ஆ.வேலுசாமி அவர்கள் (2002 விழா மலர்).

மேலும் இவர் "சராசரியாக மாணவர்களின் கற்றல் தேவைக்கு மாத்திரம் 5250 சதர அடி தேவை ஆனால் எமக்கு 2400 சதர அடி மாத்திரமே உள்ளது. 2850 சதுர அடி பற்றாக்குறையுடன் விஞ்ஞான ஆய்வுகூட வசதிகளோ தொழில்நுட்ப பாட இட வசதிகளோ, நூலக வசதியோ இல்லாத நிலையில் இயங்கி வருகின்றது. ஒரு கா.பொ.த. உயர்தர பாடசாலையாகத் தன்மை மாற்றிக் கொள்ள இப்பாடசாலை மிகுந்த கனவுகளுடன் காத்திருக்கின்றது. தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் ஊடாக புதிய கட்டிடத்துக்கான உறுதிகளை அதிகாரிகள் வழங்கியுள்ளனர்..."என்றும் பதிகின்றார்.

"தமது கல்வி முறைக்குத் தேவையான நிதியைப் பெற்றுக் கொள்ள சில ஆலோசனைகளை முன்வைக்கும் பேராசிரியர் சோ.சந்திரசேகரன் வெளிநாட்டு மாணியங்கள், உதவு தொகைகள், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜேர்மன் தொழிநுட்ப அமைப்பு, கனடாவினதும் சுவீடனினதும் சீடா அமைப்பு போன்றவைகளின் பங்களிப்புக்களை வலுப்படுத்த வேண்டும்..." என்கின்றார்.

"பாடசாலைகள் தரமான கல்வியை வழங்கத் தேவையான நூலகங்கள், விஞ்ஞான ஆய்வு கூடங்கள், கணிணி நிலையங்கள், வகுப்பறைக் கட்டிடங்கள் என்பவற்றை நிறுவவும் தரமான ஆசிரியர்களைப் பெற்றுக் கொள்ளவும் இந்நிதியுதவிகளை நாடலாம்..."என்கிறார் பேராசிரியர்.

கல்வித்துறைக்கான முதலீடுகளை அதிகரித்தல் விரிவாக்குதல் அவசியமானது என்ற கருத்தை உலக வங்கியும் வலியுறுத்துகிறது.

மாணவரின் கற்றல் விளைவுகளையும், வினையாற்றலையும் தீர்மானித்தலில் ஆசிரியர் தொகையும் தராதரமும் அவசியமானவை. ஆசிரியர்களை முகாமைத்துவம் செய்வது முக்கியமானது.

ஏனைய உள்ளூர் சமூகங்களும் பாடசாலை செயற்பாடுகளில் ஆர்வத்துவடன் ஈடுபடுவதாக கருத்து தெரிவிக்கின்றனர்.

உயிர்ப்பித்து உயர்வு கொண்டிருக்கும் இந்த பாடசாலை தனது ஒரு தசாப்த கால பயணத்தின் நினைவுகளை பதிவு செய்யும் முகமாக 2002ல் ஒரு விழாவெடுத்து மலரும் வெளியீட்டு சாதனை புரிந்திருப்பது மேற்கூறியவர்களின் உழைப்புக்கான ஒரு உதாரணம்.

"ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்கிறது தமிழ் பழமொழி. வேறுமொழியில் இத்தகைய பழமொழி இருப்பதாக அறியவில்லை. இப்பழமொழி எத்தனை நிதர்சனமானது.

ஒரு பாடசாலையை பொறுத்தவரையில் அதன் ஆசிரியர்களும் மாணவர்களும் பாடசாலை கல்வியிருந்து வெளியே வந்து இலக்கிய உலகுக்குள் தொடர்புடையவர்களாகவும் தங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும். என்னுடன் கூடுதலாக பழகும் சுப்பையா கமலதாசன் என்பவர் இந்த பாடசாலையின் ஒரு பழைய மாணவர். "இப்பாடசாலையின் அரவணைப்பில் 15 வருடங்கள்

கிடந்தவன் நான்..." என்று கூறும் அவர், என்னுடன் உரையாடும்போதெல்லாம் இந்த கெர்கஸ் வோல்ட் இல.02 தமிழ் வித்தியாலயத்தின் செயற்பாடுகள் வளர்ச்சிகள் பற்றி அதிகமாக கூறுவது அவருடைய இந்த பாடசாலையின் வளர்ச்சி குறித்த அர்ப்பணிப்பினை உறுதி செய்கிறது. இவர் கவிதை சிறுகதைகளுக்காக 2010, 2012, 2013 வருடங்களில் தேசிய ரீதியில் முதல் இடத்திற்கான விருதுகளை பெற்று இப்பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

2011ஆம் ஆண்டு தம்ப ஜாகொட அவர்களால் 1970 எழுதப்பட்ட "கொரா ச ஹாந்தயா" எனும் நாடகத்தை தமிழில் ராசையா லோகானந்தன் மொழிபெயர்ப்பு செய்து, ரொனிக்கா சாமலி, செல்வராஜ் லீலாவதி ஆகியோரால் இயக்கப்பட்டு தியாகராஜா சிவனேசன், லோகானந்தன் ஆகிய இருவரும் நடித்த "பயணிகள்" எனும் நாடகம். சிறந்த நடிகன், சிறந்த இயக்கம், சிறந்த ஆடை அலங்காரம், சிறந்த ஒப்பனை, சிறந்த காட்சியமைப்பு, சிறந்த ஒளியமைப்பு ஆகிய விருதுகளைப் பெற்றுக் கொண்டது. அதேவேளை இந்தியாவில் இடம்பெற்ற சர்வதேச நாடக விழாவில் இலங்கையிலிருந்து இந்த நாடகம் மேடையேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

2014ம் ஆண்டு தேசிய சிறுவர் நாடக விழாவில் மேடையேற்றப்பட்ட "எலிப் பொறியில் பூனை" எனும் நாடகம் 9 தேசிய விருதுகளை பெற்று வரலாற்று சாதனை படைத்தது. இந்த நாடகத்தை தயாரித்து வழங்கியிருந்தவர் தியாகராஜா சிவநேசன்.

ஈழத்து நாடகத்துறையில் குறிப்பாக மலையக நாடகத்துறையில் தயாரிப்பாளர், நடிகர் என பல்பரிமாணங்களைக் கொண்ட தியாகராஜ் சிவனேசன், செல்வராஜ் லீலாவதி ஆகியோர் இந்த பாடசாலையின் பழைய மாணவர்கள் என்பது இந்த கல்லூரியின் செயற்பாடுகளுக்கான சான்றாகிறது.

2015ம் ஆண்டு அரச சேவையாளர்களுக்கான இலக்கிய விருது விழாவில் தேசிய ரீதியில் கவிதைக் கான முதலாம் இடத்திற்கான விருதினை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அறிவிப்பாளர் சுப்பையா சிவராஜா பெற்றுக் கொண்டார். 2015ம் ஆண்டு வருடத்திற்கான சிறந்த சுகாதாரத் துறைக்கான ஊடகவியலாளராக தமிழ் மொழியில் தேசிய ரீதியில் ஊடகவியலாளர் சில்வஸ்டர் டொரின் தெரிவு செய்யப்பட்டார். இவ்விருவரும் இப்பள்ளிக் கூடத்தின் பழைய மாணவர்களே.

இப்பள்ளிக்கூடத்தில் கல்வி கற்றவர்கள் கலை இலக்கிய தளங்கள் தவிர்ந்தும் தேசிய சர்வதேச ரீதியில் சாதித்து இப்பாடசாலையின் கீர்த்தியினை உயர்த்தியிருக்கின்றார்கள் என்பது பெரு மகிழ்ச்சிக்குரியதே.

இப்பாடசாலையின் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் போன்றோரின் அயராத உழைப்பின் மூலமாக கூடிய விரைவில் இப்பாடசாலை உயர்தர வகுப்புகளைக் கொண்ட பாடசாலையாக மாற்றிக் கொள்வதற்கான செய்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

**தெளிவத்தை ஜோசப்**
எழுத்தாளர்



# பதிப்புரை

மத்திய மாகாணத்தில் மலையக மக்கள் செறிந்து வாழும் நுவரெலியா மாவட்டத்தில் ஹட்டன் வலயத்திற்குட்பட்ட பொகவந்தலாவை பிரதேசத்தில் அமைந்துள்ள கெர்கஸ்வோல்ட் இல.02. தமிழ் வித்தியாலயமானது 1992ம் ஆண்டுக்கு முன்பதாக பல வருடமாக இயங்கி வந்திருந்தாலும் கூட சரியான ஆவணங்கள் இன்மையினால் ஆரம்ப காலத்தை நிறுவுதலில் உள்ள சிக்கல் நிலையினை கருத்திற்கொண்டு புதிய கட்டிடத்தில் 1992ம் ஆண்டு ஜனவரி மாதம் 20ம் திகதியில் ஆரம்பிக்கப்பட்டதையே ஆரம்பமாகக் கொள்ள வேண்டியுள்ளது. அதனடிப்படையிலேயே 25வது ஆண்டு நினைவாக வெள்ளிவிழா நடாத்துவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. இருந்தாலும் இப்பாடசாலையின் 1992ம் ஆண்டுக்கு முன்பதான வரலாறுகள் மீள் புதுப்பிக்கப்பட வேண்டியவை. அதுவே இப்பாடசாலையின் ஒட்டுமொத்த வரலாறாக அமையும்.

1992ம் ஆண்டை ஆரம்பமாக கொண்டாலும் 2017ம் ஆண்டு வரை கால் நூற்றாண்டு எனும் 25 வருடங்கள் இப்பாடசாலை கல்விசார் செயற்பாடுகளில் இயங்கி வருகின்றது என்பது மகிழ்ச்சிக்குரியது. 1992ம் ஆண்டுக்கு முன்பதான தடங்கள் இல்லாத நிலையில் டியன்சின் தமிழ் வித்தியாலயத்துடன் இணைந்த பாடசாலையாக செயற்பட்டு இன்று தனித்துவமான பாடசாலை யாக மிளிர்ந்திருக்கும் இப்பாசறையில் நாம் வாழ்ந்திருக்கின்றோம்... வளர்ந்திருக்கின்றோம் என்பது பெருமைக்குரியது.

இந்த கால் நூற்றாண்டு வரலாற்றை கொண்டாட வேண்டும், பதிவு செய்ய வேண்டும் என்பதற்காகவே இந்த வெள்ளி விழா ஒழுங்கமைக்கப்பட்டது. வரலாற்று பதிவில் ஒரு கட்டமே இந்த மலர் வெளியீடு.

இந்த சிறப்பு மலர் வெறுமனே வெள்ளிவிழா மலராக மாத்திரம் நின்றுவிடாது தொடர்ச்சியாக இப்பாடசாலையின் சஞ்சிகையாக வெளிவர வேண்டும் என்பதே எமது எண்ணம். குறைந்த பட்சம் வருடத்திற்கு ஒரு மலராவது வருமெனில் அது பாடசாலையின் ஆவணமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

கடந்த காலத்தில் மாணவர்களின் இணைப்பாடவிதான செயற்பாடுகளை ஊக்குவிக்கும் பொருட்டு இப்பாடசாலையில் "வர்த்தக மாணவன்", "விழிகள்" போன்ற சஞ்சிகைகள் ஆரம்பிக்கப் பட்டது. காலப்போக்கில் சஞ்சிகைக்கு பொறுப்பான ஆசிரியர்களின் இடமாற்றத்தின் பின் தொடராத துரதிஸ்டம்.

அதுபோல் எதிர்ப்பார்த்த ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைக்கப்பெற்றிருப்பின் இந்த "முகிழி" யையும் இன்னும் கூடுதல் தகவல் திரட்டுக்களோடு ஒரு செம்மையான ஆவணமாக வெளிக் கொணர்ந்திருக்க முடியும். "முகிழி" மூழ்காமல் தொடர்ந்து முகிழ்ந்திட பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் ஆகியோரின் ஆதரவிலேயே தங்கியுள்ளது.

இம் மலருக்கான ஆசியுரைகளை வழங்கிய அதிமேதகு ஜனாதிபதி, கௌரவ பிரதமர் உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகளுக்கும், ஆக்கங்களை வழங்கி உதவிய கல்வியியலாளர்கள் எழுத்தாளர்கள் ஆகியோருக்கும், குறுகிய காலத்திற்குள் அழகுற வடிவமைத்து அச்சிட்டுத் தந்த GOD Creative Labக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகள்...

சுப்பையா கமலதாசன்

பழனியாண்டி விஜயகாந்தன்

# மீனாட்சியம்மாள் நடேசய்யர்
## இலங்கையில் சமூக மாற்றத்திற்கான முதலாவது பெண்குரல்

திருமதி. மீனாட்சியம்மாள் நடேசய்யர் மறைந்து சுமார் எழுபத்து மூன்று ஆண்டுகள் ஆகின்றன. இந்த கால இடைவெளியில் மலையகச் சமூகத்திலும் இலங்கையிலும் உலகிலும் எண்ணரிய மாற்றங்கள் நிகழ்ந் துள்ளன. தற்போது என்றும் இல்லாதவாறு வரலாற்று ஆய்வும் விஞ்ஞான பூர்வமான பார்வைகளும் பல்வேறு விதங்களில் வளர்ந்துள்ளன. ஆயினும் இலங்கை சமூக அரசியலில்- இலக்கிய வரலாற்றில் விரல்விட்டு எண்ணக்கூடிய: இலங்கையில் சமூக மாற்றத்தின் முதல் பெண்குரலாக விளங்கும் மீனாட்சியம்மாள் குறித்த ஆய்வுகளும் தொகுப்புகளும் மிகக் குறை வாகவே காணப்படுகின்றன.

அம்மையாரின் சமூக பணிகள் பற்றியும் கோ. நடேசய்யரின் சமூக அரசியல் பணிகளுக்கு அம்மையார் ஆற்றிய பங்களிப்புகள் பற்றியும் கட்டுரைகளும் குறிப்புகளும் ஓரளவு வெளியாகியுள்ளன என்பது உண்மையே. கலாநிதி குமாரி ஜயவர்தனா அவர்களே நடேசய்யர் மீனாட்சியம்மாள் தம்பதியினரின் பங்களிப்பை முதன் முதலாக வெளிப்படுத்தியவர் என்பதை அறிய முடிகின்றது. மலையக இலக்கிய முன்னோடியான சி. வி. வேலுப்பிள்ளை தினகரனில் *(1958-1959)* மலைநாட்டுத் தலைவர்கள் பற்றிய தொடரான விவரணத்தை எழுதி வந்திருக்கின்றார். அவ்விவரணத்தில் கோ. நடேசய்யர், சிவபாக்கியம் குமாரவேல், கோகிலம் சுப்பையா முதலானோர் பற்றி எழுதியிருப் பினும் மீனாட்சியம்மாள் பற்றி அவ்விவரணத் தொடர் அக்கறை செலுத்தாமை ஒரு துரதிஸ்டவசமானதொரு அம்சமாகவே படுகின்றது.

அண்மையில் மு. நித்தியானந்தன் எழுதிய "கூலித்தமிழ்"என்ற நூல் வெளி வந்தது. மலையகத்தின் வேர்களைத் தேடிப் பயணிக்கின்ற அந்நூலில் கணிகையர் குல வரலாற்றை எழுதிய அஞ்சுகத்தை மலையகத்தின் முதல் பெண் ஆளுமையாக குறிப்பிடுகின்றார். அஞ்சுகம் கொழும்பில் வாழ்ந்தவர். அவ்வாறே சிலகாலம் யாழ் - கைதடியில் வாழ்ந்ததாகவும் அறிய முடிகின்றது. இவரை பெண் முன்னோடியாக முன்னிறுத்தும் பார்வை, மலையகத்தில் சமூகமாற்றத்திற்கான அடித்தளத்தை அமைத்துத் தந்த மீனாட்சியம்மாள் அம்மையாரின் சமூக பங்களிப்புக்களை நிராகரிப்பதாக அமைந்து காணப்படுகின்றது.



லெனின் மதிவானம்
பிரதி ஆணையாளர், கல்வி அமைச்சு

திரு. சாரல் நாடன் கோ. நடேசய்யரின் பங்களிப்புகள் பற்றி ஆய்வு செய்த சந்தர்ப்பங்களிலும் சரி மற்றும் மீனாட்சியம்மாள் குறித்து எழுதிய "மலையக விடிவெள்ளி கோ.நா.மீனாட்சியம்மாள்" என்ற நூலிலும் சரி ஒரு வெற்றிகரமான ஆணுக்கு பின்னால் இருக்கும் பெண் ணாகவே அம்மையாரை நோக்குகின்றார். அம்மையாரின் தனித்துவமான ஆளுமை வெளிக்கொணரப் பட்டதாகத் தெரியவில்லை.

பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு அம்மையாரின் ஆளுமையை பெண்ணிய நோக்கில் ஆராய்ந்து வெளிக்கொணர்கின் றார் என்ற போதினும், சமூக விடுதலையை விட்டுப் பிரிந்த பெண்ணிய நோக்கு இவ்

வாய்வை பலவீனப்படுத்தவும் தவறவில்லை என்பதனையும் அறிய முடிகின்றது. பேராசிரியர். செ. யோகராசா அம்மையாரின் கவிதைகளை ஒப்பியல் நோக்கில் அணுகி இலங்கையின் முதலாவது பெண் கவிஞர் எனக் குறிப்பிடுகின்றார். இதற்கான ஆதாரங்களையும் அவர் சுட்டிக் காட்டத் தவறவில்லை. இவ்வாறே திருவாளர்கள். மு.நித்தியானந்தன், அந்தனி ஜீவா, லெனின் மதிவானம் திருமதி. பத்மா சோமகாந்தன் ஆகியோர் இவர் பொறுத்த முக்கியமான தகவல்களை வெளிக் கொணரும் வகையிலான கட்டுரைகளை எழுதியுள்ளனர்.

காலத்தின் பின்னணியில் அம்மையாரை ஆராயவும் மதிப்பிடவும் அம்மையாரின் பங்களிப்பைச் சீர்தூக்கிப் பார்ப்பதற்கும் முதலில் அவரது ஆக்கங்கள் யாவும் முறையாக தொகுக்கப்படல் வேண்டும். அது இலகுவான காரியமன்று. மலையகம் தொடர்பிலான ஆவணக் காப்பகம் ஒன்று இல்லாத நிலையில் வெறும் சுவடிகள் திணைக்களத்தை மாத்திரமே நம்பியிருக்க வேண்டியதாகின்றது. இத்திணைக்களத்தில் மிகப் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்ற ஆவணங்களை பரிசிலிப்பதில் ஏற்பட்டுள்ள இடர்பாடுகள் மற்றும் சில ஆவணங்கள் இல்லாதிருப்பதில் ஏற்படக் கூடிய தவறுகள் அனைத்தும் இந்தச் சேகரிப்பு முயற்சியில் தாக்கம் செலுத்தக் கூடிய காரணிகளாக அமைந்திருக்கின்றன.

இந்நிலையில் மீனாட்சியம்மாளின் எழுத்துக்கள் முழுமையாகக் கிடைக்கவில்லை. அதுவரை நாம் காத்திருக்கவும் முடியாது. எனவே இருப்பவற்றை வைத்துக் கொண்டு இவ்வாய்வுகளை செய்ய வேண்டியுள்ளது. மேலும் தகவல்கள் கிடைக்குமாயின் அவற்றை அடுத்து வரும் ஆய்வுகளில் சேர்த்துக் கொள்ள வேண்டியே உள்ளது. எல்லாவற்றையும் தொகுத்த பின்னர்தான் இது பற்றிய ஆய்வுகளையே தொடர வேண்டும் எனச் சட்டம் போடுவது, இருப்பதையும் இல்லாதாக்குகின்ற முயற்சியாகவே படுகின்றது. அவ்வாறே திரும்பத் திரும்ப ஒன்றையே செய்யும் முயற்சியாகவும் அவ்வாய்வுகள் அமைந்து விடாமலும் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

இலங்கையின் மலையகத்தில் சமகால நிகழ்ச்சிப் போக்குகளை அவதானிக்கின்ற போது ஈழத்தவரின் நவீன இலக்கியங்களுக்குப் பின்னணியாக நிற்கும் வரலாற்றை நோக்கும் பொழுதும், அதற்குப் பின்னணியாக இருக்கும் வரலாற்றை நோக்கும் பொழுதும், இந்நாட்டின் சமூக பொருளாதார அரசியல் கலாசார எழுச்சிகளை நோக்கும் பொழுதும் மீனாட்சியம்மாள் பற்றிய சிந்தனைகள் எழுவது தவிர்க்க முடியாத தொன்றாகின்றது. அம்மையார் அரசியலிலும் பண்பாட்டுத் தளத்திலும் இயங்கிய காலம் நமது அரசியல் துறையிலும் பண்பாட்டுத் துறையிலும் கடும் சோதனைக்குட்பட்ட காலமாக இருந்தது.

இலங்கையின் வட-கிழக்கில் இலங்கைத் தேசியமே முக்கிய செல்நெறியாக காணப்பட்டது. பிரித்தானிய காலணித்துவம் யாழ்ப்பாண சமூகத்தினரிடையே கல்விக்கான வாய்ப்பை விரிவுப்படுத்தி இருந்தமையால் நிர்வாக உத்தியோகத்தில் பெரும் பகுதியை யாழ்ப்பாணத்தவர்களே தமதாக்கிக் கொள்ளக் கூடிய வாய்ப்புக் கிட்டியது. பிரித்தாளும் தந்திரோபாயத்துடன் இத்தகைய வாய்ப்புகள் விஸ்தரிக்கப்பட்டமையால் இவர்களிடையே இலங்கைத் தேசிய உணர்வே மேலோங்கி இருந்தது. அதேவேளை, சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலப்பகுதியில் வட-கிழக்குச் சார்ந்து எழுந்த இலங்கைத் தமிழ்த் தேசியம் ஏகாதிபத்தியத்திற்கு காட்டிக் கொடுக்கும் குணாதிசயத்துடன் வளர்ந்தது. மறுப்புறமாக, தமிழ் இடதுசாரிகள் பண்னை அடிமைத் தனமான சாதிய முறைக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர். இவ்வம்சம் அன்றைய வரலாற்றுத் தேவையை நிறைவு செய்யும் ஒரு அம்சமாக காணப்பட்டது. அன்றைய காலப் பகுதியில் முனைப்புற்று வந்த தமிழின ஒடுக்கு முறை குறித்து மார்க்சிய இடதுசாரி முற்போக்கு சக்திகள் கவனத்திலெடுக்கத் தவறியமை வரலாற்றில் ஓர் இடைவெளியை ஏற்படுத்தி இருந்தது. சிங்கள மக்களுடன் ஐக்கியப் படுதல் என்பதன் மறுப்பக்கத்தில் தமிழின ஒடுக்கு முறைக்கு எதிராக போராடுதல் என்ற அம்சத்தினையும் இணைத்து முன்னெடுத் திருப்பார்களாயின் தமிழ் ஜனநாயக சக்திகளின் ஒரு பகுதியேனும் வென்றெடுத் திருக்க முடியும். இது இவ்வாறிருக்க தமிழரசுக் கட்சி தமிழின ஒடுக்கு முறைக்கு எதிரான விழிப்புணர்வை கொண்டிருந்த போதினும் -முற்போக்கான பார்வையை கொண்டிருந்த போதினும், அதில் அங்கம் வகித்த தலைவர்களின் பழைமைவாதச் சிந்தனைகளின் காரணமாக சாதியத்திற்கு

எதிரான விழிப்புணர்வைக் கொண்டிருக்கத் தவறிவிடுகின்றனர். இதன் காரணமாக இவ்வகையான அமைப்புகள் பிற்போக்கு வாதிகளின் கூடாரமாக மாறி இறுதியில் சிதைந்து சின்னா பின்னமாகியது.

இந்நிலையில் சிங்கள இடதுசாரிகளின் நிலைப்பாடு எத்தகையதாக இருந்தது என்பதும் சுவாரசியமான கேள்விதான். ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வைக் காத்திரமாக முன்னெடுத்த சிங்கள இடதுசாரிகள் தமிழின ஒடுக்குமுறைக்கெதிரான உருப்படியான எந்த விமர்சனத்தையும் முன்வைக்கத் தவறி யிருந்தனர். இத்தகைய ஒரு வரலாற்றுச் சூழலில்தான் அம்மையாரின் அரசியல் பிரவேசமும் இடம்பெறுகின்றது.

மலையக மக்களிடையே பாரதியாரின் பாடல்களையும் கூடவே தாம் மலையக மக்களின் விடுதலை சார்ந்து எழுதிய பாடல்களையும் பாடி தொழிற்சங்க இயக்கத்தைக் கட்டியெழுப்பும் பணியில் தம்மை இணைத்துக் கொண்டு செயற்பட்ட அவர் பேரினவாதத்தை அரசியல் அரங்கில் சரியாக அடையாளம் கண்டு அதற்கு எதிராகவும் போராடத் தொடங்கினார். மேல்வரும் வரிகள் இதற்கு தக்க எடுத்துக் காட்டாகும்.

“லங்கா மாதா நம்ம தாய் தான் - இந்த
நாட்டினி லெல்லோரும் அவளுக்குச் சேய்
தான்”

என மலையகத்தவர்களை இம்மண்ணுக் குரிய மைந்தர்களாகப் பார்க்கின்ற அவர் இம் மக்கள் மீதான பேரினவாத அடக்கு முறைகளுக்கு எதிராகவும் அவர் கவித் தீ உமிழத் தவறவில்லை என்பதை மேல்வரும் வரிகள் உணர்த்தி நிற்பதைக் காணலாம்.

“சிங்கள மந்திரிகள் கூற்று மிக
சீருகெட்டதென்று சாற்று
சங்கடமே நேருமென தோற்று திந்திய
சமூகம் நெருப்பாய் வரும் காற்று”

“நன்றிகெட்டு பேசும் மந்திரி மாரே -உங்கள்
நியாயமென்ன சொல்லு வீரே
இன்றியமையாத வொரு போரே செய்ய
இடமுண் டாக்குகிறீர் நீரே”

இவ்வகையில் இலங்கை அரசியல் வரலாற்றில் தமிழ் இனவாதியாக அல்லாமல், சிங்கள பேரினவாதத்திற்கு எதிரான சிந்தனையை அரசியல் தளத்தில் முதன் முதலாக முன்வைத்தவர்கள் கோ. நடேசய்யர் மீனாட்சியம்மாள் தம்பதிகளாவர்.

இத்தகைய தெளிவான -தீட்சண்யமான பார்வையைக் கொண்டிருந்த அம்மையாரின் செயற்பாடுகள் குறிப்பிட்ட மத்தியதர வர்க்கத் தோடு மட்டும் மட்டுப்படுத்திக் கொள்ளாமல் பரந்துபட்ட மக்கள் குறித்ததாக வேர்கொண்டு கிளைபரப்புவதாக அமைந்திருந்தமை அவரது தனித்துவமான அம்சமாகும்.

டொனமூர் அரசியல் யாப்பின் கீழ் பெண்களுக்கு வாக்குரிமை வழங்குவது தொடர்பாக எடுத்துக் கொள்ளப்பட்ட விவாதத்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்குவதற்கு எதிரான கருத்துக்கள் சேர்.பொன்.இராமநாதன் முதலானோரால் முன்வைக்கப்பட்டது. பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து பெண்களின் வாக்குரிமைச் சங்கம் என்ற அமைப்பு லேடி டேஸி பண்டாரநாயக்காவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வமைப்பில் திருமதிகள். நல்லம்மாள் சத்தியவாகீஸ்வர ஐயர், ஈ.ஆர். தம்பி முத்து முதலிய தமிழ் பெண்களும் அங்கம் வகித்தனர். மீனாட்சி அம்மையார் இவ்வமைப்பில் அங்கத்துவம் பெறவில்லை என்ற போதினும் பெண்களின் வாக்குரிமையை ஆதரித்து பல கட்டுரை களையும் எழுதியுள்ளார். இச்சங்கம் குறித்த அம்மையாரின் பார்வை இவ்வாறு பிரவாகம் கொண்டிருந்தது.

இச்சங்கமானது டொனமூர் கமிஷன் இலங்கைக்கு வந்த காலத்தில் ஆரம்பிக்கப் பெற்றதெனினும் தங்கள் வேலையைச் செவ்வனே செய்து முடித்திருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். இச்சங்கத் தினர் இதுவரை செய்துள்ள வேலை எப்படியிருந்த போதிலும் இனித்தான் அதிக வேலைசெய்ய வேண்டியவர்களாக இருக்கி றார்கள்.

மேற்படி சங்கத்திற்கு வருஷ சந்தா ரூபா 50 ஆக வைத்திருக்கின்றபடியால் சாதாரண குடும்பத்தை சேர்ந்தவர்கள் இதில் சேர்ந்துழைக்க வசதியிராது. பணம் படைத்த வர்கள் மாத்திரம் தங்கள் காரியத்தைச் செய்துமுடிப்பது போதுமானதாகாது. எல்லாச் சகோதரிகளும் கலந்துழைக்க வேண்டிய வேளையில் பணம் படைத்தவர்கள் மாத்திரம் தலையிடுவதைக் கொண்டு அதிக பலன் கிடையாது. ஆகவே சகோதரிகள் தாங்கள்

கொண்ட காரியத்தைச் செய்து முடிக்க வேண்டுமானால் ஆங்கிலம் தெரியாத சகோதரிகளிடத்தும் பிரச்சார வேலைகளைத் துவக்க வேண்டும்" (தேசபக்தன் 26-01-1929).

அம்மையார் பெண்களின் வாக்குரிமைச் சங்கத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறியதுடன், அவ்வியக்கம் உழைக்கும் மக்களிலிருந்தும் அவர்களின் நலன் களிலிருந்தும் எந்தளவு அந்நியப்பட்டிருந்தது என்பதனையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. இவ்வியக்கத்தின் சிந்தாந்தத்தளம், செயற் பாடு என்பன அம்மையாரின் சிந்தாந்தத்தளம் நடைமுறை என்பனவற்றிலிருந்து முரண் பட்டிருந்தமையும் அவர் இவ்வியக்கத்தில் அங்கம் வகிக்காதற்கு ஏதுவான காரணமாக அமைந்திருக்கும் என எண்ணத் தோன்று கின்றது. இவ்வாறே பெண்களுக்கு வாக்குரிமை வழங்குவதைக் கடுமையாக எதிர்த்த சேர். பொன்.இராமநாதன் போன்றோரை கடுமையாக விமர்சனத்திற்கு உட்படுத்துகின்ற அதே சமயம் பெண் ஆளுமையின் மகத்துவம் குறித்துச் சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றார்.

அவ்வாறே அரசியலில் பெண்களின் பங்கு எந்தளவு முக்கியமானது என்பதையும் அவர்கள் ஆண்களுக்குச் சமனாக நின்று தமது பணிகளை முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தையும் அம்மையார் அழகுற எடுத்துக் காட்டுகின்றார். ஸ்திரீகளுக்கு சுதந்திரம் என்ற கட்டுரையில்

"ஸ்திரீகளுக்கு ஓட்டு சுதந்திரம் தேவை யில்லை யென்றும் அவர்கள் இராஜிய விஷயங்களில் நடந்துக் கொண்டால் வீட்டுக் குடும்பக் காரியங்கள் கெட்டுப் போகும் என்றும் இன்னமும் பல படித்த மேதாவிகளே பிரசுரம் செய்துக் கொண்டு இருக்கிறார்கள் என்றால் படிப்பில்லாத நிலைமையிலுள்ள புருஷர்கள் ஸ்திரீகளை எந்த முறையில் நடத்துவார்கள் என்று யோசிக்க வேண்டிய தாய் இருக்கின்றது. குடும்ப காரியங்களை நடத்தாமல் விட்டு விட்டு ஸ்திரீகள் இராஜிய வி'யங்களில் பிரவேசித்து வேலை செய்ய வேண்டுமென்று எந்த ஸ்திரீயும் கருதவே இல்லை. குடும்ப காரியங்கள் எல்லாம் தமக்குச் சொந்தமானவைகள். அதிலுள்ள சங்கடங்களை நீக்கி செவ்வனே அதை நடத்துவதற்கு இராஜிய விசயங்களும் அவசியம்... குடும்பமென்பது ஆணும் பெண்ணும் சேர்ந்து நடத்தும் இல்வாழ்க்கை. அதைப்போலவே பல குடும்பங்கள் சேர்ந்து தான் ஒரு இராஜாங்கமாக வேண்டும். குடும்பத்தை சரிவர நடத்த இருதரத்தாரும் எப்படி ஒற்றுமையாய் நடத்த வேண்டி இருக்கிறதோ அதைப்போல இராஜிய விசயங்களுக்கும் ஸ்திரீகளின் துணை அவசியம் வேண்டும்.

அரசனுக்கு மந்திரி என்று ஒருவர் இருந்து இராஜாங்கத்தை நடத்த வேண்டு மென்ற முறை ஏற்பட்டது போல் புருஷனுக்கு மனைவியே மந்திரி என்ற முறையும் தொன்றுதொட்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பண்டைய காலத்தில் ஸ்திரீகள் அரசாங்கம் இருந்தது. சமீபத்தில் நமது விக்டோரியா மகாராணியார் சர்க்கரவர்த்தினியாய் ஆண்டு வந்தார்கள் என்பது யாரும் மறுக்க முடியாது. ஆனால் அவர்கள் அரசாண்ட காலத்தில் எவ்வளவு அமைதியாகவும் ஒற்றுமையாகவும் இருந்தது என்பதை ஒவ்வொருவரும் உணராமல் இல்லை. இன்னும் இந்திய முகமதிய பெண்மணிகளிலும் பலர் அரசிகளாகவிருந்து இராஜிய பரிபாலனம் செய்து வந்திருக்கிறார்கள். அங்ஙனமிருந்த ஸ்திரீகள் குடும்ப காரியங்களைத் தவிர மற்ற காரியங்களை கவனித்ததேயில்லையென்னும் மனப்பாண்மையை நாம் என்னவென்று கூறுவது. ஸ்திரீகள் விஷயத்தில் புருஷர்கள் கொண்டுள்ள தாராளப்புத்தி வெளியாகி விட்டது" (தேசபக்தன்-05.04.1929) என கூறுகின்றார்.

அவ்வாறே பெண்களின் நிலை குறித்தும் தேசிய சர்வதேச கண்ணோட்டத்துடனும் பல கட்டுரைகளையும் எழுதியிருக்கின்றார் என்பதும் அவதானத்திற்குரியது. சமூக பாரம்பரிய முறை, சமூக வழக்காறுகள் என்பவற்றினடியாகத் தோன்றிய தேவதாசி முறை. மிகவும் பழமையான சமய நடை முறைகளில் ஒன்றாக இருந்து வந்துள்ளது. தேவதாசி என்பதற்கு இறைவனின் அடிமை என கற்பிதம் செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் இப்பெண்கள் கடவுளுக்கு மணப்பெண்ணாக தாரைவார்ப்பு செய்யப் பட்டனர். இப்பெண்களின் திருமண உரிமையோ தமது குடும்பத்தினருடன் உறவு வைத்துக்கொள்ளும் உரிமையோ மறுக்கப் பட்டது.

ஆலயக் குருக்கள், கிராம தலைவர்கள், நிரப்பிரபுக்கள் மற்றும் பொருளாதார பலம் படைத்தவர்களுக்கு சேவகம் செய்வதற் காகவும் அதற்கும் மேலாக அவர்களின் பாலியல் உணர்வுகளை தீர்ப்பதற்கும்

இப்பெண்கள் பயன்படுத்தப்பட்டனர். இப் பெண்கள் மீதாக திணிக்கப்பட்ட பொருளா தார சுரண்டல், ஆணாதிக்கம் சார்ந்த பாலியல் உறவுகள், இவையாவும் தெய்வத் துக்கு செய்கின்ற தொண்டாகவே கருதப் பட்டது. இந்நிலையிலிருந்து இவர்கள் விடுபட முடியாத வகையில் சமூக பொருளா தார கட்டமைப்பு முறைகள் ஒழுங்கமைக்கப் பட்டிருந்தது. இத்தேவதாசியினரிடையும் வர்க்க ஏற்றத் தாழ்வுகள் காணப்பட்டன. ஓரளவு வசதி வாய்ப்புடன் வாழ்ந்தவர்களும் உள்ளனர். அதே சமயம் சமூக ரீதியாக பின்தங்கிய அதிலும் சாதிய ரீதியாக ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து வந்தவர்களும் இருந்தனர். இவர்கள் கடினமான வாழ்வை அனுபவிக்க நேர்ந்துள்ளமையை அறிய முடிகின்றது. காலப்போக்கில் ஏற்பட்ட பெண்விடுதலை சார்ந்த சிந்தனைகளுடன் இணைந்து தேவதாசி முறை ஒழிப்புக் குறித்த விழிப்புணர்வுகளும் எழுந்தது. தேவதாசி சமூக வாழ்க்கை முறையிலிருந்து தோன்றிய இராஜம் அமிர்தம்மாள், மணியம்மை (ஈ.வே.ரா.பெரியாரின் மனைவி அல்ல) முதலானோரின் போராட்டங்கள் முக்கியமாக கவனத்திலெடுக்கப்பட வேண்டியவைகளாகும். இவ்வகையில் தேவதாசிகள் தொடர்பில் டாக்டர் முத்து லெட்சுமி அம்மாள் அவர்களின் பங்களிப் புகள் பற்றிய அம்மையாரின் பின்வரும் கூற்று அவதானத்திற்குரியதாகும்.

“டாக்டர் முத்துலெட்சுமி அம்மாள் கொண்டு வந்த தேவதாசிகளிற்கான சட்டம் சென்னை சட்டசபையில் நிறைவேறியது நமக்குச் சந்தோசத்தை ஏற்படுத்தியிருக்கிறது. கோவில்களில் தேவதாசிகள் இருக்க வேண்டும் என்ற வழக்கம் எக்காரணம் பற்றி ஏற்பட்டிருந்த போதினும், தற்காலம் அவ்வழக்கம் அடியோடு நின்று போக வேண்டியது அவசியம். இச்சட்டத்தை எதிர்த்துப் பேசிய சில சுயராஜ்ஜியக் கட்சிக்காரர்களுடைய மனோப்பாண்மையை நாம் என்னென்று சொல்வது. இந்தியாவில் தேவதாசிகள் இல்லாமல் போனால் விபச் சாரம் குறைந்து போகும் என்று சொல்லிவிட முடியாது. விபச்சார தொழிலையே தண்டனைக்குள்ளாக வேண்டிய அம்சமாகச் செய்துவிட வேண்டியது அவசியமானதாகும். இது தொடர்பாக டாக்டர் முத்துலெட்சுமி அம்மாள் முயற்சியெடுப்பாராக...

கோயில்களில் தேவதாசிகளை ஏற்படுத் தியது எதற்காகவெனில் அங்கு உத்தரவான திருப்பணிகளைச் செய்வதற்காகவேதான். அப்படியிருக்க நாளடைவில் சில சுயநலப் பிரியர்கள் தங்கள் சொந்தமான எண்ணங் களைப் பூர்த்தி செய்து கொள்ளும் பொருட்டும், அப்பேதையர்களை மயக்கி தேவதாசிகள் விபச்சாரத்தை கைக்கொள்ள வேண்டிய நிலைமையில் கொண்டுவந்து விட்டுவிட்டார்கள். நமது பாரத தேசத்தில் அனேக குடும்பங்கள் கெட்டு பல கொலை களவுகள் ஏற்பட்டு நமது நாடு அவமதிக்கப் பட்டிருப்பது விபசாரத்தின் காரணத்தையே முதன்மையாகக் கூறலாம். தவிரவும் பல பெண்களை ஒரு புருஷன் மணப்பது தனக்கு இஷடமானவளுடன் உல்லாசமாய் இருப்பது மற்ற மனைவிகள் கெட்ட கொள்கையை மாற்றி ஸ்ரீகளுடைய மனதை குளிர பண்ணுவதற்கு வேண்டிய ஏற்பாட்டினையும் சட்டபூர்வமாய் ஏற்பாடுகள் செய்ய வேண்டு மென்பதை அவர்களுக்கு அறிவித்துக் கொள்வதாகும். அவ்வாறு செய்யாத வகையில் ஸ்ரீகளின் நிலைமை ரொம்பவும் சீர்கேடான நிலையில் வந்து முடியும் *(08.02.1929)*.

இவ்வாறு தேவதாசிகள் கொடூரம் நிறைந்த வாழ்வு குறித்தும் அவர்களின் விடுதலைக்காக குரல் கொடுத்த ஆளு மைகள் குறித்தும் சுட்டிக்காட்டுகின்ற அம்மையார், பெண்களின் சுகாதார நலன் பற்றியும் அது தொடர்பில் கவனமெடுத்த சமூக செயற்பாட்டாளர்கள் பற்றியும் குறித்துக் காட்டத் தவறவில்லை. அவரது மேல்வரும் கூற்று அதனை அழகுற எடுத்துக் காட்டுகின்றது.

“சென்னை சட்டசபையில் ஸ்திரீகளின் வைத்திய வசதிக்காக வேண்டிய சில முக்கியமான விஷயங்களைக் குறித்து ஸ்ரீமதி டாக்டர் முத்துலெட்சுமியம்மாள் அவர்கள் கொண்டு வந்த தீர்மானம் தோற்றுப் போனது மிகவும் வருந்தத்தக்கது. இந்தியாவிலுள்ள இதர இடங்களில் சரியானபடி சிகிச்சை செய்வாரில்லாமல் எழுத்து வாசனையறியாத நாட்டு மருத்துவச்சிகளைக் கொண்டு சிகிச்சை செய்து கொள்ளும் நமது சதோதரிகள் எவ்வளவு பேர் உயிர் விடுகின் றார்கள். எத்தனை சிசுக்கள் மரணமடை கின்றன என்பதை ஒவ்வொருவரும் அறிந்தும் அத்தீர்மானத்தை ஆதரிக்காமல் போனது அவ்ஸ்திரீகளுக்குச் செய்த தீங்கென்றே சொல்ல வேண்டியதாக இருக்கின்றது. நமது மந்திரி டாக்டர் சுப்பராயனவர்கள் இத்தீர்மானத்தை எதிர்த்தது மிக விசனிக்கத்

தக்கதாகும்" (தேசபக்தன் 29.03.1929).

அம்மையாரின் பார்வை பரந்துப்பட்ட அவரது இதயத்தை எமக்கு எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

அதேசமயம், பெண்களின் உடைகள் எவ்வகையில் ஆண்களை திருப்திபடுத் துவதற்காக உள்ளது என்பதனையும் தேவதாசிகளின் பாவாடைகள் மற்றும் சட்டைகளின் கைகளின் நீளமும் எவ்வாறு குறைக்கப்பட்டுள்ளன என்பதையும் அவர் தமது கட்டுரைகளில் பதிவாக்கியிருக்கின்றார். அதேபோன்று காலத்திற்குக் காலம் பெண்கள் விழிப்புக் கொள்ளத் தொடங்கி யதும் ஆடைகளில் எத்தகைய மாற்றங்கள் நிகழ்ந்து வந்துள்ளன என்பதையும் அவர் சுட்டிக் காட்டுகின்றார். பல உயர் பதவி களில் பெண்கள் வகித்த இடம் குறித்தும் குறிப்பிடுகின்றார். எடுத்துக் காட்டாக சட்டசபையில் ஸ்திரீகளுக்கு இடம் வேண்டு என்பதற்காக போராடிய பெண்கள் பற்றியும் அவர் பல இடங்களில் எடுத்துக் காட்டுகின் றார். ஸைமன் கமிசன் ரங்கூனில் விசாரணை நடத்தியபோது மிஸ். சந்திரா என்ற பெண்மணி பரிஸ்டர் சட்டசபையில் பெண்க ளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என பெண்களின் உரிமை தொடர்பில் குரல் கொடுத்ததையும் அம்மையார் வலியுறுத்திக் கூறத்தவறவில்லை.

மேலும் மாணவர்கள் அரசியல் அறிவு பெற வேண்டியதன் அவசியம் பற்றியும் அவர் கவனமெடுக்கின்றார். பெண்களின் வாக்குரிமை சங்கம் (ஸ்ரீகளின் வாக்குரிமை சங்கம் என்றே அம்மையார் குறிப்பிடுகின்றார்) தமது செயற்குழு கூட்டம் ஒன்றில் மாணவர்களுக்குச் சுகாதார நூலைக் காட்டி அதனைப் பாடமாக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளனர். அதன் பிரதியை சகல சட்டசபை அங்கத்தினருக்கும் அனுப்பியுள்ளனர். இது குறித்து அம்மையார் எழுதுகின்ற போது சுகாதார பாடம் மட்டும் அல்ல அரசியல் பற்றிய ஞானமும் மாணவர் களுக்கு அவசியம் என்பதை சுட்டிக்காட்டி இலங்கை நிர்வாகம் பற்றியும் அது எவ்வாறு இயங்குகின்றது குறித்தும் பொதுமக்கள் தொடர்பில் அவர்களின் கடமைக் குறித்தும், குறிப்பாக அரச உத்தியோகத்தர்கள் பொது மக்களுக்கு எஜமானாக அல்லாமல் ஊழியர் களாக கடமையாற்ற வேண்டியதன் அவசியம் குறித்தும் மாணவர்களுக்கு தெளிவு பெற வேண்டியுள்ளது எனக் குறிப்பிடுகின்றார்.

விடேசமாக பொது சனங்கள் அரசின் இலட்சியங்கள் பற்றி தெளிவுபெற வேண்டி யதுடன் பெண்களிடத்தே புத்தெழுச்சிகளை ஏற்படுத்தி அவர்களையும் நிர்வாக அம்சங் களில் பங்குபெற வேண்டியதன் அவசியத் தையும் அவர் வலியுறுத்துகின்றார். பெண்கள் குறித்து தேசபக்தனில் வெளிவந்த இந்தியா வின் முன்னேற்றம் (03.09.1929- இதழ் 192, 11.09.1929 இதழ்-199, 25.09.1929 இதழ்- 207), ஸ்ரீகளுக்குச் சமசுதந்திரம் (28.09.1929- இதழ் 209,30.09.1929- இதழ் 210) ஆகிய கட்டுரைகள் முக்கிய கவனிப்புக்குரிய வையாகும். இத்தகவல்கள் சாரல் நாடனின் நூலில் குறிப்பிடப்பட்டிருப்பினும் சில தவறுகளையும் கொண்டிருக்கின்றன என்பதும் இவ்விடத்தில் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

"இந்தியாவின் முன்னேற்றம்" என்ற தொடர் கட்டுரை இரண்டு தொடர்கள் மட்டுமே வெளிவந்திருப்பதாக குறிப்பிடு கின்றார். உண்மையில் அத்தொடர் கட்டுரை மூன்று தொடர்களாக வெளிவந்திருப்பதாக அறிய முடிகின்றது. மூன்றாவது தொடரின் இறுதியில் "தொடரும்" என்றே குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனால் அதன் தொடர்ச்சியை அடுத்துவந்த பத்திரிகைகளில் காண முடியாதுள்ளது. அதேசமயம் கட்டுரையை முழுமையாக வாசிக்கின்றபோது கட்டுரை முற்றுப் பெற்றுள்ளதாகவும் எண்ணத் தோன்றுகின்றது. அவ்வாறே இக்கட்டுரையின் தலைப்பை மட்டுமே மையமாக கொண்டு இந்திய சுதந்திரம் சமத்துவம் பற்றி பேசுவ தாகவே குறிப்பிடுகின்றார். அக்கட்டுரை முற்று முழுதாக பெண்களின் நிலை குறித்து தான் பேசுகின்றது. மேலும் சாரல் நாடன் தமது நூலில் ஸ்ரீகளுக்குச் சமசுதந்திரம் என்ற கட்டுரையை "பெண்களுக்கு சம சுதந்திரம்" எனக் குறிப்பிடுகின்றார். இத்தலைப்பு மூல பதிப்பிலிருந்து மாறுப்பட்டிருப்பதை அறிய முடிகின்றது.

1929 ஆண்டில் தேசபக்தன் பத்திரிகை தினசரியாக வெளிவரத் தொடங்கியது. நடேசய்யரின் அரசியல் தொழிற்சங்க பொறுப்பு அதிகரித்ததால் அவர் அடிக்கடி வெளியூர் சென்று வந்தார். இதன் காரணமாக பத்திரிகைப் பொறுப்பினை ஏற்க வேண்டிய நிலை அம்மையாருக்கு ஏற்பட்டது. அம்மையார் இப்பொறுப்பினை ஏற்று செயற்பட்ட காலத்தில் அதிகமான பெண்கள் இவரோடு இணைந்து செயற்பட்டமை பற்றி சாரல் நாடன் தமது ஆய்வில் குறிப்பிட்டுள்

ளார். இக்காலத்தில் தேசபக்தன் பத்திரிகை யில் அம்மையார் நிறைய கட்டுரைகளை எழுதியுள்ளார். சில பத்திரிகைகளுக்கு ஆசிரியர் தலையங்கமும் எழுதியுள்ளார். □ஸ்த்திரி பக்கம்" என்ற பகுதிக்குத் தானே பொறுப்பாயிருந்து பெண்கள் தொடர்பில் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். இவர் எழுதிய கட்டுரைகள் யாவும் தொகுக்கப்பட்டு நூலாக வெளிவர வேண்டியது காலத்தின் தேவையாகும்.

மீனாட்சி அம்மையாருக்கு முன்னரும் அவரது காலத்திலும் பல பெண்கள் இயங்கியுள்ளனர். அவர்களில் அம்மையாருக்கு முன் வாழ்ந்த சுன்னாகம் செல்லாச்சி அம்மையார், மங்கம்மாள் மாசிலாமணி முதலானோர் ஆன்மீகத் துறையில் ஈடுப்பட்டு கொண்டு சமய பணிகளை முன்னெடுத்துள்ளனர். மங்கமாள் மாசிலாமணி அம்மையார் தமிழ் மகள் என்ற பத்திரிகையை வெளியிட்டு பத்திரிக்கை முன்னோடியாகவும் திகழ்ந்துள்ளார்.

அவ்வாறே பெண்களுக்கு வாக்குரிமை வழங்கக்கூடாது என்ற கருத்துக்கள் பிற்போக்கு நிலைப்பட்டவர்களால் முன்வைக்கப்பட்டபோது அதற்கு எதிராக பெண்களின் வாக்குரிமை சங்கம் என்ற அமைப்பை உருவாக்குவதில் திருமதி டேஸி பண்டாரநாயக்கவின் பங்கு கனிசமானது. அதேபோல் தமிழ் மக்கள் மத்தியில் நல்லம்மாள் சத்தியவாகீஸ்வர ஐயர், ஈ.ஆர். தம்பிமுத்து முதலானோர் இவ்வமைப்பு சார்ந்து இயங்கியுள்ளனர். அவர்களின் பங்களிப்புகள் யாவும் குறிப்பிட்ட வர்க்கத்தினரை பிரதிபலிப்பதாக அமைந் திருந்ததுடன் குறித்த எல்லைக்குள்ளேயே முடங்கி விடுவதாகவும் அமைந்திருந்தமை துரதிஸ்டவசமானதாகும்.

அம்மையாரின் செயற்பாடானது- சமூக பங்களிப்பானது பரந்துப்பட்ட வெகுசனத்தை அடிப்படையாக கொண்டமைந்திருந்தது. அவர் பெண்கள் பொறுத்தும் அவர்களின் விடுதலை பொறுத்தும் அதிக கவனமெடுத் திருந்த போதினும் முழு சமூக விடுதலையே அதனை சாத்தியப்படுத்தும் என்ற சிந்தனையே அவரில் முனைப்புற்றிருந்ததை அவரது எழுத்துக்களில் காணக்கூடியதாக உள்ளது. அவரது கட்டுரைகளோ அல்லது கவிதைகளோ துரைத்தன மனோபாவத்துடன் சமூகத்தில் கற்றவர்களை மாத்திரம் இலக்காக கொண்டு எழுதப்பட்டவை அல்ல. அவை பரந்துப்பட்ட மக்களை தழுவியதாக அமைந்துள்ளமையினால் தான் எளிய பதம், எளிய நடை, பொதுசனங்கள் விரும்பும் மெட்டு ஆகிய பண்புகள் இயல்பாக வந்தமைந்து விடுகின்றன. அவரது கட்டுரைகளில் அவர் பொதுசனம் என்ற சொல்லை மிக வலிமையுடனே பாவிக் கின்றார். இந்தவகையில் ஓர் ஒப்பியல் நோக்கில் அக்கால பெண் ஆளுமைகளுடன் பொருத்தி பார்க்கின்ற போது, இலங்கையில் எழுந்த சமூக மாற்றத்திற்த்திற்கான முதலாவது பெண் குரல் மீனாட்சியம்மாள் என்பதில் இருநிலைப்பட்ட கருத்துகளுக்கு இடமில்லை எனலாம்.

தனது காலத்து சின்னஞ்சிறிய மனிதரில் இருந்து வேறுப்பட்டு, சமூக விடுதலைக்கான மரபை தேற்றுவித்ததில் அம்மையாருக்கு முக்கிய இடமுண்டு. அவரில் வெளிப் பட்டிருந்த ஒருமுகப்படுத்தப்பட்ட அரசியல் பண்பாட்டு நோக்கு, மக்கள் சார்பு, நாட்டு நல நாட்டம் என்பன சிறப்பானதாயும் தனித்துவமாயும் அமைந்திருக்கின்றது. அவ்வாறு இயங்கி வந்ததொரு வரலாற்றி னையும் தொடர்ச்சியினையும் நன்கு விளங்கிக் கொள்வதற்கு அம்மையார் பற்றிய முழு நிறைவாக ஆய்வு அவசியமாகும். அவ்வாறே அவரது ஆக்கங்கள் தொகுக்கப் பட்டு அடக்கத் தொகுப்பொன்று வெளி வரவேண்டியதும் காலத்தின் தேவையாகும்.

# இருபத்தோராம் நூற்றாண்டுக்கான பாடசாலைகள் வகுப்பறைகள் ஆசிரியர்கள்

## அறிமுகம்

இருபத்தோராம் நூற்றாண்டில் ஏற்பட்டுள்ள விஞ்ஞான, தகவல் தொழில் நுட்பத்தின் மிதமான வளர்ச்சியின் காரணமாக, இன்றைய சமூகம் அறிவு மையச் சமூகமா கவும், அறிவுப் பொருளாதாரத்தை மைய மாகக் கொண்ட சமூகமாகவும் கற்கும் சமூகமாகவும் மாற்றமடைந்துள்ளது. இவற்றுக்கு சமூக தொழினுட்பம் (Social Technology) அதிகளவு பங்களிப்பினைச் செய்துள்ளது. இத்தகைய தன்மைகளைக் கொண்ட இருபத்தோராம் நூற்றாண்டில் வாழ்வதற்கான அடிப்படைத் திறன்களான விமர்சன பாங்கான சிந்தனை மற்றும் பிரச்சினைத் தீர்த்தல், ஆக்கத்திறனும் புத்தாக்கமும், தகவல்சார் எழுத்தறிவு, சமூக மற்றும் பல்கலாசாரத் திறன்கள், தொடர் பாடல்சார் திறன்கள், ஒத்துழைத் துச் செயலாற்றுதல், சுய-நெறிப் படுத்தலுடனான கற்றல் (Self-Directed Learning) மற்றும்




பொன். இராமதாஸ்
விரிவுரையாளர்
கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.


வகைக்கூறலும் தழுவிக்கொள்வ தற்குமான திறன்கள் போன்ற வற்றை பாடசாலைகள் மாணவர் களிடத்தில் விருத்தி செய்தல் வேண்டும்.

இதற்காக இன்றைய பாடசாலைகள் மற்றும் வகுப்பறைகள் "நான்கு C" எண்ணக் கருவினை (Four C's Concept) உள்வாங்கிக் கொள்ள வேண்டியுள்ளது.

இதில் முதலாவது **C- Critical Thinking** என்பதாகும். எண்மப் புரட்சியின் (Digital Revolution) விளைவாக கண்டுப்பிடிக்கப் பட்டுள்ள வலைத்தளங்களை பாடசாலைகள் மற்றும் வகுப்பறைகளுக்குள் ஒருங்கிணைப் பதனூடாக மாணவர்கள் விமர்சன பாங்கான சிந்தனைச் செயற்பாடுகளில் ஈடுபடுதல் வேண்டும். இதற்காக விஞ்ஞானிகள், கண்டுப்பிடிப்பாளர்கள் மற்றும் அவர்களது கண்டுபிடிப்புகள் தொடர்பாக பார்ப்பதற்கும், கலந்துரையாடுவதற்கும் வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

இரண்டாவது **C- Creativity** என்பதாகும். இதற்கமைவாக விஞ்ஞானிகள், கண்டுபிடிப் பாளர்களின் கண்டுபிடிப்புகளை விமர்சன பாங்குடன் பார்த்து கலந்துரையாடியதன் விளைவாக, கணனி தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி மாணவர்கள் முப்பரிமாண உருக்களை தயாரிக்க வேண்டும்.

மூன்றாவது **C- Communication** என்பதாகும். இன்றைய சூழலில் கற்றல் என்பது நான்கு சுவர்களைக் கொண்ட வகுப்பறைகளுக்குள் மாத்திரம் வரையறுக்கப் பட்டதல்ல. மாணவர்கள் தான் இருக்கும் இடத்தில் இருந்துக் கொண்டே உலகின் பல்வேறு பகுதிகளிலும் இருக்கும் ஆசிரியர்கள், மாணவர்கள், வளவாளர்கள் போன்றோருடன் Skype மற்றும் இணையவழி கலந்துரையாடல்கள் (E-conference) மூலம் தொடர்பாடல் செய்வதன் மூலம் கற்க வேண்டும்.

நான்காவது **C- Collaboration** என்பதாகும். மாணவர்கள் இணையம், டுவிட்டார், முகநூல் போன்ற சமூக வலைத்தளங்களை அடிப்படை யாகக் கொண்டு சகபாடிகள், ஆசிரியர்கள் மற்றும் உலகின் பலபாகங்களிலும் உள்ள வளவாளர்கள் போன்றோருடன்

ஒத்துழைத்துக் கற்க வேண்டும்.

இத்தகைய பின்னணியில் இருபத்தோராம் நூற்றாண்டுக்கான பாடசாலைகள் எத்தகைய மாற்றங்களை உள்வாங்கிக் கொள்ளல் வேண்டும் என்பது தொடர்பாக இக்கட்டு ரையில் விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன.

### பாடசாலைகள்

இலங்கை அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடாகும். கல்விக்கான வளங்களை பெற்றுக் கொடுப்பதற்காகவும், பௌதிக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காகவும் போதுமான அளவு நிதி ஒதுக்கீடுகளை செய்ய முடியாமல் இருக்கின்ற நிலை மையில், அபிவிருத்தியடைந்த நாடுகளில் காணப்படுவது போன்று எமது பாடசாலை களையும் வகுப்பறைகளையும் அபிவிருத்தி செய்ய முடியாவிட்டாலும் அதற்கான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. இத்தகைய பின்புலத்தில் இருபத்தோராம் நூற்றாண்டுக்கான பாடசாலைகள் பற்றிய விடயங்கள் இப்பகுதியில் முன்வைக்கப் பட்டுள்ளது.

### கணனி கூடங்கள்

எமது பாடசாலைகளில் காணப்படுகின்ற பெருமளவிலான கணனி அறைகள் பயன் படுத்த முடியாத உபகரணங்களைக் கொண்ட, கிழமையில் ஒரு நாள் 40 நிமிட பாடவேளை கணனியில் தட்டச்சு செய்து பழகுவதற்கு மாணவர்களை அனுமதிக்கும் அறைகளாகவே காணப்படுகின்றன. கணனி அல்லது கணனி தொழில்நுட்பம் ஒரு தனியான விடயமோ அல்லது பாடமோ அல்ல. அது சகல பாடங்களுடனும் ஒன்றிணைக்கப்பட்டதும் பாடசாலைக் கலைத்திட்டத்துடன் பிணைக்கப்பட்டுள்ளது மான விடயத்தொகுதி என்பதை கவனத்தில் கொள்ளல் வேண்டும். இதனால் பாடசாலை யில் கற்பிக்கும் சகல பாடத்திற்குரிய ஆசிரியர்களும் கணனி அறையினை பயன்படுத்தி கற்பிப்பதற்குரிய சூழல் பாடசாலையில் உருவாக்கப்படுதல் வேண்டும்.

### தனிமைப்படுத்தப்பட்ட வகுப்பறைகள்

பாடசாலைகளில் இன்றைய வகுப்ப றைகள் இரண்டு வகையில் தனித்து இயங்கும் வகுப்பறைகளாக (Isolated Classrooms) உள்ளன. முதலாவது பெற்றோர்கள், மற்றும் வெளிவாரியான வளவாளர்களுக்கு வகுப்பறைகளில் வரவேற்பு குறைவாகவே உள்ளது. இத்தகை யவர்களுக்கு வகுப்பறை கதவுகள் பெரும் பாலும் மூடப்பட்டுள்ளன. அதேபோல் வகுப்பறைகளின் நான்கு சுவர்களுக்கு வெளியே காணப்படும் இணையம், வீடியோக்கள், வலைப்பதிவுகள் (Blogs), இணையத்தளங்கள் போன்ற சமூக தொழில்நுட்பங்களும் எழுத்தாளர்கள், விஞ்ஞானிகள் போன்றோர் Skype, மற்றும் இணைய மாநாடுகள் போன்றன மூலம் தொடர்புக் கொள்ளல் போன்றவை உள்நுழைய முடியாதவாறு வகுப்பறை கதவுகள் மூடப்பட்டுள்ளன.

Tony Wagner என்பவர் "தனிமையே முன்னேற்றத்தின் எதிரி" என கூறியுள்ளார். வகுப்பறைகள் எந்த நேரமும் திறந்திருத்தல் வேண்டும். ஆசிரியர்கள் எந்நேரமும் நடந்து திரிவதன் ஊடாக மற்றையவர்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும். பெற்றோர்கள் அடிக்கடி வகுப்பறைகளுக்கு பிரவேசிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். இதற்காக மேலைத்தேய நாடுகளில் "Open School Days" எனப்படும் விசேட தினங்கள் ஒழுங் கமைக்கப்பட்டுள்ளன. இந்த நாட்களில் பெற்றோர்கள் பாடசாலைகளுக்கு விஜயம் செய்து பிள்ளைகளின் முன்னேற்றங்கள் தொடர்பாக ஆசிரியர்களிடம் கலந்து உரையாடலாம்.

### Wi-Fi இணைப்புகள்

இன்று உலகின் பல பாகங்களில் மட்டுமல்லாமல் போக்குவரத்து சாதனங் களிலும் WiFi எனபடும் கம்பியில்லா இணைய வசதிகள் கிடைக்கக் கூடியதாக உள்ளது. ஆனால் ஏனோ தெரியவில்லை பாடசாலைகள் மற்றும் வகுப்பறைகள் மாத்திரம் இந்த சமூக தொழினுட்பத்தை பயன்படுத்துவது மிகவும் குறைவாகவுள்ளது. பாடசாலைகள் WiFi தொழினுட்பத்தை பயன்படுத்துவதற்கு முன்வராமையானது, மாணவர்களுக்கான அறிவை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப் புகளை மட்டுபடுத்துவதோடு, இணையத்தை பாதுகாப்புடன் தமது கற்றலுக்காக பயன்

படுத்துவதற்கான சந்தர்ப்பங்களையும் மட்டுப்படுத்துகின்றன. இதனால் இருபத் தோராம் நூற்றாண்டுக்கான பாடசாலைகள் மாணவர்களும் ஆசிரியர்களும் எல்லா இடங்களிலும் எல்லா நேரங்களிலும் கற்பதற்கான இடமாக மாற்றியமைக்கப்படல் வேண்டும். இதற்கு WiFi தொழில்னுட்பம் பாடசாலை முறைமைக்குள் அனுமதிக்கப் படல் வேண்டும்.

## BYOD எண்ணக்கரு

மாணவர்கள் பாடசாலைகளுக்கு SMART தொலைபேசிகள், Tablets போன்றவற்றை பாடசாலைகளுக்குள் கொண்டு வருதல் இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் மறுக்கப்பட்டுள்ளது. ஆனால் மேலைத்தேய நாடுகளில் மாணவர்கள் இவற்றை பாடசாலைகளுக்கு கொண்டு வருதலை ஊக்குவித்து அவற்றை கற்றல் சாதனங் களாக பயன்படுத்த அனுமதிக்கப்படும் நிலைமை காணப்படுகின்றது. இது **"BYOD"** எனப்படுகின்றது. அதாவது Bring Your Own Device என்பதாகும். இதற்கமைவாக மாணவர்கள் SMART தொலைபேசிகள், Pen Drive,Tablet,Digital Media Player,Flip Video Camera, Touch Pad, I-phone போன்றவற்றை பாடசாலைகளுக்குள் கற்றல் தேவைக ளுக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப் படுகிறார்கள், இதற்காக BOYD Management எனப்படும் முகாமைத்துவம், BOYD Policies எனப்படும். கொள்கைகள் போன்றன அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. கையடக்கத் தொலைபேசிகள் வெறுமனே தொடர் பாடலுக்குரிய சாதனங்களாக பயன்படுத்திய காலத்தில் அவற்றை பாடசாலைகளுக்கு கொண்டுவருதலை தடைசெய்தமை ஏற்றுக்கொள்ளத்தக்கதாகும். ஆனால் இன்று சாதாரணமான SMART தொலைபேசி 1969 இல் நாஸா (NASA) சந்திரனுக்கு ஒரு மனிதனை அனுப்பியதை விட சக்தி மிக்கதாகவுள்ளது. இருப்பினும் பெரும் பாலான மாணவர்கள் இவற்றை ஒரு சமூக வலைத்தளமாகவும், விளையாட்டுக்களை (Games) விளையாடும் சாதனமாகவே பயன் படுத்துகின்றனர். இன்று SMART தொலை பேசியில் படங்களை பதிப்பு செய்தல், வானொலி கேட்டல், படங்களை எடுத்தல், சுவரொட்டிகளை தயாரித்தல், இணையத் தளங்கள், Blog நூலொன்றின் பகுதியை தரவிறக்கம் செய்தல், Google பிரவேசத்தி னூடாக கலந்துரையாடல் போன்ற பல்வேறு கற்றலுக்கான வசதிகளை பயன்படுத்திக் கொள்ளலாம். ஆசிரியர்கள் அந்த வசதிகள் பற்றி மாணவர்களுக்கு வழிகாட்டுவதோடு இதற்கான வாய்ப்புகளையும் வழங்க வேண்டும்.

## தொழினுட்ப இணைப்பாளர்கள்

பாடசாலைகளில் கணனி முறைமைக்குப் பொறுப்பாக ஒருவர் நியமிக்கப்படல் வேண்டும். ஆனால் இன்று பெரும்பாலான பாடசாலைகளில் செயலிழந்த கணனிகளுடன் காலங்கடந்த மென்பொருள் சாதனங்களை பயன்படுத்தியே ஆசிரியர்கள் செயற்பட வேண்டியுள்ளது. இந்த நிலைமைகளை போக்குவதற்கு ஏற்ற விதத்தில் பாடசாலை களுக்கு தொழினுட்ப இணைப்பாளர்கள் (Techunology coordinators) நியமிக்கப்படல் வேண்டும். இவர்கள் ஆசிரியர்களதும், மாணவர்களதும் தேவைகளையும் பிரச்சினைகளையும் வெற்றிகரமாக தீர்த்து வைத்தல் வேண்டும்.

## ஆசிரியர்கள் அறிவைப் பகிர்ந்துக் கொள்ளல்

ஆசிரியர்கள் தரம் வெற்றிகரமாக செய்து முடித்தவற்றை பகிர்ந்து கொள்வது மிகவும் குறைவாக காணப்படுகின்றது. ஆசிரியர்கள் தரம் வெற்றிகரமாக நிறைவேற்றிய விடயங்களை ஏனையோருடன் பகிர்ந்துக் கொள்ளல் வேண்டும். ஆசிரியர்கள் தொடர்ந்தும் உள்ளூர் மட்டத்தில் செயற் பட்டுக் கொண்டிருக்க முடியாது. மாறாக அவர்கள் பூகோள பிரஜையாக உலகளாவிய மட்டத்தில் செயற்படல் வேண்டும். ஆசிரியர்கள் தமது வேலை அனுபவங்களை முகநூல், டுவிட்டர் போன்ற தொழினுட் பங்களை பயன்படுத்தி சக ஆசிரியர்களுடன் பகிர்ந்துக் கொள்ளல் வேண்டும். தொழில் வாண்மை விருத்தி என்பது மூன்று (03) மணித்தியாலங்கள் கொண்ட செயலமர் வுக்குள் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. இதனால் தான் அமெரிக்க கல்வி தத்துவவியலாளர் ஜோன் டூயி "நாம் அனுபவங்களின் பிரதிபலிப்புக்களில் இருந்தே கற்றுக் கொள்கின்றோம்" என குறிப்பிட்டுள்ளார். இதனால் ஆசிரியர்கள் தமது அன்றாட செயற்பாடுகள் தொடர்பாக பிரதிபலிப்பு

சிந்தனைகளில் ஈடுபடுதல் இன்றியமையாதது.

## பாடசாலைகளுக்கான முகநூல் மற்றும் டுவிட்டர்

பாடசாலை சமூகத்திற்கும் பெற்றோர் களுக்கும் தகவல்களை வழங்குவதற்கு உள்ளூர் பத்திரிகைகளில் வாரத்தில் அல்லது மாதத்தில் ஒரு தடவை செய்தி களை பிரசுரிப்பது போதுமானது என பாடசாலைகள் நம்புகின்றன. ஆனால் பத்திரிகைகளை விட இன்று முகநூல், டுவிட்டர் போன்ற சமூக தொழினுட்ப சாதனங்கள் விரைவானதும் கவர்ச்சியான துமான தகவல் வழங்கும் சாதனங்களாக காணப்படுகின்றன. இதனால் பாடசாலைகள் சமூகத்திற்கு தகவல்களை வழங்குவதற்கும், பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையி லான தொடர்புகளை மேம்படுத்திக் கொள் வதற்கும் இத்தகைய சமூக தொழினுட்பங் களை வினைத்திறன் மிக்கதாக பயன் படுத்திக் கொள்ளலாம். காரணம் இன்று பெரும்பாலானவர்கள் SMART தொலை பேசிகள் ஊடாக இத்தகைய சேவைகளை பெற்றுக் கொள்ளக் கூடியதாகவுள்ளது.

## பாடசாலைகள் வெளியாரில் தங்கியிருத்தல்

பாடசாலைகளின் பல்வேறு தேவை களுக்கான சுவரொட்டிகள், அறிவித்தல்கள், துண்டுபிரசுரங்கள், கையேடுகள் மற்றும் ஆவணங்கள் பாடசாலைகளுக்கு வெளியே யுள்ள நபர்கள் நிறுவனங்களிடமிருந்து பணம் கொடுத்து பெற்றுக்கொள்ளும் போக்குகள் காணப்படுகின்றன. இத்தகைய தேவைகளை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து செயற்றிட்டங்கள் ஊடாக செய்துக் கொள்ள முடியும். இதனால் மாணவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கான தொழில் அனுபவங்களை பாடசாலைகள் பெற்றுக்கொடுக்க முடியும்.

## பாரம்பரியமான பாடசாலை நூலகங்கள்

பாடசாலை நூலகங்கள் பாரம்பரியமான நூலகங்கள் போன்று புத்தகங்கள், மேசைகள் மற்றும் கதிரைகளை கொண்ட தாகவே இன்னும் காட்சியளிக்கின்றன. ஆனால் இருபத்தோராம் நூற்றாண்டுக்கான நூலகங்கள் மாணவர்களும் ஆசிரியர்களும் வந்து ஓய்வு நேரங்களில் வாசிப்பதற்கும் ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்கும், சக்திமிக்க சமூக தொழில்னுட்ப சாதனங் களை பயன்படுத்துவதற்கும், வீடியோக்களை பதிப்பு செய்வதற்கும், இசை அமைப்ப தற்கும், முப்பரிமாண பிரதிகளை பெற்றுக் கொள்வதற்கான வளநிலையமாக ஒழுங்க மைக்கப்படல் வேண்டும். நூலகங்கள் சகலரும் சமத்துவ அடிப்படையில் பயன் படுத்துவதற்கான இடமாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் பொருட்களை பார்வையிடு வதற்காக மக்கள் சென்று வரும் ஒரு நூதன சாலையாகவே நூலகங்கள் இருக்க முடியும்.

## ஒன்றையே சகல மாணவர்களும் பெறுகின்ற நிலைமை

எமது பாடசாலைகளில் சகல மாணவர் களும் ஒன்றையே பெற்றுக் கொள்வதற்கு கட்டாயப்படுத்தப்படுகின்றனர். ஒரு குறித்த வருடத்தில் பிறந்தமைக்காக அப்பிள்ளைகள் சகலரும் ஒரே வகுப்பறையில் விடப்படுகி ன்றனர். பாடசாலை முறைமை கைத்தொழில் மயமாக்கத்தின் தேவைகளை நிறைவு செய்வதற்காகவே ஒழுங்கமைக்கப்பட்டது. கைத்தொழிற்சாலைகளில் ஒரேவிதமான வேலைகளை ஒரே விதத்தில் செய்வதற்கு இது பொருத்தமானதாக இருந்திருக்கலாம். ஆனால் இன்று அது பொருத்தமானதாக அமையாது ஆனால் பொரும்பாலான பாடசாலைகள் இன்றும் 100 வருடங்களுக்கு முன்னைய தொழிற்சாலைகளைப் (Factory Model of School) போன்றே செயற்படு கின்றன.

இன்று மாணவர்களுக்கு பல தெரிவுகளை வழங்க வேண்டும். அவர்களது விருப்பங்களை நிறைவு செய்துகொள் வதற்கும் அவர்களது பலவீனங்களை போக்கிக் கொள்வதற்கும் விசேட மேலதிக கவனத்தை செலுத்த வேண்டியுள்ளது. இதனால் கல்வி தனியாளை அடிப்படை யாகக் கொண்டதாகவும் (Individualsed Education) மாணவர்கள் வயது வேறுபாடின்றி குழுக்களாக செயற்படுவதற்கு ஏற்றதாகவும், மாணவர்களின் தேவைகளை நிறைவு செய்வதாகவும் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.

## சகல ஆசிரியர்களுக்கும் ஒரே விதமான வாண்மைசார் பயிற்சி

சகல ஆசிரியர்களுக்கும் ஒரேவிதமான

தொழில் வாண்மைசார் செயலமர்வுகளே இன்று பெரும்பாலும் நடத்தப்படுகின்றன. வாண்மை விருத்திக்கான செயலமர்வுகள் மேலிருந்து கீழ் நோக்கியதாகவே ஒழுங்கமைக்கப்படுகின்றன. ஆனால் உண்மையின்படி செயலமர்வுகள் ஆசிரியர் களின் வாண்மை விருத்திசார் தேவைகளை அறிந்து கீழிருந்து மேல்நோக்கியதாக ஒழுங்கமைக்கப்படல் வேண்டும். ஆனால் இன்று மேலைத்தேய நாடுகளில் முகநூல், டுவிட்டர், வருவழி கட்டுரைகள் (Online Articles) நூல்கள், வீடியோக்கள், கூட்டுறவு அடிப்படையிலான கலந்துரையாடல்கள் போன்ற வடிவங்களில் தனியாளை மையப்படுத்திய வாண்மை விருத்தி (Personalized Professional Development) நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறையில் உள்ளன.

## மாற்று கணிப்பீட்டு மதிப்பீட்டு முறைகள்

மாணவர்கள் விதந்துரைக்கப்பட்ட கலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தியதன் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட அடைவுகளை எய்தியுள்ளனரா என்பதை பரீட்சிப்பதற்காக சகலருக்கும் ஒரேவிதமான தரப்படுத்தப்பட்ட சோதனைகளே மதிப்பீட்டுக் கருவிகளாக இன்றைய பாடசாலைகளில் பயன்படுத்தப் படுகின்றன. இத்தகைய நியமப்படுத்தப்பட்ட மூன்று மணித்தியால சோதனைகள் ஊடாக மாணவர்கள் கற்றுக் கொண்ட சகல வற்றையும் பரீட்சிக்க முடியாது. மேலும் அறிவை சோதிப்பதற்காகப் பயன்படுத் தப்படும் சோதனைகள் ஊடாக திறன்கள், மனபாங்குகள் என்பவற்றை போதுமானளவு திருத்தமாக மதிப்பீடு செய்ய முடியாது.

எழுத்துமூலம் விடையளிக்க முடியாதவர் களுக்கு வாய்மொழிமூலமான சோதனை களை நடத்த வேண்டியுள்ளது. திறன்கள் மற்றும் மனப்பாங்குகள் சார்ந்த தேர்ச்சிகளை மதிப்பீடு செய்வதற்காக பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீடுகளை (Performance Based Assessment) மேற்கொள்ள வேண்டியுள்ளது. இவற்றுக்கு அமைவாக தற்காலத்தில் பராம்பரிய கணிப்பீட்டு மற்றும் மதிப்பீட்டு முறைகளுக்குப் பதிலாக ஆசிரியர் அவதானிப்பு, வாய்மூல முன்வைப்பு, வாய்மூல வினாக்கள், விவாதம், கதை கூறல், செயலடைவுக் கோவை, வரைதல், விளையாட்டுக்கள், ஆக்கச் செயற்பாடுகள், செவ்வைப்பார்த்தல், நியதி அடிப்படை யிலான கணிப்பீடு, எண்ணக்கரு வரைபட மாக்கல் போன்ற மாற்று கணிப்பீட்டு முறைகள் (Authentic Evaluation Methods) பயன்படுத்தப்படுகின்றன. இதன்மூலம் உள்ளடங்கல் வகுப்பறையில் கற்கும் மீத்திறன், சராசரி, மெல்ல கற்கும் மற்றும் கற்றலில் இடர்படுகின்ற சகலவிதமான விசேடக் கல்வித்தேவைகள் கொண்ட மாணவர்கள் அனைவரையும் மதிப்பீடு செய்யக் கூடியதாக இருக்கும்.

## வகுப்பறையின் பண்புகள்

இருபத்தோராம் நூற்றாண்டுக்கான வகுப்பறைகளில் காணப்பட வேண்டிய பண்புகள் 10 இனங்காணப்பட்டுள்ளன. இத்தகைய பண்புகளை கொண்டதாக வகுப்பறைகளை வடிவமைப்பதன் ஊடாக மாணவர்களிடத்தில் 21ஆம் நூற்றாண்டுக்கான திறன்களை விருத்தி செய்வதற்கு எமது பாடசாலைகளாலும் ஆசிரியர்களாலும் பங்களிப்புச் செய்யமுடியும்.

வகுப்பறைகள் மாணவர் மையமானதாக காணப்படுதல் வேண்டும். இதற்கு அமைவாக ஆசிரியர்கள் கற்பிப்பதை குறைத்து கற்பதற்கு வழிகாட்டுவதற்கு அதிகளவு நேரத்தை செலவிட வேண்டும் மேலும் கற்பதற்கு வசதிகளை செய்பவராகவும் மாணவர்கள் விமர்சன பாங்குடன் சிந்திப்பதற்கு ஏற்றதாக செய்துபார்ப்பதற்கும், கண்டறிவதற்கும் ஏற்றதாக வகுப்பறை செயற்பாடுகள் ஒழுங்கமைப்படுதல் வேண்டும். அத்துடன் ஒவ்வொரு மாணவனதும் தேவைகள், இயலுமைகள் மற்றும் கற்கும் பாணி என்பவற்றினை மையப்படுத்தியதாக வகுப்பறைச் செயற்பாடுகள் இடம்பெற வேண்டும்.

மாணவர்கள் பேனை மற்றும் கடதாசிக ளுக்குப் பதிலாக கணனிகளை பயன்படுத்து வார்கள், கணனிகளைப் பயன்படுத்தி குழுக்களாக வேலைகளில் ஈடுபட்டு செயற்றிட்டங்களையும் சுவாரஸ்யமான செயற்பாடுகளையும் பூர்த்தி செய்வார்கள். இதற்காக மாணவர்கள் சுதந்திரமாக செயற்படுவதற்கு ஏற்றதாக சந்தையில் பல்வேறு விதமான மென்பொருள் சாதனங்கள் கிடைக்கக்கூடியதாகவுள்ளன.

வகுப்பறைச் சூழலானது பாரம்பரியமான வகுப்பறைகள் போல் அல்லாமல் மிகவும் குறைவான மாணவர்களை கொண்டதாகவும்

இடைவினை கொள்ளக்கூடிய வெண் பலகைகள், LCD Projectors, BYOD சாதனங்கள், மாணவர்கள் தமது சொந்த Laptops மற்றும் Tablets கொண்டு வந்து பயன்படுத்தும் வகுப்பறைகளாக காணப்படும். மேலும் தொழினுட்ப சாதனங்களின் பயன் பாட்டின் மூலம் மிகவும் வினைத்திறன் மிக்க, மாணவர் பங்குபற்றலை ஊக்குவிக்கக் கூடிய, மாணவர் வேலைகளை இலகுவாக நிறைவேற்றக் கூடியதானதாகவும் கற்றலில் இலகுவாக கவனத்தை செலுத்தக்கூடிய தாகவும் வகுப்பறைகள் வசதிப்படுத்தப்பட்ட வையாக காணப்படும்.

பாரம்பரியமான மரபுசார் வகுப்பறைகளில் ஆசிரியர்கள் மாணவர்கள் நடந்துக்கொள்ள வேண்டிய விதங்கள் மற்றும் ஒழுங்குகளை அறிவுறுத்துவார்கள். ஆனால் 21 ஆம் நூற்றாண்டுக்கான வகுப்பறைகளில் மாணவர்கள் தாமாகவே பின்பற்ற வேண்டிய ஒழுங்குகள், விதிகள் மற்றும் வழிமுறைகளை விளங்கிக் கொண்டு பின்பற்றுவர். இதற் கமைவாக கற்றலுக்கான சூழல் மிகக் கவனமாக திட்டமிடப்பட்டு ஒழுங்கமைக் கப்பட்டதாக இருக்கும், வகுப்பறை விதிகள், விதிமுறைகள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். மாணவர்கள் அடைய வேண்டிய இலக்குகள் மற்றும் அவர்களது பொறுப்புகள் எல்லா சந்தர்ப்பங்களிலும் நன்கு அறிவுறுத்தப்பட்ட வர்களாக காணப்படுவார்கள்.

வகுப்பறைகள் ஒருவரை ஒருவர் மதிக்கும் ஏற்றுக் கொள்ளும் பாங்குடையதாக காணப்படும். ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஒருவரை ஒருவர் மதிப்பதோடு வகுப்பறைகளில் சிறப்பான ஒழுக்கம் பின்பற்றப்படுவதோடு மற்றையவர்களின் அபிப்பிராயாங்களை மதித்து செயற்படும் தன்மையும் வகுப்புத் தோழர்களோடு ஒத்துழைத்துச் செயற்படும் தன்மையும் காணப்படும்.

மாணவர்கள் தமது கற்றலுக்கான பொறுப்புக்களை தாமே ஏற்றுகொள்ளும் போக்குகள் 21 ஆம் நூற்றாண்டு வகுப்பறை களில் காணக்கூடிய இயல்புகளில் மற்றொன்றாகும். இதற்காக சுய வழிப்படுத்த லுடனான கற்றலில் (Self - Directed Learning) மாணவர்கள் ஈடுபடுவர்.

இருபத்தோராம் நூற்றாண்டுக்கான திறன்களை மாணவர்களிடத்தில் விருத்தி செய்வதற்கு உதவக்கூடிய விதமாக, இவ்வகுப்பறைகளில் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீடுகள் (Performance Based Asessments) மேற் கொள்ளப்படும். இதற்கமைவாக மாணவர்கள் செயற்றிட்டங்கள், செய்முறைகள், பிரச்சி னைத் தீர்த்தல், முன்வைப்புகள், ஆக்கங்கள் மற்றும் மாதிரிகளைத் தயாரித்தல் போன்ற செயற்பாடுகளின் போதும் செயற்பாடுகளின் நிறைவிலும் நியதிகளை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு செய்யப்படுவார்கள்.

இருபத்தோராம் நூற்றாண்டு வகுப்ப றைகளில் காணப்படும் பண்புகளில் ஒத்துழைப்புடனான கற்றல் (Collaborative learning) முக்கியமானது. இது மிகவும் விளைதிறன்மிக்க கற்றல் முறையொன்றாகும். தனித்தனியாக அல்லது தனிமைப்படுத்தப் பட்ட கற்றல் - கற்பித்தல் மிகவும் இறுக்க மானதும் முன்னேற்றத்திற்கு தடையான தாகவும் அமையக்கூடியதாகும். ஆனால் குழுவாக சேர்ந்து கற்றலானது கற்றலின்பால் கவனத்தை குவியப்படுத்துவதற்கும் விமர்சன பாங்கான சிந்தனையின் மேம்பாட்டிற்கும் உதவக்கூடியதாகும். ஒத்துழைத்துக் கற்றலா னது ஒத்துழைப்புடனான எழுத்துச் செயற்பாடுகள், குழு செயற்றிட்டம் பிரச்சினைகளை இணைந்து தீர்த்தல், விவாதம் போன்றவற்றை உள்ளடக்கியதாகும். இத்தகைய கற்றல் முறையானது பாரம்பரிய மான குரு-சீடர் முறையிலான ஆசிரியர்-மாணவர் இடைத்தொடர்பை மீள்நிர்ணயம் செயவதாக அமையக்கூடியதாகும். இம் முறையில் தொழினுட்பம் மிக முக்கியமான பங்கினை வகிக்கும். ஒத்துழைப்பு கற்றல் முறையின் ஊடாக உயர்கல்விக்காகவும் வேலை உலகிற்காகவும் சிறந்த முறையில் மாணவர்களை தயார்படுத்தக்கூடியதாக இருக்கும்.

பாரம்பரியமான வகுப்பறைகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற கரும்பலகை, வெண்பலகை போன்றவற்றிற்குப் பதிலாக LCD Projectors போன்ற பெரிய திரை கொண்டதான உயர் தொழில்னுட்ப சாதனம் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. ஜேர்மனி போன்ற நாடுகளில் இது மிகவும் பரவலாக பயன்படுத்தப்படுகின்றது. இது சாதாரணமாக நாம் பயன்படுத்தும் SMART தொலை பேசியில் காணப்படும் பல்வேறு வசதிகளை கொண்டுள்ளது. இதன்படி தொடுகைத்திரை (Touch Screen) மூலம் உருவங்கள் மற்றும் எழுத்துக்கள் போன்றவற்றை சிறிதாக்கியும்

பெரிதாக்கியும் பார்க்கலாம். இத்திரையி லேயே விசைப்பலகையும் (On Screen Key Board) உள்ளமையினால் தட்டச்சுப் பதிப்புகளை செய்யலாம். மேலும் மாணவர் களின் கற்றல் வேகத்தின் வித்தியாசத்திற்கு அமைவாக (Multiple Active Users) செயற் படுவதற்கான வாயப்புகள் உள்ளன. அத்துடன் படப்பிடிப்பு கருவிகள் இணைப்பு (Document Camera Integration) ஆதரவு மற்றும் ஒத்துழைத்து கற்கும் வாய்ப்பு (Foster Collaboration) விரிவுரை சாதனங்கள் (Annotation Tools) போன்றவற்றைக் கொண்ட மாணவர் மையமான திரையாக இது காணப்படுகின்றது. மேலும் இது மாணவர் களின் ஆக்கத்திறனை ஊக்குவிப்பற்கும், மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் பங்கேற்பதை ஊக்குவிப்பதாகவும் அனுபவ ரீதியான பயிற்சியைப் பெற்றுக் கொடுக்கக்கூடியதாகவும் விளங்குகின்றது.

## ஆசிரியர் வகிபாகம்

இருபத்தோராம் நூற்றாண்டுக்கான பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் பின்வரும் நான்கு துறைகள் சார்ந்த வகிபாகங்கள் ஆற்ற வேண்டியவர்களாக வுள்ளனர். அதில் முதலாவது துறை திட்டமிடல் மற்றும் தயார்படுத்தல் சார்ந்ததாகும். இந்த வகிபாகத்தினை நிறைவேற்றுவதற்கு ஆசிரியர்கள் பாடம் தொடர்பாகவும் கற்பித்தல் முறையியல் தொடர்பாகவும் உள்ளடக்க அறிவையும் மாணவர்களை இனங்காணப்பதற்குத் தேவையான உளவியல் அடிப்படையிலான அறிவையும் பெற்றிருத்தல் வேண்டும். அத்தோடு மாணவர்களிடம் எதிர்பார்க்கும் கற்றல் பேறுகளை (Learning Outcomes) வடிவமைத்தல், அறிவு, திறன், மனபாங்குகளை விருத்தி செய்யும் வளவாளராகவும், தொடர்ச்சியாக கற்பித்தலை முன்னெடுக்கக் கூடிய ஊக்கமுள்ளவராகவும், மாணவர் அடைவினை துணிவதற்கான கணிப்பீடுகளை வடிவமைக்கக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

இரண்டாவது துறையாக கற்பித்தல் தொடர்பான வகிபாகம் அமைகின்றது. இதற்காக ஆசிரியர்கள் மாணவர்களுடன் வினைத்திறனுடன் தொடர்பாடல் செய்தல் வேண்டும். வினவுதல் மற்றும் கலந்துரையாடல் நுட்பங்களை பயன்படுத்த வேண்டும். மாணவர்களை கற்றலில் தொடர்புப்படுத்தல், கற்பித்தலின் தொடர் கணிப்பீகளை மேற்கொள்ளல் போன்ற செயற்பாடுகளையும் மேற்கொள்வதோடு நெகிழ்வுள்ளவராகவும் பிள்ளைகளின் தேவைகளுக்கு துலங்கல்களை வெளிப்படுத்துபவராகவும் செயற்படல் வேண்டும்.

வகுப்பறை சூழலுடன் தொடர்புபட்டதான மூன்றாவது வகிபாகங்களுக்கு அமைவாக, வகுப்பறையில் ஒருவர் மற்றவரை மதிக்கக் கூடியதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதுமான சூழலை கட்டியெழுப்புதல், கற்றலுக்கான கலாசாரமொன்றினை கட்டியெழுப்புதல், வகுப்பறை முகாமை செய்தல், மாணவர் நடத்தைகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் வகுப்பறையின் பௌதிக ரீதியான இடத்தினை முறையாக ஒழுங்கமைத்தல் போன்ற செயற்பாடுகளை முறையாக ஆசிரியர்கள் நிறைவேற்ற வேண்டும்.

தொழில் வாண்மைசார் பொறுப்புக்கூறல் நான்காவது தொகுதி ஆசிரியர் வகிபாகமாகும். இதற்கமைவாக ஆசிரியர்கள் தமது அன்றாட கற்பித்தல் தொடர்பாக பிரதிபலிப்பு செயற்பாடுகளில் ஈடுபடல் வேண்டும். அத்துடன் வகுப்பறை மற்றும் மாணவர்கள் தொடர்பான திருத்தமான பதிவுகளை பராமரித்தல், மாணவர்களின் குடும்பங்களோடு தொடர்புகளை பேணுதல், வாண்மைசார் நிகழ்வுகளில் பங்குபற்றுதல், தொழில் வாண்மைத்துவத்தை விருத்தி செய்துக் கொள்ளல், வாண்மைத்துவத்தை வெளிக்காட்டக்கூடிய விதமாக நடந்துக் கொள்ளல் போன்றனவும் இதனுள் உள்ளடங்கும்.

## முடிவுரை

ஜோன் டுயி (1915) "நாம் நேற்று கற்பித்ததைப் போலவே இன்றும் கற்பிப்போமெனில் எமது சிறார்களின் எதிர்காலத்தை திருடுபவர்களாகிவிடுவோம்" என குறிப்பிட்டுள்ளமைக்கு அமைவாக நோக்கும் போது இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள பல விடயங்களை இலங்கையின் சூழமைவில் நடைமுறைச் சாத்தியமற்றதாக தோன்றலாம். ஆனால் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளவற்றுள் பெரும்பாலானவற்றை இன்றைய அதிபர்களும் ஆசிரியர்களும் மாணவர்களும்

பெற்றோர்களும் அறிந்து வைத்திருத்தல் இன்றியமையாதது. உலகளாவிய ரீதியில் பாடசாலைகளில் காணப்படும் சகல வகுப்பறைகளையும் SMART வகுப்பறைகளாக மாற்றுவது நடைமுறைச் சாத்தியமற்றது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதனால் பாடசாலைகளில் காணப்படும் வகுப்பறைகளில் ஒன்றையே அல்லது ஒரு சில வகுப்பறைகளையோ இத்தகைய வகுப்பறைகளாக மாற்றியமைப்பதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்கமைவாக இலங்கையிலும் மேல்மாகாண ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கல்வி வலயத்தின் பாடசாலையொன்றில் முதலாவது வகுப்பறை திறந்து வைக்கப்பட்டுள்ளது. பாடசாலைகளில் ஆரம்பிக்கப்படும் ஒரு சில வகுப்பறைகளை சுழற்சி முறையில், சகல ஆசிரியர்களும் பாடத்தின் தன்மைகளுக்கு அமைவாக பயன்படுத்துதல் வேண்டும் என்ற எதிர்பார்ப்பு முன்வைக்கப்பட்டுள்ளது. இதனால் ஆசிரியர்களும் "SMART ஆசிரியர்களாக" மிளிர வேண்டிய தேவையுள்ளது. அதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதற்கான ஆரம்பமாக இக்கட்டுரை அமையும்.

# மலையக சமூக மாற்றத்தில் ஆசிரியர்களின் வகிபாகம்

எம். வாமதேவன்
ஆலோசகர்
மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு
மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு

**முகவுரை**

வரலாற்றில் பரந்த அளவில் சமூகங்களிடையே ஏற்பட்ட மாற்றங்களில் மத்திய வகுப்பினரின் வகிபாகம் அதிகளவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பொதுவாக நிலவுடமை மற்றும் முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் கீழ் மட்டத்திலே காணப்பட்ட விவசாயிகள் மற்றும் தொழிலாள வகுப்பினர் அவர்களால் ஆளப்பட்ட உயர் வர்க்கத்தினால் அடக்கப்பட்டும், சுரண்டப்பட்டும் வந்தனர். இத்தகைய நிலையிலிருந்து கீழ் மட்ட மக்கள் தங்களது நிலையை உயர்த்தி கொள்வதற்கான போராட்டங்கள் வரலாறு நன்கு பதிவு செய்துள்ளது. கீழ் மட்ட மக்களுக்கும், உயர் வர்க்கத்தினருக்கும் இடையே இடம்பெற்ற போராட்டங்களில் கீழ் மட்ட மக்களுக்கு ஒரு உந்து சக்தியாக இருந்தவர்கள் மத்திய வகுப்பினர் ஆவர். இந்த மத்திய வகுப்பினர் பெரும்பாலும் புத்திஜீவிகளாக அமைந்து இந்த சமூக மாற்றத்திற்கு வழி சமைத்துள்ளனர்.



இத்தகைய பகை புலத்தில் மலையக சமூகம் நோக்கப்படுமாயின் அங்கு மிக நீண்ட காலமாக தோட்டத் தொழிலாளர்களே இச் சமூகத்தின் அடி மட்ட நிலையில் காணப்பட்டனர். தோட்ட தொழிலின் பொருளாதார அமைப்பு மற்றும் இவர்கள் இந்தியாவிலிருந்து குடி பெயர்ந்தவர்கள் என்ற அடிப்படையிலும் இறுக்கமான உற்பத்தி முறைமை காரணமாகவும் தோட்டம் என்ற எல்லைக்குள்ளே அடைபட்ட சமூக மாகவும் காணப்பட்டனர். இலங்கை சுதந்திரம் அடைந்ததற்கு பின்னால் இவர்களது குடியுரிமை மற்றும் வாக்குரிமை பறிக்கப் பட்டதன் காரணமாக இவர்களது அடைபட்ட தன்மை மேலும் இறுக்கமாகியது. இந்த அடைபட்ட தன்மையிலிருந்து விடுபட்டு தேசிய நீரோட்டத்தில் இணைந்து கொள்கின்ற புதிய சமூக குழுவினரின் உருவாக்கமே இந்த சமூக மாற்றத்தின் முக்கிய பண்பாக காணப்படுகின்றது. இந்த சமூக மாற்றம் மிக படிப்படியாகவே இடம்பெற்று வருகின்றது. இந்த மாற்றத்தை முடுக்கிவிட்ட புத்தி ஜீவிகளை உள்ளடக்கிய மத்திய வர்க்கத்தில் பலர் அடங்குவர். ஆரம்ப காலத்தில் தொழிற்சங்க தலைமை களும் பின்னர் ஆசிரியர்கள் மற்றும் ஏனைய தொழில் செய்வோர்களும் இந்த மாற்றத்தை விரைவுப்படுத்தினர். இவர்களில் சட்டத் தரணிகள், அரசாங்க மற்றும் தனியார் உத்தியோகத்தர்கள் வர்த்தகர்கள் மற்றும் முச்சக்கர சாரதிகள் ஆகியோர் உள்ளடங்குவர். இத்தகைய பிரிவினர்களில் மலையக ஆசிரியர் பங்கு மிக குறிப்பிடத் தக்க ஒன்றாகும். இக்கட்டுரையிலே ஆசிரியர்களுடைய தோற்றம் வரலாற்று ரீதியான வளர்ச்சி, தொகை அவர்களுடைய பண்பு ரீதியான மாற்றங்கள் என்பவற்றை எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஆசிரிய குழாமின் தோற்றமும் வளர்ச்சியும்.**

ஆசிரியர்களின் தோற்றத்தை வரலாற்று அடிப்படையில் மூன்று கட்டங்களாக பார்க்கலாம். முதலாவது தோட்ட பாடசாலைகள் தோட்ட நிர்வாகத்திற்கு

முற்பட்டிருந்த காலம் (ஆரம்பம் முதல் 1971ஆம் ஆண்டு வரை) இரண்டாவது 1971ற்கு பின்னால் அரசாங்கம் பொறுப்பேற்ற பாடசாலைகளின் தரங்கள் உயர்த்தப்பட்டமை. மூன்றாவது 1990களின் பிற்பட்ட காலத்தில் பல்வேறு ஆசிரியர்கள் நியமனங்களின் ஊடாக எண்ணிக்கையில் ஏற்பட்ட பாரிய அதிகரிப்பு என்பனவாகும்.

அரசாங்கம் தோட்டப் பாடசாலைகளை பொறுப்பேற்பதற்கு முன்னால் ஏறக்குறைய 800 பாடசாலைகளும் நகர்புறங்களில் தோட்டப்புற மாணவர்களின் கல்வி தேவைகளை பூர்த்தி செய்ய பிரதான நகரங்களில் நகர்புற பாடசாலைகளும் காணப்பட்டன. இவை பெரும்பாலும் கிறிஸ்தவ மஸனெரிகளால் ஆரம்பிக்கப் பட்டன. இங்கு ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை 1500க்கு குறைவானதாகவே காணப்பட்டது. தோட்டப் பாடசாலைகள் பெரும்பாலும் தரம் 5 வரைக்கும் இருந்ததோடு ஒவ்வொரு தோட்டத்தில் ஒவ்வொரு பாடசாலைகள் காணப்பட்டதோடு அவற்றில் ஒன்று அல்லது இரண்டு ஆசிரியர்களே காணப்பட்டனர். மிக நீண்டகாலமாக இந்தியாவிலிருந்து வந்த சிலரே ஆசிரியர் பதவியை வகித்து வந்தனர். சில இடங்களில் இவர்கள் பகுதிநேர ஆசிரியர்களாகவும் தோட்ட எழுது வினைஞர்களாகவும் (கிளார்க்) இருந்து வந்தனர். சுதந்திரம் அடைந்ததற்கு பின்னர் அரசாங்கம் தோட்ட பாடசாலை ஆசிரியர் களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு மானியம் வழங்கியது. இம்மானியத்தை பெற வேண்டுமாயின் இந்த தோட்ட ஆசிரியர்கள் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்களாக இருக்க வேண்டும். இந்த அங்கீகாரம் பெறுவதற்கு அவர்கள் குடியுரிமை பெற்றவர்களாகவும் ஜி.ஸி.சாதாரண தரத்தில் 6 பாடங்கள் சித்தியடைந்தவர்களாக இருக்க வேண்டும். இந்த தகைமைகள் தோட்ட இளைஞர் களுக்கு இல்லாத காரணத்தினால் பெரும்பாலான ஆசிரிய வெற்றிடங்கள் வடபகுதியை சேர்ந்த இலங்கை தமிழர்களால் நிரப்பப்பட்டன. இத்தகைய ஆசிரியர்களின் பணி மற்றும் பங்கு பெருமளவில் பள்ளிக்கூட மட்டத்திலேயே வரையறுக்கப்பட்டவொன்றாகவிருந்தது.

அரசாங்கம் பொறுப்பேற்றதன் பின்னர் பள்ளிக்கூடங்களின் தரம் உயர்த்தலோடு ஆசிரிய வெற்றிடங்கள் உருவாகின. அரசாங்கம் பொறுப்பேற்றதன் பின்னர் அரசாங்க சேவையாளர்களாக அனைத்து ஆசிரியர்களும் உள்வாங்கப்பட்டனர். பின்னர் படிப்படியாக பாசாலைகளின் தரம் உயர்த்தலோடு வகுப்புக்கள் 5ம் தரத்தி லிருந்து சாதாரண தரம் மற்றும் உயர்தரம் வரை வகுப்புக்கள் உருவாக்கப்பட்டமையால் அதற்கான தேவையும் உருவாகியது. இந்த காலப்பகுதியில் உள்நாட்டு அரசியல் கள நிலையில் ஏற்பட்ட மாற்றம், அரசியல் பேரம்பேசும் சக்தியின் பலம் காரணமாக குடியுரிமை பிரச்சினை தீர்க்கப்பட்டது. இதைத்தொடர்ந்து ஆசிரியர் வெற்றிடங் களுக்கு மலையகத்தவர்கள் நியமிக்கப் பட்டனர். இந்த அபிவிருத்தியின் பெறுபேறு காரணமாகவே தற்போது பத்தாயிரத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் காணப்படுகின்றனர்.

## ஆசிரியர்களின் வகிபாகம் - 60களில்

இந்த அசிரியர்கள் சமூக நிலைமாற்றத் தின் வகித்த பங்கு என்ன? 1956ல் எஸ்.டப்ளியூ.ஆர்.டி. பண்டாரநாயக்க பிரதமரானதன் பின்னால் நாட்டில் ஏற்பட்ட தேசிய எழுச்சியை தொடர்ந்து மலையகத்தில் மறுமலர்ச்சியின் கீற்றுக்கள் தென்பட ஆரம்பித்தன. 1960களில் மலையகத்தில் இந்த மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதில் முக்கிய பங்காற்றியவர்கள் ஆசிரியர்கள் அவர். மலையக நல்வாழ்வு வாலிபர் சங்கம், மலையக இளைஞர் முன்னணி, மலையக எழுத்தாளர் மன்றம், என்பவை அன்று ஆசிரியர்களாக இருந்து மறைந்த இர.சிவலிங்கம், எஸ்.செந்தூரன் எட்டியன் தோட்டை ஏ.பி.வி.கோமஸ் பதுளை பாரதி இராமசாமி போன்ற ஆசிரியர்களின் முயற்சியின் விளைவுகளாகும். சமூக எழுச்சியில் ஆசிரியர்கள் கொண்ட இந்த பாரம்பரிய வகிபாகம் தொடர்ந்ததா என்ற கேள்விக்கு, "ஆம்" என்ற பதிலை முழுமையாக தர முடியாதுள்ளது.

ஏன் இத்தகைய ஒரு நிலை என்ற கேள்வி எழும்புகின்றது. 1970களுக்கு முற்பட்டகாலத்தில் மலையகத்தில் பெருமளவில் தொழிற்சங்க தலைமைகளே காணப்பட்டன. இத்தலைமைகள் பெருமளவில் தொழிலாளர்களின் அன்றாட பிரச்சினைகளில் அக்கறை காட்டியதே ஒழிய அடிப்படை பிரச்சினைகளில் அதிக ஈடுபாடு காட்டக்கூடியநிலையில் இருக்கவில்லை. அந்த இடத்தை நிரப்புகின்ற ஒரு தேவை ஆசிரிய சமூகத்திற்கு இருந்தது இதன்

பின்னர் ஏற்பட்ட அரசியல் பிரதிநிதித்துவ வளர்ச்சி காரணமாக அரசியல் தலைமைகள் முதன்மைபெற ஆரம்பித்தன. இதே காலப்பகுதியில் அரச சார்பற்ற நிறுவனங் களின் உள்வருகையும் அதனது வளர்ச்சியும் ஆசிரியர் சமூகம் ஒரு தனித்த குழுவாக செயற்பட முடியாமல் போனது.

## ஆசிரியரின் வகிபாகம்

## தற்போதைய நிலை

மலையக ஆசிரியர்களின் எண்ணிக்கை பத்தாயிரமாக இருப்பது பொருளியல் ரீதியாக பார்க்கையில் மனித மூலதனம் (Human Capital) எனக்குறிப்பிடலாம். இந்த மனித மூலதனம் வினைத்திறன்மிக்கதாக அமையும்பொழுது அதனது பலன் அவர்கள் சார்ந்த சமூகத்திற்கு புதிய பரிமானங்களை கொண்டு வரும். முதலாவதாக ஆசிரியர் தங்களுடைய கல்வி தகைமைகளையும் திறன்களையும் வளர்த்துக் கொள்ள பல்வேறு வாய்ப்புக்கள் உண்டு. அந்த வாய்ப்புக்கள் சரியாக பயன்படுத்தப்படுமாயின் அவர்களுடைய தனிநபர் வளர்ச்சியானது (Personal Development) உயர்ந்த மட்டத்தை அடையலாம். ஆசிரியர்களாக தனது தொழிலை ஆரம்பித்தவர்கள் தற்போது கல்வித்துறையில் தேசிய மட்டத்திலும் மாகாண மற்றும் கோட்ட மட்டத்தில் நிர்வாக துறையில் உயர் பதவிகளை வகிப்பதை காணக்கூடியதாக உள்ளது.

அத்தோடு கல்வித்துறைக்கப்பால் அமைச்சினது மேலதிக செயலாளர், பல்கலைக்கழக பேராசிரியர்கள் போன்ற உயர்நிலையினை அடைந்த உதாரணங்கள் பல உண்டு. அதேபோல ஆசிரியர் என்ற தளத்தில் இருந்து பல்வேறு துறைகளில் தங்களை விரிவு படுத்திக் கொண்டவர்கள் பலர் உள்ளனர். அத்தோடு இன்னுமொரு முக்கிய அம்சம் இவ்வாசிரியர்கள் தோட்டபுறங்களிலேயே வாழ்வதாகும். இதனால் சமூக அக்கறை மிக்கவர்கள் தோட்ட மக்களோடு நெருங்கிய தொடர்பு களை எற்படுத்திக் கொள்ள வாய்ப்புகள் உண்டு. தோட்டத் தொழிலாளர்கள் அன்றாட பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கு நகரங்களில் உள்ள வர்த்தகர்களையும் தொழிற்சங்கங்களையும் நாடுவது வழக்கம். ஆசிரியர்கள் ஒரு வகையில் சமூக மூலதனத்தை (Social Capital) உருவாக்கிக் கொள்ள முடியும். இந்த சமூக மூலதனத்தின் மூலமாக ஆசிரியர்கள் தங்களுடைய சமூக தொடர்புகளை விரிவாக்கிக் கொள்ள வாய்ப்புண்டு. இந்த வாய்ப்புகள் சமூகத்திற்கு பயன்பட கூடியதாக அமையலாம். தோட்டங்களில் பாடசாலைகள் அமைந்தி ருப்பதால் அங்கு இடம்பெறகின்ற பள்ளிக்கூட நிகழ்வுகளான விளையாட்டுப் போட்டி, கலை நிகழ்ச்சிகளில் தோட்ட மக்கள் கலந்து கொள்வது அதிகளவில் இடம்பெறுகின்றது.

இல்லங்களுக்கிடையேயான விளையாட்டு போட்டிகள் இன்று ஒரு விளையாட்டு விழாவாக சமூக நிகழ்வாக பரிணமித் திருப்பதை பார்க்கக்கூடியதாக உள்ளது. ஆசிரியர்களுடைய கல்வி, கல்வி சாரா நடவடிக்கைகள் காட்டுகின்ற ஈடுபாடு மாணவர்களுக்கு வழிகாட்டுவதாக அமையும்.

விளையாட்டு மற்றும் கலாசார நடவடிக்கைகளில் தோட்டங்களுக்கு வெளியே வாழ்ந்த ஆசிரியர்கள் சமூகம் சார்ந்த அக்கறையுள்ளவர்களாக இருந்த சந்தர்ப்பங்கள் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 1960களில் அரசியல் தலைமைகள் இல்லாத நிலையில் தொழிற்சங்க தலைமையில் மாத்திரம் தங்கியிருந்த சமூகத்திற்கு ஒரு எழுச்சியை தோற்றுவித்தவர்கள் நகர்புறங்களில் கடமையாற்றிய ஆசிரியர்களாவர்.

அவர்களே தோட்டங்களுக்கு சென்று பல்வேறு மன்றங்களை அமைத்து இளைஞர்கள் மத்தியிலே ஒரு எழுச்சியினை கொண்டு வந்தனர். இத்தகைய பணிகள் தற்போது இடம்பெறாததற்கு பல்வேறு காரணிகள் உள்ளன. ஏற்கனவே மேலே குறிப்பிட்டதைபோல அரசியற் கட்சிகளின் வளர்ச்சி, அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் அதிகரித்த நிலையில் ஆசிரியர்கள் தனித்து செயற்படுவது குறைவடைந்த நிலையே காணப்படுகின்றது.

மூன்றாவதான செயற்பாடு நேரடியான அரசியல் செயற்பாடகும். இன்று பல ஆசிரியர்கள் நேரடியாக அரசியலில் ஈடுபடுவதை காணக்கூடியதாக உள்ளது. இது வரவேற்க தக்க அம்சமாக காணலாம். இன்று ஆசிரியர்கள் மத்தியில் தொழிற்சங்க அமைப்புக்களில் உருவாக்கம் கவனிக்கதக்கது. பிரதான அரசியல் கட்சிகளை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி தங்களின் ஒரு கட்சி பிரிவாக ஆசிரிய

தொழிற்சங்கங்களை அமைத்துள்ளன. அதை விட பெருந்தோட்ட ஆசிரியர் தொழிற்சங்கம் ஒன்றும் இயங்குவதை அவதானிக்க கூடியதாக உள்ளது இலை அனைத்தும் ஆசிரியர்களின் உரிமைகளை பாதுகாக்க முனைவதோடு அரசியல் சிந்தனைகளையும் ஏற்படுத்துவது குறிப்பிடத்தக்கது. ஆசிரியர்கள் பலர் - மறைந்த வி.டி.தர்ம லிங்கம், தற்போது கணபதி கனகராஜ் மற்றும் சோ.ஸ்ரீதரன் போன்றோர் மாகாண சபை பிரதிநிதிகளாக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதை யொட்டி பல ஆசிரியர்கள் பாராளுமன்றம் மாகாணசபை பிரதேச சபை தேர்தலில் போட்டியிடும் செயற்பாடுகள் காணக்கூடியதாக உள்ளது. மலையக அரசியல் தலைமைகள் ஒரு புத்திஜீவித பங்களிப்பை அளித்து வருவது அவதானிக்ககூடியதாக உள்ளது. இதே நேரத்தில் நேரடி அரசியல் ஈடுபடாமல் ஆசிரியர்கள் அதிபர்கள் தாங்கள் சார்ந்துள்ள அரசியல் கட்சி சார்பாக பள்ளிகூடங்களை அவற்றின் காரியாலயங்களாக மாற்றி வருகின்ற போக்குகளும் அவதானிக்க கூடியதாக உள்ளது. அதிபர்கள் தங்களுடைய தொழில்வாண்மையை (profissionalisam) இழந்து கல்லூரியின் வளர்ச்சிக்காக (?) சில கட்சிகளின் அடிவருடிகளாக மாறி வருகின்ற போக்கு விசனிக்கதக்க ஒன்றாகும். கல்லூரியின் நிர்வாகத்திலே கட்சி அரசியலை புகுத்தாமல் இருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

## முடிவுரை

மலையக மக்களின் அடிப்படை மற்றும் தோட்டம் என்ற அமைப்பிலிருந்து புதிய கிராமமாக மாறி வருகின்ற எதிர்பார்க்கை தற்போது நிஜமாகி வருகின்றது. தற்போது இடம்பெருகின்ற நிகழ்வுகள் ஒரு தொடக்க புள்ளியே. இது ஒரு நீண்ட நெடிய சிக்கல்கள் மிகுந்த ஒரு செயற்பாடாகும். இதற்காக அரசியல் தலைமையிலான சாதகமான அம்சங்களை தவிர ஒரு எதிரான சூழலே அதிகளவில் காணப்படுகின்றது. சமூகத்தினுடைய முழுமையான ஈடுபாடும் அர்பணிப்புமே இச்செயற்பாட்டினை தொடர்ச்சியாக வைத்திருக்க முடியும் இதற்கான அமுக்க குழுவாக ஆசிரியர் குழு அமையவேண்டும். பிரதேச அரசியல் பிரதிநிதித்தவம் உள்ளுராட்சி தேர்தல் எல்லை நிர்ணயம் காரணமாக அதிகரிப்பதற்க்கான வாய்ப்புமுண்டு. சமூக அரசியல் அக்கறையுள்ள ஆசிரிய குழாத்தின் வகிபாகம் சமூக மாற்றத்தை துரிதபடுத்துவதாக அமையலாம். அமைய வேண்டும்.

# மனித விருத்தியில் தென்னாசியாவில் முன்னிற்கும் இலங்கை



பேராசிரியர் சோ. சந்திரசேகரன்

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் தயாரித்து வெளியிடும் மனிதவிருத்திச் சுட்டெண் அறிக்கையின்படி 2015 ஆம் ஆண்டில் இலங்கை தென்னாசிய நாடுகளில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. ஒவ்வொரு நாடும் பெறக்கூடிய மொத்தப்புள்ளி 1.0% , இலங்கை பெற்றிருக்கும் புள்ளி 0.75% இதில் முக்கிய அம்சம் ஏறத்தாழ 200 நாடுகளின் சராசரிப் புள்ளி 0.711,தென்னாசிய நாடுகளின் (இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஸ், நேபாளம் உட்பட சராசரிப் புள்ளி 0.007, இவற்றோடு ஒப்பிடும் போது இலங்கை மனித விருத்தியில் முன்னிற்பது ஒரு குறிப்பிடதக்க விடயமாகும்.

மனிதவிருத்திச் சுட்டெண் 2015

| முதலிடம் பெறும் உலக நாடுகளிகளின் புள்ளியும் நிலையும் | | |
|---|---|---|
| நாடுகள் | புள்ளி % | நிலை |
| நோர்வே | 0.944 | 1 |
| அவுஸ்திரேலியா | 0.935 | 2 |
| சுவிஸ்சர்லாந்து | 0.930 | 3 |
| டென்மார்க் | 0.923 | 4 |
| நெதர்லாந்து | 0.922 | 5 |
| ஜெர்மனி | 0.916 | 6 |
| அயர்லாந்து | 0.916 | 7 |
| ஐக்கியஅமெரிக்கா | 0.915 | 8 |

| தென்னாசியநாடுகள் புள்ளியும் நிலையும் | | |
|---|---|---|
| நாடுகள் | புள்ளி % | நிலை |
| இந்தியா | 0.609 | 130 |
| மாலைத்தீவு | 0.106 | 104 |
| பூட்டான் | 0.605 | 132 |
| பங்களாதேஷ், | 0.570 | 142 |
| பாகிஸ்தான் | 0.532 | 147 |
| நேபாளம் | 0.548 | 145 |
| ஆப்கானிஸ்தான் | 0.465 | 174 |
| இலங்கை | 0.757 | 73 |

உலகநாடுகளின் மொத்தத் தேசிய உற்பத்தி என்று பார்க்கும்போது இலங்கை உலகில் 142 ஆவது இடத்தைப் பெறுகிறது. ஆனால் இலங்கையின் தனிநபர் வருமானத்தை (2015 இல் 3200 டொலர்கள்) அதன் சர்வதேசக் கொள்வனவு சக்தியை வைத்து பார்க்குமிடத்து (டொலர் 11480) இலங்கை 117 ஆவது இடத்துக்கு முன்னேறியது. ஆனால் இவ்வாறான தேசிய உற்பத்தி மற்றும் தனியார் வருமானம் சார்ந்த தரவுகள் முற்றாகவே பொருளாதார உற்பத்தி தொடர்பானவை.

இவ்வாறான பொருளாதாரம் சார்ந்த தரவுகளை வைத்துக் கொண்டு நாடுகளை வரிசைப் படுத்துவதும் அந்நாடுகளின் மனித அபிவிருத்தி பற்றியும் முடிவு செய்வதும் தவறானது என்பதால் மனித விருத்திச் சுட்டெண் முறை 1990 முதல் கொண்டுவரப்பட்டது. அபிவிருத்திச் சிந்தனையானது தனியான வருமானக் கணக்குகளை மட்டுமல்லாது மனித மையகொள்கைகளைக் கருத்திற் கொண்டு அமைவேண்டும் என்ற நோக்கத்துடன் மனித விருத்திச் சுட்டெண் முறை கொண்டுவரப்பட்டது.

இத்தகைய புதிய சுட்டெண் கொண்டுவந்து வருமானம் மட்டுமின்றி மனிதரின் சுகாதாரம், கல்வி என்பனவற்றில் விருத்தியையும் கருத்திற் கொள்வது முக்கியமானது என வலியுறுத்தியவர்கள் பாகிஸ்தானிய பொருளியலறிஞர் மீஹ்பூங் ஹக்கும். பொருளாதாரப் பேராசிரியர் அமாருத்திய சென்னுமாவார்.

பொருளாதார வளர்ச்சியில் சாதித்தவர் களுக்கே உலகில் முதலிடம் வழங்குவதை இவர்கள் எதிர்த்தனர். மனிதர்களின் ஆரோக்கியத்திற்கும் கல்வி வளர்ச்சிக்கும் முக்கியத்துவத்திற்கும் நாடுகள் - அதாவது மனிதர்களின் இவ்வாறான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிய நாடுகளுக்கு உரிய சன்மானம் வழங்கப்படல் வேண்டும். என ஹக் கருதினார். இதன் காரணமாகப் பொருளாதார உற்பத்தியில் 142 ஆவது இடத்தைப் பெற்றது.

மக்களின் சராசரி பாடசாலை ஆண்டுகள் என்பது 15 வயதுக்கு அதிகமான வளர்ந்தோர் எத்தனை ஆண்டுகள் பாடசாலைக் கல்வியைப் பெற்றிருந்தார்கள் என்பதைக் குறிக்கும். இலங்கையின் தனியாள் வருமானம் எவ்வளவு குறைவானதாக (2015 இல் 3200 டொலர் உலகில் 142 ஆவது இடம்) இருந்த போதிலும் தனது குறைந்த வளங்களை கல்விக்காகவும் சுகாதாரத்துக்காகவும் பயன்படுத்தியதன் காரணமாக மனித வளர்ச்சியில் உலகில் 72 ஆம் இடத்தைப் பெற்றது. இந்தியாவும் பாகிஸ்தானும் தமது வளங்களைப் பெரிய அளவில் பாதுகாப் புக்குச் செலவழித்து வருகின்றன. இதன் விளைவாக இந்தியா மற்றும் தென்னாசிய நாடுகள் போன்று இலங்கையும் குடியேற்ற நாடாகவே இருந்தது. அங்கு ஆயுதம் ஏந்தியவர்களின் போராட்டமும் போரும் நீண்டகாலம் நடைப்பெற்ற போதிலும் இலங்கை கல்வி துறையிலும் சுகாதாரத் துறையிலும் இச் சாதனைகளையும் புரிந்தது என மனித அபிவிருத்தி அறிக்கையில் (2014) கூறப்பட்டது.

**மனிதவிருத்திச் சுட்டெண்ணின் மூன்று கூறுகள்**

1. ஆயுள் எதிர்பார்ப்பு : நீண்டகால வாழ்க்கையைக் குறிக்கத் தெரிவு செய்யப்பட்டது.
2. வளர்ந்தோர் கல்வி : கல்வி கற்பதில் உள்ள விருப்பத்தைக் காட்டுவது.
3. தனியாள் வருமானம் : பணத்தால் வகிக்கக் கூடிய சகலவற்றையும் குறிப்பது.

இலங்கை 73 ஆவது இடத்துக்கு உயர்ந்ததற்கு காரணம் மேற்கண்ட மூன்று கூறுகளில் முதல் இரண்டில் (ஆயுள் எதிர்ப்பார்ப்பு, மக்கள் எழுத்தறிவு, மாணவர்களின் பாடசாலை சேர்வு வீதம்) சார்பளவில் சாதனை புரிந்தவையாகும்.

இத்தகைய மதிப்பீடுகளில் கல்வி வளர்ச்சி முதன் முறையாகச் சேர்க்கப்பட ஹக் காரணமாக இருந்தார். 2010 ஆம் ஆண்டுவரை வளர்ந்தோர் எழுத்தறிவும் ஆரம்ப இடைநிலைகளில் கருத்திற் கொள்ளப்பட்டன. 2011 முதல் நாடுகளின் மக்கள் பெற்றிருந்த சராசரி பாடசாலைக் கல்வி ஆண்டுகளும் எதிர்ப்பார்க்கப்படும் கல்வி ஆண்டுகளும் கருத்தில் கொள்ளப்பட்டன.

இலங்கை மக்களின் எழுத்தறிவு பாடசாலை மாணவர் சேர்வு வீதம், மக்களின் சாரசரி பாடசாலைக் கல்விக் காலம் என்னும் கூறுகளில் இலங்கை முன்னின்றமையால் மனித அபிவருத்தி சுட்டெண்ணிலும் முன்னின்றது. இது ஆயுற் எதிர்ப்பார்ப்புக்கும் பொருந்தும்.

## ஹக்கும் சென்னும்

இருவருமே தலைசிறந்த பொருளியல் நிபுணர்கள், இருவரும் கேம்ப்ரிச் பல்கலைக்கழகத்தில் ஒன்றாகப் பொருளியல் படித்தவர்கள். ஹக் தமது அறிவையும் சிந்தனைகளையும் செயலில் காட்டமுற்பட்டார். சேன் பல்கலைக்கழக ஆசிரியராகப் பணியாற்றினார். பஞ்சங்கள் பற்றி அவரது ஆராய்ச்சிகள் அவருக்கு நோபல் பரிசைப் பெற்றுத்தந்தன.

இருவருமே வெவ்வேறு துறைகளில் வளர்ந்தவர்கள். எனவே ஹாவார்ட் பேராசிரியரான சென் அறிஞர் ஹக்கின் புதிய மனித விருத்திச் சுட்டெண் பற்றிய சிந்தனையை உடனடியாக ஏற்றுக்கொள்ள வில்லை. எவ்வாறாயினும் இச் சுட்டெண் களை உருவாக்கிய பெருமை ஹக்கையே சாரும். ஐக்கிய நாடுகள் சபை இலகுவில்

தீர்மானங்களை மேற்கொள்ளாது. எல்லோரையும் திருப்திப்படுத்தப் பார்க்கும், எனவே ஒரு முற்றிலும் புதிய சுட்டெண்ணை உருவாக்க ஹக்குக்கு போதிய சுதந்திரம் கிடைக்காது என்பது பேராசிரியர் சென்னின் கருத்தாக இருந்தது. ஐ.நா.சபையின் அதிகாரவர்க்கம் ஹக்கின் இச் சிறப்பான பணியில் தலையிட்டு குழப்பும் என்பதும் அவருடைய கருத்து.

ஹக்குடன் இனைநது இச் சுட்டெண்ணைத் தயாரிக்க ஒத்துழைத்தார்.

1989இல் ஹக் தனது குழுவினரைக் கூட்டி, நாள் முழுவதும் கலந்துரையாடி கருத்து வேறுபாடுகளை குறைத்து ஒரு சமரச கருத்துக்கு வந்தார். கல்வியும் சுகாதாரமும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. புதிய சுட்டெண்ணின் இரு கூறுகளாக இவை ஏற்றுக்கொள்ளப்பட்டன. எனினும்

| தென்னாசியநாடுகளில் ஆயுள் எதிர்பார்ப்பு | | |
|---|---|---|
| நாடு | ஆயுள் | நிலை (உலகில்) |
| மாலைத்தீவு | 78.4 | 34 |
| இலங்கை | 74.9 | 70 |
| பங்களாதேஷ் | 71.8 | 102 |
| பூட்டான் | 69.7 | 114 |
| நேபாளம் | 69.2 | 119 |
| இந்தியா | 68.3 | 126 |
| பாகிஸ்தான் | 66.4 | 130 |
| ஆப்கானிஸ்தான் | 60.5 | 161 |

*ஆதாரம் : World Life Expectancy*

| தென்னாசியாவில் ஆரம்பக் கல்வியை முடித்தவர்கள் | |
|---|---|
| நாடு | ஆயுள் |
| இலங்கை | 95.5 |
| இந்தியா | 72 |
| பங்களாதேஷ் | 74 |
| பாகிஸ்தான் | 56 |
| நேபாளம் | 65 |
| பூட்டான் | 45 |
| சதவீதங்கள் வெவ்வேறு ஆண்டுகளுக்குரியவை | |

*ஆதாரம் : உலக வங்கித் தரவுகள்*

மேலும் ஹக்கின் மனித விருத்திச் சுட்டெண்ணின் மையக் கருத்தையும் பேராசிரியர் சென் விரும்பவில்லை. சுகாதாரம், கல்வி, வருமானம் ஆகிய சிக்கலான மூன்று வேறுப்பட்ட கூறுகளுக்கு ஒரே சுட்டெண்னை வழங்குவதை அவர் எதிர்த்தார். மொத்த தேசிய உற்பத்திச் சுட்டெண்ணிலும் இதே தவறுகள் காணப் பட்டதாக அவர் சுட்டிக்காட்டினார். மனித நலன், வாழ்க்கைத் தரம் என்பவை விந்தையான விடயங்கள், அவற்றை ஒரே சுட்டெண்ணில் அடக்கிவிட முடியாது எனத் தெரிவித்தார். இவ்வாறு ஒரு இலக்கத்தில் சகலவற்றையம் அடக்குவது கொச்சையானது (Vulgar) என்றார்.

ஆனால் மனித விருத்திச் சுட்டெண்ணின் மூலகர்த்தாவான ஹக்கின் கருத்து மாறுப்பட்டமைந்து ஒரே இலக்கம் யாருக்கும் விளங்கக் கூடியது. எளிமையானது. அரசியல்வாதிகள், சாதாரணமக்கள், பத்திரிக் கையாளர்கள் எனப் பலருக்கும் இலகு வானது என்பது அவருடைய கருத்தாக இருந்தது. இறுதியில் பேராசிரியர் சென்னும்

வருமானத்தைக் கணக்கிடுவதில் கருத்து வேறுபாடுகள் இருந்தன. ஏற்றத்தாழ்வு போஷாக்கு நிலைமை ஆகிய இரு கூறுகளை ஏற்கலாமா என கலந்துரை யாடினர். ஆனால் அக் காலத்தில் இவை தொடர்பான தரவுகள் போதுமானதாக இருக்கவில்லை. பேராசிரியர் சென் "எப்படியாயினும் வருமானம் உள்ளடக்க படல் வேண்டும். இது இல்லாவிடில் புதிய சுட்டெண் மிகத் தீர்மானமானதாக அமைந்து விட நேரிடும் கொள்கை வகுப்பாளர்களும் பிரதான பொருளியலாளர்ளும் அதனை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்" என்றார். வருமானம் பற்றிய அளவீடு இல்லாவிட்டால் புதிய சுட்டெண்ணை யாரும் முக்கியமான தாகக் கருதமாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மற்றொரு பிரச்சினை வளர்ந்தோர் கல்வி கல்வி சதவீதத்தாலும், ஆயுள் எதிர்ப்பார்ப்பு ஆண்டுகளாலும், வருமானம் பணத்தாலும் அளக்கப்பட்டது. இவற்றை கூட்டியும் பார்ப்பது கடினம். சென் இதற்கு வழங்கிய தீர்வு இவ் ஒவ்வொன்றையும் 0-1

அளவுத்திட்டத்தின் படி கணக்கிடுவதுதான்.

அதாவது உயர் மனித விருத்தியை கொண்ட நாடுகள் (கனடா, நோர்வே போன்றன) *1* அல்லது அதற்கு நெருக்கமான புள்ளியைப் (*0.9*) பெறும். குறைந்த மனித விருத்தியைக் கொண்ட நாடுகளுக்கு நெருக்கமான புள்ளியைப் பெறும் என தீர்மானிக்கப்பட்டது.

**தென்னாசிய மக்களின் சராசரிப் பாடசாலைக் கல்வி ஆண்டுகளில் - 2013**

| நாடுகள் | சராசரி ஆண்டுகள் |
|---|---|
| தென் கொரியா | 11.8 |
| ஜப்பான் | 11.5 |
| ஹொங் கொங் | 10.0 |
| சவூதி அரேபியா | 8.7 |
| குவைத் | 7.2 |
| இலங்கை | 10.8 |
| பீஜி | 9.9 |
| பங்களாதேஷ் | 5.1 |
| பாகிஸ்தான் | 4.7 |
| நேபாளம் | 3.3 |

ஆதாரம் :*UNDP HDI Re4port*

*1990* மே மாதத்தில் முதலாவது மனித விருத்தி அறிக்கை வெளிவந்தது. அறிஞர் ஹக் தமது முப்பது ஆண்டுக்கால அனுபவத்தை தெரிவித்தார்.

> **தேசிய வருமானத்தையும் அதன் வளர்ச்சியையும் அளக்கப் புள்ளியியல் தரவுகளைப் பயன்படுத்துவது, அபிவிருத்தி யானது மக்களின் நன்மைகளை கருதும் என்ற உண்மையை மறைத்துவிடும். தேசிய வருமான தரவுகள் உண்மையான பயனாளிகளை காட்டாது. வளர்ச்சி பற்றிய எண் தொகையில் காட்டப்படாத நலன்களை மக்கள் பெரிதாக கருதவில்லை..போசஷாக்கு, சுகாதார சேவை, கல்வி, குற்றங்களுக்கு எதிரான பாதுகாப்பு, நல்ல வேலைச் சூழல், ஓய்வு நேரம், பொருளாதாரம், அரசியல், சமூக வாழ்வில் பங்கேற்பு போன்றன மக்களுக்கு நிச்சயமாக வருமானம் முக்கியமானது ஆனால் மனித வாழ்க்கை யின் ஒட்டு மொத்த குறிக்காட்டி வருமானமல்ல.**

இம் முதலாவது அறிக்கை பல அதிர்ச்சிகளை ஏற்படுத்தியது. ஏனெனில் பெரிய வல்லரசான ஐக்கிய அமெரிக்க *19* ஆவது இடத்தைப் பெற்றது ( மனித விருத்தி சுட்டெண் *0.961*), ஜப்பான், சுவீடன், சுவிட்சர்லாந்து, கனடா போன்ற நாடுகள் தனிநபர் வருமானம், எழுத்தறிவு ஆயுள் எதிர்ப்பார்ப்பு மூன்றிலும் சிறந்து விளங்கி ஐக்கிய அமெரிக்காவை முந்தி விட்டன. அந்நாடு அவுஸ்ரேலியா, ஸ்பெயின், அயர்லாந்து ஆகிய நாடுகளுக்கு அடுத்தாகவே வந்தது. சார்பளவில் ஐக்கிய அமெரிக்காவில் எழுத்தறிவும், ஆயுள் எதிர்ப்பார்ப்பும் குறைந்தமையால் அந்நாடு பின் தள்ளப்பட்டது. ஹக் குழுவினருக்கு இதனால் பல சங்கடங்கள் இருந்தாலும் அவர்களுடைய பிரதான கருத்துக்கு இதனை விட வேறு உதாரணம் கிடைக்காது. அதிக வளர்ச்சியை அனுபவிக்கும் நாடுகள் எப்போதும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைக் கொண்டவையல்ல என்பதே ஹக்கின் பிரதான சிந்தனை.

ஐக்கிய அமெரிக்காவின் பெறு பேறுடன் இலங்கையின் பெறுபேறும் ஹக் குழுவினரின் புதிய சுட்டெண்ணுக்கு அடிப்படையாக அமைந்த சிந்தனைக்குச் சிறந்த உதாரணங்களாக விளங்கின.

புதிய அரசியல் யாப்பு திருத்தத்துக்கான தனி நபர் பிரேரணையாக முன் வைக்கப்பட்ட எனது பத்து பிரேரணைகள் பற்றி இக்கட்டுரை விளக்கமளிக்கிறது..

01. **அரசியலமைப்பின் பிரகடனத்துக் கப்பால் 1948 முதல் 2009 வரையில் அமுலில் இருக்கும் பதினொரு வகை பிரஜா உரிமைச் சட்டங்கள் நீக்கப்படல் வேண்டும்.**

இப் பிரேரணை பற்றிய விளக்கமாவது:

1948ம் ஆண்டு 18ம் இலக்கப் பிரஜா உரிமைச் சட்டம், மலையகத் தமிழரின் குடியுரிமையைப் பறித்தது. 1946ம் ஆண்டு சோல்பரி ஆணைக்குழு தயாரித்த அறிக்கையும் இச் சட்டத்தினால் நிராகரிக்கப்பட்டது. இச் சட்டத்தால் இந்திய வம்சாவளி தமிழர்கள் நாடற்றவராகினர். இதன் பின்னர் 1949 ம் ஆண்டு 48 ம் இலக்க இலங்கை பாராளுமன்ற தேர்தல் திருத்தச் சட்டம் உருவாக்கப்பட்டு குடியுரிமையை இழந்தவர்களுக்கு வாக்குரிமை வழங்கும் உரிமையும் மறுக்கப்பட்டது.

1949ம் ஆண்டு மூன்றாம் இலக்க இந்திய, பாகிஸ்தானியர் குடியிருப்பாளர் (பிரஜா உரிமை) சட்டம் இயற்றப்பட்டு,

# சட்டங்களுக்குட்பட்ட பிரஜாவுரிமையும், இந்திய வம்சாவளி ஆள்பதிவு திணைக்களமும் நீக்கப்பட வேண்டும்.

## யாப்பு சீர்திருத்தத்துக்கான தனி நபர் பிரேரணை



மு.சிவலிங்கம்
முன்னாள் செயலாளர் நாயகம்
மலையக மலையக முண்ணனி

அடைப்புக் குறிக்குள்ளே "பிரஜா உரிமை" என்று குறிப்பிடப்பட்டது, இச் சட்டத்தின் படி நாட்டின் குடிகளாகவன்றி, (Citizen) குடியிருப்பாளராக (Resident) இம் மக்கள் கணிக்கப்பட்டனர். 1964ம் ஆண்டு ஒக்டோபர் 3ம் திகதி உருவாக்கப்பட்ட சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தப்படி 5,25000 பேர் இந்தியாவுக்குச் செல்ல வேண்டுமெனவும், 3,00000 பேருக்கு இலங்கை குடியுரிமை வழங்கப்படுமெனவும் மிகுதி 15,0000 பேர் பிறகு யோசிக்கப்படு வார்கள் என்ற சட்டம் ஒப்பந்தமாக உருவாகியது. அன்று 9,75000 பேர் இந்திய வம்சாவளி மக்களின் குடிசனத் தொகை என்று கணக்கிட்டிருந்தார்கள்

1967ம் ஆண்டில் 14ம் இலக்க இலங்கை - இந்திய உடன்படிக்கை அமுல்படுத்தும் சட்டம் உருவாகியது. இச் சட்டத்துக்கிணங்க 4 லட்சம் பேர் இந்தியாவுக்கு விண்ணப் பித்தனர்.

1971ம் ஆண்டில் 43ம் இலக்க இலங்கை இந்திய அமுல் படுத்தும் ஒப்பந்தம் திருத்தச் சட்டப்படி 7 பேர் இந்தியா செல்லும் போது 4 பேருக்கு இலங்கை குடியுரிமை வழங்கப்படும் என்ற சட்டம் செயல்பட்டது. 1974 முதல் சிறிமா -சாஸ்திரி ஒப்பந்தப்படி மீதப்பட்ட 15,0000 பேரில், 75,000 பேர் இந்தியாவுக்கும் 75,000 பேர் இலங்கைக்கும் பதிவாக்கப்படும் என சட்டம் பிறப்பித்தது.

இந்தச் சட்டங்களுக்குப் பின்னர் 1988ம் ஆண்டு 39ம் இலக்கச் சத்தியக் கடதாசிமூலம் பிரஜாவுரிமை வழங்கும் சட்டம் உருவாக்கப் பட்டது. அதன் பின்னர் 2003ம் ஆண்டின் 35ம் இலக்க இந்திய வம்சாவளி யினரான ஆட்களுக்கு பிரஜா உரிமை வழங்கும்

சட்டமும் உருவாகியது. பின்னர் 2009 ம் ஆண்டின் 6 ம் இலக்க இந்திய வம்சாவளியினரான ஆட்களுக்கு பிரஜா உரிமை வழங்கல் (திருத்தச்) சட்டமும், 2009ம் ஆண்டின் 5ம் இலக்க நாடற்ற ஆட்களுக்கு விஷேடத் திருத்தச் சட்டமும் என பிரஜா உரிமை சட்டங்கள் முற்றுப் பெற்றன. இந்தச் சட்டங்கள் அனைத்தும் இன்று வரை அழிக்கப்பட வில்லை. அவை நீறு பூத்த நெருப்பாக உயிரோடுதான் இருக்கின்றன..!

இன்றைய நல்லாட்சியின் சமாதானச் சூழலில் 1948ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட பிரஜா உரிமை சட்டம் முதல் 2009 ம் ஆண்டு வரையிலான உருவாக்கப்பட்ட சட்டங்கள் அனைத்தையும் அழித்து விட்டு, இம் மக்கள் யாப்பு பிரகடனத்துக்கமைய இலங்கைக் குடிகளாவர் என்று பிரகடனப் படுத்த வேண்டும். அதுவன்றி 21ம் நூற்றாண்டிலும் குடியுரிமை அற்ற மக்களாக சட்டத்துக்குட்பட்ட குடியுரிமையுள்ள மக்களாக அடையாளப் படுத்துவது சர்வதேச ரீதியில் வெட்கமானதும், ஐ.நா. சாசனத்துக்கு எதிரான மனித உரிமை மீறல் செயல் எனவும் குரல் எழுப்பப்படலாம்.

02. **அரசியலமைப்பின் பிரஜா உரிமை பிரகடனத்தில் "பிரஜா உரிமைச் சட்டத்துக்கிணங்க பதிவு செய்யப்பட்ட "பிரஜைகள்" என்ற பதம் நீக்கப்பட்டு, அனைத்து மக்களும் "வம்சாவளி பிரஜைகள்" (*Citizen by descent*) என்ற பதத்துக்குள்ளேயே உள்ளடக்கப்பட வேண்டும்.**

யாப்பிலிருக்கும் இந்தப் பிரகடனம் பதிவுப் பிரஜை என்ற சட்டத்துக்களாக்கப் பட்டிருக்கும் பிரஜைகளுக்கு ஒரு ஆறுதல் வசனத்தையும் குறிப்பிட்டுள்ளது! அதாவது, பதிவு பிரஜைகளுக்கும், வம்சாவளி பிரஜைகளுக்கும் எதுவித வேறுபாடுகளும் கிடையாது என குறிப்பிடுகின்றது. அப்படி யாயின் ஏன் இந்த இரண்டு விதமான பிரஜைகள் அந்தஸ்தை அடையாளப்படுத்த வேண்டும் என்பது பதிவுப் பிரஜைகளின் கேள்வியாகும். 1949ம் ஆண்டு 3ம் இலக்க இந்திய - பாகிஸ்தானிய வதிவிட சட்டத்தின் போது, பதிவு செய்யப்பட்டவர்கள் மட்டுமே பதிவுப் பிரஜைகள் ஆவர். அவர்களது வழித் தோன்றல்கள் பரம்பரை பரம்பரையாக பதிவுப் பிரஜைகளாக இருப்பர் என எதுவும் இந்தச் சட்டம் சொல்லவில்லை. ஆகவே இந்த சட்டம் அமுலில் இருக்கும் வரை புதிய தலைமுறைகளும் பதிவுப் பிரஜைகளாக கணிக்கப்பட வேண்டியிருக்கும் என்ற சட்டம் தொடர்ந்து தேவையா என்பதும் இம்மக்களின் கேள்வியாகும். இச்சட்டங்கள் புதிய யாப்பு சீர் திருத்தத்தில் நீக்கப்பட்டு விட்டால் இக் கேள்விகள் அவசியப்படாது போகும்..

03. **நடைமுறையிலிருக்கும் "இந்திய வம்சாவளி ஆள் பதிவுத் திணைக்களம்" பதம் நீக்கப்படல் வேண்டும். (*Department of Registration of people of Indian Origin*) "இந்திய வம்சாவளி ஆள் பதிவுத் திணைக்கள ஆணையாளர்" (*Commissioner of Department of Registration of People of Indian Origin*) பதவியும் நீக்கப்படல் வேண்டும்.**

இந்த திணைக்களத்துக்கும், திணைக்கள ஆணையாளருக்கும் உட்பட்டிருக்கும் குடிமக்கள் நேரடியான நாட்டின் பிரஜைகளாக அல்லாமல், இரண்டாந்தர நிலைக்குள்ளாக்கப்பட்டவர்களாக, திணைக்கள பிரஜைகளாக, திணைக்கள ஆணையாளருக்குட்பட்ட பிரஜைகளாக இருக்கும் பட்சத்தில் இவர்களது குடியுரிமையை எப்படி அந்தஸ்து படுத்துவது..? எப்படி அடையாளப் படுத்துவது? என்பதும் இந்திய வம்சாவளி ஆள் பதிவுத் திணைக்களத்துக்குட்பட்ட பிரஜைகளின் இன்னுமொரு சட்டக் கேள்வியாகும். புதிய யாப்பு சீர்திருத்தத்தில் இப்படியொரு திணைக்களம் தேவையா என்பது மனித உரிமைக்கான இன்னுமொரு கேள்வியாகும்..

04. **எமது தேசிய அடையாளம் "மலையகத் தமிழர்" என்று தேசிய இனப் பதிவேட்டில் பதிதல் வேண்டும். எங்களை நாட்டிலிருந்து அந்நியப்படுத்தும் "இந்தியத் தமிழர்" அல்லது "இந்திய வம்சாவளியினர்" என்ற அடை மொழிப் பதம் முற்றாக நீக்கப் படல் வேண்டும்..**

இலங்கை வாழ் இந்திய வம்சாவளித் தமிழர்கள் தங்களை மலையகத் தமிழர்

என்று தங்களுக்குள்ளேயே வழமைப்படுத்திக் கொண்டார்களே தவிர அதை தேசிய இன அடையாளமாக யாப்பில் பதிவு செய்துக் கொள்வதற்கு இன்று வரை எந்தவொரு மலையகக் கட்சியும் சட்டத்தை நோக்கிய நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. பாராளுமன்றத்தில் பேசியதாகவும் இல்லை. இதே வேளை இம் மக்கள் தங்களை இலங்கைத் தமிழர் என்று அடையாளப் படுத்திக் கொள்வதில் தயக்கம் காட்டிக் கொள்வதும் கேள்விக்குரிய விவகாரமாகவும் இருக்கின்றது.

05. **மலையகத் தமிழரின் குளறுபடியான குடிசனத் தொகை புள்ளி விபரம் (1981 - 2011) மீள் பரிசீலனை செய்யப்பட்டு ஆள் பதிவு திணைக்கள பதிவேட்டில் உறுதி செய்தல் வேண்டும்.**

இந்த மக்களின் தேசிய அடையாளம் தளம்பல் நிலையில் இருப்பதால், இந்தியத் தமிழர் என்றும், இலங்கைத் தமிழர் என்றும் குடிசனத் தொகை பதிவேட்டில் பதியப் பட்டுள்ளன. இறுதியாக எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி 8 லட்சத்து, 22ஆயிரம் பேர்களே பதிவாக்கப்பட்டுள்ளனர். இது முற்றிலும் பிழையான கணக்கெடுப்பாகும். ஆகவே இந்த நிலைக் கருதி, புதிய யாப்பு சீர் திருத்தத்தில் இந்த மக்கள் மலையகத் தமிழர் அல்லது இலங்கைத் தமிழர் என்ற தேசிய அடையாளத்தை பதிவு செய்து கொள்ளல் வேண்டும். அல்லாவிடில் உலக சனத்தொகை கணிப்பீட்டில் கூட இந்த மக்களின் உண்மையான அடையாளம் உள்வாங்கப்படாமல் போகும்.

06. **மலையகத் தமிழர்கள் தங்கள் தேசிய இருப்பை நிலை நிறுத்திக் கொள்வதற்கு சுய விவசாயத் துக்கான நிலவுடமையாளராகக் காணி உரிமையை, காணி சீர்திருத்தச் சட்டத்துக்குள் உள்ளடக்கப்படல் வேண்டும்.**

பெருந்தோட்ட மக்கள் நிலவுரிமையற்று, தோட்ட நிர்வாகத்துக்குச் சொந்தமான தொடர் முகாம் வசிப்பிடங்களில் வாழ்வதால், கிராம மக்களாக அரசினால் அங்கீகரிக்கப் படவில்லை. அவர்களின் வாழ்விடம் கிராமமயமாக்கப்படவில்லை. காலணித்துவ ஆட்சியிலிருந்து இன்று வரை பெருந்தோட்டத் துறை (Plantation Sector) என்று ஒரு நாட்டுக்குள்ளேயே ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் சமூகப் பிரிவினராக தனிமைப் படுத்தப்பட்டிருப்பதால், அவர்கள் உள்ளூராட்சி நிர்வாகத்துக்குள் உள் வாங்கப்பட வில்லை. அரசின் பொது நிர்வாக நிதி அந்த மக்களுக்கு மறுக்கப்பட்டிருக்கின்றது. இதன் காரணமாக சுற்றுச் சூழல், உட்கட்டமைப்பு அபிவிருத்திகள், தேசிய நீரோட்ட உறவு எல்லாமே துண்டிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்த மக்களுக்கு பண்ணை விவசாயம் என்னும் சுயதொழில் வாழ்க்கையில் ஏனைய மக்களைப் போன்று வாழ்வதற்கு அரச காணி வழங்கப்படல் வேண்டும். "வீடமைப்பு எனும் ஏழு பேர்ச்சஸ் வசிப்பிட நிலத் திட்டம்" என்ற ஒரு பாரதூரமான பிழையான வீடமைப்புத் திட்டம் நிராகரிக்கப்பட வேண்டும். புதிய யாப்பு சீர் திருத்தத்தில் நிலத்துடன் வாழும் கிராமத்தவர் என்ற கலாச்சாரத்துக்குள் மலையக மக்கள் உள்வாங்கப்பட்டு, பெருந்தோட்டமுறை ஒழிக்கப்படல் வேண்டும்.

07. **காலணித்துவ பிரித்தானிய ஆட்சிக் காலமான 1823ம் ஆண்டு கோப்பிக் காலத்திலிருந்து 2017ம் ஆண்டு தேயிலைக் காலம் வரை மனித உரிமை சாசனத்துக்கு முரணான வகையில் உழைப்புக் கேற்ற நீதியான சம்பளம் மறுக்கப் பட்டு வருவதன் காரணமாக, பெருந் தோட்ட மக்கள் பொருளாதார நிலையில் பாதிக்கப்பட்டு, போஷாக்கின் மையால் தேசிய ரீதியில் பொதுவான மரண வீதத்திலும், சிசு, கர்ப்பிணி மரண வீதத்திலும், ஊமை, குருடு, செவிடு, முடம் எனும் வலது குறைந்தோரின் (மாற்றுத் திறனாளிகளின்) பிறப்பு வீதத்திலும் தேசிய மட்டத்தை விட விகிதாசார உயர்வு காணப்படு வதால், இந்த சமூகத்தின் விசேஷ கவனிப்புக்காக அரசியல் திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.**

அரசாங்கத் தொழிலாளர்களை பாதுகாக்கும் தொழிற் சட்டங்கள் பெருந் தோட்ட மக்களுக்கும் உரித்தாகும்படி

சட்டமாக்கப்பட வேண்டும். அவர்களும் அரச ஊழியர்களாக அங்கீகரிக்கப்படல் வேண்டும். அவர்களுக்குரிய நியாயமான சம்பளத்தை அரச ஊழியருக்குப் போன்று வழங்குதல் வேண்டும். அவர்களின் உழைப்புக்கேற்ற சம்பளத்தை அரசே நிர்ணயிக்க வேண்டும். பொருளாதாரத்தால் வீழ்த்தப்பட்டிருக்கும் இந்த மக்களின் சமூக வாழ்க்கை, தொழில் சட்டங்களாலேயே சீரமைக்க முடியும். ஆகவே அரச தொழிற்சட்டங்கள் புதிய யாப்பு சீர் திருத்தத்தில் பெருந்தோட்ட தொழிலாள ருக்கும் சமமாகக் கிடைக்க செயல் படவேண்டும். அரச ஊழியர்களுக்கு சுமத்தப்படாத கணக்கு வேலை முறை (Task work) நீக்கப்படல் வேண்டும். இன்று அரச சிற்றூழியர்கள் கூட மாதச் சம்பளமாக 25 ஆயிரத்துக்கு மேல்பெறுகின்ற போது, தோட்டத் தொழிலாளர் தினக் கூலியாக 500 முதல் 600 ரூபாய் வரை சம்பளம் பெறுவது அரசியல் பாகுபாடு (political discrimination) என்றும் மனித உரிமை மீறல் செயல் என்றும் அரசை விரல் நீட்ட முடியும்.

இக் கணக்கு வேலை முறை நீக்கப்படும் வரை பெருந் தோட்டத் தொழிலாளர் இன்றைய கணக்கு வேலையான 8 லிட்டர் ரப்பர் பால் சேகரிப்பதும் 15 கிலோ கொழுந்து சேகரிப்பதுமான இந்த வேலை முடிவடையும் பட்சத்தில் அவர்கள் அன்றைய பணி முடிந்ததாக கணிக்கபட வேண்டும். அதுவன்றி கணக்கு வேலை முடிந்தும் 8 மணி நேர வேலை என்று அவர்களை வேலைத் தளத்தில் ஒடுக்கி வைப்பது தொழிற் சட்டத்துக்கு முரணானது என்பதை நிர்வாகம் ஏற்றுக் கொள்ள வேண்டும். காரணம் கணக்கு வேலை என்பது எட்டு மணி நேர வேலை என்பதுடன் சம்பந்தப்பட்டதல்ல என்று தொழிற் சட்டம் தெளிவு படுத்த வேண்டும். புதிய யாப்பு சீர் திருத்தத் திட்டத்தில் பெருந்தோட்டத்தில் அமுலில் இருக்கும் பிரித்தானிய நிர்வாக முறை மாற்றப்பட வேண்டிய தொழிற் சட்டத்தை உருவாக்க வேண்டும்.

08. உள்ளூராட்சியின் பொது அபிவிருத்திப் பணம் கிராம மக்களுக்கு மட்டுமே என்று வரையறுக்கப்பட்டிருக்கும் 1987ம் ஆண்டு 15 ம் இலக்க 33வது உறுப்புரை கொண்ட பிரதேச சபை சட்டம் நீக்கப்பட்டு,பெருந் தோட்ட மக்கள் வாழும் பிரதேசங்களும் உள்ளூராட்சிக்குள் உள் வாங்கப்படல் வேண்டும். தோட்டங்கள் கிராமங்களாக மாற்றுவதற்கு இந்தச் சட்டம் புதிய யாப்பில் திருத்தப்பட வேண்டும்.

09. வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மட்டும் "அரச கரும நிர்வாக மொழியாக தமிழ் மொழி இருக்கும்" என்ற பதம் நீக்கப்பட்டு, மலையகத் தமிழர், முஸ்லிம் மக்கள் வாழும் பிரதேசங்கள் யாவிலும் அல்லது நாடளாவிய ரீதியிலும் தமிழ் மொழி நிர்வாக மொழியாக இருத்தல் வேண்டும். தமிழருக்குரிய பிறப்புச் சான்றிதழ் தமிழ் மொழியில் இருத்தல் வேண்டும்.

10. மலையகத் தமிழரின் குடிசனத் தொகைக்கேற்ப பிரதேச செயலகங்களும், கிராம சேவகர் பிரிவுகளும் நாட்டின் ஏனைய பகுதிகளைப் போன்று உருவாக்கப்படல் வேண்டும்.

# மலையக மக்களின் அடையாளம் எது?



சி.அ.யோதிலிங்கம்

மலையக மக்களின் அடையாளம் எது? என்பது தொடர்பாக வாதப்பிரதிவாதங்கள் நீண்டகாலமாகவே இடம்பெற்று வந்தன. மலையக மக்களா? இந்திய வம்சாவளித் தமிழர்களா? என்பதே அந்த வாதம். புதிய அரசியல் யாப்பு செயன்முறை ஆரம்பிக் கப்பட்டதைத் தொடர்ந்து இந்த வாதங்கள் மீண்டும் களத்திற்கு வந்துள்ளன. ஒரு சாரார் குறிப்பாக இளைய தலைமுறையினர் மலையக மக்கள் என்றே அழைக்கப்பட வேண்டும் எனக் கூறுகின்றனர். இன்னோர் சாரார் இந்திய வம்சாவழித் தமிழர்கள் என அழைக்கப்படல் வேண்டும் என்கின்றனர்.

அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் அமைப்புக்கள் என்ற வகையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் அதன் மரபுவழி வந்தவர்களும் இந்திய வம்சாவளித் தமிழர் என அழைக்கப்படல் வேண்டும் என்பதில் பிடிவாதமாக உள்ளனர். ஆறுமுகம் தொண்டமான், முத்துலிங்கம், சதாசிவம், புத்திரசிகாமணி என்போர் இதற்குள் அடங்குவர். இவர்களைத் தவிர மலையக வம்சாவளி கல்வியாளர்கள் என்ற வகையில் பேராசிரியர் சந்திரசேகரம், பேராசிரியர் சின்னத்தம்பி, பேராசிரியர் தனராஜ், கலாநிதி சந்திரபோஸ், வாமதேவன் மூத்த ஊடகவியலாளர் தேவராஜ் போன்றோரும் இதனை ஆதரித்தனர். மலையகத்திற்கு வெளியே கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கும் மனோ கணேசனும் இதனை ஆதரிக்கின்றார்.

இதற்கு மாறாக மலையக மக்கள் முன்னணி, புதிய பண்பாட்டு அமைப்பு, மலையக சமூக ஆய்வு மையம், மலையக சட்டத்தரணிகள் பேரவை போன்றன மலையகத் தமிழர் என அடையாளப்படுத்தல் வேண்டும் என வாதிடுகின்றன. புலமையாளர்கள் என்றவகையில் லோறன்ஸ் லெனின் மதிவாணம், சிவம் பிரபாகரன், பொன் பிரபாகரன், காதர், சாந்திகுமார், ஜோதிகுமார் போன்றோரும் இதனை ஆதரிக்கின்றனர். மலையக மக்கள் முன்னணி முன்னர் உத்தியோகபூர்வமாக இவ் அடையாளத்தை தூக்கிப்பிடித்தாலும் தற்போது அதன் செயலாளர் லோறன்ஸைத் தவிர ஏனையோர் இக் கொள்கையிலிருந்து இறங்கியுள்ளனர் போலவே தெரிகின்றது. அமைச்சர் இராதாகிருஸ்ணன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிலிருந்து வந்தவர் என்பதால் அவரிடம் இந்திய வம்சாவளித் தமிழர் என அடையாளப்படுத்த வேண்டும் என்றே கருத்து உண்டு.

இப்பத்தியாளர் மலையகத்தைச் சேர்ந்தவரல்ல, யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர். ஆனாலும் மலையக மக்களுடனும், மலையக அரசியல் செயற்பாட்டாளர்களுடனும், மலையகக் கல்வியாளர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர். 1977ஆம் ஆண்டு இனக்கலவரத்தினால் மலையகத்திலிருந்து இடம்பெயர்ந்து அகதிகளாக மலையக வம்சாவளியினர் வன்னிக்கு வந்த போது "காந்தீயம்" நிறுவனம் அவர்களுக்கான நல்வாழ்வுத்திட்டங்களை உருவாக்கியது. அந்தத் திட்டம் ஒன்றுக்குப் பொறுப்பாக நின்று செயல்பட்டவர். இக்காரணங்க ளினாலும் அரசியல் ஆய்வுத்துறையைச் சேர்ந்தவர், அதுவும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் விடுதலையை சிறப்பு ஆய்வுத்துறையாக தேர்ந்தெடுத்தவர் என்பதினாலும் மலையக மக்களின் அடையாளப் பிரச்சினை தொடர்பாக சில கருத்துக்கள் முன்வைக்கின்றார்.

இக்கருத்துக்கள் முடிந்த முடிவுகள் அல்ல. தொடர் பரிசீலனைக்கும்,

கலந்துரையாடல்களுக்கும், விவாதங்களுக்கும் உரியவைகள். இந்த விவாதத்தைத் தொடர வேண்டும். அகநிலை சாராது புறநிலை நின்று விடயங்களைப் பார்க்க வேண்டும். கட்சி, குழு அரசியலுக்கப்பால் மலையக மக்களின் கூட்டிருப்புக்கும், கூட்டடையாளத் திற்கும், கூட்டுரிமைக்கும் எந்த அடையாளம் உகந்தது என்பதை இந்த விவாதங்களி னூடாக கண்டுபிடிக்க வேண்டும் என இப்பத்தியாளர் விரும்புகின்றார். மலையக வம்சாவழியினர் மட்டுமல்ல, மலையக மக்கள் மீது அக்கறையுள்ள அனைவரும் இவ்விவாதத்தைத் தொடர வேண்டும்.

மலையக மக்கள் ஒரு அடைக்கப்பட்ட பிரதேசத்திற்குள் வாழ்பவர்கள். செறிந்தும், சிதறியும் அவர்களது இருப்பு உள்ளது. தனக்குப் பக்கபலமாக வலுவான வெளிச்சக்திகளை அணிதிரட்டுவதன் மூலமே தங்களுடைய இருப்பை அவர்களால் தக்க வைத்துக்கொள்ள முடியும். மலையக மக்களைப் பொறுத்தவரை வடகிழக்குத் தமிழர்கள், தமிழகத் தமிழர்கள், உலகெங்கும் பரந்து வாழும் தமிழக வம்சாவளித் தமிழர்கள் சிறந்த சேமிப்புச் சக்திகளாவர். அதேவேளை சிங்கள முற்போக்கு ஜனநாயக சக்திகள் உட்பட உலகெங்கும் வாழும் முற்போக்கு ஜனநாயக சக்திகள் சிறந்த நட்பு சக்திகளாவர். இவர்கலெல்லாம் மலையக மக்கள் பற்றி, அவர்களது கூட்டிருப்பு, கூட்டுரிமை பற்றிய தங்களது வாய்களைத் திறக்க வேண்டும். இதனூடாக ஒரு கூட்டு வலிமையை மலையக மக்களுக்குக் கொடுக்க வேண்டும். ஒடுக்கப்படும் ஒரு தேசிய இனம் என்ற வகையில் இந்தக் கூட்டுப் பொறுப்பிலிருந்து எவரும் விலகிவிட முடியாது.

இனி இந்த அடையாள நெருக்கடிக்கு வருவோம். மலையக மக்களுக்கான எந்தவொரு அடையாளமும் அவர்களது கூட்டிருப்பையும், கூட்டுரிமையையும் பலப்படுத்த வேண்டும். அவர்களது எதிர்கால வாழ்வுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். இந்த வகையில் இந்திய வம்சாவளித் தமிழர் என்ற அடையாளமா? அல்லது மலையத் தமிழர் என்ற அடையாளமா? மேற்கூறியவற்றைப் பலப் படுத்த முடியும். இப்பத்தியாளர் மலையகத் தமிழர் என்ற அடையாளமே மேற் கூறியவற்றை பலப்படுத்த முடியும் எனக் கருதுகின்றார்.

இதற்கு முதலாவது காரணம், இலங்கையில் வசிக்கும் மக்களில் வேடர்களைத் தவிர ஏனையவர்கள் அனைவரும் சிங்களவர்கள் என்றாலும் சரி, இலங்கைத் தமிழர் என்றாலும் சரி, முஸ்லிம்கள் என்றாலும் சரி, அனைவரும் இந்தியாவிலிருந்து வந்தவர்களே. மலே இனத்தவர், ஆபிரிக்க இனத்தவர், முஸ்லிம்களின் சிறு பிரிவினர் மட்டும் இதற்கு விதிவிலக்காக இருக்கலாம். தமிழ் நாட்டிலிருந்து 18 மைல் தொலைவில் இலங்கை இருப்பதனால் இந்தக் குடிப்பெயர்வுக்கு வரலாறு முழுவதும் சாத்தியங்கள் அதிகம். இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னர் பல நூற்றாண்டுகளாக இக் குடிப்பெயர்வு இடம்பெற்றிருக்கின்றன. சிங்கள மன்னர்களும் தமிழ் நாட்டின் அரச குடும்பங்களுக்கு மிடையே நெருங்கிய தொடர்பு இருந்திருக்கின்றது. அவர்கள் தமிழ்நாட்டிலிருந்து பெண்களை வரவழைத்து திருமணம் செய்திருக்கின்றார்கள், சிங்கள மன்னர்களின் படைத்தளபதிகளாக தமிழ் நாட்டுத் தமிழர்கள் இருந்திருக்கின்றனர்.

## மலையக மக்களின் அடையாளம் எது?

இவர்களில் மலையக மக்கள் மட்டும் சற்றுத் தாமதமாக- இலங்கைக்கு வந்தவர்கள். அவர்களை மட்டும் ஏன் இந்திய வம்சாவளியினர் என அழைக்க வேண்டும். இந்தியாவிலிருந்து வந்தவர்களை இந்திய வம்சாவளியினர் என்று அழைப்பதாயின் இந்திய வம்சாவளி சிங்களவர்கள், இந்திய வம்சாவளி இலங்கைத் தமிழர்கள், இந்திய வம்சாவளி முஸ்லிம்கள் எனப் பல இந்திய வம்சாவளியினர் இலங்கையில் இருப்பர்.

இரண்டாவது காரணம் மலையக மக்களில் 8ஆவது தலைமுறையினரே தற்போது வசிக்கின்றனர். இவர்களில் பெரும்பான்மையோருக்கு இந்தியாவுடன் எந்தவித தொடர்பும் கிடையாது. அவர்களது வாழ்வு முழுவதும் மலையகமும், இலங்கையும் சார்ந்ததே. அவர்கள் தமது வாழ்வாதாரங்களை மலையகத்தில் தேடிக்கொண்டிருக்கின்றனர் அல்லது கொழும்பில் தேடிக் கொண்டிருக்கின்றனர். வாழ்வாதாரத்தை உயர்த்துவதில் இந்தியக் காரணி பெரியளவில் பங்களிப்புச் செலுத்தியதில்லை.

மூன்றாவது மலையகத்தை வளங் கொழிக்கும் பூமியாக மாற்றியவர்கள் மலையக மக்களே!

மக்களே புகமுடியாத காடுகளை தமது உதிரத்தால் வளமாக்கியவர்கள் அவர்கள். தற்போதுள்ள தலைமுறையினருக்கு மலையகம் தான் அவர்களது தாயகம். மலையக மக்களை இந்திய வம்சாவளியினர் என அடையாளப்படுத்தினால் மலையகத்தைத் தாயகம் என உரிமை கொள்ள முடியாது. ஒரு தாயகம் இல்லாத மக்களை தேசிய இனம் எனக் கூற முடியாது. சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை யையும் முன்வைக்க முடியாது. மலையக மக்களை ஒடுக்குபவர்களுக்கு இந்நிலமை மேலும் இலகுவாகிவிடும். இந்தியர்களுக்கு இங்கென்ன உரிமை? எனக் கூறி மலையக மக்களின் உரிமைக் கோரிக்கைகளை இலகுவாகவே தட்டிக்கழித்துவிடுவர்.

நான்காவது இந்திய வம்சாவளியினர் என்ற அடையாளம் மலையக மக்களை உளவியல் ரீதியாகவே அந்த மண்ணிலிருந்து அந்நியப்படுத்தி விடுகின்றது. இந்த அந்நியத் தன்மை ஏற்கனவே நிலமற்று இருக்கும் அவர்களின் நிலைமையை மேலும் மோசமாக்கிவிடும். நிலக் கோரிக்கையையும் பலவீனப்படுத்திவிடும். இது எங்களுடைய சொந்த மண் என நெஞ்சை நிமிர்த்தி அவர்களால் கூற முடியாத நிலை ஏற்படும். இலங்கைத்தீவில் வசிக்கும் ஏனைய தேசிய இனத்தவர்கள் இவர்களை அந்நியமாகப் பார்க்க முற்படுவர். குறிப்பாக மலையகம் சிங்கள மக்களினால் சூழப்பட்ட பிரதேசம். அவர்களுடனான உறவுகளிலும் நெருக்கடிகள் வரப் பார்க்கும். உங்களைப் போல நானும் இந்த மண்ணில் சொந்தக்காரன் என மலையக மக்களால் கூறமுடியாத நிலை ஏற்படும்.

ஐந்தாவது சிங்கள மக்கள் வரலாற்று ரீதியாகவே இந்தியாவை எதிரியாகப் பார்க்கின்றனர். சுதந்திரத்தின் பின் இந்தியா தனது பிராந்திய வல்லரசுக் கனவினால் இலங்கை மீது ஆதிக்கம் செலுத்தவே முற்படுகின்றது. இது இலங்கையின் சுயாதீனத் தன்மையை பலமுறை கேள்விக் குள்ளாக்கி இருக்கின்றது. மலையக மக்கள் தங்களை இந்திய வம்சாவளியினர் என அடையாளப்படுத்தினால் சிங்கள மக்கள் அவர்களையும் எதிரிகளாகப் பார்க்கவே முற்படுவர். ஏற்கனவே ஆரம்பகால ஜே.வி.பி இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் ஒரு கருவியாகவே மலையக மக்களைப் பார்த்தது.

ஆறாவது மலையக மக்கள் இன்று ஏனைய தேசிய இனங்களுடன் இணைந்து "இலங்கையர்" என்ற பொது அடையாளத்தை உருவாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளனர். இலங்கையைத் தமது தாயகம் எனக் கூறுபவர்கள் தான் இலங்கையர் என்ற பொது அடையாளத்திற்குள் வரமுடியும். இந்திய வம்சாவளியினர் என்ற அடையாளம் இந்த முயற்சியையும் பலவீனப்படுத்திவிடும். மலையக மக்கள் ஏனைய தேசிய இனங்க ளுடன் இணைந்து உருவாக்க நினைக்கின்ற கூட்டு, சுயாட்சி என்ற கோட்பாட்டு அடிப்படையையும் இல்லாமல் செய்துவிடும்.

தற்போது கொஞ்சம் கொஞ்சமாக மலையகம் இலங்கைத் தீவிற்குள் இன்னோர் தீவு என்ற நிலை மாறி தேசிய நீரோட்டத் திற்குள் உள்வாங்கப்படுகின்றது. மலையகப் பாடசாலைகளை இலங்கை அரச பாடசாலை களுடன் இணைத்தல் என்பதுடன் ஆரம்ப மாகிய உள்வாங்குகை உள்ளூராட்சிக் கட்டமைப்புக்குள் உள்வாங்குகை, வீடு, நிலத்திட்டத்திற்குள் உள்வாங்குகை எனக் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து வருகின்றது. இந்திய வம்சாவளியினர் என்ற அடையாளம் இந்த முயற்சிகளையும் பலவீனப்படுத்திவிடும்.

இந்த உள்வாங்குகையினை துரிதப்படுத்த வேண்டும் என்பதற்காகத் தான் "இலங்கை-இந்தியர் காங்கிரஸ்" என்ற பெயர் "இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்" என மாற்றப்பட்டது. இவர்கள் இந்திய வம்சாவளியினர் என அடையாளப்படுத்த விரும்பினால் "இலங்கை - இந்தியர் காங்கிரஸ்" என்ற பெயரைத் தொடர்ச்சியாக பேணியிருக்கலாம். மலேசியாவில் தற்போதும் "இந்தியர் காங்கிரஸ்" என்ற பெயரில்தான் இந்தியர்களுக்கான பிரதான கட்சி செயற்படுகின்றது என ஒரு வாதம் முன்வைக்கப்படுகின்றது. இந்த அடையாளம் மலேசியத் தமிழர்களுக்கு பொருத்தமானதாக இருக்கலாம். ஆனால் மலையத் தமிழர்களுக்கு பொருத்தமானது எனக் கூறமுடியாது.

இந்திய அரசாங்கத்தைத் திருப்திப்படுத்த இந்த அடையாளம் தேவை என்ற வாதமும் முன்வைக்கப்படுகின்றது. இந்த வாதம்

தவறானது. இந்தியா என்றைக்குமே மலையக மக்களுக்கு சார்பாக நடந்ததில்லை. பிரஜாவுரிமைச் சட்டத்தையும், வாக்குரிமைச் சட்டத்தையும் இந்தியா நினைத்திருந்தால் தடுத்திருக்க முடியும். சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தைத் தவித்திருக்க முடியும். சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தினால் மலையக மக்கள் மோசமாக பாதிக்கப்பட்டனர். அவர்களின் இருப்பு பலவீனப்படுத்தப்பட்டது. இதனை ஒரு வகை இன அழிப்பு என்றே கூறலாம். இந்தியா தனது புவிசார் அரசியல் நலன்களுக்காக இவ் இனப்படுகொலையைச் செய்தது. இந்தியாவிற்கு நாடு கடத்தப்பட்டவர்களையும் அங்கு இந்திய அரசு ஒழுங்காகக் கவனித்தது எனக் கூறமுடியாது. சமூகமாக வாழ்ந்த மக்கள் இந்தியாவில் சிதறிவிடப்பட்டனர்.

இங்கு இந்தியாவை எதிரியாக்க வேண்டும் எனக் கூறவரவில்லை. மலையக மக்களினை ஒரு கருவியாகப் பயன்படுத்தி தனது நலன்களை மட்டும் அடைந்து கொள்வதையே இங்கு கூற வேண்டி இருக்கின்றது. மலையக மக்களின் தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்பவற்றை இந்தியா அங்கீகரித்தால் இந்தியாவை திருப்திப்படுத்துவது பற்றி யோசிக்கலாம். அதில் கூட சுயத்தை இழக்கும் நிலைக்குச் செல்லக்கூடாது. எனவே மலையக மக்களின் கூட்டிருப்புக்கும், கூட்டுரிமைக்கும் மலையகத் தமிழர் என்ற அடையாளமே பொருத்தமானது என்பது இப்பத்தியாளரின் வாதம்.

முன்னர் கூறியது போல இந்த வாதங்களும், பரசீலனைகளும் தொடரும் போதுதான் சரியான அடையாளத்தைக் கண்டறியக் கூடியதாக இருக்கும்.

வாதங்கள் தொடரட்டும். மாவோ கூறியது போல இது விடயத்தில் நூறு பூக்கள் மலரட்டும்.

# மலையகத் தேசியம்
## அண்மைக்கால முன்னெடுப்புகளும் அடுத்த கட்ட நகர்வும்



ம. திலகராஜா- பாராளுமன்ற உறுப்பினர்

மலையக தேசியம் குறித்த சமகாலத்தில் இடம்பெறும் கதையாடல்கள், உரையாடல்கள் அதனை நிறுவுவதற்கான முனைப்புகள் முயற்சிகள் பலரதும் கவனத்தைப் பெற்று வருகிறது. அரசியல், சமூக பண்பாட்டு கலை இலக்கிய அசைவியக்கங்களில் இந்த மலையக தேசியம் பற்றிய உரையாடல் இடம்பெற்று வருவதனை அவதானிக்கலாம்.

இந்தியாவில் இருந்து இலங்கையின் பெருந்தோட்டப்பயிர்ச் செய்கைகளுக்கு காலனித்துவ ஆட்சியாளர்களால் கூலிகளாக அழைத்து வரப்பட்டு இன்று மலையக மக்கள் என அறியப்படும் இந்திய வம்சாவளி தமிழ்ச் சமூகம் வரலாற்றில் தனது அடையாளத்தை பல்வேறு பரிமாணங்களில் வெளிப்படுத்தி வந்துள்ளது.

1800 பயனடை காலனித்துவவாதிகளால் (Cooly Tamils) "கூலிகள்" எனக் குறிக்கப் பட்டு அழைத்துவரப்பட்ட இவர்கள் 1920 காலப்பகுதியில் "இந்தியத் தொழிலாளர்கள்" (Indian Labourers) என விளிக்கப் பட்டுள்ளனர். இதற்கான சான்றுகளாக திருமதி. மீனாட்சியம்மாள் நடேசய்யரின் மக்கள் பாடல்களைக் கொள்ளலாம். அதன் பின்னர் "பெருந்தோட்டத் தொழிலாளர்கள்" என அழைக்கப்பட்டனர் (Plantation Workers).

இலங்கை சுதந்திரமடைந்த 1948 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியிலேயே இந்த மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டப் பின்னர் தான் தாம் இந்த நாட்டுக்குரியவர்கள் என்கிற அழுத்தத்தைப்பெற்ற இவர்களின் இலக்கிய எழுத்துக்களில் "மலைநாட்டு மக்கள்" (Upcountry Tamils) என குறித்துரைக்கத் தொடங்கினர். கவிஞர். சி.வி.வேலுப்பிள்ளை அவர்களின் எழுத்துக்களில் இந்த சொல்லாடல் அதிகம் தொணிப்பதை அவதானிக்கலாம். 1964ஆம் ஆண்டு அடுத்த இடியாக இவர்கள் ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் வாக்குரிமை மட்டுமல்லாது குடியரிமையும் கேள்விக்குட்படுத்தப்பட்ட நிலையில் பண்பாட்டுத்தளத்தில் "மலையகம்" என்ற சொற்றொடர் ஓங்கி ஒலிக்கத் தொடங்கி யுள்ளது. மறைந்த தோழர் ஏ. இளஞ் செழியன் தலைமையிலான இலங்கை திராவிட முன்னேற்றக்கழக சமூக பண்பாட்டுத்தள செயற்பாடுகளிலும் அமரர் இர. சிவலிங்கம் தலைமையிலான கல்விசார் அரசியல் வெகுஜன செயற்பாடுகளிலும் இந்த "மலையகம்" என்ற எண்ணக்கரு வலுப்பெறத் தொடங்கியுள்ளது. குறிப்பாக இலக்கியத்துறையில் "மலையகம்" என்ற சொல் வேருன்றி விரிவடைய அதுவரைக் காலமும் அரச அல்லது பெருந்தோட்ட நிர்வாக முறைமையின் கீழ் இந்தியாவில் இருந்து வந்த தொழிலாளர்களாகவே மையப்படுத்தி அறியப்பட்டு வந்த சமூகம் "மலையக சமூகம்" என்ற பண்பாட்டு வடிவத்தைப் பெறலாயிற்று. இன்றுவரை மலையகம் என்றாலே அது இந்திய வம்சாவளியாக இலங்கையில் வாழும் ஒரு தொகுதி தமிழ் மக்களைக் குறிப்பதாக அமைகின்றது.

இந்தியாவில் இருந்து இவ்வாறு கூலிகளாக அழைத்துச் செல்லப்பட்ட தமிழ் மக்கள் இன்றைய நாளில் மொரியஸ், தென்னாபிரிக்கா, கரிபியன், மலேசியா, கம்போடியா போன்ற நாடுகளில் அந்தந்த நாடுகளின் பெயர்களைக் கொண்டே "தமிழர்கள்" என அழைக்கப்படுகின்றனர். மொரியஸ் தமிழர்கள், தென்னாபிரிக்கத் தமிழர்கள், கரிபியன் தமிழர்கள் போன்ற அடைமொழி கொண்டு அழைக்கப்படும் இவர்கள் ஆங்கிலம் பேசும் தமிழர்களாக மாறிப்போயுள்ளனர். இவர்களிடையே

மலேசிய தமிழர்களும், இலங்கை மலையகத் தமிழர்களும் இன்றுவரை தமிழையே தாய் மொழியாகவும் இந்தியாவுடன் பண்பாட்டு, கலாசார ரீதியாகவும் உறவு முறைகளின் அடிப்படையிலும் தொடர்பினைப் பேணி வருபவர்களாகவும் உள்ளனர். இதில் மலேசியாவில் வாழுவோர் "மலேசிய தமிழர்கள்" என்றோ அல்லது "மலேயா தமிழர்கள்" என்றோ அழைக்கப்படுகின்றனர். இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி தமிழர்கள் மாத்திரம் "இலங்கைத் தமிழர்கள்" என்று அழைக்கப்படாமல் "மலையகத் தமிழர்கள்" எனும் சொல்லாடலினால் இன்று அழைக்கப்படுபவர்களாக உள்ளனர். இதற்கு பிரதான காரணமாக அமைந்திருப்பது "இலங்கைத் தமிழர்கள்" எனும் வகுதியினர் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்டு வாழ்ந்து வருவதனால் இந்தியாவில் இருந்து வேறு நாடுகளுக்கு புலம்பெயர்ந்து கூலிகளாகப் போன தமிழர்களைப் போல அந்த நாட்டுத் தமிழர்களாக அடையாளப் படுத்தப்படாமல் இலங்கையில் "இந்திய வம்சாவளி தமிழர்களாக" தொடர்ந்தும் அரச பதிவுகளில் அடையாளப்படுத்தப்பட்டு வந்துள்ளனர்.

இலங்கையின் வடகிழக்குப் பகுதியில் இலங்கைத் தமிழர் தாயகப்பிரதேசம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தனிநாட்டு கோரிக்கையை முன்வைத்து நடைபெற்ற மூன்று தசாப்த கால உள்நாட்டுப்போர் மலையக மக்களின் அரசியல் நகர்விலும் பாரிய தாக்கத்தைச் செலுத்தியது. குறிப்பாக "மலையகம்" என்ற உணர்வை அரசியல் மயப்படுத்துவதற்கு இலங்கையில் நிலவிய யுத்த சூழ்நிலை பெரும் அச்சுறுத்தலாகவே இருந்துவந்தது எனலாம். மலையகமும் ஒரு வகை தனிநாட்டு கோரிக்கையாக சந்தேகிக்கும் சூழ்நிலை உருவானது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தொழிலாளர் தேசிய சங்கம், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் என "தொழிலாளர்" என்ற சொல்லாடலுடன் இயங்கிய மலையக அரசியல் சூழலில் "மலையக மக்கள் முன்னணி" என்ற அரசியல் கட்சியின் தோற்றம் ஒரு பாரிய அதிர்வை ஏற்படுத்தியது. அதுவே மலையக தேசியத்துக்கான முனைப்பாகவும் அமைந்தது. அந்த அமைப்பின் தலைவராக நியமிக்கப்பட்ட பெ.சந்திரசேகரன் ஜனரஞ்சக நிலைகருதி இ.தொ.காவில் இருந்து உள்வாங்கப்பட்டாலும் வி.டி.தர்மலிங்கம், பி.ஏ.காதர், மு.சிவலிங்கம், மு.நாகலிங்கம், ஏ.லோரன்ஸ், போன்ற மலையக தேசியம் சார்ந்த அக்கறையாளர்களின் முனைப்பே அந்தக்கட்சியின் ஆணிவேராக இருந்தது. இதனை அறிந்த ஆளும் தரப்பு ஆரம்பத் திலேயே அதனை முடக்கும் முயற்சிகளில் ஈடுபட்டது. அந்த கட்சியும் வடக்குக் கிழக்கு விடுதலை இயக்கங்களுடன் தத்துவார்த்த ரீதியில் அல்லாது பேணிவந்த (ஈரோஸ் மற்றும் புளோட் உடன்) தொடர்புகள் பின்னாளில் விடுதலைப் புலிகளுடனான தொடர்பாகவே மாற்றம்பெற்று சிறைவாசம் அனுபவிப்பது வரை சென்றது மட்டுமல்லாது மலையகத்தில் பண்பாட்டுத் தளத்தில்கூட மலையக தேசியத்தை முன்னெடுப்பதை ஆபத்தான விடயமாக மாற்றிப்போட்டது.

அதே நேரம் மறுபக்கத்தில் 1977 ஆம் ஆண்டு முதல் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கடைபிடித்துவரும் அமைச்சு பதவிசார் அரசியல் செல்நெறிக்குள் சிறை மீண்ட மலையக மக்கள் முன்னணியும் கலந்துவிட மலையகம் மலையக தேசியம் குறித்த நகர்வுகள் நலிவடையத் தொடங்கின.

அண்மைக்காலமாக குறிப்பாக 2009 ஆம் ஆண்டு உள்நாட்டுப் போரின் முடிவுக்குப் பின்னர் 2011 ஆண்டு மேற்கொள்ளப்பட்ட குடித்தொகை மதிப்பீடு மலையக மக்களின் எண்ணிக்கையை பெருமளவில் குறைத்து மதிப்பிட மலையக மக்களின் அடையாளம் பற்றிய கேள்வியை அவர்களிடத்தில் தோற்றுவித்துள்ளது. இலங்கை அரச பதிவுகளில் "இந்திய வம்சாவளி தமிழர்" என்றும் "இலங்கைத்தமிழர்" என்றும் வகைப்படுத்தல்கள் இருந்தாலும் "மலையக மக்கள்" என்ற வகைப்படுத்தல் இல்லை. எனவே தாங்கள் இலங்கையர்கள் என உணர்வுபெற்ற மலையக மக்கள் தங்களை "இலங்கைத் தமிழர் என்ற வகுதியினராக பதிவு செய்ய அது கணக்கெடுப்பில் பாரிய மாற்றத்தைக் காண்பிப்பதாக அமைந்து விட்டது. இதனால் ஏற்பட்ட அதிர்வுகள் மீண்டும் மலையக மக்களா? இந்திய வம்சாவளி தமிழரா? எனும் கேள்வியை பல்வேறு தளத்தில் உரையாடச் செய்துள்ளது.

தெளிவத்தை ஜோசப், பேராசிரியர் சோ.சந்திரசேகரம், மு.சிவலிங்கம், பி.பி.தேவராஜ், எ.லோரன்ஸ், எம்.வாமதேவன், இ.தம்பையா, லெனின் மதிவானம், மல்லியப்புசந்தி திலகர்,

இரா.இரமேஸ், சு.விஜயகுமாரன், இரா.சடகோபன், சிவம் பிரபாகரன், பொன்.பிரபாகரன் போன்ற மலையக அரசியல் சமூக பண்பாட்டுத்தள செயற்பாட் டாளர்களின் எழுத்துக்களில் இவை பிரதிபலிக்கத் தொடங்கியுள்ளன. அவை வாதப்பிரதிவாதங்களைக் கொண்டன என்பது குறிப்பிடத்தக்கது.

மலையக சமூக ஆய்வு மையம், கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனம், மலையக மக்கள் ஆவணக் காப்பகம், ஏ.லோரன்ஸ் அவர்களின் மலையக ஆய்வகம், நூலகம் நிறுவனத்தின் மலையக இணைய ஆவணப்பிரிவு, புதிய பண்பாட்டுத் தளம் போன்ற அமைப்பு சார்ந்த கலந்துரையாடல்களும் இதில் கவனம் செலுத்தியுள்ளன. இந்த தனிப்பட்ட ஆளுமைகள் மற்றும் அமைப்புசார் சிந்தனைகளில் இந்திய வம்சாவளி தமிழர் என்பதை விட மலையக மக்கள் எனும் முனைப்பே மேலோங்கியுள்ளமையை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளமையை அவதானிக்கலாம்.

இந்திய நிலையில் கடல்கடந்து வாழும் இந்தியர்கள் பின்வரும் நிலைகளில் அடையாப்படுத்தப்படுகின்றனர்.

**NRI** – Non Resident India வதிவற்ற இந்தியர்கள் - இவர்கள் தொழில் நிமித்தம் இந்தியாவுக்கு வெளியே வாழ்பவர்கள்.

**OCI** – Overseas Citizens of India- கடல்கடந்து வாழும் இந்தியர்கள் - இவர்கள் இந்தியாவுக்கு வெளியே வேறு நாட்டு பிரஜையானாலும் இந்தியர்களாக மதிக்கப்பட்டு நிரந்தர வீசா மூலம் இந்திய பிரஜை அந்தஸ்து வழங்கப்பட்டவர்கள். இந்தியாவில் விவசாய நிலம் வாங்க முடியாது வாக்களிக்க முடியாது என்பன தவிர்ந்த மற்ற எல்லா தகுதியுமுடைய இந்தியர்கள் இவர்கள். இலங்கையில் கொழும்பு கண்டி உள்ளிட்ட நகரங்களில் வாழும் வர்த்தகர்கள் இந்த வகுதியில் இடம் பிடிக்கின்றனர்.

**PIO** - இவர்கள் இந்திய வம்வசாவளியினர். இந்தியாவுக்கு வெளியே வசிக்கும் வேறு நாட்டு பிரஜைகள். உலகளாவிய ரீதியில் லட்சக்கணக்கான இந்திய வம்சாவளியினர் இந்தத் தகுதியைப் பெறுகின்றனர். **GO –PIO** (Global Organization for Persons of Indian Origin ) என்பதே அவர்களின் கூட்டிணைவுதான். இந்தத் தகுதியைப் பெறும் இந்திய வம்சாவளி **PIO** card எனும் அடையாள அட்டை போன்ற ஒன்றை இந்திய அரசாங்கம் வழங்கிவருகிறது. ஆனால் இலங்கையில் வாழும் "மலையக மக்கள்" இந்த PIO அட்டைக்குரியவர்களாக கருதப்படுவதில்லை. அப்படியென்றால் இந்திய நிலையில் இவர்கள் இந்திய வம்சாவளி என்பதை உறுதிப்படுத்தி ஒரு அட்டையை வழங்க அவர்கள் தயாராக இல்லை. அதற்கு இரட்டை குடியுரிமை நடைமுறையில் உள்ள நாட்டில் வாழும் இந்திய வம்சாவளியி னருக்கு வழங்க முடியாத ஒரு ராஜதந்திர காரணம் சொல்லப்படுகின்றது.

மலையக மக்களைப் பொறுத்தளவில் இது பற்றிய அக்கறையோ அவசியமோ அவர்களிடத்தில் இல்லை. இந்திய அரசால் வழங்கப்படும் இந்திய வம்சாவளி மாணவர்களுக்கான புலமைப்பரிசில் தெரிவின்போது இந்த இந்த கேள்வி ஒன்று வரும் (OCI – PIO- NRI). மலையக மாணவர்கள் அதற்கு என்ன பதிலளிப்பது என்று தெரியாமலேயே விண்ணப்பித்து வருகின்றனர். ஆனால் கொழும்பு கண்டி உள்ளிட்ட நகர்மைய இந்திய வம்சாவளி யினர் OCI அடையாளத்தைக்காட்டி அந்த வாய்ப்பைப் பெற்றுக்கொள்கின்றனர். அதே நேரம் PIO அத்தாட்சி இல்லாத நாட்டில் GOPIO இயங்குவதும் விந்தைதான்.

இந்த நிலையில் மலையக மக்களை தொடர்ச்சியாகவும் இந்திய வம்சாவளியாக பதிவு செய்துகொண்டு வருவது கேள்விக்குட் படுத்த வேண்டிய ஒன்றே. மறுபுறம் இலங்கைத் தமிழராகவும் பதிவு செய்ய முடியாத சூழ்நிலையில் அவர்கள் இந்திய வம்சாவளி தமிழராகவே தம்மைக் குறிப்பிடுவதும் பரிதாபகரமான நிலை.

எனவே "மலையக மக்கள்" என குறிப்பிடுவதே பொருத்தமாகுமென வாதிடுவோர் கையிலும் சில பணிகள் காத்திருக்கின்றன. இந்த பதத்தை அரச பதிவுகளில் கொண்டுவரும் பொறுப்பு அவர்களுடையது. இலங்கை முஸ்லிம், இந்திய முஸ்லிம், மேமன் சமூகம், சோனகர்கள் என இன்னோரன்ன பெயர்களில் அழைக்கப்பட்ட மக்களை இலங்கை சோனகர்கள் (Moors) என அரச

பதிவுக்குள் அடக்கும் முன்னெடுப்பை முஸ்லிம் சமூகம் செய்ததைப்போல, இந்திய வம்சாவளி தமிழரைக் குறிப்பதற்கு "மலையக மக்கள்" எனும் தொடரை அரச மட்டத்தில் பாராளுமன்றத்தில் ஒரு பிரேரணையாகக் கொண்டுவருவதன் மூலம் மட்டுமே இந்தக் குழப்பத்தை முடிவுக்குக் கொண்டு வரமுடியும். மலையக மக்களை இலங்கையில் ஒரு தேசிய இனமாக நிலைத்திருக்கச் செய்யமுடியும். இதனை மலையக அரசியல்வாதிகள் செய்யவேண்டும் என கூக்குரலிட்டு அறிக்கைவிட்டு அடங்கிப் போகாது அதனை செய்வதற்காக கலந்துரையாடல்கள் சிவில் சமூக மட்டத்தில் ஆரம்பிக்கப்படல் வேண்டும். இதன் குறைநிறைகள் கலந்துரையாடப்பட்டு ஒரு கருத்தாக்கப்பத்திரம் Concept Paper தயாரிக்கப்பட்டு மலையகப் பாராளுமன்ற உறுப்பினர்களிடமோ அல்லது அக்கறையுடைய வெறு தரப்பினரிடமோ அதனைக் கையளித்து அதனை செயல்வடிவில் சாதிக்கும் முனைப்பு மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் மலையக மக்கள் மீது அக்கறைகொண்ட அனைத்துக்கட்சிலும் உள்ள நல்லெண்ணம் கொண்டோரைச் சந்தித்து விளக்கி சாதிக்க வேண்டிய பொறுப்பு மலையக சிவில் சமூகத்துக்கு உரியது. இதுவே மலையகம் தேசியம் குறித்த தற்போதைய உரையாடல் களின் அடுத்த கட்ட நகர்வாக அமைய முடியும்.

# ஆரம்ப கல்வி மாணவர்களுக்கான விஞ்ஞான கல்வியின் அவசியம்

## அயர்லாந்து நாட்டின் முன்னுதாரணம்

இன்றைய உலக சூழலில் விஞ்ஞான கல்வியின் அவசியம் பெரிதும் உணரப் பட்டுள்ளது. சகல பிரச்சினைகளையும் செயற்பாடுகளையும் “விஞ்ஞான கண்ணோட்டத்தில் அணுகுதல்” சரியான தீர்வுகளைப் பெறுவதற்கான முன் நிபந்தனையாக உள்ளது. குடும்பம் இதற்கு அடிப்படையான அத்திவாரத்தை வழங்க வேண்டும். குழந்தை பருவத்திலிருந்து தனது சூழலை விஞ்ஞான கண்ணோட்டத்தில் விளங்கிக் கொள்ளும் ஆற்றல் பிள்ளைகளிடம் வளர்க்கப்பட வேண்டும். துரதிஸ்டவசமாக ஆசிய ஆபிரிக்க மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகளில் இதற்கான வாய்ப்புகள் குறைவானதாகவே உள்ளது. சகல பிரச்சனைகளுக்குமான காரணங்கள் மற்றும் தீர்வுகள் வானத்தில் தீர்மானிக்கப் படுவதாக விளக்கம் வழங்கப்படுகின்றது. விஞ்ஞான விதிகளுக்கு நேர்மாறான “விதிகள்“ காட்டப்படுகின்றன. இந்த வரையறையானது ஒருவன் உலகை பரந்துபட்ட கோணத்தில் தரிசிப்பதற்கான அடிப்படைத் தடையாக கூட அமைந்து விடுகின்றது. எவ்வாறாயினும் தன்னையும் தனது சூழலையும் பிள்ளைகள் பூரணமாக விளங்கிக் கொள்ளும் வாய்ப்புகள் குறிப்பாக ஆரம்ப கல்வி பெறும் மாணவர்களுக்கு வழங்கப்படல் அவசியமாகும். இதனை மனித உரிமையாக கூட சுட்டிக்காட்டலாம். இந்த வகையில் அயர்லாந்து நாட்டின் முன்னுதாரணத்தை அடிப்படையாகக் கொண்டு சில அறிமுகக் குறிப்புகளை முன் வைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அயர்லாந்து நாட்டில் காணப்படும் ஆரம்ப வகுப்புகளில் விஞ்ஞானம் கற்பிக்கும் முயற்சி 1971 ம் ஆண்டு முதல் முன்னெடுக்கப்பட்டு வந்தாலும் 1999 ம் வருடத்தில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டன. விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த விடயங்களின் முக்கியத்துவம் பெரிதும் உணரப்பட்டு கலைத்திட்டத்தில் புதிய விடயங்கள் சேர்க்கப்பட்டன.

நாளாந்த வாழ்வு, வேலையுலகு, வீடு மற்றும் பாடசாலை செயற்பாடுகளில் விஞ்ஞான கண்ணோட்டத்தின் அவசியம் கருத்தில் எடுக்கப்பட்டது. சகல மாணவர்க ளுக்கும் விஞ்ஞான அடிப்படையை (Science Literacy) விருத்தி செய்வது என்பது இதன் நோக்கமாக அமைந்தது. குழந்தை பருவம் முதல் ஆறாம் ஆண்டு வரை விஞ்ஞான கற்றலுக்கான அத்திவாரத்தை உறுதியாக இடுவது முக்கிய இலக்காக கொள்ளப்பட்டது. இரண்டாம் நிலையில் (Secondary level) விஞ்ஞான கல்வியை வெற்றிகரமாக கற்பதற்கு அது சாதகமாக அமையும் என்பது உறுதியாக எடுத்துக்காட்டப் பட்டது. விஞ்ஞானம் தொடர்பான சாதகமான



சிவ. இராஜேந்திரன்
பீடாதிபதி
மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி

கருத்தோட்டம், அனுபவம், சந்தரப்பம் வழங்குதல், விஞ்ஞானியாக செயற்படுவதில் ஆர்வத்தைத் தூண்டுதல் போன்றன முக்கியமானதாக கருதப்பட்டது.

அயர்லாந்து நாட்டின் ஆரம்ப கல்வியில் விஞ்ஞான கலைத்திட்டத்தை வெற்றிகரமாக அமுல் செய்யப்படுவது 1999 ம் ஆண்டு ஆய்வுகளின் மூலம் உறுதி செய்யப் பட்டுள்ளது. பிள்ளளைகளுக்கு குறித்த இப்பாடம் தொடர்பான கற்றல் அனுபவங்களை வழங்குவது மற்றும் சேவைக்கால ஆலோசனைகள் மூலம்

ஆசிரியர்களின் தொழில் வாண்மையை விருத்தி செய்வது போன்றனவற்றில் உயர்ந்த அடைவு பெறப்பட்டது. விஞ்ஞான அடிப்படையில் செயற்படுவது (Working Scientifically) என்பதுஇங்கு வெற்றி கொள்ளப்பட்டுள்ளது. மேலும் ஆசிரியர்களின் ஆர்வம், பெற்றோர்களின் பங்களிப்பு, ஆசிரிய கல்வியியலாளர்களின் ஊக்குவிப்பு போன்றனவும் குறித்த இவ்விஞ்ஞான கல்வியின் வெற்றிக்கு காரணமாக அமைந்துள்ளது.

ஆரம்ப கல்வியில் விஞ்ஞானத்தை கற்பது தொழில்நுட்பத்துடன் இணைக்கப் பட்டுள்ளமை இன்னுமொரு சிறப்பு அம்சமாகும். இவ்விரு அம்சங்களையும் வளங்களை சமூக, கலாசார மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்காக பொருத்த மான வகையில் பயன்படுத்தக்கூடிய ஆற்றலை சிறு பிள்ளைகளிடம் ஏற்படுத்த வேண்டும் என்பது எதிர்பார்ப்பாக உள்ளது.இத்தகைய கலைத்திட்டமானது பின்வரும் இரண்டு நோக்கங்களை அடிப்படையாக கொண்டுள்ளது.

1. **எண்ணக்கருக்கள் அடிப்படையிலான விளக்கம்**

உலகின் உயிரியல் மற்றும் பௌதீக காரணிகளின் விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். நான்கு பகுதிகளை உள்ளடக்கி யுள்ளது. வாழும் உயிர்கள்,

**விஞ்ஞான கலைத்திட்டத்தின் உள்ளடக்கமும் கூறுகளும்**

| | குழந்தைகள் | முதலாம் இரண்டாம் வருடங்கள் | மூன்றாம் நான்காம் வருடங்கள் | ஐந்தாம் ஆறாம் வருடங்கள் |
|---|---|---|---|---|
| உயிருள்ளவை | என்னைப்பற்றி தாவரங்களும் விலங்குகளும் | என்னைப்பற்றி தாவரங்களும் விலங்குகளும் | மனித வாழ்வு தாவரங்களும் விலங்குகளும் | மனித வாழ்வு தாவரங்களும் விலங்குகளும் |
| சக்தியும் வலுவும் | ஒளி<br>ஒலி<br>வெப்பம்<br>காந்தமும்<br>மின்சாரமும்<br>சக்திகள் | ஒளி<br>ஒலி<br>வெப்பம்<br>காந்தமும்<br>மின்சாரமும்<br>சக்திகள் | ஒளி<br>ஒலி<br>வெப்பம்<br>காந்தமும்<br>மின்சாரமும்<br>சக்திகள் | ஒளி<br>ஒலி<br>வெப்பம்<br>காந்தமும்<br>மின்சாரமும்<br>சக்திகள் |
| சடப்பொருட்கள் | பருபொருட்களும் சடப்பொருட்களின் பண்புகளும்<br><br>சடப்பொருட்களும் அவற்றின் மாற்றங்களும் | பருபொருட்களும் சடப்பொருட்களின் பண்புகளும்<br><br>சடப்பொருட்களும் அவற்றின் மாற்றங்களும் பருபொருட்களும் சடப்பொருட்களின் பண்புகளும்<br><br>சடப்பொருட்களும் அவற்றின் மாற்றங்களும் | பருபொருட்களும் சடப்பொருட்களின் பண்புகளும்<br><br>சடப்பொருட்களும் அவற்றின் மாற்றங்களும் | பருபொருட்களும் சடப்பொருட்களின் பண்புகளும்<br><br>சடப்பொருட்களும் அவற்றின் மாற்றங்களும் |
| சூழல் தொடர்பான விழிப்புணர்வும் பாதுகாப்பும் | என்னையும் எனது சுற்றாடலையும் பாதுகாத்தல் | என்னையும் எனது சுற்றாடலையும் பாதுகாத்தல் | சூழல் விழிப்புணர்வு விஞ்ஞானமும் சுற்றாடலும் சுற்றாடலைப் பாதுகாத்தல் | சூழல் விழிப்புணர்வு விஞ்ஞானமும் சுற்றாடலும் சுற்றாடலைப் பாதுகாத்தல் |

சேர்ப்பதனூடாக வடிவமைத்தலும் உருவாக்கலும் (Design and Making) சார்ந்த அனுபவங்களை குறித்த இப்பிள்ளைகளுக்கு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் விஞ்ஞானத்தையும் சூழலியலையும் இணைப்பதனூடாக உலகில் காணப்படும் பொருட்கள், சக்தியும் வலுக்களும் மற்றும் சுற்றாடல் தொடர்பான விழிப்புணர்வு. இக்கலைத்திட்டமானது சுருளி வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. ஒரு வகுப்பில் பெற்ற அனுபவங்களை அடிப்படையாகக்

கொண்டு அடுத்த வகுப்பில் கற்றலைத் தொடரக் கூடியதாக இது அமைக்கப்பட்டுள்ளது. மேலும் முன்னர் கற்ற விடயங்களை மீண்டும் மீட்டுப்பார்க்கக் கூடிய (Revisit) வாய்ப்புகளும் வழங்கப்படுகின்றன.

2. செயல் முறை விளக்கம்

இதில் இரண்டு திறன்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.

(அ) விஞ்ஞான அடிப்படையில் செயற்படல்

வினா கேட்டல் அவதானித்தல், முன்னறிவித்தல், பரிசோதனையும் கண்டுபிடித்தலும், கணக்கிடலும், அளத்தலும்

(ஆ) வடிவமைத்தலும் ஆக்கமும்

விஞ்ஞான செயற்பாடுகள் அல்லது விசாரணை செய்தல் (Inquiry) கருத்துக்களின் சிக்கலான தன்மையல்ல அது செயற்பாடுகளின் மூலம் இடம் பெறும் கருத்துக்களின் அபிவிருத்தியாகும் என்பது கலைத்திட்டத்தில் வலியுறுத்தப்படுகின்றது. விஞ்ஞான அடிப்படையில் செயற்படல் என்பது இங்கு அடிப்படையாகின்றது. இவ்வகையில் பல்வேறு திறன்கள் பிள்ளைகளிடம் வளரக்கப்பட வேண்டும் என்பது எதிர்பார்க்கப்படுகின்றது. உதாரணங்களாக

- வினா கேட்டல்
- அவதானித்தல்
- முன்னறிவிப்புச் செய்தல்
- பரிசோதனையும் கண்டுபிடிப்புகளும்
- கணிப்பிடலும் அளத்தலும்
- பகுப்பாய்வு செய்தல்
- வேறுபடுத்தலும் வகை பிரித்தலும்
- கோலங்களை கண்டறிதல்
- விளக்கமளித்தல்
- பதிவு செய்தலும் தகவல் பரிமாற்றமும்

போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

பிள்ளைகள் விஞ்ஞான அடிப்படையிலான விளக்கங்களை பெறும் பொருட்டு பரீட்சித்தல் என்பதற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப் படுகின்றது. உதாரணமாக கடதாசி நீரை உறிஞ்சும் ஆனால் மிக அதிகமாக நீரை உறிஞ்சக் கூடிய தன்மை எந்த கடதாசியில் காணப்படுகின்றது என்பதனை பரீட்சித்து விளங்கிக் கொள்ளல் அவசியமாகும். மேலும் பல்வேறு மாறிகள் எவ்வாறு இதில் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதை மாணவர்கள் தானாகவே கண்டறிய வாய்ப்புகள் வழங்கப் படுகின்றன.

விஞ்ஞான ஆய்வுகளுக்கான வினாக்களை உருவாக்குதல் நுணுக்கமாக பரிசீலனை செய்தல் பரிசோதனை நடை பெற்ற படி முறையினை தெளிவாக எடுத்துரைத்தல் அடிப்படையான தீரமானங் களை முன் வைத்தல் என்ற வகையில் விஞ்ஞான அடிப்படையில் செயற்படும் ஆற்றல்கள் விருத்தி செய்யப்படுகின்றன.

வடிவமைத்தலும் உருவாக்குதலும் என்ற வகையில் தொழில்நுட்பங்களை கையாளும் திறன்கள் விருத்தி செய்யப்படுகின்றன. நடைமுறை சார்ந்த விஞ்ஞான பிரச்சினைகளைத் தீர்க்க தொழில்நுட்பங் களை கையாளும் திறன்கள் இதன் மூலம் விருத்தி செய்யப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் மாண வர்கள் சுயாதீனமாக செயற்படுவதற்கும் பரிசோதனைகளில் ஈடுபடுவதற்கும் வாய்ப்பளிக்கப்படுகின்றது.

## விஞ்ஞான கலைத்திட்டத்தை கற்பதற்கான அடிப்படைகள்

ஆரம்ப வகுப்பு பிள்ளைகள் ஆசிரியரின் வழிகாட்டலுடன் அடிப்படையான அம்சங்க ளைக் கற்றுக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(அ) பிள்ளைகளின் கருத்து ஆரம்ப புள்ளியாகும்

விஞ்ஞானம் கற்றலின் அடிப்படை யானது பிள்ளைகளிடம் தற்போது காணப்படும் அறிவு மற்றும் அனுபவங்களுடன் தொடர்புபடுத்தப் படுகின்றது. விஞ்ஞானம் கற்றலின் சகல அம்சங்களும் மேற்குறித்த அடிப்படையில் இடம்பெற வேண்டும்

என்பது வலியுறுத்தப்படுகின்றது. அசிரியரின் பிரதான வகிபாகம் பிள்ளைகளிடம் காணப்படும் அறிவை அடையாளங் காணுவதோடு அத்தகைய அறிவை பிரயோகிப் பதன் மூலம் புதிய கருத்துக்களை விருத்தி செய்ய உதவுவதாகும்.

### (ஆ) பிரயோகம் சார்ந்த விசாரணை (Practical Investigation)

கண்டுபிடித்தல் முறை மற்றும் செயற்பாடுகள் ஆகியன ஆரம்ப வகுப்புகளில் விஞ்ஞானம் கற்பதற்கான அடிப்படையாகும். பிள்ளைகள் தானாக மேற்கொள்ளும் பரிசோதனை மற்றும் தேடல் மூலம் பிரச்சினை தீர்த்தல் திறந்த பரிசோதனை ஆகியவற்றின் அடிப்படையில் தமது பௌதீக உலகை விளங்கிக் கொள்ள வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகின்றது.

### (இ) உள்ளார்ந்த சூழல்

பிள்ளைகளின் உடனடி சூழல் விஞ்ஞானம் கற்றலின் அடிப்படையாக அமைய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. உதாரணமாக வாழும் உயிர்கள் என்ற பகுதியை கற்பதற்கு இத்தகைய சூழல் பிரதான வளமாக காணப்படுகின்றது. உள்ளார்ந்த சூழலோடு பாடசாலையில் உருவாக்கப்படும் சூழலும் அதற்கு சாதகமாக அமைகின்றது.

### (ஈ) அறிவு மற்றும் திறனுக்கான சமநிலை

ஆரம்ப வகுப்பு மாணவர்களின் அறிவு மற்றும் விளக்கம் ஆகியன விருத்தி செய்யப்படுவது போல அதே முக்கியத்துவம் செயற்பாட்டு விளக்கம் மற்றும் திறன்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. விஞ்ஞான அடிப்படையில் செயற்படல் மற்றும் வடிவமைத்தல் மற்றும் உருவாக்கல் ஆகிய பகுதிகளுக்கு இத்தகைய செயற்பாடுகள் அடிப்படையாக அமைகின்றன.

### (உ) இணைப்பும் தொடர்புகளும்

சிறுவர்கள் தமது உலகத்தை கலைத்திட்ட பாடங்களைப் போல பிரித்துப் பார்ப்பதில்லை. உலகை ஒன்றாகவே தரிசிக்கின்றார்கள் என்பதால் விஞ்ஞானம், வரலாறு, புவியியல் ஆகிய பாடங்களுடன் ஒன்றிணைந்த வகையில் செயற்பாடுகள் திட்டமிடப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப் படுகின்றது.

ஆரம்ப வகுப்புகளில் விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்களின் அறிவு ஆற்றல்கள் பெரிதும் எதிர்பார்க்கப் படுகின்றது. தமது தொழில் வாண்மையை விருத்தி செய்து கொள்வதன் மூலம் செயற்பாடுக ளுடன் கூடிய கற்றல் கற்பித்தலை வெற்றிகரமாக்கிக்கொள்ள வேண்டும் எனவும் இவர்களின் தன்னம்பிக்கை மற்றும் ஆற்றல்கள் விருத்தி செய்யப்படுவது அவசியமானதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

விஞ்ஞான பாடம் பற்றிய ஆசிரியர் வழிகாட்டி போதுமான ஆலோசனைகளை இவர்களுக்கு வழங்குகின்றது. செயற்பாடுகளை அடிப்படையாக கொண்ட கற்றல் எவ்வாறு நிகழ்த்தப்பட வேண்டும் என்பது பற்றிய விரிவான விளக்கம் இவ்வழிகாட்டலில் தரப்பட்டுள்ளது. மேலும் கலைத்திட்ட ஆலோசகர் களின் ஒத்துழைப்பு ஆலோசனைகள் பெறுவதற்கான ஏற்பாடுகளும் சிறப்பான வகையில் அமைக்கப்பட்டுள்ளது. விஞ்ஞானம் கற்றலுக்கான உபகரணங்களை பெறுவதற்காக ஏழு மில்லியன் யூரோக்களை பாடசாலைகளுக்கு வழங்குவதற்கு கல்வித் திணைக் களம் ஏற்பாடு செய்துள்ளது.

ஆரம்ப பாடசாலைகள் விஞ்ஞான செயற்பாடுகளுடன் கூடிய தொழிற்சாலைகளுடன் இணைந்து செயற்றிட்டங்களை முன்னெடுக்கவும் வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களின் விருத்தி தொடர்பான செயற்றிட்டங்கள் ஆசிரியர்களுக்கு

நேரடியான "on line" வளங்களை வழங்குகின்றன. மேலும் பசுமைப் பாடசாலை நிகழ்ச்சியானது சூழல் தொடர்பான பிரச்சனைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது. பாடசாலையிலும் சமூகத்திலும் சிறந்த வாய்ப்பான சுற்றாடலை ஏற்படுத்துவதற்கு தேவையான அறிவு அனுபவங்கள் ஆகியவற்றை வகுப்பறை மட்டத்தில் வழங்குவதற் குரிய வாய்ப்புகள் காணப்படு கின்றன. குப்பை மற்றும் கழிவுகளை அகற்றல் சக்தி மற்றும் நீர்வளங் களை பாதுகாத்தல் பாடசாலைக்கு பாதுகாப்பான வகையில் நடந்து வருதல் துவிச்சக்கர வண்டியைப் பயன்படுத்துதல் போன்றன தொடர்பிலும் விழிப்புணர்வு மற்றும் அனுபவங்கள் வழங்கப்படுகின்றன.

மேற்குறித்த அம்சங்களை முழுமையாக விளங்கிக் கொள்ளும் போது அயர்லாந்து நாட்டின் ஆரம்ப கல்வி மாணவர்களுக்கு அந்நாடு வழங்குகின்ற வாய்ப்புகளை புரிந்து கொள்ள முடியும். இலங்கை போன்ற நாடுகளின் விஞ்ஞானக் கல்வியின் போதாமை பற்றி சிந்திக்க முடியும். எதிர் காலத்திலாவது எமது மாணவர்களும் விஞ்ஞான அடிப்படையில் சிந்தித்துச் செயற்பட வாய்ப்பளிக்கப்பட வேண்டும். சூழலியல் சார்ந்த பிரச்சினைகள் உக்கிரமடைந்து வருகின்ற நிலையில் உலகைப் பாதுகாக்கவென இத்தகைய நிகழ்ச்சிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவது அவசியமாகும்.

# நல்லிணக்க பொறிமுறைகள் தொடர்பான கலந்தாலோசனைச் செயலணியின் அறிக்கைக்கு என்ன நடக்கப்போகின்றது?



சி.அ.யோதிலிங்கம்

திருமதி மனோரி முத்வெட்டுகம தலைமையில் உருவாக்கப்பட்ட போர்க் குற்றம் தொடர்பான நல்லிணக்க பொறிமுறைகள் கலந்தாலோசனைச் செயலணி தனது அறிக்கையை கடந்த 3ஆம் திகதி சமர்ப்பித்திருந்தது ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் ஜனாதிபதியோ, பிரதமரோ கலந்து கொள்ளவில்லை, தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் தலைவியும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரணதுங்காவிடமே அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது வெளிநாட்டமைச்சர் மங்கள சமரவீரவும் நிகழ்வில் கலந்து கொண்டார்.

அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பதற்கு வசதியான நேரத்தை ஒதுக்குவதற்காகவே சமர்ப்பிப்பது காலதாமதப் படுத்தப்பட்டது. எனினும் ஜனாதிபதியோ, பிரதமரோ கலந்து கொள்ளவில்லை. ஜனாதிபதி சுகவீனமுற்றிருப்பதால் கலந்து கொள்ளவில்லையென இறுதி நேரத்திலேயே கூறப்பட்டது. பிரதமர் என்ன காரணத்திற்காக கலந்து கொள்ளவில்லையென இதுவரை தெரிவிக்கப்படவில்லை. இருவரும் சர்ச்சைகளை தவிர்ப்பதற்காக வேண்டுமென்றே சமூகமளிக்கவில்லை என்றே கூறப்படுகின்றது.

2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வினால் இச் செயலணி அமைக்கப்பட்டது. இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான சரத்முத்வெட்டுகம வின் துணைவியார் மனோரி முத்வெட்டுகம தலைமையில் இச் செயலணி அமைக்கப் பட்டது. சிவில் சமூகத்தைச் சேர்ந்த 11 சுயாதீனமான நிபுணர்கள் இச் செயலணியில் அங்கம் வகித்தனர் தமிழ்ப்பிரதிநிதி என்ற வகையில் பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு இதில் அங்கம் வகித்திருந்தார். மாற்றுக் கொள்கைக்கான நிலையத்தின் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்துவும் அங்கம் வகித்திருந்தார். போர்க்குற்றங்கள் தொடர்பில் எத்தகைய விசாரணைப் பொறிமுறையை அமைத்தல் வேண்டும் என்பது தொடர்பாக மக்களின் கருத்துக் களைப் பெறுவதற்காகவே இது அமைக் கப்பட்டது. நாடு பூராகவும் பொதுமக்களுடன் சந்திப்புக்களை நடாத்திய இச்செயலணி 7306 எழுத்து மூல சமர்ப்பணங்களையும் பெற்றுக் கொண்டது. நாடு முழுவதிலும் 16 வலய செயலணிகள் உருவாக்கப்பட்டு கருமங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இச்செயலணியின் சிபார்சுகள் சிங்களப் பெரும்பான்மையின் விருப்பங்களுக்கு இசைவற்றன என்ற காரணத்தினாலேயே ஜனாதிபதியும் பிரதமரும் நிகழ்வில் கலந்துகொள்ள வில்லை. இந்தச் சிபார்சுகளை உடனடியாகவே அரசாங்கத்தின் அமைச்சர்கள் பலர் நிராகரித்திருந்தனர். நீதி அமைச்சர் விஜயதாசராஜபக்ஷ செயலணியின் அறிக்கை தேவையற்றது எனக் குறிப்பிடப்பட்டார். இதற்கு மேலாக செயலணியில் எனக்கு நம்பிக்கையில்லை என்றும் குறிப்பிட்டார்.

அமைச்சர் சம்பிக்கரணவக்க இவ் அறிக்கை போக வேண்டிய இடம் குப்பைத் தொட்டி என்று குறிப்பிட்டார். அறிக்கையைப் பெற்றுக் கொண்ட சந்திரிக்கா சிபார்சுகளை ஏற்றுக் கொள்வது கட்டாயமல்ல பொது விவாதத்திற்குரியவை என சமாளிப்பு செய்தார்.

தாங்களே நியமித்த செயலணியின் அறிக்கைகளை அரசாங்கம் கிடப்பில் போடுவது ஆச்சரியப்படக்கூடிய ஒன்றல்ல. இது வரலாற்று ரீதியாக நடைபெறுகின்ற ஒன்றுதான். விடயப் பொருள்களினால் வரும் உள்நாட்டு, சர்வதேச அழுத்தங்களைக் குறைப்பதற்காகவே அவ்வப்போது ஆணைக்குழுக்களை செயலணிகளை உருவாக்குவது வழக்கம். பின்னர் அவற்றின் சிபார்சுகள் பற்றி கணக்கெடுப்பதில்லை. போர் குற்றம் தொடர்பாக மகிந்தர் உருவாக்கிய நல்லிணக்க ஆணைக் குழுவிற்கும் இதுவே நடந்தது. இவ்வளவிற்கும் இவ்வாணைக்குழுவின் சிபார்சுகள் தமிழ் மக்களுக்குத் தேனையும் பாலையும் கொட்டவில்லை. சில பருக்கைகளையே வழங்க முன் வந்தன. பெருந் தேசியவாதிகள் அதனைக் கூடக் கொடுக்கத் தயாராக இல்லை. தொடர்ச்சியாக பட்டனுபவம் உள்நாட்டு முறைமைகள் என்றைக்குமே தமிழ் மக்களுக்கு உதவப்போவதில்லை என்பதுதான் இந்த அறிக்கை மீண்டுமொருமுறை அதனை வெளிப்படுத்தியுள்ளது.

செயலணியின் சிபார்சுகளில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் பொது மக்களின் காணிகளை விடுவித்தல், இராணுவ மயமாகலால் ஏற்படும் பிரச்சினை களுக்குத் தீர்வுகாணல், காணாமல்போனோர் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல், போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வாழ்வாதாரங்களைத் தேடிக் கொடுத்தல், போர்க்குற்ற விசாரணையை உள்நாட்டு நீதிபதிகளையும், வெளிநாட்டு நீதிபதி களையும் உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றம் மூலம் மேற்கொள்ளல், குறைந்த பட்சம் நீதிமன்றத்தின் ஒவ்வொரு அமர்விலும் ஒரு வெளிநாட்டு நீதிபதியாவது பங்கெடுத்தல் (இது விடயத்தில் ஆரம்பத்தில் வெளிநாட்டு நீதிபதிகளையும் உள்ளடக்கியதாகத் தொடங்கிவிட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கை வந்தபின் வெளிநாட்டு நீதிபதிகளை விடுவிக்கலாம் எனவும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது.)

சிவில் விவகாரங்கள், பொருளாதார இராணுவச் செயற்பாடுகளிலிருந்து இராணுவத்தை முற்றாக நீக்குதல் படைகளில் ஆட்குறைப்புச் செய்தல் படையினருக்கான புனர்வாழ்வு போன்றன அடங்கியிருந்தன.

இதில் மிகவும் சர்ச்சைக்குள்ளான விடயம் கலப்பு நீதிமன்றமும் படையினர் விவகாரமும் தான். வெளிநாட்டு நீதிபதிகளை ஏற்றுக் கொள்ள முடியாது என ஜனாதிபதி, பிரதமர் என பலரும் தெளிவாகவே கூறியுள்ளனர். இந்தச் சிபார்சுகள் வெளிவந்ததும் சுகாதார அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன விசேட நீதிமன்றத்தில் ஒரு வெளிநாட்டு நீதிபதி கூட இருக்கமாட்டார். நிபுணத்துவ உதவிகளைப் பெறுவதற்காக சர்வதேச சட்டநிபுணர்களை மட்டும் அழைக்க முடியும் எனக் குறிப்பிட்டார். ஜனாதிபதியின் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான லக்ஷ்மன் யாப்பா அபேவர்தனா போர்க்குற்ற விசாரணைகளில் வெளிநாட்டு நீதிபதிகளுக்கு இடமில்லை என்றார்.

படையினர் விவகாரத்தைப் பொறுத்த வரை சிவில் விவகாரங்கள், மற்றும் பொருளாதார நிர்வாகச் செயற்பாடுகளி லிருந்து இராணுவத்தை முற்றாக நீக்குதல், இராணுவ மயநீக்கம் படைகளில் ஆட்குறைப்புச் செய்தல், படையினருக்கான புனர்வாழ்வு என்பன செயலணியின் சிபார்சுகளில் அடங்கியிருந்தன. இவற்றில் சிவில் நிர்வாகப்பணிகளில் இருந்து இராணுவத்தை நீக்குதல், இராணுவ மயநீக்கம் என்பன போர்முடிந்த காலத்திலிருந்து பேசப்பட்டு வரும் விடயங்கள்தான். ஐநா மனித உரிமையாளர் பணியகத்தினால் வெளியிடப்படும் அறிக்கைகளிலும் இவை கூறப்பட்டிருந்தன.

ஆனால் இராணுவத்தைப் பொறுத்தவரை இந்த நான்கு விடயங்களையும் ஏற்பதற்குத் தயாராக இல்லை. இவை அரசாங்க முறைமையில் இராணுவம் ஒரு அழுத்த சக்தியாக இருப்பதற்கு வாய்ப்புக்களை கொடுத்திருந்தன. அதனைக் குறைக்க இராணுவம் விரும்பவில்லை. போர் தொடங்கிய பின்னர் இராணுவமும் அரசியல் சக்தியாக எழுச்சியடைந்தது. யுத்த நிறுத்த ஒப்பந்தம், சமாதானப் பேச்சுவார்த்தை என்பவற்றில் இராணுவத்தின் சம்மதமில் லாமல் எதுவும் செய்யமுடியாத நிலை ஆட்சியாளர்களுக்கு இருந்தது. அரசு மேற்கொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை ஏற்பாடுகளில் பலவற்றை இராணுவம் நடைமுறைப்படுத்த முன்வரவில்லை. அரசும் அதற்கான அழுத்தத்தைக் கொடுக்கவில்லை. அல்லது கொடுக்க முடியாத நிலை இருந்தது.

இந்தச் செயலணி உருவாக்கப்பட்ட போது இராணுவ அதிகாரிகளையும் உள்ளடக்க வேண்டும் என்ற கோரிக்கையை பலாலி முகாமில் நடைபெற்ற கலந்துரையாடலில் மேஜர் ஜெனரல் சாஜி கல்லகே முன்வைத்திருந்தார். இது பற்றி வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுடனும் முரண்பட்டார். இதனால் அவர் உடனடியாகவே 51 ஆவது டிவிசன் தளபதிப் பதவியிலிருந்து தூக்கப்பட்டு காலாற்படைப் பிரிவு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். பொறுப்புக் கூறல் விடயத்திலும் சர்வதேசப் பங்களிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்ததுடன் எல்லா விடயங்களையும் எல்லா நிலைகளிலும் உள்ள படையினருடன் தகவல் கலைப் பரிமாறிக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையும் படைத்தரப்பில் விடப்பட்டது.

இந்த விடயங்களில் மிகவும் சர்ச்சைக்குரிய விடயம் இராணுவ ஆட்குறைப்பும், புனர்வாழ்வும்தான் இராணுவத்தின் எண்ணிக்கை அரசின் கொள்ளளவிற்கும் மேலானது. இரண்டு இலட்சத்து முப்பதினாயிரம் இராணுவத்தினர் உள்ளனர். விமானப்படையையும், கடற்படையையும் சேர்த்தால் இது மூன்று இலட்சத்திற்கு மேலானது. போர் இல்லாத நிலையில் இவ் எண்ணிக்கை தேவையற்றது. இராணுவத்திற்கான பணிகளும் குறைந்து விட்டது. இதனால்தான் பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளிலும் அரசு இராணுவத்தை இறக்கியுள்ளது. இது இராணுவத்தின் கௌரவத்தை குறைத்துள்ளதோடு வேறு பல பிரச்சினைகளையும் உருவாக்கியுள்ளது.

போரில்லா நிலையில் இலங்கைக்கு முப்பதினாயிரம் இராணுவம் தாராளமாக போதுமானது. போர் தொடங்கியபோது பதினைந்தாயிரம் இராணுவம் மட்டுமே இருந்தது. குறைந்தபட்ச பணிக்காலத்தையொட்டி அவர்களுக்கு ஓய்வு கொடுத்து அவர்களை சமூகத்துடன் இணைக்கும் திட்டங்களை அரசு வரைய வேண்டும் என செயலணி சிபார்சு செய்துள்ளது.

அடுத்தது புனர்வாழ்வு. இராணுவத்தினருக்கு புனர்வாழ்வு கொடுப்பது புலிகளின் தரத்திற்கு அவர்களை இறக்கி கொச்சைப்படுத்துகின்றது என்பது படையினரின் வாதம். முன்னாள் கடற்படை தலைமை அதிகாரி அட்மிரல் சரத் வீரசேகர இதற்காக கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்திருந்தார். ஆனால் இராணுவத்தினரும் மன அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளனர். அவர்களுக்கும் புனர்வாழ்வு தேவை என்பது செயலணியினரின் வாதம். உளச்சிகிச்சை மேற்கொள்ளப்படாவிட்டால் சமூகத்திற்கு அச்சுறுத்தலாக இருப்பர் எனவும் செயலணி வாதிடுகின்றது.

சிங்கள அரசியல் சக்திகள் என்போர் மூன்று பிரிவினர் சிங்கள மக்கள், பௌத்த நிறுவனங்கள், படையினர் இந்த மூன்று சக்திகளும் செயலணியின் சிபார்சுகளை அறவே விரும்பவில்லை. சுருக்கமாகக் கூறினால் சிங்களக் கூட்டுமனம் இவற்றை அறவே விரும்பவில்லை இந்நிலையில் சிபார்சுகள் நடைமுறைக்கு வரும் என்பதில் எவ்வித உத்தரவாதமும் கிடையாது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை சிபார்சுகளில் புதிதாக ஒன்றும் இல்லை. ஏற்கனவே பேசப்பட்ட விடயங்கள் தான் வந்திருக்கின்றன. வந்தவைகூட திருப்திகரமானது எனக் கூறமுடியாது. பொது மக்களின் காணிகளை விடுவித்தல், இராணுவ மயநீக்கம், காணாமல் போனோர் விவகாரம், போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வாழ்வாதாரங்களைத் தேடிக் கொடுத்தல் என்பன தமிழ் மக்களுக்கு நன்மை தரக்கூடியவைதான். ஆனால் இவற்றில் திட்டவட்டமான உறுதித்தன்மை கிடையாது. காணிகளை விடுவித்தல், இராணுவ மயநீக்கம், என்பன மட்டும் தமிழ் மக்களுக்கு போதுமானதல்ல. இராணுவம் தமிழ் பிரதேசங்களிலிருந்து அகற்றப்படல் வேண்டும். என்பதே தமிழ் மக்களின் கோரிக்கை. இராணுவம் தமிழ்ப் பிரதேசங்களில் நிலைத்திருப்பது சிங்கள பௌத்த அதிகாரத்தை தமிழ் மக்களின் மீது திணிப்பதற்கு சமனாகும். தற்போதுள்ள இராணுவம் பல்லின இராணுவமல்ல. மாறாக சிங்கள இராணுவமே. சிறீலங்கா அரசு என்பதும் பல்லின அரசல்ல. மாறாக அது சிங்கள மக்களுக்கு மட்டுமான சிங்கள அரசே!

இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு இலங்கை அரசு பல்லின அரசாக மாறியபின் தமிழ்ப்பிரதேசங்களில் தமிழ்ப்பிரதேச அடையாளங்களுடன் பல்லின இராணுவம் இருப்பதில் தமிழ் மக்களுக்கு ஆட்சேபனை கிடையாது. பலநாடுகளில் மாநில அடையாளமே மாநிலத்திலுள்ள இராணுவத்தினர் கொண்டிருக்கின்றனர். உண்மையில் இராணுவத்தினருக்கான

ஆட்சேர்ப்பு மாநிலங்களில் அந்த மாநில ஆட்களைக் கொண்டு நிரப்புவதே நல்லது. இதைவிட தனியார் காணிகளைக் கொடுத்துவிட்டு அரச காணிகள் என்ற பெயரில் தமிழ்ப்பிரதேசங்களில் குடியிருப்பதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.

இராணுவ எண்ணிக்கையைக் குறைத்தல், இராணுவத்தினருக்கான புனர்வாழ்வு என்பன சிங்கள தேசத்தின் பிரச்சினைகள். அதனை அவர்கள் தீர்த்துக் கொள்ளட்டும். பல்லின இராணுவமாக இருந்தால் தமிழ்த் தரப்பு கருத்துக்களைக் கூறலாம். சிங்கள இராணுவம் பற்றிய விவகாரங்களில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் எவ்வாறுதான் கருத்துக்களைக் கூறமுடியும்.

காணாமல் போனோர் விவகாரத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வேண்டும். பலர் இது விடயத்தில் கண் கண்ட சாட்சிகளாக உள்ளனர். சர்வதேச விசாரணை ஒன்றின் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும். இலங்கை நீதிமன்றங்களின் இலட்சணங்கள் ரவிராஜ் கொலை வழக்குத் தீர்ப்பிலும் குமாரபுரம் கொலை வழக்குத் தீர்ப்பிலும் நன்கு தெரிந்தவையே. போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைந்தவர்கள் பற்றி செயலணி எதனையும் குறிப்பிடவில்லை. இது செயலணியும் வேறு ஏதாவது நிகழ்ச்சி நிரலுக்குட்பட்டு செயற்படுகின்றதா? என்ற சந்தேகத்தை எழுப்புகின்றது.

போரினால் பரிக்கப்பட்டவர்களுக்கான வாழ்வாதாரங்களைத் தேடிக் கொடுத்தல் விடயத்தில் மேலோட்டமான சிபார்சுகள் போதுமானவையல்ல. என்ன திட்டத்தின் அடிப்படையில் எவ்வளவு காலத்திற்குள் மேற்கொள்ள வேண்டும் என்பதற்கான யோசனைகள் தேவை. போர்முடிவடைந்து ஏழு வருடங்களுக்கு மேலாகியும் இது விடயத்தில் பெரிய முன்னேற்றங்கள் எதுவுமில்லை. நல்லிணக்கம் பற்றி பேசுகின்ற அரசு இது விடயத்திலாவது தனது நேர்மையை வெளிப்படுத்தியிருக்க வேண்டும். போரினால் பாதிக்கப்பட்ட இராணுவத்தினருக்கு கிடைத்த சிறு வீதம் கூட போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு கிடைக்கவில்லை.

பொறுப்புக் கூறல் விடயத்தில் கலப்பு நீதிமன்றம் தமிழ் மக்களது கோரிக்கையல்ல. அது ஐ.நா மனித உரிமைகள் சபையின் தீர்மானமே. தமிழ் மக்கள் முழுமையான சர்வதேச விசாரணையே கோரிநின்றனர். அரசு குற்றம் செய்த தரப்பு. அதனை நீதி வழங்கும் விடயத்தில் எவ்வாறு பங்காளியாக்க முடியும்?

இங்கே ஒன்றை நாம் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும் இலங்கையில் நடைமுறையில் இருப்பது சிங்கள பௌத்த அரசு. அதனைச் செயற்படுத்துவது சிங்கள பௌத்த அரசாங்கம். இதனால் முழு அரசு இயந்திரமுமே சிங்கள பௌத்த மேலாதிக்க கருத்து நிலைக்கு உட்பட்டதாக உள்ளது. நீதிமன்றங்கள் இதற்கு விதிவிலக்கானதல்ல. ரவிராஜ் கொலை வழக்கு இதற்கு மிகப் பெரிய சான்று. இந்த நிலையில் கலப்பு நீதிமன்றத்திற்குரிய தகைமை இலங்கை நீதிமன்றங்களுக்குக் கிடையாது.

இதைவிட செயலணியின் சிபார்சு கலப்பு நீதிமன்றத்திற்குரியதல்ல. சம அளவில் சர்வதேச நீதிபதிகளையும், உள்நாட்டு நீதிபதிகளையும் கொண்ட நீதிமன்றத்தை கலப்பு நீதிமன்றம் எனக் கூறலாம். நீதிமன்ற இயங்கு விதிகளும் இரு தரப்பாலும் தயாரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும். இங்கே செயலணியின் சிபார்சில் ஒரு வெளிநாட்டு நீதிபதியாக இருக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. அங்கு அவர் பார்வையாளராக இருக்க முடியுமே தவிர பங்காளராக இருக்க முடியாது. அதனையும் படிப்படியாக நீக்கலாம் என்ற சிபார்சும் முன்வைக்கப்பட்டுள்ளது.

மொத்தத்தில் செயலணியின் சிபார்சுகள் தமிழ் மக்களின் அபிலாசைகளிலிருந்து வெகு தூரத்தில் உள்ளது என்றே கூற வேண்டும்.

செயலணியின் அறிக்கையைப் பொறுத்தவரை தற்போதுள்ள அரசாங்கத்தால் எதுவும் நடக்கப் போவதில்லை. அரசாங்கம் தற்போது மகிந்தர் அணிக்கு முகம் கொடுக்க முடியாமல் தற்காப்பு நிலைக்கே சென்றுள்ளது. மகிந்தர் அணியின் கை மேலோங்கி வருகின்றது. மகிந்தர் மிகச் சாதுரியமாக காய் நகர்த்தி மேல்நிலைக்கு வந்துள்ளார். அதனூடாக சிங்கள பொதுக்கருத்தை தமக்குச் சார்பாக திருப்பியுள்ளார். முன்னரே கூறியது போல சிங்களத்தரப்பின் மூன்று பெருஞ் சக்திகளான சிங்கள மக்கள், பௌத்த நிறுவனங்கள், இராணுவம் ஆகிய மூன்றும் மகிந்தருக்குப்பின்னாலேயே நிற்கின்றது. மகிந்தர் தனக்குச் சார்பான ஒவ்வொரு விடயத்தையும் மிகக் கவனமாக

அரசியலாக்குகின்றார். தனக்கான பாதுகாப்பு அரணையும் மிகக் கவனமாகக் கட்டி யெழுப்பியுள்ளார்.

தற்போது மகிந்தரையோ அல்லது அவரது குடும்பத்தினரையோ கைது செய்ய முடியாது. இதனால்தான் மகிந்தர் குடும்பத்தை விட்டு விட்டு விமல் வீரவன்சவைக் கைது செய்து அரசாங்கம் சிறையில் அடைத்துள்ளது. இது சுறாக்களை விட்டுவிட்டு சூடைகள் பிடிக்கின்ற செயல். இது பெரிய பயன்களைத் தரப்போவதில்லை.

தென்னிலங்கையில் இடம்பெற்ற கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களில் மகிந்தர் அணி வெற்றி பெற்றுள்ளது. இது அவர்களுக்கு வலுவான ஊக்கத்தைக் கொடுத்துள்ளது. மகிந்தர் அணியின் பலம் அதன் உள்ளூர்த் தலைவர்கள்தான். உள்ளூராட்சிசபைத் தேர்தல்கள் இடம்பெற்றால் மகிந்தர் அணி மேலும் பலமடையும். சீனாவின் அதிகரித்த பிரசன்னத்தால் இந்தியாவும் அதிருப்தி அடைந்துள்ளது. மகிந்தர் இந்தியாவின் உறவினை மேன்மைப்படுத்தும் முயற்சிகளிலும் இறங்கியுள்ளார்.

உள்ளூராட்சிசபைத் தேர்தல்களை மைத்திரி அரசினால் நீண்டகாலம் பின்தள்ளிப் போட முடியாது. இந்த வருட நடுப் பகுதிக்குள் நடாத்த வேண்டிய கட்டாய நிலை அரசிற்கு உண்டு. அந்தத் தேர்தல் நடைபெற்றால் மைத்திரி அரசின் வீழ்ச்சி மேலும் தீவிரமடையும். மைத்திரி அரசிற்கு பின்னால் நிற்கும் இந்தியா, அமெரிக்கா சக்திகளுக்கும் மைத்திரி அரசினைப் பாதுகாக்க முடியாத நிலை ஏற்படலாம். அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி ட்ரம்ப் இலங்கை விடயத்தில் ஒபாமாவைப் போல அக்கறை காட்டுவார் எனக் கூறமுடியாது.

இந்த நிலையில் செயலணியின் அறிக்கையை மைத்திரி ரணில் அரசாங்கம் ஏறெடுத்தும் பார்க்காது. ஆனால் அமெரிக்கா, மேற்குலக சக்திகள் மகிந்தரைக் கட்டுப் படுத்துவதற்கு இந்த அறிக்கையையும் கருவியாகப் பயன்படுத்தலாம். இந்த வல்லரசுகள் ஜெனீவாக் களத்தை மூடி விடாமல் பாதுகாப்பதும், கலப்பு நீதிமன்ற முறையை தீர்மானமாக எடுத்ததும் மகிந்தர் ஆட்சிக்கு வந்தால் அவரைக் கட்டுப் படுத்துவதற்காகத்தான். ஆனால் மகிந்தர் ஆட்சிக்கு வரும் வரை அமெரிக்க, மேற்குலக சக்திகளும் இந்த அறிக்கையை கணக்கெடுக்கப்போவதில்லை. வேண்டு மானால் அடுத்த மாதம் தொடங்க இருக்கும் ஜெனீவாக்களத்தில் அறிக்கைக்காக இலங்கைக்கு நற்சான்றிதழ் கொடுக்க முன்வரலாம்.

தமிழ் மக்களுக்கு அரசியல் பரப்பில் இந்த அறிக்கை அதிகம் உதவலாம். சர்வதேச மட்டத்தின் தமிழ் மக்களின் நியாயப்பாடுகளைக் கொண்டு செல்வதற்கு இது பெரிதும் உதவக்கூடியதாக இருக்கும். இந்த குறைந்த பட்ச சிபார்சுகளைக் கூட நடைமுறைப்படுத்த முடியாத சிறீலங்கா அரசோடு எப்படி சேர்ந்து வாழ முடியும் என்ற நியாயத்தை சர்வதேச மட்டத்தில் எழுப்பமுடியும். குறிப்பாக சர்வதேச சிவில் சமூகத்தின் மனச்சாட்சியை பலமாகக் தட்டியெழுப்ப முடியும். சர்வதேசப் பாதுகாப்புடன் கூடிய இடைக்கால தீர்வு நோக்கியும் மெதுவாக நகரமுடியும்.

இது முழுக்க முழுக்க தமிழ்த் தரப்பின் சர்வதேசப் பரப்புரையுடன் தொடர்புடையது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வல்லரசுகளின் கைதியாக இருப்பதினால் இவற்றை தற்போதைக்குச் செய்யப் போவதில்லை. சிவில் நிறுவனங்கள்தான் அதிக அக்கறை செலுத்த வேண்டும். தமிழ் மக்கள் பேரவை இது விடயத்தில் கூடிய அக்கறை கொள்வது நல்லது. புலம்பெயர் மக்களுக்கும், தமிழக மக்களுக்கும் இது விடயத்தில் பாரிய பொறுப்பு உண்டு. ஆனால் தளத்தில் ஒரு வலிமையான அரசியல் இயக்கம் இல்லாமல் புலத்திலும், தமிழகத்திலும் பெரிய செயற்பாடுகளை எதிர்பார்க்க முடியாது.

மொத்தத்தில் பலமாக சிந்திக்க வேண்டிய தருணம் இது.

# மலையகத்தவர்களை சிங்களவர்களாக மாறக் கோரிய நேரு - கோத்தலாவல ஒப்பந்தம்?

**- என்.சரவணன், நோர்வே**

மலையகத் தமிழர்களுக்கு எதிராக இரு நாடுகள் சேர்ந்து மேற்கொண்ட ஒப்பந்தங்களில் நேரு கொத்தலாவல ஒப்பந்தத்தின் பாத்திரத்தையும் சற்று நோக்க வேண்டியிருக்கிறது. தமிழர்களின் பிரதிநிதித்துவம் சிங்களவர்களின் பெரும்பான்மை பலத்தை பலவீனப்படுத்திவிடும் என்று அச்சமுற்றனர். தமது ஏகபோக அரசியல் அதிகாரத்தை ஆட்டுவித்துவிடும் என்று பயந்தனர்.



திட்டமிட்ட குடியேற்றங்களுக்கூடாக செயற்கையாக வாக்காளர்களின் சமநிலையை மாற்றியமைத்ததோடு மட்டும் நிற்கவில்லை மலையகத் தமிழர்களின் பிரஜாவுரிமை பறிப்பு, நாடுகடத்தல் சிவில் உரிமைகளை பலவீனப்படுத்தல் என தொடர்ந்தனர்.

## மலையகத்தவர் மீது முதல் பாய்ச்சல்.

முதலாம் உலகப் போரைத் தொடர்ந்து இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து வேலைவாய்ப்பு பிரச்சினையும் தோன்றியது. ஏ.ஈ.குணசிங்க, அநகாரிக்க தர்மபால போன்றோர் இந்தியர்களின் வருகையை தடுத்து நிறுத்த வேண்டும் என்றார்கள். "இந்நிலை நீடித்தால் தேவைக்கு அதிகமான இந்தியர்கள் நாட்டில் காணப்படுவார்கள்" டீ.எஸ்.சேனநாயக்க இலங்கை தேசிய காங்கிரசின் தலைமை உரையில் கூறினார்.

வேலையில்லாத் திண்டாட்டத்துக்குக் காரணம் இந்தியத் தொழிலாளர்களே என்று கருதிய சிங்களவர்கள் 1930களில் இந்தியர்களில் குடிவரவைத் தடை செய்ய வேண்டும் என்கிற சுலோகத்தை உயர்த்திப் பிடிக்கத் தொடங்கினர்.

அது பெருந்தோட்டத் துறையினை வீழ்த்தி, பொருளாதார நிலைமையை மேலும் மோசமாக்கிவிடும் என்று பிரதம செயலாளரும் அறிவித்தார். இந்த நிலைமையை ஆராய்வதற்காக நிமிக்கப்பட்ட ஜெக்சன் குழு தனது அறிக்கையில் இந்தியர்களின் வருகையால் இலங்கையர்களின் பொருளாதரத்துக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்றது மட்டுமன்றி புதிய கட்டுப்பாடுகள் எதுவும் தேவையில்லை என்றும் அறிக்கை வெளியிட்டார்.

அப்போது வியாபாரத்துறையில் பெருமளவு இந்தியர்கள் ஈடுபட்டிருந்தார்கள். இந்த தோட்டத்துறை சாராத இந்தியர்களின் மீதான வெறுப்புணர்ச்சி சாதாரண இந்திய வம்சாவளியினர் மீது திரும்பியது. 1930களில் இந்தியர்கள் அதிகம் இருந்த துறைகளில் இலங்கையர்மயமாக்கும் வேலைகள் ஆரம்பித்தன. இலங்கையர்கள் கிடைக்கும் பட்சத்தில் இலங்கையர் அல்லாதவர்கள் சேவையில் அமர்த்தப்படக் கூடாது என்று பிரதம செயலாளர் ஆணையிட்டார். அரசாங்க சேவையில் இந்தியத் தொழிலாளர்களின் தொகை வீழ்ச்சியுற்றது. 1939இலிருந்து இந்தியத் தொழிலாளர்கள் பலர் இருந்த வேலையிலும் இருந்தும் நீக்கப்பட்டனர்.

இன்னும் வேறு பல திட்டங்களின் மூலம் மேலும் வீழ்ச்சியுற்றது. இந்த கட்டாய விலக்கல் பற்றிப் பேச்சு வார்த்தை நடத்தத் தான் நேரு இலங்கை வந்தார். பல அமைச்சர்களைச் சந்தித்து உரையாடினார். அந்த பேச்சு வார்த்தை தோல்வியில் முடிந்தது.

உலக தொழிலாளர் அமைப்பின் (ILO) விதிமுறைகளுக்கு முரணாக இனப் பாரபட்சம் காட்டப்படுகிறது என்று சாடினார்.

இந்திய வம்சாவளியினரின் தலைவர்களுக்கு நேருவின் இந்தத் தோல்வியால் துவண்டு போனார்கள். ஆனால் நேரு இதனை வேறு வழியில் ஆலோசனை வழங்கினார். நேருவின் வழிகாட்டலின் பேரில் கொழும்பு, டீ பொன்சேகா பிளேசில் ஜூலை 25ஆம் திகதி இலங்கை-இந்திய காங்கிரஸ் உதயமானது. அப்போது சாத்வீக ரீதியில் தொழிற்பட்ட பரத சேவா சங்கம், நாடார் மகாஜன சங்கம், பாண்டிய வெள்ளாளர் சங்கம், ஹரிஜன சேவா சங்கம்போன்ற சங்கங்கள் அனைத்தும் ஒரே குடையின் கீழ் வந்தன.

இலங்கையர் அல்லாதவர்களுக்கு நிலங்கள் வாங்குவது 1935இல் நில அபிவிருத்திச் சட்டத்தின் மூலம் தடை செய்யப்பட்டது. இலங்கையர்களுக்கு முன்னுரிமை என்கிற நடைமுறை சகல அரச இயந்திரத்திலும் வியாபித்தது. இதன் காரணமாக பயிற்சியற்ற தொழிலாளர்களை குடியகல்வதை இந்தியாவும் தடை செய்யத் தொடங்கியது.

இன்னொன்றையும் குறிப்பிடவேண்டும். இந்தியர்களின் உழைப்பு என்பது பிரித்தானிய ஏகாதிபத்திய நலன்களுக்குப் பயன்பட்டனவேயன்றி இந்நாட்டிற்கு அதிகம் பயன்படவில்லை என்கிற இலங்கை தரப்பு வாதமொன்றும் வலுத்தது.

"இந்தியத் தொழிலாளர்கள் தற்காலிகமாக வேலை பெறும் நோக்கத்துடனேயே இலங்கையில் பெருந்தோட்டங்களுக்குச் சென்றனர் என்று கூறப்படுவது வரலாற்றின் உண்மைகளுக்கு முற்றாகவே முரணானது என்று சுட்டிக்காட்டவில்லையாயின் நான் எனது கடமையிலிருந்து தவறியவனாவேன்" என்று நேரு சேனநாயக்கவுக்கு எழுதினார்.

"உள்ளூர் மக்களுக்குரிய அத்தனை உரிமைகளும் அவர்களுக்கும் வழங்கப்படும் என்று" அவர்களுக்கு வழங்கப்பட்ட "தகவல் திரட்டில் அதற்கு முன்னர் இருந்தது. அது முற்றிலும் மீறப்பட்டது. எனவே இந்தியாவில் பீ.எஸ்.சர்மா இது குறித்த சட்டமொன்றை சபையில் சமர்ப்பித்து உரையாற்றும் போது,

"உள்ளூர் மக்களுக்கு உரிய அதே அந்தஸ்து இந்தியர்களுக்கு வழங்குவதாக சட்ட ரீதியில் உத்தரவாதம் வழங்காதவரை இனி குடியகல்வு பற்றிச் சிந்திப்பதற்கில்லை" என்றார்.

## இந்தியாவுக்கு இலங்கையின் வாக்குறுதி

இந்த கொள்கையின் காரணமாக இலங்கை அரசாங்கம் இது குறித்து பேச்சுவார்த்தை மேற்கொள்ள தூதுக்குழுவொன்றை அனுப்பியது. அவர்கள் முழுமையான சமத்துவத்துடன் நடத்தப்படுவார்கள் என்கிற உத்தரவாதம் இலங்கை தரப்பில் வழங்கப்பட்டது. அதன் பேரிலேயே மீண்டும் குடியகன்று செல்ல இந்தியா அனுமதித்தது.

1922இல் குடியேற்ற நாட்டுச் செயலாளர் இந்திய அரசாங்க செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தில் அவர்களுக்கு வாக்குரிமையும் உண்டென்றும், தேவைப் பட்டால் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டு உள்ளூராட்சி சபைகளில் உறுப்பினர்களாகவும் ஆகும் உரிமை பெற்றிருக்கிறார்கள் என்றார். ஆனால் 1930களில் இந்திய வம்சாவளியினரின் அரசியல், குடியுரிமைகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளின் மூலம் முன்னைய வாக்குறுதிகள் அலட்சியம் செய்யப்பட்டன.

இங்கிலாந்து மேற்கொண்ட அரசியலமைப்பு சீர்திருத்தங்களின் போதெல்லாம் இந்தியர்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அவர்களுக்கு எந்த பிரதிநிதித்துவமும் இல்லாத நிலையில் இவர்களின் பிரச்சினைகளை முன்வைப்பதற்கு எனையோரிலேயே தங்கியிருக்க வேண்டியிருந்தது. அப்போது அரை மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்டிருந்த இவர்களுக்கு 1923 சீர்திருத்தத்தின் போது தான் இந்தியர் சமூகத்தின் பிரதிநிதிகளாக இருவர் தேசாதிபதியால் நியமிக்கப்பட்டனர்.

1931 டொனமூர் திட்டத்துடன் இந்த நிலைமை மாறியது. அதுவரை ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக சுதேச உறுப்பினர்களையும் கொண்டிருந்த சட்ட

சட்டசபையில் சுதேசிகள் ஆட்சியதிகாரமற்று விளங்கியதால் இந்தியர்களுக்கு பிரதிநிதித்துவம் இல்லாத போதும் பாதிக்கப்படவில்லை. எப்போது சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டு சுதேசிகள் போதியளவு பிரதிநிதித்துவம் பெறத் தொடங்கினார்களோ அப்போதிருந்து இந்திய வம்சாவளியினருக்கு அநியாயம் தொடங்கியது. டொனமூர் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட வாக்குரிமையின் விளைவாக இந்தியா வம்சவளியினரும் தேர்தலில் போட்டியிட்டு அப்போது நிரந்தரமாக வசித்து வந்த 7 லட்சம் இந்திய வம்சாவளியினர் தமக்கான பிரதிநிதித்துவத்தை பெற்றுக் கொண்டது தான் புதிய சுதேசிய மேட்டுக்குடி அரசியல் குழாமினருக்கு வெறுப்புணர்ச்சியை ஏற்படுத்தியது.

டொனமூர் திட்டம் பற்றிய சட்டசபை விவாதத்தில் இந்தியர்களுக்கு வாக்குரிமை வழங்கப்படக்கூடாது என்று சிங்களத் தலைவர்கள் பலர் கடுமையாக வாதிட் டனர். இறுதியில் இந்திய வம்சாவளியினர் வாக்குரிமை பெறுவதற்கென்று சில மேலதிக தகுதிகள் கட்டாயமாக்கப்பட்டன. சட்டபூர்வ மான நிரந்தரக் குடியுரிமைச் சான்றிதழ், எழுத்தறிவு, சொத்து, வருமானத் தகுதி என நிபந்தனைகள் விதிக்கப்பட்டதில் ஏறத்தாழ ஒரு லட்சம் இந்தியர்கள் மாத்திரமே வாக்குரிமைக்கு தகுதி பெற்றனர். இந்த சிங்களத் தலைவர்களுடன் சமரசம் செய்து தான் அந்த வாக்குரிமை கிடைத்தது.

1939இல் ஏழு லட்சம் இந்தியர்களில் 225,000 பேர் வாக்குரிமைக்கு தகுதி பெற்றனர். இந்த வளர்ச்சியை கட்டுப்படுத்த சிங்களத் தலைவர்கள் முயன்றனர். 1940 களில் வாக்காளர்களாகப் பதிவு செய்வதில் மேற்கொண்ட கடுமையான விதிமுறைகள் காரணமாக 1943 இல் வாக்காளர்கள் எண்ணிக்கை 168,000 ஆகக் குறைந்தது. ஐம்பது உறுப்பினர்களில் மூவரே இந்திய பிரதிநிதிகளாக இருந்தனர்!

1940இல் டில்லியில் நடந்த இலங்கை இந்திய உறவுகள் மாநாட்டின் போதும் "இந்திய வம்சாவளியினர் நிரந்தரக் குடிகள் இல்லையென்று இலங்கைத் தலைவர்கள் வாதிட்டனர். இருதரப்பிலும் இந்த விடயத்தில் முரண்பட்டுக்கொண்டனர்.

1947 சோல்பரித் திட்டத்தின் மூலம் நிலைமை சற்று சீரானது என்றாலும் இந்தியர்கள் அதிகமாக வாழ்ந்த பகுதிகளில் இடதுசாரி வேட்பாளர்களே வெற்றி பெற்றனர்,

இந்த பிரச்சினையில் நேரு முக்கிய பாதிரமாற்றினார். 1947இல் இலங்கை - இந்திய பிரதமர்களான டீ. எஸ். சேனநாயக் காவும், நேருவும் டில்லியில் பேச்சுவார்த்தை நடத்தி ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். ஆனாலும் இந்த ஒப்பந்தத்திற்கான வரை விலக்கணத்தை இரு தலைவர்களும் முரணாகவே வெளியிட்டு வந்தார்கள்.

இலங்கைக்கு சுந்ததிரம் கிடைத்ததும் டீ.எஸ்.சேனநாயக்க முதலில் செய்த வேலை இந்திய வம்சாவளியினரின் குடியுரிமையை பறித்தது தான். 1952இலிருந்து 1977 வரை இந்தியர்கள் ஒருவரும் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்ய முடியவில்லை.

அடுத்த 6 ஆண்டுகளுக்குள் நாடு கடத்தும் "நேரு- கொத்தலாவல" ஒப்பந்தத்தை இந்தியாவுடன் செய்து கொண்டது. அடுத்த பத்தே ஆண்டுகளுக்குள் அதனை நாடுகடத்தும் நடைமுறையை தீவிரப்படுத்தும் சிறிமா சாஸ்திரி ஒப்பந்தமும் 1964 அக்டோபர் 30ஆம் திகதி கொண்டுவரப்பட்டது.

### ஒப்பந்தம்

30.10.1953 அன்று இந்தியப் பிரதமர் நேருவிடமிருந்து ஒரு அழைப்பு வந்தது. இந்திய-இலங்கைப் பிரச்சினைகள் குறித்து உரையாடுவதற்கான அழைப்பு அது. அதன்படி 1954 ஜனவரி சந்திக்கலாம் என்று முடிவானது.

இது குறித்து கொத்தலாவல தனது சுயசரிதையில் (1956) இப்படி எழுதுகிறார்.

"துரதிர்டவசமாக அந்நிய முதலாளிகள் எங்கள் செலவிலேயே பெருமளவு நிலங் களைக் கொண்டு பொருளீட்டியுள்ளனர். எங்கள் அனுமதியின்றி இந்திய தொழி லாளர்களை இறக்குமதி செய்திருக்கின்றனர்.

இலங்கையிலிருக்கும் 9 லட்சம் இந்திய பிரஜைகளை குறைக்காவிட்டால் எங்கள் மக்கள் பிச்சையெடுப்பதிலிருந்தும், இலங்கையர் என்கிற அடையாளத்தை இழப்பதிலிருந்தும் மீட்க முடியாத அபாயம் இருக்கிறது.

இந்தியத் தொழிலாளர்களை நாடு கடத்தவேண்டும் என்று அன்றைய அரசாங்க

சபையின் தலைவர் சேர் பாரொன் ஜெயதிலக்கவுடன் உரையாடினேன். அவர் அதனைக் கண்டுகொள்ளவில்லை. பின்னர் திறைசேரிக்குப் பொறுப்பான பிரிட்டிஷ் அதிகாரியான எச்.ஜே.ஹக்ஸ்ஹம் (H. J.Huxham) என்னுடைய திட்டத்துக்கு ஆதரவளித்தார். 14 வருடகாலமாக சாத்தியமாகாத எனது திட்டத்தை நான் பிரதமாரானதும் நேரு - கொத்தலாவல ஒப்பந்தத்தின் மூலம் நிறைவேற்றிக் கொண்டேன்."

இந்த ஒப்பந்தத்தை செய்து கொள்வதற்கான குழுவில் முன்னாள் பிரதமர் டட்லி சேனநாயக்காவும், எதிர்க்கட்சித் தலைவராக இருந்த எஸ். டபிள்யு. ஆர். டீ. பண்டாரநாயக்கவும் இருந்தார்கள்.

நேரு - கொத்தலவாலா ஒப்பந்தத்தின்படி, மலையக தமிழ் மக்களுக்கு பிரஜா உரிமை வழங்க இலங்கை அரசு எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை என்பது மட்டுமல்லாது, நேரு காலமான பின்பு, இந்திய வம்சாவளியினரை இந்தியாவிற்கு திருப்பி அனுப்புவதிலேயே இலங்கை கவனமாக இருந்தது.

## சிங்களவர்களாக மாற வேண்டும்?

நேரு-கொத்தலாவல ஒப்பந்தத்தின் பிரகாரம் மலையகத் தமிழர்கள் சிங்களம் கற்று சிங்களவர்களோடு ஒன்று கலந்திட வேண்டும் என்று ஒரு ஏற்பாடு இருந்ததாக இன்றும் பல சிங்கள தேசியவாதிகள் எழுதியும், பேசியும் வருகிறார்கள். இது பற்றி பலர் கட்டுரைகளையும், நூல்களையும் சிங்களத்தில் வெளியிட்டுள்ளனர். அவர்களில் ஹரிச்சந்திர விஜேதுங்க முக்கியமானவர்.

அவர் எழுதிய நூல்களில் ஒன்று "நேரு - கொத்தலாவல ஒப்பந்தத்தை அமுல்செய்" (1993) என்கிற நூல். இந்த நூல் அடிப்படையில் இந்திய வம்சாவளி மக்களுக்கு எதிராக எழுத்தப்பட்ட வன்மம் நிறைந்த நூல். பல ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியர்களை விரட்டும் கருத்தை மீள அரசியல் தளத்தில் பேசுபோருளாக்கியவர்.

நூல்களை எழுதிய ஒருவர். "சிங்கலேயே மகா சம்மத்த பூமி புத்திர பக்சய" (சிங்கள மண்ணின் மைந்தர் கட்சி) என்கிற கட்சியை 1994 இல் ஆரம்பித்து இன்று வரை அதன் தலைவராக இருந்து வருபவர். 1977 ஆம் ஆண்டு கலவரம் பற்றி ஆராய்ந்த சன்சோனி கொமிஷன் முன்னாள் தமிழர்களுக்கு எதிரான சாட்சிகள் வழங்கியவர். அநகாரிக தர்மபாலவால் தொடக்கப்பட்ட "சிங்கள பௌத்தையா" பத்திரிகைக்கு 1980 களில் பிரதம ஆசிரியராக இருந்தவர். ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட்டவர்.

இதே கருத்தை மேலும் பலர் இன்னமும் எடுத்துச் செல்கின்றனர். ஆனால் ஒப்பந்தத்தில் அப்படி ஒரு ஏற்பாடும் இல்லை என்பது தான் உண்மை.

நேருவும் இலங்கையும் (Nehru and Sri Lanka) என்று 2002 இல் வெளியான ஒரு நூலில் இலங்கையுடன் அவர் மேற்கொண்ட



பெரும்பாலான ஆவணங்களும் தொகுக்கப்பட்டுள்ளன. அதில் நேரு-கொத்தலாவல ஒப்பந்தம் மட்டுமன்றி அதனோடு சம்பந்தப்பட்ட இன்னும் பல கடிதங்களும், இந்திய அரசாங்க அறிக்கைகளும் உள்ளடங்கி யுள்ளன. அதில் எங்கும் இப்படி ஒரு ஏற்பாடுபற்றி குறிப்பிடப்படவில்லை.

மலையகத் தமிழர்கள் தமது நிலங்களையும், தொழில் வாய்ப்புகளையும் பரித்துக் கொண்டார்கள் என்கிற புனைவையும் ஐதீகத்தையும் தொடர்ச்சியாக பரப்பி வந்ததில் இன்று வரை அவர்களுக்கு எதிரான பாரபட்சமும் வெறுப்புணர்ச்சியும் பல்வேறு வடிவங்களில் நீடிக்கவே செய்கிறது.

## நேரு-கொத்தலாவல ஒப்பந்தம் - 1954

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்

உள்ளடக்கங்கள் புதுடில்லியில் வெளியிடப்பட்டது (பெப்ரவரி 3, 1954)

இந்தியர்களின் சட்டவிரோத குடியேற்றம் மற்றும் சிலோனில் உள்ள இந்திய வம்சாவளியினருக்கான பிரஜாவுரிமை தொடர்பிலான சில முன்மொழிவுகள் ஆவணமாக்கப்பட்டு, புதுடில்லியில் ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து நான்காம் ஆண்டு ஜனவரி பதினெட்டாம் நாள் இந்திய அரசாங்கம் மற்றும் சிலோன் அரசாங்கத்தின் பிரதிநிதிகளான மதிப்புக் குரிய இராஜ தந்திரிகளால் புதுடில்லியில் கைச்சாத்திடப்பட்டு நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக முறையாக அங்கீகரிக்கப்பட்டது. அந்த ஆவணம் வார்த்தைக்கு வார்த்தை வருமாறு

சிலோன் மற்றும் இந்திய பிரதம மந்திரிகள், அவர்களின் சகபாடிகள் சிலர் புதுடில்லி மாநாட்டி ஜனவரி 16, 17 மற்றும் 18 1954ல் சந்தித்து, சிலோனில் வசிக்கும் இந்திய வம்சாவளி மக்களின் முழுமையான பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்தினர். இச்சந்திப்பின் பிரதிபலனாக குறிப்பிட்ட சில முன்மொழிவுகள் அவர்களால் கட்டமைக் கப்பட்டன, அவை தற்பொழுது அந்தந்த நாட்டு அரசாங்கங்கள் முன்னால் வைக்கப்பட்டுள்ளன.

இந்த முன்மொழிவுகளாவன :

## சட்டவிரோத குடியேற்றம்

1. இரு நாடுகளுக்கும் இடையில் நடைபெறும் சட்டவிரோத குடியேற்ற வியாபாரத்தை ஒடுக்கவேண்டும் என்பதில் இரு அரசாங்கங்களும் உறுதியாக காணப்பட்டதுடன், இது முடிவுக்கு வரும்வரை ஒருவருக்கு ஒருவர் நெருக்கமான ஒத்துழைப்புடன், இதற்காக சாத்தியமான சகல நடவடிக்கைகளையும் எடுக்கும். பாக்கு நீரிணையின் எதாவதுதொரு பக்கத்தில் உயர்மட்ட பொலிஸ் அதிகாரிகளுக்கிடையில் குறித்தகால இடைவெளியில் சந்திப் பொன்றை நடத்தி, சட்டவிரோத நடமாட்டங்கள் குறித்த தகவல்களை பரிமாறிக்கொள்ளல்.

2 தேர்தல் இடாப்பில் ஏற்கனவே பதிவுசெய்யப்படாத வயதுவந்த குடியிருப்பவர்களைப் பதிவுசெய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதாக சிலோன் அரசாங்கம் முன்மொழிந்துள்ளதுடன், அந்தப் பதிவுகள் இன்றுவரை பேணப்படும். பதிவுகள் பூரத்திசெய்யப்படும்போது யாராவது ஒரு நபர் அதில் பதிவுசெய்யப்படவில்லையாயின், அவருடைய தாய்மொழி இந்திய மொழியாக இருக்கும்பட்சத்தில், இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக குடியேறியவர் எனக் கருதப்பட்டு, நாடு கடத்தலுக்கு உட்படுத்தப்படுவார். அவ்வாறான நாடுகடத்தலை நடை முறைப்படுத்தவதற்கான சகல வசதிகளையும் இந்திய உயர்ஸ்தானிகர் ஏற்படுத்திக் கொடுப்பார்.

3 சிலோன் அரசாங்கம் குடிவரவு குடியகல்வுத் திருத்தச்சட்டதை தொடர்ந்து ஒருவர் மீது குற்றச்சாட்டை சுமத்தும்போது, அவர் ஒரு சட்டவிரோத குடியேற்றவாசி இல்லை யென ஆதாரச்சுமை இருந்தால், அத்தகைய வழக்கு விசாரணையின் முதல் தோற்றத்திலேயே இந்திய உயர்ஸ்தானிகர் தன்னை திருப்திப் படுத்திக் கொள்வதற்கு சிலோன் அரசாங்கமானது சந்தர்ப்பமொன்றை வழங்கவேண்டும், இறுதி முடிவானது இலங்கை அரசாங்கத்திலேயே தங்கியிருக்கும்.

## பிரஜாவுரிமை

4 இந்திய பாகிஸ்தான் (பிரஜாவுரிமை) சட்டத்தின் கீழ் பிரஜாவுரிமைக்காக பதிவுசெய்வது துரிதப்படுத்தப்படும், நிலுவையிலுள்ள விண்ணப்பங்களை இரண்டு வருடங்களுக்குள் முடிப்பதற்கு சகல முயற்சிகளும் எடுக்கப்படும்.

5 குறிப்பாக பெரும்பாலான பிரஜைகள் அவர்கள் வசிக்கும் பகுதிக்குரிய மொழியை பேசமுடியாதவர்கள் என்ற பார்வையில், இந்த சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட அனைவரும் சிலோன் அரசாங்கத்தினால் தனியான வாக்காளர் இடாப்பில் பதியப்படலாம். இந்த ஏற்பாடு 10 வருடங்களுக்கு மாத்திரமே நீடிக்கும். சில தொகுதி களில் பதிவுசெய்யப்பட்ட பிரஜாவுரிமையுடைய வாக்காளர்களின் எண்ணிக்கை 250ற்கு மேற்படாது காணப்பட்டால் அவர்களை தேசிய

பதிவில் சேர்க்க முடியும் என சிலோன் அரசாங்கம் இணங்கியது.

6 தனியான வாக்காளர் இடாப்பில் பெயர்களைக் கொண்டுள்ள பிரஜைகள், பிரதிநிதிகள் சபைக்கு குறிப்பிட்ட உறுப்பினர்களை தேர்வுசெய்வதற்கு உரித்துடையவர்கள், இந்திய பிரதம மந்திரியுடன் கலந்துரையாடிய பின்னர் அந்த எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். சிலோன் அரசாங்கம் இந்த அம்சம் தொடர்பான நடவடிக்கைகளை தற்போதைய பாராளுமன்றம் 1957ல் கலைக்கப்படுவதற்கு முன்னர் பூர்த்திசெய்ய எதிர்பார்த்துள்ளது.

7 பதிவுசெய்யப்படாத நபர்கள் சம்பந்தமாக, அவர்கள் தம்மை இந்தியப் பிரஜைகளாக பதிவுசெய்வதற்கு முடியும், அவர்கள் அதனை தெரிவுசெய்யும் பட்சத்தில், இந்திய அரசியலமைப்பின் 8வது பிரிவிலுள்ள ஏற்பாட்டின் கீழ் இந்திய உயர்ஸ்தானிகர் அலுவகத்தில் மேற்கொள்ளலாம். அவ்வாறான பதிவுகளை ஊக்குவிக்க விசேட ஊக்குவிப்புக்களை முன்மொழிவதாக சிலோன் குறிப்பிட்டதுடன், இந்த ஊக்குவிப்புக்கள் அவ்வப்போது அறிவிக்கப்படும், இந்திய அரசியலமைப்பின் கீழ் தம்மை இந்திய பிரஜையாக பதிவுசெய்த சகல இந்திய வம்சாவளியினருக்கும் இந்திய அரசாங்கம் நிர்வாக மற்றும் அதற்கு ஒத்த வசதிகளை வழங்கும். அவர்கள் தெரிவுசெய்தால், அவ்வாறு கிடைக்கக்கூடிய வசதிகள் பற்றிய பிரசாரம் வழங்கப்படும்.

8 தமது பரஸ்பர நன்மைகளை பாதிக்கும் விடயங்களில் இரு நாட்டு அரசாங்கங்களும் தற்போதைய நெருக்கமான கலந்துரையாடல் நடைமுறையை தொடர்வதற்கு இருநாட்டு பிரதம மந்திரிகளும் ஆவலாய் இருக்கின்றனர்.

வரலாற்றின் வழித்தடத்தை தேடுவதில் நாகரீகம் நீண்ட நெடிய பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. அல்ஜீரிய விடுதலை பற்றி பேசும் பிரான்ஸிஸ் பெனான் பெல்ஜியக் காலணித்துவத்துக்கெதிரான போராட்டத்தில் சூனியச் சடங்குகளைக் கூட ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தியுள்ளமையை சுட்டிக்காட்டுகின்றார்.

மனிதகுல வரலாற்றை முன்னிறுத்துவதில் தொன்மங்களை துணைக்கழைப்பது முதல், தொல்லியல், மொழியியல், உயிரியல், உடற்கூற்று இரசாயனவியல், மானிடவியல், கல்வெட்டியல், புதைபொருளியல் என பல் வகைப்பட்ட அணுகுமுறைகள் தனியாகவும் கூட்டாகவும் பயன்படுத்தப்படுகின்றது.

வரலாற்றை பலவாறு வகைப்படுத்த முடியும். புலப்பெயர்வுக்கு முற்பட்ட கட்டம், புலப்பெயர்வின் ஆரம்ப கட்டம், பெருந்தோட்ட உற்பத்தி முறையின் ஆரம்ப கட்டம், வணிக வளர்ச்சிக் கட்டமெனவும் வகைப்படுத்தலாம். இன்னொரு வகையில் கோப்பிக்காலம், தேயிலை காலம், தற்காலம் எனவும் வகைப்படுத்தலாம். சுதந்திரத்திற்கு முற்பட்ட காலம், சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலம் எனவும் வகைப்படுத்தலாம். தோட்டப் பாடசாலைகளை அரசு பொறுப்பேற்பதற்கு முற்பட்ட கட்டம், பிற்பட்ட கட்டம் எனவும் வகைப்படுத்த முடியும். இன்னொரு வகைபாடாக சீடா அபிவிருத்தி திட்டத்திற்கு முற்பட்ட காலம், பிற்பட்ட காலம் எனவும் வகைப்படுத்த முடியும்.

அதற்கப்பால் சென்று மலையக தமிழரின்





# கெர்கஸ்வோல்ட் இல 2 தமிழ் வித்தியாலயத்தின் வரலாற்றின் வழித்தடம் தேடி

## சில பதிவுகள்

பொன். பிரபாகரன்

இலங்கை வரலாற்றை வரலாற்றியலாளர்கள் விஜயனின் வருகைகுட் பட்டதென வரையறுத்த நிலையை மாற்றி 2500 ஆண்டு களுக்கு முற்பட்டதாக வரலாற்றை பின்னகர்த்தியுள்ளது. மொகஞ்சதாரோ ஹரப்பாவை மையப்படுத்திய சிந்து நதிக்கரை நாகரீகம் 8000 ஆண்டுகளுக்கு பின்நகர்த்தப்பட்டுள்ளது.

எதிர்மறையாக மலையகத்து தமிழ் பள்ளிக்கூடங்களின் வரலாற்றை எழுதுவதில் ஆராய்வதில் பாரிய குளறுபடிகள் நிலவு கின்றன. எமது கல்வியியல், கல்விப் பீடங்கள், ஆராய்ச்சித் துறைகள், சமூக விஞ்ஞான கற்கைத் துறையின் இலட்ச ணத்தை அம்பலப்படுத்தும் குறிகாட்டிகளில் ஒன்றாக மலையக பாடசாலைகளின் வரலாற்றைக் குறிப்பிடலாம்.

மலையக தமிழ் பாடசாலைகளின்

அரசியல் பிரதிநிதித் துவமற்ற காலம், அரசியல் பிரதிநிதித்துவம் பெற்ற காலம் எனவும், பிரஜாவுரிமை பறிப்புக்கு முற்பட்ட காலம், பிரஜாவுரிமை பறிக்கப்பட்ட காலம்,பிரஜாவுரிமை மீளப் பெறப்பட்ட காலம் என்ற வகையிலான பகுப்பாய்வுகளை மேற்கொள்ள முடியும்.

இலங்கையின் ஆட்சிமுறைகள், கட்சி முறைமைகள், மிசனரிகள், கிறிஸ்தவ மயமாக்கல் என்பனவும் மலையகத் தமிழரின் கல்வியில் பாரிய தாக்க விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன.

இத்தகைய பின்புலத்தில் வரலாற்றை மறுதலிக்கும் ஒரு சமூகமாகவும் இருக்க முடியாது. எமது மரபுரிமைகள், பாரம்பரி யங்கள் வாழ்வியல் கோலங்கள், கூத்துக்கள், கலை வடிவங்களில் காணப்படும் அறிதல்

முறைகள், தொழில் முறைகள், சிந்தனை மரபுகள், ஆய்வு முறைகள் அவற்றின் தொடரலையாகவும் மேலெழுந்த இன்றைய பாடசாலை கல்வி முறைமை என்பவற்றை உற்று நோக்குதல் வேண்டும்.

கெர்க்கஸ்வோல்ட் தோட்டம், அழகு தமிழில் இலட்சுமித் தோட்டம் என மக்களால் பெயரிட்டழைக்கப்படும் தோட்டம். இங்கே மத்திய பிரிவு பாடசாலை தற்போதைய அம்மன் ஆலயத்திற்கு முன்னால் அமைந் திருந்தது. தற்போதும் அந்த மண்டபம் காணப்படுகின்றது. மேல் பிரிவிற்கான பாடசாலை தற்போதைய மைதானம் அமைந் திருக்கும் கிழக்குப் பகுதியில் அமைந்தி ருந்தது. அதன் அடையாளமாக பாடசா லையின் ஒரு விடுதி மட்டும் இன்றும் எஞ்சியுள்ளது.

தோட்டங்கள் தொடங்கப்பட்டு தேயிலை யுகம் ஆரம்பமான பின்பே இந்திய வம்சாவளியினரான தமிழ் மக்கள் தோட்டங் களில் நிலைபேறாக குடியிருக்கத் தொடங்கினர். தோட்டக் கைத்தொழிலை தொடர்ச்சியாக பேணவும் பராமரிக்கவும் பாரியதொரு தொழிற்படை தேவைப்பட்டது. தொடர்ச்சியாக தொழிலாளர்களை திரட்டு வதில் சவால்கள் எதிர்நோக்கப்பட்ட போது இங்கு புலம்பெயர்ந்து வந்துவிட்ட தொழிலா ளர்களுக்கு மருத்துவம், சுகாதார பராமரிப்பு, அடிப்படை கல்விக்கான ஏற்பாடுகளை செய்யவேண்டிய தேவையேற்பட்டது.

பாரம்பரிய கற்றல் முறைகள், கல்வி கேள்விகளில் இருந்து காலணிய வாழ்க்கை முறைக்கு மக்களை தகவமைப்பதாக பிரித்தானியர் கால மிசனரி கல்வியமைந்தது. கிருஸ்தவமயப்படுத்தலும் மதமாற்றமும் காலணியத்திற்கு தகவமைக்கப்பட்ட மக்கள் கூட்டத்தை உருவாக்குவதுமே அதன் இலக்காகவிருந்தது.

1945ஆம் ஆண்டு சி.டபிள்யூ.டபிள்யூ கண்ணங்கரா அவர்கள் இலவசக் கல்வியை அறிமுகப்படுத்திய போதும் மலையக தமிழர் அதன் பயன்களை அனுபவிக்க நீண்டகாலம் காத்திருக்க வேண்டியிருந்தது. சுதந்திரத்தின் பின்னர் சிதைந்த, கைவிடப்பட்ட தோட்டங்கள், தோட்டப் பாடசாலைகள் அதிகமிருந்தன. அவற்றில் ஒன்றாக கெர்கஸ் வோல்ட் பாடசாலைகள் மாறிப்போயின. பின்னர் டியன்சின் (அரைத்தோட்டம்) பாடசாலையுடன் இணைக்கப்பட்ட நிலையில், இலட்சுமித் தோட்ட மாணவர்கள் டியன்சின் தமிழ் வித்தியாலயத்தில் தமது ஆரம்பக் கல்வியை தொடர்ந்தனர்.

அமரர் தொண்டமானின் முயற்சியால் இலங்கை பாடசாலை கல்வி வரலாற்றில் மிகப்பெரிய அபிவிருத்தி திட்டமாக 400 தோட்டப்பாடசாலைகளை ஒரே காலகட்டத்தில் அபிவிருத்தி செய்யும் பொறுப்பை சுவீடன் நாட்டின் சர்வதேச அபிவிருத்தி அதிகாரசபை ஏற்றுக்கொண்டது. சீடா செயற்றிட்டம் (SIDA)என அறியப்பட்ட அத்திட்டத்தின் மூலம் மீள உயிர்ப்பிக்கப்பட்ட பாடசாலை களில் கெர்க்கஸ்வோல்ட் இல 2 தமிழ் வித்தியாலயம் அமைந்தது.

1992ஆம் ஆண்டு புதிய இரண்டு கட்டிட ங்களில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை யில் ஆரம்பத்தில் திரு. லோகநாதன் அதிபராக நியமனம் பெற்றார். அவரது காலத்தில் ஆரம்பத்தில் அமைக்கபட்ட இரண்டு (80x20),(60x20) மண்டபங்களில் தரம் ஒன்றும் தரம் ஆறும் நடத்தப்பட்டன. படிப்படியாக ஒரு Type 2 பாடசாலையாக மாற்றப்பட்டதில் திரு E. லோகநாதனின் பங்கும் பணியும் குறிப் பிடத்தக்கதாகும். அவரோடு கடமை யாற்றிய திரு S.P.S. விக்டர் திரு. தியாகராஜா திருமதி. தியாகராஜா மற்றும் திருமதி. செல்வம் ஆகியோர் நீண்டகாலம் அப்பாடசாலையின் வளர்ச்சியின் பங்காளர்களாயினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

1997ஆம் ஆண்டு முதலாவது தொகுதி மாணவர்கள் முதன் முதலாக க.பொ.த சா/த பரீட்சைக்குத் தோற்றினார்கள். அவர்களில் மு.கணகதாசன், ரொ.ஜூலியானா, புஸ்பவதி, க.வசந்தபிரியா ஆகியோர் க.பொ.த உயர் தரத்திற்கு தகைமை பெற்றனர்.

1998ஆம் ஆண்டு இரண்டாவது தொகுதி மாணவர்கள் அமரத்துவமடைந்த க.பாபு உட்பட பல மாணவர்கள் உயர்தரத்திற்கு தகுதி பெற்றனர். மத்தியூஸ் அருட்தந்தையாக திருநிலைப்படுத்தப்பட்டுள்ளார். 1999ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரத்தில் பல மாணவர்கள் உயர்தரத்திற்கு தகைமைப் பெற்றனர். நான்காம் தொகுதியினரில் 27 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றினார்கள். இவர்களில் க.பொ.த உயர்தரத்திற்கு தமைமை பெற்ற மாணவர்கள் சகலரும் குடும்ப வறுமை, டியுட்டரி கலாசாரத்தின் தீய விளைவுகள் காரணமாக பாடசாலை கல்வியை இடைநடுவே கைவிட்டார்கள்.

எனினும் இரு மாணவர்கள் இன்று தலை சிறந்த அரங்கியலாளர்களாக, உலகத்தரம் வாய்ந்த படைப்பாளர்களாக எழுச்சியுற்று ள்ளனர். மேலும் இலங்கை போக்குவரத்து சபையின் நேரக்கணிப்பாளர் பதவி நிலைக்கு ஒருவரும் அருட் சகோதரியாக ஒருவரும் பலர் முயற்சியாளர்களாகவும் எழுச்சி பெற்றுள்ளனர்.

## முதல்வர்களை தந்த முதன்மைக் கல்லூரி

இலங்கையின் அரங்கியல் வரலாற்றில் மலையகத்திற்கு சிறப்பிடம் பெற்றுத்தந்த தி.சிவனேசன், செ.லீலாவதி, இலங்கை போக்குவரத்து துறையில் பொ.ஜெகதீஸ்வரன் மற்றும் ஜே.வாமதேவன், அஞ்சல் துறையில் உ.சிவகுமார், மு.நவனீதன் மற்றும் செ.நந்த குமார், இரயில்வே துறையில் மு.மகேந்திரன், நகரசபை வருமானவரி பரிசோதகராக தி.வீரசிங்கம், உணவக துறையில் யோகராஜா, ஊடக துறையில் சா.சதீஸ்குமார், கல்வித் துறையில் ஆசிரியர் பணியில் மா.சசிதரன், க.நவப்பிரியா, ரெனோல்ட் மேரி, ப.திருச் செல்வம், ப.விஜயகாந்தன், வை.சசிக்குமார், வீ.ரமணி தேவி, விஜயபாஸ்கர், லசந்தினி பிரியா, தேசிய இளைஞர் சேவையில் சு.சிவராஜா மற்றும் சு.கமலதாசன், இலங்கை சுகாதார சேவையில் அலோசியஸ், மோசஸ், கமல நாதன் இவற்றோடு தனியார் துறையிலும் என நீளும் பட்டியல் ஒரு குறுகிய காலத்தில் ஒரு பாடசாலையும் ஆசிரியர்களும் எதனை சாதிக்க முடியும் என்பதற்கான எடுத்துக்காட்டுக்களாகும்.

## இணைப்பாடவிதானம், சுற்றாடல் அபிவிருத்தி

பாடசாலையின் எழுச்சியில் முக்கிய பங்காற்றிய இணைப்பாடவிதான செயற்பாடு களில் விளையாட்டுப் போட்டிகளில் இப்பாடசாலையின் மாணவர்கள் தேசிய மட்டம்வரை மாணவர்கள் சென்றிருக்கின்றனர். எடுத்துக்காட்டாக க.பாபு எனும் மாணவனை ஆசிரியர் திரு S.P.S.விக்டர் அவர்கள் பயிற்றுவித்து அழைத்துச் சென்றமையினை குறிப்பிடலாம். நாடக போட்டிகளில் வலய மட்ட முதலிடங்களை பெற்ற நாடகங்களாக வீரத்தாய் இடம்பெற்றது. புறநானூற்றின் அடிப்படையிலான இந்நாடகம், சின்னப் பண்ணையார் நாடகம் என்பன குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கின.

புற்பூண்டுகளின்றி கிடந்த வரண்ட பரப்பில் 1997ஆம் ஆண்டு பூந்தோட்டம் அமைக்கப்பட்டது. அதற்கான நீரை மைதானத்திற்கெதிரே ஓடும் ஓடையிலிருந்து மாணவர்களின் எடுத்து பாய்ச்சினர். அதன் பின்னர் மாணவர்களின் ஆலோசனையில் பெயரில் பாடசாலைக்கு வடக்கே லெட்சுமி குளம் அமைக்கப்பட்டது. அதற்கான சகல வேலைகளும் ஆசிரியர்களான பொன். பிரபாகரன், ஜெ.நந்தகுமார் ஆகியோருடன் தரம் 8, 9, 10, 11 மாணவர்களாலேயே மேற்கொள்ளப்பட்டன. இக்குளத்தின் நடுவே குளத்துப் பிள்ளையார் ஆலயம் அமைக்கப் பட்டதோடு முதலாவது 48 நாட்கள் கும்பாபிஷேகமும் நடத்தப்பட்டு ஐந்து தோட்டப் பிரிவுகளுடாக தேர் திருவிழாவும் நடத்தப்பட்டது சிறப்பாகும். எனினும் கலை பொக்கிஷமான அவ்வாலயம் கேட்பாரின்றி கிடப்பது வருந்தத்தக்கதாகும்.

1997ஆம் ஆண்டு முதல் 2001ஆம் ஆண்டு வரை நடத்தப்பட வாணி விழா கலையரங்கம் மாணவர்களுக்கு பாரியளவான வாய்ப்புக்களை வழங்கியதோடு மாணவர் களின் கற்றல் திறன்களை விருத்தி செய்வ தற்கும் ஆளுமை விருத்திக்கும் தலைமைத் துவ பயிற்சிக்கும் பாரிய பங்களிப்பினை நல்கியுள்ளமைக்கு வாழும் சமூகமே சான்றாகின்றது.

ஹட்டன் கல்வி வலயத்தில் மட்டுமல்ல நாட்டிலேயே சிறந்ததொரு வணிக மாணவர், ஒன்றியம் 1997 - 2001 காலப்பகுதியில் இப்பாடசாலையிலேயே நடாத்தப்பட்டது. வாரம் தவறாமல் நடத்த வணிக மாணவர் மன்றம், மாணவர்களின் தலைமைத்துவ ஆற்றல்களை விருத்தி செய்வதில் பாரிய பங்களிப்பினை நல்கியது. இம்மன்றத்தால் வெளியிடப்பட்ட "வணிக மாணவன்" என்ற ரோனியோ சஞ்சிகை தொடர்ச்சியாக வெளியானதோடு அதன் பிரதிகள் நாடு முழுவதுமுள்ள பிரபல பாடசாலைகள் கேட்டுப் பெற்றன. அது தேசிய நூலக சேவை சபையிலும் பதிவிடப்பட்டுள்ளது.

"செம்புறா" விவாத அணிகள் முப்பது மாணவர் குழுக்களைக் கொண்டு களமிறக்கப் பட்டன. "நாவரசன்", "நாவரசி" என்னும்பட்டங் களை இவ்விவாத அணிகளில் மிளிர்ந்த மாணவர்கள் சுவீகரித்தனர். சொற்சமரும் மிகப்பெரிய விவாதமாக ஒரே சமயத்தில் பயிற்றுவிக்கப்பட்டு சமராடியதன் விளைவாக

தொடர்ந்து தமிழ் மொழித்தின போட்டிகளில் பிரபல பாடசாலைகளை தோற்கடிக்க முடிந்தது. இதன் விளைவாக நீண்டகாலம் விவாத களத்தில் இப்பிரதேச பிரபல பாடசாலைகளின் ஆதிக்கம் அற்றுப் போனமை குறிப்பிடத்தக்கதாகும்.

நாடகப் பயிற்சி பட்டறைகள் பலவும் 1997இல் நிகழ்த்தப்பட்டன. இன்றைய கொழும்பு மத்திய வலயத்தின் கல்விப் பணிப்பாளரும் அன்றைய மாணவியுமான செல்வி செ.பிரபா, இன்றைய தமிழ் மிரர் ஆசிரியபீட உறுப்பினரான அழகன் கனகராஜ் ஆகியோரின் ஒத்துழைப்போடு பொன். பிரபாகரனால் தொடங்கப்பட்ட அம்முயற் சியின் பயனான அதீத பிந்திய பயிற்சி பட்டறைகள் பல பிரபல நாடக நெறியாளர் களான பராக்கிரம நிரியெல்ல, றோகன ஆகியோரால் திரு தி.சிவனேசனின் ஏற்பாட்டில் இடம்பெற்றன.

டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் நாடு முழுதும் முதன்முறையாக டெங்கு நோய் பரவியபோது அதற்கெதிரான விழிப்பு ணர்வூட்டும் பிரச்சாரமும் சுட்டறிக்கையும் முதன் முதலாக இப்பாடசாலையிலேயே மேற்கொள்ளப்பட்டமை வரலாறாகும். மாணவர்களும் ஆசிரியர்களும் கெர்கஸ் வோல்ட் மேல், மத்திய பகுதிகளில் வீடு வீடாகச் டெங்கு ஒழிப்பு பிரச்சாரத்திலும் சிரமதானத்திலும் ஈடுபட்டார்கள்.

புத்தெழுச்சி புகட்டிய பாரதிவிழா 2001ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. இவ்விழா மாணவர் மத்தியில் பாரிய புத்தெழுச்சியை ஊட்டியது. புதிய சிந்தனையை நோக்கி மாணவரை திருப்பியது.

மல்லியப்பு சந்தியிலே திரண்ட மாண வர்கள் 2000ம் ஆண்டு ஹட்டன் மல்லியப்பூ சந்தியிலே வரலாற்றில் தடம்பதித்த சத்தியாகிரகப் போராட்டத்தின் பங்காளர் களாக இவ் வித்தியாலயத்தின் மாணவர் களும் ஆசிரியர்களும் அதிபரும் அணிவகுத் ததன் மூலம் பாடசாலை சமூகத்தோடு ஒன்றிணைந்தது.

ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய பயிலுனர்களுக்காய் மலையக மலையக மாணவர் சமூகம் அணிதிரண்ட போது அதன் பங்காளராக கெர்கஸ்வோல்ட் இல 2 தமிழ் வித்தியாலய மாணவர்களும் அணிதிரண்டனர்.

கெர்க்கஸ்வோல்ட் ம.பி, மே.பி, கீ.பி, வானக்காடு தோட்டங்களில் மாணவர்கள் கலை நிகழ்வுகளை முன்னெடுத்திருந்தனர். கற்றல் செயற்பாட்டின் பகுதியாக சனத் தொகை மதிப்பீடு, தேர்தல்கள் நடத்தப்பட்டன.

தலா முப்பது மாணவர்களைக் கொண்டு, கார்க்கி வாசகர் வட்டம், லூசுன் வாசகர் வட்டம், பாரதி வாசகர் வட்டம், சி.வி வாசகர் வட்டம், கே.கணேஷ் வாசகர் வட்டம் என ஐந்து வாசகர் வட்டங்கள் தொடர்ந்து நடைமுறைப் படுத்தப்பட்டதன் விளைவுகளுக்கு அடையாளமாக அப்பாடசாலையின் முதல் பத்தாண்டு கால மாணவர்கள் இன்றும் ஆதாரமாக திகழ்கின்றனர்.

சட்டத்தரணிகளான பி.இராஜதுரை, ஏ.எஸ்.குமார் ஆகியோரின் நேரடி பங்களிப் போடு மனித உரிமைகள் கருத்தரங்குகள் தொடர்ச்சியாக பாடசாலையில் முன்னெடுக் கப்பட்டமையும் சிறப்பான நினைவுகளாகும்.

2000ம் ஆண்டில் வெளியிடப்பட்ட "நினைவுகளுடன் ஒரு சங்கமம்" எனும் இதழ் இப்பாடசாலையின் முதலாவது பிரியாவிடை இதழாகும். ஆசிரியர் திரு இக்னேசியஸ் அவர்களால் வெளியிடப்பட்ட "விழிப்பு" இதழும் முக்கியத்துவம் பெறுகின்றது.

1998ஆம் ஆண்டு இலங்கை கொண் டாடிய சுதந்திர பொன்விழா கண்காட்சிக்கான சுற்றுலாவும் பேராதெனிய பல்கலைக்கழத்தின் பொன்விழா கண்காட்சிக்கான சுற்றுலாவும் பாடசாலையின் உன்னத சுற்றுலாக்களில் இடம்பிடிக்கின்றன.

பாடசாலையின் சாரணியப் படை ஆசிரியர் ஜெயஸ்ரீயாலும், பெண் சாரணியப் பிரிவு ஆசிரியை பொ.கீத்தா கௌரியாலும் ஆரம்பிக்கப்பட்டது. எனினும் சில வருடங் களில் கைவிட வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. மாணவர் சாரணியம் அமைக்கப் பட்டபோதும் முழுமையாக செயற்படுத் துவதற்கு சந்தர்ப்பம் அமையவில்லை.

இப்பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றிய ஜே. நந்தகுமார் அவரது ஆக்கத்திறனால் பாடசாலை மண்டபங்களை உயிரியல், விஞ்ஞான, புவியியல் வரைபடங்களினால் முழுமையாக அறிவியல் பட வரைவு அலங்காரமாக்கினார். இவையும் இப்பிரதேச பாடசாலைகளில் மேற்கொள்ளப் பட்ட முதலாவது புத்தாக்க முயற்சிதான்.

மாணவரை, சமூகத்தை தட்டியெழுப்

புவதில் கெர்க்கஸ்வோல்ட் மத்தியபிரிவை ஒரு தகைமை சார் சமூகமாக மாற்றியதில் ஆசிரியர்கள் மேற்கொண்ட வீட்டுக்கு வீடு பயணம் காத்திரமாக அமைந்தது. வகுப்பிலுள்ள மாணவர்களோடு சேர்ந்து மாணவர்களின் வீடுகளுக்கு தொடர்ச்சியான பயணங்களை மேற்கொண்டோம். மாற்றங்கள் படிப்படியாக ஏற்படத்தொடங்கின. வெண் மண் சாந்து பூசப்பட்ட வீடுகளில் சுண்ணாம்பு சாந்து பூசப்படுவதையும் பூந்தோட்டம் வளர்க்கப்படுவதையும், கூரைகள் செப்பனிப் படுவதையும், சமையலறைகள் புதிதாக முளைப்பதையும், வீட்டில் மேசைகள் கதிரைகள் போடப்படுவதையும், வீடுகள், மக்கள் புதிய அலங்காரம் பெறுவதையும் இளைஞர்கள் புதுவாழ்வை நோக்கி நகர்வதையும் கண்டோம். அத்தகைய ஒவ்வொரு குடும்பமும் மாற்றமுற்றிருப்பது புலங்காகிதம் அளிக்கின்றது.

## தொண்டர்களின் பணி

கடுமையான ஆசிரியர் தட்டுப்பாடு நிலவிய *1990 - 2000* ஆண்டுகளில் சுய விருப்பின் பேரில் தாமாக முன்வந்து கடமையாற்றிய தொண்டர் ஆசிரியர்கள் போற்றுதலுக்குரியவர்கள். அவர்களில் ஏ.புவனேசன் மட்டுமே ஆசிரியராக நியமனம் பெற்று 15 ஆண்டுகளாக அதே பாடசா லையில் ஆசிரியராக கடமைப்புரியும் வாய்ப்பை பெற்றார். இன்னும் பலருக்கு அவ்வாய்ப்பு அவ்வேளையில் கிட்டாமை கவலைக்குரியதாகும். தாமதிக்கப்பட்ட அபிவிருத்தி, இத்தகைய பாரிய அசைவுக ளுக்கு மத்தியில் பௌதீக அபிவிருத்தி திடீரென தடைப்பட்டது. பெற்றோர் கட்டுமானங்களை மேற்கொள்ள மேற்கொண்ட முயற்சிகள் நிறைவேறாமல் போயின. அதற்கொரு காட்சியாக இன்றும் நான்கு தூண்கள் நிற்கின்றன. எங்கே? ஏன்? யாரால்? அபிவிருத்தி தடைப்பட்டது என்பது ஊருக்கே வெளிச்சமாகும்.

எனினும் திரு A.வேலுசாமி அவர்கள் அதிபராக பொறுப்பேற்று கடமையாற்றிய குறுகிய காலத்தில் பாடசாலையின் தசாப்த விழாவும் அதையொட்டி நடாத்தப்பட்ட பாரிய கண்காட்சியும் மிகுந்த முக்கியத்துவம் உடையன. அப்போதைய மாகாண கல்வியமைச்சர் ஏ. இராதாகிருஸ்ணன் பிரதம விருந்தினராக வருகைத்தந்தார். அந்நிகழ்வு மூன்று தினங்கள் இடம்பெற்றன. டைனோசர் கூடத்தினை ஆசிரியர் கோகிலன் வடிவமைத் திருந்தார். சித்திரக் கூடத்தினை ஆசிரியர் நந்தகுமாரும் நூலகக் கூடம், கணிணி கூடம் என்பவற்றை ஆசிரியர் பொன்.பிரபாகரனும் அமைத்தனர். இன்றைய மைக்ரோசொப்ட் மென்பொருள் மொழியியலாளரான திரு சிமியோன் கணிணி கூடத்தை அமைப்பதற்கு முன்னின்று உழைத்தார்.

வெளிக்கள நிகழ்வுகளை ஜெகன்தாசன், கஜேந்திரன், ஜீவனேஸ் ஆகிய ஆசிரியர்கள் பொறுப்பேற்றனர். "எங்க ஊரு மத்து" "சண்டை", "மயிலிரகே மயிலிரகே" நடனங்கள் சிறப்பிடம் பெற்றன.

இதன் பின்னர் சடுதியாக இப்பாடசாலை அதிபர் இடமாற்றம் பெற்றதோடு S.P.S.விக்டர், பொன்.பிரபாகரன், ஜே.நந்த குமார், கோகிலன், ஜேசையா, ம.கலாதேவி, இராஜேஸ்வரி, ஆகிய ஆசிரியர்களும் இடமாற்றம் பெற்றுச் சென்றனர்.

புதிய அதிபராக பொறுப்பேற்ற திரு A.செல்வராஜ் அவர்களின் காலத்தில் க.பொ.த சாதாரண தர பரீட்சைப் பெறுபேறு களில் சடுதியான மாற்றங்கள் ஏற்பட்டன. இம் மேல்நோக்கிய அசைவின் தொடர்ச் சியாக இரண்டு மாடி கட்டிடம் அமைக்கப் பட்டது. இதற்காக பாடசாலைக்கென திரு தே.தமிழ்வாணன் ஆசிரியராக கடமையாற்றிய காலத்தில் அமைக்கப்பட்ட மைதானம் பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இன்றய அதிபராக திரு அருளானந்தன் அவர்கள் கடமையாற்றிவருகின்றார். பல இளம் ஆசிரியர்கள் சுறுசுறுப்பாக கடமை புரிகின்றனர். பாடசாலை விரிவான வள வாய்ப்புகளைக் கொண்டுள்ள இன்றய காலகட்டத்தில் இப்பாடசாலை பிரசவித்த மாணவர்கள் இளம் சமுதாய தலைவர்கள் புத்துயிரளிக்கப்பட்ட பாடசாலையின் வரலாற்றை மீட்டு எடுக்கும் இவ்விழா பாடசாலையினதும் சமுதாயத்தினதும் வரலாறு மற்றும் பண்பாட்டு பெருமான முடையதாகும் என்பதில் சந்தேகம் இல்லை.

இப்பாடசாலையின் செழுமைமிக்க பாரம்பரியத்தின் வாரிசுகளாக எழுந்து நின்று இன்றைய 25ஆவது ஆண்டு விழாவினை அடக்கத்தோடு ஏற்பாடு செய்திருந்தபோதும் பாரம்பரியத்தின் வீரியமிக்க வாரிசுகளை மனதார வாழ்த்துவது சிறப்பாகும்.

# மலையக தேசிய பல்கலைக்கழகத்தின் முக்கியத்துவம்

- அருள் கார்க்கி

மலையக தேசியம் குறித்து விவாதிக்கப் படும் இக்காலச் சூழலில் எம்மக்களின் வாழ்வியல் ஆவணப்படுத்தலுக்கான ஒரு மத்திய நிலையமாக மலையக பல்கலைக் கழகம் அமையும் என்பதில் தவறில்லை. காரணம் பல்லின கலாசாரத் தன்மை கொண்ட இலங்கையை ஒத்த நாடுகளில் தேசிய கல்விக் கட்டமைப்பின் கீழ் செயற் படும் இனங்கள் சார்ந்த பல்கலைக்கழகங்கள் உண்டு. அந்தந்த இனங்கள் சார்ந்த ஆய்வுகள், ஆவணப்படுத்தல் சார்ந்த செயற்பாடுகளில் அப்பல்கலைக்கழகங்கள் காத்திரமான பங்களிப்பைச் செய்கின்றன.

இலங்கையின் சுமார் 15 தேசிய பல்கலைக்கழகங்கள் இன்று உயர் கல்வியில் பங்களிப்பு செய்துவருகின்றன. இந்நாட்டின் முதலாவது பல்கலைக்கழகமே மலையகத்தில் தான் அமைந்ததை நாம் கவனத்தில் கொள்ளத்தக்கது. எனினும் சுமார் 15 இலட்சம் மக்கள் தொகையினைக் கொண்ட மலையக இனத்தின் சார்பில் ஒரு தேசிய பல்கலைக்கழகம் இன்றுவரை அமையாதது எமது அரசியல் இயலாமையை பறைசாற்றும் உறுதியான ஆதாரமாகும்.

மலையகத்துக்கென தனியான ஒரு பல்கலைக்கழகம் அவசியம் என்று இன்று பரவலான கருத்துக்கள் முன்வைக்கப் பட்டாலும் அதனை நடைமுறை சாத்திய மாக்கும் நகர்வுகள் பாராளுமன்றத்தின் மூலமே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். எனினும் உதிரிகளாக ஆங்காங்கே சிலர் கூச்சலிட்டுக் கொண்டிருப்பது நகைப்புக் குரியதாக உள்ளது.

சிறுபான்மை இனத்தின் சார்பில் இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஈழத்து சமூகத்தின் மையப்புள்ளியாக விளங்கு கின்றது. யாழ்ப்பாணச் சமூகத்தின் கலை, கலாசார அடையாளமாக மட்டுமின்றி முக்கிய சமூக நகர்வுகளை தீர்மானிக்கும் சக்தியாக யாழ். பல்கலைக்கழகம் விளங்குகின்றது. இவ்வாறான உதாரணங்களை ஆய்வு செய்தல் எமக்கு பயனுடையதாக இருக்கும்.

உலகிலேயே அதிகமான பல்கலைக் கழகங்கள் இந்தியாவில் காணப்படுகின்றன. அரச பல்கலைக்கழகங்களுக்கு அதிகமான தனியார் பல்கலைக்கழகங்களும் உயர் கல்வியில் பங்களிப்புச் செய்கின்றன. இவ்விடயத்தில் இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களின் கல்வியில் பங்களிப்புச் செய்ய வேண்டிய கடமை அயல் நாட்டுக்கு உண்டு எனும் நிலையில் மலையகத்தில் ஒரு தேசிய பல்கலைக்கழகம் அமையும் சந்தர்ப்பத்தில் இந்திய பல்கலைக்கழகங்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள முடியும். அது மட்டுமன்றி சர்வதேச தரம் வாய்ந்த கற்கை நெறிகளை அறிமுகம் செய்து எமது சமூகத்தின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைத்துக் கொள்ளலாம்.

கியூபா நாட்டின் பல்கலைக்கழகங்கள் மிகத் தரமானவையாக இன்று காணப்படுகின்றன. எம்மைப் போன்ற இன அடக்கு முறையை எதிர்கொண்ட ஒரு நாட்டின் உயர்கல்வி இன்று விதந்துப் பாராட்டப்படுமானால் அதற்கான காரணங்களை நாம் ஆய்வு செய்ய வேண்டும்.

சாத்தியமான உதாரணங்களை ஆய்வுசெய்து தரமான வெளியீடுகளை தரக்கூடிய ஒரு கல்வி நிலையமே இன்று எமக்கு தேவை. அதேபோல் ஆளணி விடயத்தை எடுத்துக் கொண்டால் உயர் கல்வியில் திறமையான விரிவுரையாளர்கள், நிர்வாகிகள் இன்று மலையகம் சார்ந்து உருவாகி வருகின்றனர். சமூக நோக்கோடு உழைக்கும் இவர்களின் அறிவையும் திறனையும் ஒரு புள்ளியில் குவிவடையச் செய்யும் ஒரு விடயமாக மலையக தேசிய பல்கலைக்கழகம் அமைய வேண்டும்.

மலையகம் சார்ந்த ஆய்வுகள் சர்வதேச மட்டத்துக்கு எடுத்துச் செல்ல இது ஒரு சிறந்த சந்தர்ப்பமாக அமையும் என்பதில்

எமக்கு நம்பிக்கை உண்டு.

மாணவர் அனுமதியிலும் மலையக சமூகத்துக்கான முக்கியத்துவமும் முன்னுரிமையும் இங்கு வழங்கப்பட வேண்டியதன் தேவைப்பாடு உள்ளது. காரணம் ஏனைய பல்கலைக்கழகங்களிலும் மலையக மாணவர்கள் அனுமதி இன்று கிடைக்கப் பெறினும் விசேட ஏற்பாடுகள் மூலம் அதிகமான உள்ளீர்ப்புகளை செய்வதற்கான வசதிகளை நாம் அமைத்துக் கொள்ளலாம். உதாரணமாக பத்தனை ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி இன்று மலையக சமூகத்தின் ஆசிரியர் தேவையை மாத்திரம் பூர்த்தி செய்யும் ஒரு உயர்கல்வி நிறுவனமாகும். எனினும் பாடசாலை கல்வி கட்டமைப்பு மாத்திரம் எமது சமூகத்தின் தேவை அல்ல. ஸ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரியானது சில வரையரைகளுக்கு உட்பட்டே செயற்பட வேண்டிய நிலை உள்ளது. எனினும் ஒரு மலையக பல்கலைக் கழகம் ஒன்று அமையும் சந்தர்ப்பத்தில் இவ்வாறான வரை முறைகளுக்கு அப்பாற்பட்டு எமக்குச் செயற்பட முடியும். குறிப்பாக இன்று தேசிய கல்வியற் கல்லூரிகள் பயிற்றப்பட்ட ஆசிரியர்களை சமூகத்துக்கு வழங்குகின்றது. எனினும் பட்டதாரி ஆசிரியர்களுக்கான தேவையை கல்வியியற் கல்லூரிகளால் நிரப்ப முடியாது.

குறிப்பாக கணித, விஞ்ஞான தொழில்நுட்ப பிரிவுகளில் உயர்தரத்துக்கான ஆசிரியர் தேவை பாரிய பிரச்சினையாக உருவெடுத்து வருகின்றது. ஊவா மாகாணத்தில் அண்மைக் காலமாக ஓய்வு பெற்ற ஆசிரியர்களை விண்ணப்பிக்கும் படி சமூக அமைப்புகள் வேண்டுகோள் விடுத்திருந்தன. இவ்வாறான சமூக அவலம் எம் சமூகத்துக்கு மாத்திரமே விதிக்கப்பட்டனவா? திட்டமிடப்பட்ட கல்விக் கட்டமைப்பின்றி 3000 ஆசிரிய உதவியாளர்களுக்கான நியமனம் அண்மையில் வழங்கப்பட்டது. எனினும் அவர்களுக்கான பயிற்சிக் களமாக பாடசாலைகளை அவர்கள் பயன்படுத்தும் நிலையே இன்றும் காணப்படுகின்றது. மறுபக்கம் அவசியமான ஆளணிக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. ஒரு சமூகத்தின் முக்கிய மையப் புள்ளியாகவும் கல்விக் கொள்கைகளை உருவாக்கும் உயர் நிறுவனங்களாகவும் பல்கலைக்கழகங்கள் விளங்க வேண்டும். அதனை மலையக தேசிய பல்கலைக்கழகத்தின் மூலம் சாத்தியமாக்கிக் கொள்ளலாம்.

பெரும்பான்மை இனத்தைப் பொறுத்த வரை அனைத்து தேசிய பல்கலைக்கழகங் களிலும் அவர்களின் ஆதிக்கம் மேலோங்கிக் காணப்படும் நிலையில் நவீன பாடநெறிகளை உள்ளீடுச் செய்து உலகத்தரமான வெளியீடு களை சமூகத்துக்கு வழங்குகின்றனர். அதற்கு சிறந்த உதாரணமாக அண்மையில் இலங்கையில் நிறுவப்பட்ட சமுத்திரப் பல்கலைக்கழகத்தை குறிப்பிடலாம்.

எம்மோடு வாழும் ஒரு சமூகம் கடல் அனர்த்த ஆய்வுகளை மேற்கொள்ள தயாரான நிலையில் நாம் கலாசார மதிப்பீடுகளை பாதுகாக்கவே நிறுவன மயப்படாத நிலையில் இருக்கின்றோமே யானால் எமது பின்னடைவுக்கு இதைவிட வேறு என்ன கேவலம் இருக்க முடியும். கட்சிகள் சார்ந்து செயற்படாமல் பொதுவான ஒரு ஆணைக்குழு அமைக்கப்பட வேண்டும். மலையகத்துக்கு தனியான பல்கலைக்கழகம் ஒன்று அமைப்பதற்கான அனைத்து சாத்தியமான விடயங்களும் ஆய்வு செய்யப்பட வேண்டும். முழுமையான ஒரு அறிக்கை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப் பட்டு சட்ட மூலமாக கொண்டு வரப்பட வேண்டும். மலையகம் சார்ந்து பாராளு மன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் இருக்கையை விட்டு எழுந்து குரல் கொடுக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். இது விடயத்தில் மலையக சிவில் அமைப்புகள், புத்திஜீவிகள், ஊடக ஒழுங்கமைப்புகள் அனைத்தும் தத்தமது மட்டத்திலிருந்து அழுத்தம் கொடுக்க வேண்டும்.

*நன்றி*
*"நமது மலையகம்"*

# மலையக எழுச்சிக்கான போராளிகளின் மறைவு



மலையக மக்களின் உரிமைப்போராட்டங்களில் "கொட்டியாகல" பெரும் பங்கை வகித்ததை யாரும் மறுதலிக்க முடியாது.

கேகாலை புளத்கொஹுப்பிட்டியவில் இடம்பெற்ற "மனித சங்கிலி" போராட்டம் அன்றைய தோட்ட நிர்வாகத்துக்கு எவ்வாறு தலையிடியை கொடுத்ததோ, அதேயளவான தலையிடியைதான், இந்தக் கொட்டியாகல போராட்டம் ஆட்சியாளருக்கு கொடுத்தது.

இதனால்தான், இரும்பு சப்பாத்துகளை அணிந்திருந்த பொலிஸ்காரர்கள், அப்பாவி உயிர்களை தங்களுடைய துப்பாக்கிகளுக்கு இறையாக்கினர்.

அதில் அந்தோனி பிரான்ஸிஸ் என்ற இளைஞனின், மரணம், மலையக போராட்ட வரலாற்றில் இடம்பிடித்து கொண்டது.

இவர் தொடர்பிலான வரலாற்று பதிவுகள் வெகுவாக இல்லை என்றாலும், அவருடன் கூடப்பிறந்தவர்களில் இருவர் இன்னும் உயிருடன் இருப்பது பலருக்கும் தெரியாது.

கூடப்பிறந்தவர்களில் இருவரான அவருடைய இளைய சகோதரரான ரெம்ஜி மற்றும் தங்கை எலிசபெத் ஆகியோர் கொட்டியாகல நடுக்கணக்கில்தான் வாழ்கின்றனர்.

அவ்விருவரையும் அண்மையில் சந்தித்தபோதுதான், பிரான்ஸிஸ் என்ற இளைஞனின் போராட்ட வல்லமை மற்றும் உயிர்துறப்பு, கல்லறை, குடும்ப பின்னணி, ஸ்ரீ குழப்பம் போன்றவை தொடர்பிலான தகவலை திரட்ட முடிந்தது.

யார் இந்த பிரான்ஸிஸ்!?

தலவாக்கலை கொத்தமல்லி தோட்டத்தில், அந்தோணி- அஞ்சல மேரி ஆகியோருக்கு 10 பிள்ளைகள் அவர்களில் ஏழாவது பையனாகவே இவர் இருந்துள்ளார்.

துடிப்பும், தூரநோக்கமும், சமூக சிந்தனையும் நகமும் சதையும் போலவே அவருடன் கூட இருந்துள்ளது. எனினும், குடும்ப பின்னணியும் வறுமையும் சூழ்கொண்டமையால், வேலைக்கு செல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

வேலைக்கு சென்றாலும், போராட்டக் குணத்தை அவரிடமிருந்து பிரிந்துவிடவே இல்லை. தன்னுடைய தந்தையான அந்தோணி, தோட்டத் துரைக்கு அப்புவாகவே தொழில் புரிந்துவந்துள்ளார்.

அப்பு என்றால், சமையற்காரர், ஹெட்லி என்ற துரைக்கே அப்புவாக இருந்துள்ளார். துரைக்கு இடமாற்றம் கிடைக்கும் போதெல்லாம். அந்தோணியும் தன்னுடைய குடும்பத்துடனேயே துரையுடன் சென்றுவிடுவார்.

ஹெட்லி துரையோ, தொப்பிதோட்டம் (ஹட்டன்), வட்டவளை, மேட்லா, டிக்கோயா மணிக்கவத்தை,



எஸ்.சதீஸ்குமார்
ஊடகவியலாளர்

பொகவந்தலாவை செல்வக்கந்த, பொகவந்த லாவை தொங்கப் பத்தினி (பொகவான),

அக்கரைப்பத்தனை கிளாஸ்கோ, பலாங்கொடை விக்லி, பலாங்கொடை லங்காபரண ஆகிய தோட்டங் களிலேயே தோட்டத் துரையாக இருந்துள்ளார். அவருடன், பிரான்ஸிசும் அப்புவாகவே இருந்துள்ளார்.

அவ்வாறுதான், 1958ஆம் ஆண்ட ளவில் கொட்டியாகலைக்கு வந்துள்ளார். சுமார் 19 வயதான இளம்பருவத்தில் இருந்த பிரான்ஸிசுக்கு, தமது மக்களுக்கு எதிரான, இல்லை தமிழர்களுக்கு எதிராக ஆட்சியாளரினால் முன்னெடுக்கப்பட்ட அடக்குமுறைகளை பார்த்துக்கொண்டு பொறுமையாக இருக்கமுடியவில்லை.

அன்றைய காலத்தில் தான் "ஸ்ரீ" குழப்பம் ஏற்பட்டது. வாகனங்களின் முன்பாக உள்ள இலக்க தகட்டில் உள்ள தமிழ் எழுத்துக்கள் அழிக்கப்பட்டு சிங்களத்தில் ஸ்ரீ என்று எழுதப்பட்டது.

இதனால், நாடுமுழுவதும் தமிழர்கள் செறிந்துவாழ்ந்த பகுதிகளில், அதற்கு எதிரான குரல்கள் கிளம்பின, ஆட்சியா ளருக்கு எதிராக போராட்டங்கள் வெடித்தன. அவற்றை கட்டுப்படுத்துவதற்கு அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டு ஊரடங்குச் சட்டமும் அவ்வப்போது பிறப்பிக்கப்பட்டது.

ஊரடங்களை மீறுவோருக்கு பொலிஸாரின் துப்பாக்கிகளே பதிலளித்தன. மலையகத்திலும் இளைஞர்கள் பலர் துப்பாக்கி சன்னங்களுக்கு இரையாகினர்.

கொட்டியகலையிலும் போராட்டம் வெடித்தது. டெலிபோன் வயரை தாங்கிச் சென்ற தண்டவாள இரும்பையும், வளைத்து வீதிக்கு குறுக்காக வைத்த பலம்பொருந்தியவர்கள் கொட்டியாகல போராட்டத்தில் இருந்தனர்.

அவ்வாறான நிலையில் தான், பிரான்ஸிஸ், ஐயாவு, வைரவன் மற்றும் செல்வபெருமாள் ஆகிய நான்கு இளைஞர்களும் இணைந்து, "ஸ்ரீ" எழுத்துக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டம் உச்சக்கட்டத்துக்கு சென்றுள்ளது. பாதுகாப்பு தரப்பினரால் அதனை கட்டுப்படுத்தவே முடியவில்லை.

இறுதியில் உத்தரவை பெற்று, துப்பாக்கிகள் மூலம் பதில் கொடுத்துள்ளனர்.

தற்போது, பொகவந்தலாவை பொலிஸ் நிலையம் இருக்கின்ற, இடத்துக்கு முன்னால் பெரிய வாழைத்தோட்டம் இருந்துள்ளது. அந்த வாழைத் தோட்டத்துக்குள் மறைந்திருந்த பொலிஸார், இந்த நால்வர் மீதும் சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகங்களை 1958 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2ஆம் திகதியன்று மேற்கொண்டுள்ளனர்.

அதன்போது, தன்னுடைய வயிற்றில் துப்பாக்கி சன்னத்தை தாங்கிய ஐயாவு ஸ்தலத்திலேயே பலியானார். வைரவனுக்கு முழங்கையில் துப்பாக்கி சன்னம் சிறாய்த்து சென்றுள்ளது. அவரும் பின்னர் இறந்துவிட்டார். செல்வபெருமாளுக்கு வயிற்றுப்பகுதியில் பட்டதுடன் அவரும் மரணித்துவிட்டார்.

போராட்டத்தை முன்னின்று வழிநடத்திய பிரான்ஸிஸ் தன்னுடைய நெஞ்சில் துப்பாக்கி சன்னத்தை ஏந்திய வாறு, பொகவந்தலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தார்.

அவருடைய கல்லறை கூட பொகவந்தலாவையில் தற்போது இருக்கின்றது. எனினும், அவருடைய கல்லறையை சுற்றி, குடியிருப்புகள் தோன்றியமையால், அதனை பார்க்கவே முடியாதுள்ளது. விவரம் தெரிந்தவர்களுக்கு மட்டுமே அந்தக்கல்லறை இருக்கும் இடம் தெரியும்.

நெஞ்சில் துப்பாக்கி சன்னங்களை சுமந்தாவாறு, உரிமைப் போராட்டத்தில் மரணித்த, பிரான்ஸிசுக்கு, மாக்ரெட், மரியதாஸ், ஜோன், மெத்தியூ, பெனட், ஆரோக்கியசாமி மற்றும் அந்தோணியம்மா ஆகியோர் உடன்பிறந்தவர்களாவர். இவர்கள் எவருமே இன்று எம்முடன் இல்லை என்பதுதான் வருத்தமானதாகும்.

போராட்டத்தில் தன்னுயிரை மாய்த்த

நால்வருக்கான சவப்பெட்டிகளை கூட கொண்டுவர முடியாத நிலைமையே ஏற்பட்டது.

எனினும், அரசியல் போராட்டங்களில் முன்னின்னு உரிமை குரல்கொடுத்த மலையக அரசியலில் சிங்கங்கள் என்று வர்ணிக்கப்பட்ட, சௌமிய மூர்த்தி தொண்டமான், வீ. கே. வெள்ளையன் மற்றும் அஸீஸ் ஆகியோர் இணைந்து நான்கு சவப்பெட்டிகளை வாங்கி கொடுத்துள்ளனர்.

இதில், வியக்கக்கூடியது என்னவென்றால், ஊரடங்கு சட்டம், கெடுப்பிடிகள் மற்றும் பொலிஸாரின் கழுகுப் பார்வை ஆகியவற்றின் கண்களில் விளக்கெண்ணையை ஊற்றிவிட்டே இந்த துணிகர செயற்பாட்டில் இந்த மூவரும் ஈடுபட்டுள்ளனர்.

அதாவது, ஹட்டனில் வாங்கிய அந்த நான்கு சவப்பெட்டிகளையும் டிக்கோயா ஊடாக, சாஞ்சிமலைக்கு கொண்டுவந்து. நமது லெச்சிமி தோட்டத்தின் ஊடாக அரைத்தோட்டமான டின்சின்னுக்கு கொண்டுசென்று, தேயிலை மலைகளின் ஊடாகவே கொட்டியாகலைக்கு கொண்டுசென்றுள்ளனர்.

தற்போதைய நிலை மையில், மேற்குறிப்பிட்ட நால்வர் தொடர்பிலும் பலருக்கு தெரியாமல் இருந்தாலும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபக தலைவர் மறைந்த ஐயா, சௌமிய மூர்த்தி தொண்டமான், பிரான்ஸிஸ் குடும்ப அங்கத்தவர்களை ஒவ்வொரு வருடம், ஏப்ரல் மாதம் 2ஆம் திகதியன்று ஹட்டனுக்கோ அல்லது எங்காவது வரவழைத்து, அவர்களை கௌரவித்தமை ஒரு சிறப்பம்சமாகும்.

இன்றைய தலைவர்களுக்கு அவை தொடர்பில் எதுவுமே தெரிந்திருக்கவில்லை என்பதுதான் கவலையான விடயமாகும். எம்முடைய போராட்ட வரலாற்றில் பல விடயங்கள் மறைக்கப்பட்டு விட்டன. இன்னும் பல விடயங்களை மறுக்கப்பட்டுவிட்டன. எனினும், போராட்ட வரலாறுகளை மறுப்பதனால், எமது சமூகம் சார்ந்தவர்களுக்கே அது கெடுதலாக அமையும் என்பது திண்ணமாகும்.

ஊடகத்துறையின் உண்மைத்தன்மை இன்று வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறதா? என்பதற்கு விடைகாணும் வகையில் இந்தக் கருத்தை பதிவு செய்யலாம் என்று நினைக்கிறேன்.

ஊடகம் என்றால் என்ன? அது யாருக்காக எவ்வாறு செயற்படவேண்டும் என்ற அம்சங்கள் இன்று நடைமுறையில் உள்ளனவா? என்பதையெல்லாம் அலசிப்பார்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. ஏனெனில் மாணவர் மத்தியில் ஊடகத்துறையை கற்கவேண்டும் என்று ஆசை இருக்கிறது. தாம் ஒரு சிறந்த அறிவிப்பாளராகவர வேண்டும் என்று ஆசை இருக்கிறது.



# ஊடகத்துறையின் உண்மைத்தன்மை இன்று வெளிப்பட்டுக்கொண்டிருக்கிறதா?

ஏம் இந்திரஜித் - சிரேஸ்ட செய்தி முகாமையாளர், சூரியன் எப்.எம்

எல்லோரும் தம்மை மதிக்கவேண்டும் என்று ஆசை இருக்கிறது. ஆனால் இதற்காக ஊடகத் துறையில் எவ்வாறு பிரவேசிப்பது என்பதில் தெளிவு இல்லாமல் உள்ளது. அனைவரும் அறிவிப் பாளராக வந்து விட்டால் ஊடகத்துறையில் ஏனைய தொழில் அம்சங்களை யார் நிறைவேற்றப் போகிறார்கள் என்பது கேள்வியாக தொக்கி நிற்கிறது.

அடுத்ததாக அனைவரும் அறிவிப்பாளராகிவிட முடியுமா? என்றகேள்வியும் கேட்கப்படுகிறது. அதற்கும் மேலாக அறிவிப்பாளராக வருவதற்கு என்ன தகுதிகள் இருக்க வேண்டும் என்பதும் கேள்வியாக கேட்கப்படுகிறது.

அவ்வாறு ஊடகத்துறையில் பிரவேசித்துவிட்டால் அதில் பிரகாசிக்க முடியுமா? கேள்விக் குறியே. இவையாவற்றுக்கும் பதிலை தேடிக்கொண்ட பின்னர் ஊடகத்துறைக்குள் பிரவேசிப் பதே மாணவப் பருவத்தில் தற்போது இருப்பவர்களுக்கு கூறக்கூடிய ஆலோசனையாக இருக்கும். ஊடகத்துறையில் அறிவிப்பாளர் என்பது உண்மையில் மக்களுக்கு சேவை செய்யும் பிரதான பாத்திரம் என்பதை யாரும் மறுக்கமுடியாது. எனினும் யார் இந்த அறிவிப்பாளர் என்று தெரிந்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் மாணவப் பருவத்தினருக்கு உள்ளது.

வெறுமனே பாடல்களுக்கு தகவல்களை கூறுபவரே அறிவிப்பாளர் என்ற கருத்து பெரும் பாலான மாணவர்கள் மத்தியில் உள்ளது. எனினும் இது அறிவிப்புத் துறைக்கு பாரிய பின்ன டைவை தந்துள்ளது என்றே கூறவேண்டும். எந்த நிலைமையையும் சமாளித்து எதனையும் எளிதாக விளங்கிக்கொண்டு அதனை சமூகத்துக்கு ஒப்புவிக்கக் கூடிய அறிவிப்பாளர் சிறந்த அறிவுத்திறனைக் கொண்டிருக்கவேண்டும். அதற்காக அவர் கடுமையாக ஆயத்தப்படுதல் வேண்டும்.

எனவே வெறுமனே அறிவிப்பாளர் என்ற நிலையை நோக்காமல் அறிவுடையவர்களாக தம்மை மாற்றிக் கொள்ளவேண்டியது இன்றைய மாணவர்களின் கடமையாகும். அதே நேரம் ஊடகத்துறையில் அறிவிப்பாளர் மட்டுமன்றி, செய்தித்துறையில் தொலைக்காட்சித் துறை யில் என்று பார்க்கும்போது பல வாய்ப்புக்கள் உள்ளன. ஊடக தொழில்நுட்பத் துறையில் பல வாய்ப்புக்கள் உள்ளன.

எனினும் அதனை மாணவப் பருவத்தினர் எண்ணிப் பார்ப்பதில்லை என்பது ஒரு குறை யாகவே உள்ளது. இந்த துறைகள் இன்று உயர்ந்த தொழில் வாய்ப்புக்களைத் தருகின்ற அதே நேரம் சமூகத்திலும் உயர் அந்தஸ்தை வழங்குகின்றன.

எனவே மாணவர்கள் ஊடகத்துறையை தெரிவு செய்யும்போது அதற்கான ஆலோச னைகளை பெற்றுக்கொள்வது அவசியம். இதன்போதே அவர்கள் சரியான தெரிவை நோக்கிநகரக் கூடியதாக இருக்கும். இதுவே ஊடகத்துறையை முன்னேற்றும். அதேநேரம் ஊடகவியலாளர்களுக்கும் முன்னேற்றத்தை தரும்.

# சமூக மாற்றத்தின் கருவூலமாய் கந்தலோயா

## அறிமுகம்

இருபத்தைந்தாண்டு விழாவினை விமர்சையாக மகிழ்ச்சியோடு கொண்டாடும் கெர்கஸ்வோல்ட் இல.2 தமிழ் வித்தியாலயத்தில் 1995ம் ஆண்டு ஜனவரி மாதம் விழுந்து எழுந்த காயங்களோடு அழுகையோடு கால் பதித்திருந்தேன். சீடா செயற்றிட்டத்தில் 1992ம் ஆண்டு மீள ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையின் 25 வருட வரலாற்றில் 1995-2005 வரை 11 வருடங்கள் பாடசாலையின் மாணவனாகவும், 2006- 2010 வரை பிரத்தியேக கல்வியகத்திலும் 2008 - 2010 வரை பாடசாலையிலும் கணித பாடத்தினை கற்பித்தும் இந்த பாடசாலையின் அரவணைப்பில் கதகதப்பில் வாழ்ந்திருக்கிறேன் என்பது மகிழ்ச்சிக்குரியது.

2002ம் ஆண்டு தசாப்த விழா ஒழுங்கமைக்கப்பட்டபோது மாணவனாக பங்களிப்பு செய்திருந்தோம். 2012ல் இருபதாவது ஆண்டு பூர்த்தி விழா செய்யப்பட வேண்டும் என முயற் சித்தபோதும் சாத்தியமாகாமல் போனது. இன்று 2017ம் ஆண்டு கால் நூற்றாண்டு வரலாற்றை இவ்வளவு ஆடம்பரமாக பழைய மாணவர்களான எங்களின் ஒழுங்கமைப்பில் கொண்டாடுவது பெரும் பாக்கியமாகும்.

நான் எழுதபோகும் கட்டுரையும் எமது பாடசாலை போன்றே எம்மிடமிருந்த ஒரு சில பௌதீக வளங்கள் கூட இல்லாத நிலையில் வெறு மனே கட்டிடங்கள் மாத்திர மல்லாமல் ஒரு சமூக மாற்றத்தினை எழுச்சியினை ஏற்படுத்தியிருக்கும் ஒரு கல்விக் கூடம் தொடர்பானதாகவே அமையப்போகிறது.

முகம் பார்த்து பழகிக் கொள்வில்லை என்றாலும் முகமறியாதவர்களுடனும் ஒரு பிணைப்பினை தோற்றுவிக்கும் சக்தி கலைதுறைக்குண்டு. அதுபோலவே "அவமானப்பட்டவனின் இரவு" எனும் நூலை எழுதிய எழுத்தாளராகவே சகோதரர் கருணாகனை அறிவேன். சமூக வலை தளங்கள் சீரழிவை மிகைப்படுத்தினாலும் ஓரிரு நன்மைகளும் உண்டு என்பதற்கு சான்றாக நண்பர் கருணாகரனின் முகபுத்தகத்தில் கந்தலோயா பற்றிய பதிவொன்று பதிவேற்றப்பட்டிருந்தது. குறித்த பதிவு இன்றுவரை 960 நபர்களால் ஏனையொருக்கு (Shares) பகிரப்பட்டிருக்கிறது.

இந்த பதிவிற்கான பின்னணி ஆய்விற்குட்படுத்தப்பட வேண்டியது. மலையக மக்கள் எனும் இந்திய வம்சாவளியினர் நுவரெலியா, பதுளை, கண்டி, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, மாத்தறை, மொனராகலை, குருணாகல், காலி ஆகிய பதினொரு மாவட்டங்களிலும் இம்மாவட்டங்களுக்கு அப்பால் எமது நாட்டில் ஏற்பட்ட பஞ்சம், இனக் கலவரங்கள், யுத்தம், மற்றும் தொழில் இன்மை போன்ற காரணங்களால் வடகிழக்கு உட்பட சில மாவட்டங்களில் உதிரிகளாகவும் வாழ்ந்து வருகின்றனர். இந்த மாவட்டங்களில் நுவரெலியா, பதுளை, கண்டி மாவட்டங்களில் அரசியல் ரீதியாகவும், நிர்வாக கட்டமைப்பு ரீதியாகவும் ஓரளவேனும் மலையக மக்களின் பிரதிநிதித்துவம் உறுதிபடுத்தப் பட்டாலும் ஏனைய மாவட்டங்களில் பெரும்பான்மை மக்களோடு ஐதாக வாழ்தலினால் குறித்த பிரதிநிதித்துவம், நிர்வாக கட்டமைப்பு போன்றன உறுதி செய்ய முடியாத நிலை நிலவுகின்றது.

அதேவேளை நிர்வாக கட்டமைப்பில் இரு மாவட்டங்களுக்கிடையில், இரு பிரதேச செயலகங்களுக்கிடையில், இரு பிராந்தியங்களுக்கிடையில், இரு இனங்களுக்கிடையில் எல்லை பிரதேசமாக உள்ள பிரதேசங்கள் மிகவும் பின்தங்கிய பிரதேசங்களாகவும், அரச மற்றும் தனியார்

சுப்பையா கமலதாசன்
உதவி செயலாளர்
பழைய மாணவர் ஒன்றியம்

துறையினரின் வளப்பகிர்வு அற்ற அல்லது குறைந்த பிரதேசங்களாகவும் காணப்படுகின்றன. உதாரணமாக அம்பகமுவை பிரதேச செயலகத்திற்குட் பட்ட பகுதியில் தியகலை வழியாக சிவனொளி பாத மலைக்கு செல்லும் வழியில் தெப்பட்டன் எனும் தோட்டம் உள்ளது. விதுலிபுர பகுதியில்



வாழும் பெரும்பான்மையினத்தினது எல்லை பிரதேசமாகவும் மவுசாகலை பகுதியில் வாழும் சிறுபான்மை மக்களின் எல்லை பிரதேசமாகவும் இருப்பது இந்த தெப்படன் தோட்டமாகும். மிகவும் பின்தங்கிய பிரதேசம்.

அதேபோல நுவரெலியாவிற்கும் கண்டிக்கும் எல்லை பிரதேசமாக காணப்படும் ஹங்குறாங்கெத்தை பிரதேசம் ஹங்குறாங்கெத்தை பிரதேச செயலகத்திற்குட்பட்டதெனினும் பெருந் தோட்ட மனிதவள நிதியத்தில் கண்டி பிராந்தியத்திற்க்கு கீழாகவே நிர்வகிக் கப்படுகிறது. விக்டன், டெம்பஸ்டோ இரத்தினபுரிக்கும் காலிக்கும் எல்லைப் பிரதேசமாக விளங்கும் தும்பர, இரத்தினபுரி வெல்லங்கல, மொனராகலை படல்கும்புர என இந்த வரிசை நீளுகின்றது.

இந்த வரிசையிலேயே கேகாலை அரச நிர்வாக கட்டமைப்புக்கு கீழாக உள்ள கந்தலோயா எனும் பிரதேசம் கேகாலை, நாவலபிட்டி ஆகிய பிரதேசங்களின் எல்லை பிரதேசமாக அமைந்துள்ளது. நிர்வாக கட்டமைப்பில் கேகாலையெனினும் அவர்களுடைய தேவை புலக்கங்கள் நாவலப்பிட்டி நகரத்தினையே மையமாகவே கொண்டுள்ளது. இந்த கந்தலோயாவும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் கண்டி பிராந்தியத்திற்கு கீழாகவே நிர்வகிக்கப்படுகின்றது. மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபையினால் (Janatha Estate Development Board) JEDB நிர்வகிக்கப்படும் இந்த கந்தலோயா தோட்டம் கண்டி இராசாதானி வரலாற்றிலும் முக்கியம் கொள்வதாக சொல்லப்படுகிறது. அதேபோல இலங்கையின் ஏற்றுமதி பொருளாதாரத் திலும் முக்கிய இடம் கொள்கிறது.

இலங்கையின் பெருந்தோட்ட கைத்தொழில் துறையாக தேயிலை, தென்னை, இறப்பர் காணப்படும் அதேவேளை ஏனைய சிறு பயிர் செய்கையும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 1000 ஏக்கரில் பயிரிடப்பட்ட ஏலம் தெற்காசியாவிற்கு அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட்ட இடமாகவும் கந்தலோயா கொள்ளப்படுகிறது. இன்று உதிரிகளாக ஏல பயிர் செய்கை காணப்படும் அதேவேளை தேயிலையும் வினைத்திறனான உற்பத்தியின்மையால் பகிர்ந்தளிக்கப்பட்டு சிறு உடமையாளர் களுக்கு வழங்கப்படுகிறது. அங்கேயே வாழும் மக்களில் ஒரு சிலர் பகிரப்படும் தேயிலை காணியினை பராமரிக்கும் பணியினை முன்னெடுத்தாலும் அங்குள்ள நிர்வாகம் தொழிற்சாலை ஆகியன ஒரு கிலோ தேயிலைக்கான சந்தை பெறுமதி யிலும் பார்க்க சரிபாதி விலைக்கே தருமாறு நிர்பந்திக்கிறது.

கந்தலோயா பாடசாலையிலிருந்து 8 கிலோ மீற்றர் காட்டு வழியாக மேமலை எனும் தோட்டத்திற்கு செல்ல வேண்டி யுள்ளது. கால் நடை தவிர்ந்து கட்டைவண்டி செல்வதற்குகூட பாதை வசதி இல்லாத நிலையில் வருமானத் திற்கான வழிகளும் நலிவடைந்த நிலையில் குளியாப்பிட்டியில் உள்ள கோழி பண்ணைக்கு தொழில் நிமித்தம் சென்று பலர் அங்கேயே குடியேறியு முள்ளனர். இதுபோன்ற மலையகத்தில் இடம்பெறும் தொழில் ரீதியான இடம்பெயர்வுகள் எதிர்காலத்தில்

இருப்பினை கேள்விக்குறியாக்கும் என்பதால் முழுயான ஆய்வு செய்து அதற்கான மாற்று வழிகளினூடாக தீர்வு காண்பது அவசியமாகின்றது.

"...இந்தப்பதிவு குறைந்தபட்ச 05 மாணவர்களின் கல்விக்கு உதவுமென்று நினைக்கிறேன். அடக்கி ஒடுக்கப்பட்ட ஒரு சமூகத்திலிருந்து, கல்வி மறுக்கப்பட்ட அடிமை கூட்டத்திலிருந்து, இப்பதிவை முன்மொழிகிறேன். கந்தலோயாவின் ஒரு பிரிவுதான் மேமலை, எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இல்லை. 70 குடும்பங்கள் இருந்த தோட்டத்தில் தற்போது 17 குடும்பங்கள் மட்டுமே.

முடிந்தவர்கள் தோட்டம்விட்டு போய் விட்டார்கள். மேமலையில் இருந்து கந்தலோயா ஸ்கூலுக்கு 8*km* இவ்வளவு தூரத்தை நடந்தே வரவேண்டும். அடர்ந்த காடு. சிறுத்தை பயம் வேறு. இரண்டு வருடத்துக்கு முன் சிறுத்தை பிடிக்கப் பட்டது. மொத்தமாக 30 மாணவர்கள். பாடசாலை வருவதோ 04 மாணவர்கள். அதுவும், மழைகாலத்துக்கு ஸ்கூல் பக்கமே வர மாட்டார்கள். அவர்களுடன் பல முறை கலந்துரையாடியும் எந்த தீர்வும் கிடைக்கவில்லை. வயிற்றுக்கே கையேந்தும் நிலையில் இருப்பவர் களுக்கு, என்ன படிப்பு? இப்போதுமட்டும் படிப்பு தேவையென்று அவர்கள் சொல்ல வில்லை. அவர்களுக்கு படிப்புத் தேவை யென்று நாம்தான் உணரவேண்டும். நேரடியாக வந்து பார்த்தீர்களென்றால் இந்த நவீன அடிமைகளை காண்பீர்கள். 200 வருடங்களுக்கு முன் இந்தியாவி லிருந்து வந்த அதே நிலையில்... இவர்கள் கல்விக்கற்க வேண்டுமென்றால், கந்தலோயாவில் வந்து போடிங் இருக்க வேண்டும். ஒரு பிள்ளைக்கு 4000 ரூபா (ஒருமாதத்திற்கு) வேண்டும். நஷ்டத்தில் இயக்கும் கந்தலோயா தோட்டத்தில், ஒருகிழமைக்கு 03 நாட்களே வேலை. இதுல வேறு, போடிங் காசை எப்படி கட்டுவார்கள்? நேரடியாக உங்களிடம் எதிர்ப்பார்ப்பது என்ன? ஆகக்குறைந்து ஒரு வருடத்துக்கான ஒரு மாணவரின் போடிங் காசை, நல் உள்ளம் படைத்த ஒருவரால் பொறுப்பேற்க முடியுமென்றால், அதுவே பெரிய உதவியாக இருக்கும். அத்தனை மாணவர்களையும் என்பது, அப்புறமாக இருக்கட்டும். முதலில் ஒருவர் முன்வந்து ஒரு மாணவரை ஆகக்குறைந்து, 01 வருடத்துக்கு பொறுப்பேற்றாலே இந்தப் பதிவின் நோக்கம் எட்டக்கூடியதே.

அன்புடன்...

அ. கருணாகரன் "

இதுவே சகோதரர் கருணாகரனின் முகபுத்தக பதிவாகவிருந்தது. இந்த பதிவிற்கு பின் உதவுவதற்கு சில நல்லுள்ளங்கள் முன்வந்தாலும் தொடர்ச்சியாக இது சாத்தியப்படுமா? இதற்கான நிரந்த தீர்விற்கான வழி என்ன என்பது தொடர்பில் சிந்தித்தபோதே, அதற்கான தீர்வாக 8 கிலோ மீட்டர் தூரத்தில் நடந்து வரும் மாணவர்களின் குடும்பங்களுக்கு பாடசாலை அருகில் வீடமைப்பு திட்டத்தினை மேற்கொண்டால் சாத்தியமாகும் என்ற பொறி தட்டுப்பட்டது




அந்த அடிப்டையிலேயே கடந்த ஜனவரி 22ம் திகதி கந்தலோயாவிற்கு சென்றிருந்தோம். அதனமைவாக மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பழனி திகாம்பரம் அவர்களினால் தற்பொழுது பாடசாலை ஆசிரியர்களுக்கான 3 விடு திகள் உட்பட 27 வீடுகளை நிர்மாணிப்

பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் நாட்களில் அதற்கான நிர்மாண பணிகள் ஆரம்பிக்கப்படும்.

இந்த குறைகளை விளம்பரப்படுத்தி சந்தைப்படுத்தலை வரிவாக்கும் நோக்குடன் செயற்படும் சில ஊடகங்கள் இக்கட்டுரையில் இதற்கு பிறகான பாடசாலையின் வரலாற்று தடங்களை மறைத்து செய்திகளை பிரசுரித்துக் கொண்டார்கள், கொள்கிறார்கள் என்பதுதான் உண்மை.

சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்தில் மேமலையில் தோட்ட பாடசாலையொன்று காணப்பட்டதற்கான கட்டிட இடிபாடுகள் இன்றும் மேமலை தோட்டத்தில் காணக் கிடைக்கின்றது. இடிபாடுகளின் பின் கலந்தலோயா தோட்டம் கந்தலோயா பிரிவில் மரமொன்றுக்குக்கீழாக கல்வி செயற்பாடுகள் இடம்பெற்று வந்துள்ளன. மரம் முறிந்து விழுந்த நிலையில் இயங்கு நிலையில் இல்லாத தேயிலை தொழிற் சாலையில் பாடசாலை நடத்த அனுமதி யளிக்கப்பட்டு பல வருடங்களாக தரம் 8 வரை கல்வி செயற்பாடுகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன. இந்த காலப்பகுதியிலேயே முனியாண்டி கருணாகரன் ஆசிரியராக 2003ம் ஆண்டு பொறுப்பேற்றார்.

2006ம் ஆண்டு தெஹியோவிட்ட கல்வி வலயத்திற்குப்பட்ட இந்த பாடசாலைக்கு புதிதாக கட்டிடமொன்று கிடைக்கப் பெற்றுள்ளது. அதனைத்தொடர்ந்து 2011ம் ஆண்டு மற்றுமொரு கட்டிடமும் கிடைக்கப்பெற்றுள்ளது. 2003ம் ஆண்டு ஆசிரியராகவிருந்த கருணாகரன் 2011ம் ஆண்டு அதிபராகியுள்ளார். 216 மாணவர் களுடன் இயங்கும் இப்பாடசாலையில் கல்வியியற் கல்லூரிக்கு சென்றுள்ள 4 பேர் உட்பட 9 ஆசிரியர்களே உள்ளனர்.

2013ம்ஆண்டு கல்வி பொது தராதர சாதாரணத்தர வகுப்புகளை கொண்ட பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டு 2016ம் ஆண்டு உயர்தர வகுப்பினை கொண்ட பாடசாலையாகவும் உயர்ந்திருக்கிறது. உயர்ந்திருக்கிறது என்பதிலும் பார்க்க உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதே சாலப் பொருந்தும்.

2013ம் ஆண்டு கல்வி பொதுத் தராதர சாதாரணத்தர வகுப்பு ஆரம்பிக்கப்பட்ட வருடமே பரீட்சைக்கு தோற்றிய 11 மாணவர்களில் 9 பேர் உயர்தரத்திற்கு சென்றுள்ளனர். உயர்தரத்திற்கு சென்ற 9 மாணவர்கள் இவ்வருடம் 7 மாணவர்கள் உயர்தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்கு செல்லவிருக் கின்றனர் என்பது வரலாற்று சாதனையே. இது அதிபர் கருணாகரன் உட்பட ஆசிரியர்களின் மாணவர்களின் உயரிய அர்ப்பணிப்புக்கான சான்றாகும்.

2015ம் ஆண்டு பரீட்சைக்கு தோற்றிய 11 மாணவர்கள் உயர்தரம் கற்க தெரிவாகியிருந்தனர். கேகாலை மாவட்டத் திலேயே தமிழ் மொழி மூலமான பாடசாலைகளில் சித்தியடைந்த விகிதாசாரத்தின் அப்படையில் இரண்டாம் இடத்தினை பெற்றுக் கொண்டது. ஆசிரியர் பற்றாக்குறையினை நிவர்த் திக்கும் வகையில் பல்கலைக்கழக மாணவர்கள் வரவழைக்கப்பட்டு கற்பிக்கப்படுகின்றார்கள். இதற்கென மாதாந்தம் ஏறத்தாழ 50000 ரூபாவிற்கும் மேலதிகமாக பெற்றோர்கள் சேகரித்து கொடுப்பனவாக வழங்கி வருகின்றார்கள்.

ஒரு சமூகத்தின் மாற்றமானது கல்வியில் தங்கியுள்ளது என்றாலும் வெறுமனே ஏட்டுக் கல்வியில் மாத்திரம் தங்கிவிடவில்லை. இணைப் பாடவி தானங்களின் ஆற்றலை விருத்தி செய்தல், சமூக எழுச்சிக்கான தலைமைத் துவ பண்பினை வளர்த்தல், குறித்த சமூகத்தின் இலக்கிய, கலை, பண்பாட்டு பாரம்பரியங்களை ஆணவப்படுத்தல், வளர்த்தல் போன்ற சமூக பெறுமானங் களிலும் தங்கியுள்ளது. கல்வி பெறுபேறு களில் முதனிலை பெறும் பல பாடசாலைகள் இந்த சமூக பெறுமானங் களை வளர்த்தெடுப்பதில் தவறி விடுகின்றன.

நானறிந்த வகையில் கட்டயமாக கந்தலோயா தமிழ் வித்தியாலயம் என்பது ஒரு மாதிரி பாடசாலைக்கான அத்தனை தகைமையினையும் கொண்டுள்ளது. தகைமை எனும்போது பௌதீக வளங்களாக அல்லாது சமூக மாற்றத்தின் உந்து சக்தியாக அமைவது. அதனை நிறையவே கந்தலோயா பாடசாலை கொண்டுள்ளது.



2007ம் ஆண்டு இப்பாடசாலை அதிபர் ஆசிரியர்களால் நெறிப்படுத்தப்பட்டு, மாணவர்களால் மேடையேற்றப்பட்ட "நாங்கள் தலித்துக்கள்" என்ற நாடகம் அகில இலங்கை தமிழ் மொழித் தினத்தில் மூன்றாம் இடத்தை பெற்றுக் கொண்டது. 2012ம் அண்டு "நாங்கள் அடிமைகள்" எனும் நாடகம் அகில இலங்கை தமிழ் மொழித்தின போட்டியில் தேசிய மட்டத்திற்கு தெரிவானது. 2014ம் ஆண்டு தேசிய கணித நாடகவிழாவில் "வட்டத்தின் மையம்" என்ற நாடகம் முதலிடத்தை பெற்றுக் கொண்டது. இவை தவிரந்து விளையாட்டு போட்டியிலும் தேசிய ரீதியில் 3 தடவைகள் இப் பாடசாலை மாணவர்கள் பங்கு பற்றியுள் ளனர். இவை இப்பாடசாலை இணைப் பாடவிதானங்களோடு தொடர்புடையவை யென்றாலும் கந்தலோயா", "மலையகம்" என்ற இருப்பினை உறுதி செய்யும் வகையில் சமூக வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்கத் தவரவில்லை

இந்த பாடசாலையின் விளையாட்டு போட்டிக்கான இல்லங்களே வித்தியா சமாக "கொ.நடேசய்யர்", "ஸி.வி.வேலுப் பிள்ளை" என பெயரிடப்பட்டுள்ளன. 2017ம் ஆண்டு இடம்பெற்ற இல்ல விளையாட்டு போட்டியில் 200 ஆண்டுகளுக்கு முன் எமது மூதாதை யர்களை அழைத்து வரும்வேளை கடலில் மூழ்கிய "ஆதிலெச்சுமி" கப்பல் மற்றும் ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தின் மூலமாக மலையக மக்களை இரு கூறாக பிரித்து இந்தியா விற்கு அனுப்பியவேளை புகையிரதங் களில் ஓலமிட்டு அழுது ஒப்பாரி வைத்து இலங்கைக்கும் உறவுகளுக்கும் விடை கொடுத்தனர். இதன் நினைவான "ஒப்பாரி கோச்சி" ஆகியனவே கருபொருளாக கொண்டமைந்திருந்தன.

கந்தலோயா தோட்டத்தின் நூறு வருடகால வரலாற்றை "எந்தலோயா போனாலும் கந்தலோயா போகாதிங்க" எனும் ஆவண நாடகமொன்றினை தயாரித்து அரங்கேற்றியிருக்கின்றார்கள் என்பது தன் மண் மீதான ஈடுபாட்டையும் விருப்பத்தையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. நாடக வரலாறு "போலச் செய்தல்" விருந்து ஊற்றெடுப்பதை போல மலையக இலக்கியமும் நாட்டார் பாடல்களிலிருந்து தொடக்கம் கொள்கிறது. அத்தகைய மலையக இலக்கிய ஆரம்ப வடிவங்கள் உரிய முறையில் ஆவணப்படுத்தப் படாததன் காரணமாக அழிவுற்று வரும் நிலையில் மலையகத்தில் இருபத்துக்கும் மேற்பட்ட தோட்டங்களுக்கு சென்று ஆயிரத்துக்கும் மேற்பட்ட நாட்டார் பாடல்களை காணொளியாக, ஒலிவடிவமாக செய்து ஆவணப்படுத்தியள்ளனர்.

இந்திய வம்சாவளியினரின் வருகை தொடங்கி இன்று மலையகம் எனும் தேசிய முன்வைப்பு வரையான



மலையகத்தின் ஒட்டமொத்த வரலாறையும் அங்குள்ள ஒவ்வொரு மாணவர்களும் பெற்றோர்களும் தெரிந்து அறிந்து வைத்திருக்கின்றார்கள் என்பதுதான் சகோதரர் அதிபர் கருணாகரனின் சமூக புரட்சி. ஒரு மனிதன் தான் வாழும் சூழலையும், தான் வாழும் சமூகத்தையும் முற்றிலுமான அறிந்து

கொள்கின்ற பொழுதே சமூக மாற்றத்திற்கான வேட்கை ஊற்றெடுக்கும்.

"அடித்தள மாந்தரின்
வழக்காறுகள்
களைந்து போகாமல்
சிந்தனை தன்வயமானது.
விடுதலை கிடைக்கும் வரை
இந்தக் கடுப்பு எங்ஙனம் குறையும்?
மனிதனின் மகத்தவத்தை
விளிம்புக் கூட்டம்
விளங்கிட வேண்டும்.
இடைவெளி கிடைக்கின்ற தருணம்
இடத்தை நிரப்புவதற்கன்றி
தலைமைத்துவம்
உருவாகிட வேண்டும்.
அது,
உடலிலும் உள்ளத்திலும்
குடியிருக்க வேண்டும்.
மக்களுக்கான தலைமை
தாழ்நிலையிலிருந்து முகிழ்ந்திட
வேண்டும்.
அப்போதுதான்
அதிரும் இந்தப் பூமிப்பந்து.
பள்ளங்களை நிரப்பிட
மேடுகள் உடைந்து
வேறுபாடுகள் களைந்து
அனைத்தும்
சமவெளியாகும்.
அக்கணம்
இந்த மானுடம் ஜெயிக்கும்."

இக்கவிதை, ஈழத்து இலக்கியத்தில் முக்கிய ஆளுமையாகவிருக்கும் ஏ.பி.கோமஸ் அவர்களின் எட்டியாந் தொட்டை பிரதேசத்திலிருந்து இளைய தலைமுறை எழுத்தாளராக முகிழ்ந்தி ருக்கும் அதிபர் எம். கருணாகரன் அவர்களின் "அவமானப் பட்டவனின் இரவு" எனும் நூலில் "உரிய இடத்திலிருந்து" என்ற தலைப்பில் பதியப்பட்டுள்ளது.

கவிஞர் கருணாகரன் கூறுவது போல தலைமைத்துவமும், அதற்கான அடித்த ளமும் "உரிய இடத்திலிருந்து" இடப்பட வேண்டும். இவை அனைத்தும் சாத்தியமாகியது தனிநபரான அதிபரால் மட்டுமல்ல... பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் சமூக நலன் விரும்பிகள் ஆகியோரின் கூட்டு முயற்சியே. அத்தோடு பாடசாலைக்கு உள்ளக வெளியக அரசியல், செல்வாக்கு செலுத்தவில்லை என்பதே ஒட்டுமொத்த வெற்றிக்கான காரணம்.

சமூகத்திற்கான நற்பிரஜையை... சமூகத்திற்கான தலைமைத்துவத்தை உருவாக்கவேண்டிய சமூகப் பொறுப்பு பாடசாலைக்குண்டு. இந்த சமூக பொறுப்பினை கந்தலோயா பாடசாலை நிறைவேற்றி வருகின்றது.

எதிர்காலத்தில் என்றோ ஓர்நாள் கந்தலோயா அவமானப்பட்டவனின் இரவாக அல்லாமல் கௌரவிக்கப் பட்டவனின் வரவாக அமையும் என்பதில் ஐயமில்லை!

# கொலைச்சிந்தும் கலகக்குரலும்

நாட்டாரிலக்கியங்கள் பல்வேறு வடிவங்களில் அம்மக்களின் உணர்வுகளையும் பிரச்சினைகளையும் வெளிப்படுத்தி நிற்கின்றன. இருபத்தோராம் நூற்றாண்டிலும் தனக்குரிய செழுமையுடன் நாட்டாரிலக் கியங்கள் நிலைத்திருப்பதற்கு காரணம் அது பொதுமக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி இயங்குவதாலாகும். இருபதாம் நூற்றாண்டில் பெருவளர்ச்சி பெற்ற நாட்டார் பாடல் இசைவடிவம் "சிந்து" ஆகும். அது நொண்டிச்சிந்து, காவடிச்சிந்து, கொலைச் சிந்து என்று பலவுருக்கொண்டு விரிவடைந்து உள்ளது. இவற்றில் கொலைச் சிந்து ஏனையவற்றிலிருந்து வித்தியாசப்படுகிறது. அதாவது கொலைகள் குறித்துப் பாடப்படும் சிந்து "கொலைச்சிந்து" என்று பொருள் கொள்ளப்படுகிறது. இவ்வகையான கொலைச்சிந்துகளை கொலைகளை கண்முன்னே நேரடியாகப் பார்த்தவர்களும் பாடுவர். அக்கொலை பற்றிய நிகழ்வுகளை கேட்டு, விடயங்களை விசாரித்து பாடப்படுவதும் உண்டு. கொலைகளை அல்லது கொலைச் செய்திகளைப் பாடுபொருளாகக் கொண்டிருப்பதால் இதனை கொலைப்பாட்டு, வேடிக்கைச் சிந்து, விபரீதச் சிந்து, தற்கொலைப் பாட்டு என்றும் அழைத்தனர்.

தமிழ்நாட்டு நாட்டாரியல் துறையில் கொலைச் சிந்து தனிக்கவனம் பெற்றுள்ளது. "கொலைச்சிந்து" என்ற ஒரு பாடல் வடிவம் தமிழ்நாட்டின் வட மாவட்டங்களில் உள்ளதாக நாட்டாரியல் சிறப்பாய்வாளர் நா. வானமா மலை கூறுகின்றார். (மு. சிவலிங்கம், மலையகத் தமிழ் நாட்டுபுறப் பாடல்கள், பக். 73) எனினும் தமிழகத்து கொலைச்சிந்துகள் பாலியற் பிரச்சினைகள், குடும்பத் தகராறுகள், களவு, ஊர்க்கலவரம், தற்கொலை, வெள்ளம், புயல், இயற்கை அனர்த்தங்கள் போன்ற கருப்பொருள்களைக் கொண்டதாகவே பாடப்பட்டது. துறைமுகத் தொழிலாளர் போராட்டம் தொடர்பாகவும் கொலைச்சிந்து பாடப்பட்டதாக மலையக நாட்டாரியல் ஆய்வாளர் A.C.R. ஜோன் குறிப்பிடுகிறார். மு. நித்தியானந்தனின் துஸ்கிந்த சாரலில் என்ற ஜில் சுல்தான் பற்றிய தொடர் கட்டுரையொன்றில் "இன்றைய துப்பறியும் கதைகளுக்கு ஈடாக மிகவும் விறுவிறுப்புடன் செய்திகளைத் தொகுத்து கேட்போரை ஈர்க்கும் வண்ணம் கொலைச் சிந்துகளை அமைத்தனர். சிந்துவின் நடையமைப்பு, செய்திகளை விரைவுடன் வனப்பாக வெளியிடக்கூடிய தன்மை ஆகியன மக்களை மிகவும் ஈர்த்தன" (அரு. மருததுரை, தமிழில் கொலைச்சிந்து, *1991*) என்று மேற்கோள் காட்டுகிறார். இம்மேற்கோளில் கொலைச்சிந்தின் முக்கியத்துவத்தை உணரலாம்.

இலங்கையில் ஏ.பி. நெயினா முகம்மது (இலங்கையில் நடந்த கலகம்), கதர்வேல் பிள்ளை (சிலோன் கலக சிந்து) போன்றோர் கலகங்களைப் பாடியுள்ளனர். மலையகத்தில் பலர் கொலைச்சிந்துகளைப் பாடியுள்ளனர். ரொசல்லையைச் சேர்ந்த எஸ் ராஜப்பா பன்னிரெண்டு பேரின் படுகொலைப் பற்றி பாடியுள்ளார். இதுதவிர கோவிந்தசாமி தேவர், எஸ்.எஸ் நாதன், ஏ.எம். ராமையா தேவர், எஸ்.ஆர்.எஸ். பெரியாம்பிள்ளை, கே.கே.எஸ். ஜில் போன்றவர்களும் கொலைச்சிந்துகளை பாடியுள்ளனர். இவர்களுள கே.கே.எஸ் ஜில்லின் பாடல்கள் கொலைச்சிந்தாக மட்டுமன்றி மலையக இலக்கியத்தில் கலகக் குரலாகவும் வெளிப்படுகின்றது. குடும்ப பிரச்சினை களையும். குறிப்பிட்ட சில கொலை நிகழ்வுகளையும் பிரதான பாடுபொருளாகக் கொண்டு பாடப்பட்ட கொலைச்சிந்துகள் மலையகத்திலேயே தீவிரமான அரசியல், சமூகப் பிரச்சாரத்துக்காக கையாளப்பட்டது. இவ்வகையான பிரச்சாரங்களை தமது கொலைச்சிந்தின் வழியாக அதிகமாகப் பாடியவர் கே.கே.எஸ். ஜில். அவரது பாடல்கள் குறித்தும் கொலைச்சிந்தின் கலக வெளிப்பாடு குறித்தும் ஆராய்வதே இக்கட்டுரையாகும்.

பதுளையைச் சேர்ந்தவரான கே.கே.எஸ். ஜில் அவர்கள் 1905-1979 வரை வாழ்ந்தவர். பதுளை நகரத்தில் கூறு வெற்றிலை விற்றுக்கொண்டு நாட்டார் பாடல்களைப் பாடித்திரியும் ஒரு வீதிப்பாடகராகவே காணப்பட்டார். நாட்டார் பாடல்களை இயற்றிப்பாடும் இவர் பாடலோடு நகைச்சுவையாகப் பேசுவதும்,

ஆடிக்கொண்டும், கிண்டலாக பேசுவதும் இவரது பாணி. இவரது நளினத்தை பார்த்ததும் வெற்றிலையுடன் அவரது பாட்டுப் புத்தகத்தையும் சேர்த்து வாங்கிக் கொண்டவர்கள் மக்கள்.

"வாசமுள்ள ஜில்
வாயில போட்டு மெல்
உன் அக்காகிட்ட சொல்.

என்று வெற்றிலை விற்கும் ஜில் தான் பாடிய பாட்டுப்புத்தகங்களை

"கன்னி சொலை கேசு
விலை சொன்னேன் ஆறு காசு
ஏறாவூருக் கேசு
எடுத்துச் சொன்னேன் காசு
பாவலன் ஜில் சுல்தான் பாட்டு
இதை வாங்கி மனதில் ஊட்டு"

என்று ஓசையுடன் பாடி தனது பாட்டுக் களை பிரச்சாரம் செய்கிறார்.

ஜில் இஸ்லாமியராக இருந்தாலும் மலையக சமூகம் குறித்து முற்போக்காக சிந்தித்தவர். பதுளையில் வாழ்ந்தாலும் மலையகப்பகுதிகளில் பல இடங்களில் நடக்கும் பிரச்சினைகளையும் பாடியுள்ளார். 1960களில் மலையகத்தில் தொழிற்சங்க எழுச்சிக்காலமாகும். அக்காலத்தில் அரசியல் கட்சிகள், அல்லது அரசியல் தலைவர்கள் தூண்டச் செய்யாத எழுச்சியை இவரது பாடல்கள் தூண்டியுள்ளன. சாதாரண நடைபாதை வியாபாரியாகவோ, அல்லது கடைக்காரராகவோ இருந்த இவர் இவ்வாறான பாடல்களைப் பாடி பிரச்சாரம் செய்ய வேண்டியதன் அவசியமென்ன? இதனை அவரது பாடல் புத்தகத்துக்கு அவர் வழங்கிய குறிப்புரை தெளிவுபடுத்துகிறது.

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே!

"நீங்கள் நன்கு உணர்ந்து பாருங்கள் நம்மை கூட்டி வந்த பாட்டன், பூட்டன், கங்காணி கூட்டம் கூட்டி வந்தார்கள். அவர்கள் இன்று தேயிலை தூருக்கும் றப்பருக்கும் உரமாகிவிட்டார்கள். ஆகை யினால் தாங்கள் தயவுசெய்து பாட்டாளி களுடன் ஒத்து வாழவேண்டியது கடமை. கங்காணியாய் இருந்தாலும் சரி, கணக்கப் பிள்ளை கே.பியாய் இருந்தாலும் சரி, பாட்டாளி மக்கள் தொழிலாளியாய் இருந்தாலும் சரி, எல்லோரும் மனிதர்கள் தான்.

இவ்வுரையில் மலையக சமூகம் குறித்த வரலாற்றையும் அவர்கள் மீது ஏற்படுத் தப்பட்ட அதிகாரத்துவத்தையும் தெளிவாக உணர்ந்த ஒரு மனிதராக ஜில் விளங்குகிறார். 1957 முதல் 1969 வரையான காலப்பகுதியில் ஏறத்தாழ 19 நாட்டார் சிந்துகளை இயற்றி யுள்ள ஜில் சுல்தான் அவர்களது கொலைச் சிந்துகளில் பிரபல்யமான சிந்துகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

i அட்டன், வெலிஓயா குறூப் தண்டுகலாவத்தையைச் சேர்ந்த கே.பி. வையாபுரிப்பிள்ளையின் படுகொலைச்சிந்தானது 1957 மார்ச் மாதம் 31ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு நடந்த படுகொலை தொடர்பான இச்சிந்தானது இரண்டு பதிப்புகளில் வெளியாகியுள்ளன.

ii. 1955.09.15 ஆம் திகதி திக்குவலை புதுக்காடு மேல்கணக்கு மூக்கன் கணக்கப்பிள்ளை, வேலாயுதம் கணக்கப்பிள்ளை, ராமலிங்கம் கணக்கப்பிள்ளை ஆகிய மூவரும் செய்துவந்த அட்டகாசங்களுக்காக தொழிலாளிகள் கந்தன், செல்லையா, வேங்கடாசலம் ஆகியோர்களால் கொடுக்கப்பட்ட பரிசு என்ற தொனியில் பாடப்பட்டது.

iii. மூன்று கணக்கப்பிள்ளைகளின் அட்டகாசம் பாட்டாளியின் சபதம் மூக்கன் கணக்கப்பிள்ளை, வையாபுரி கணக்கப்பிள்ளை, அட்டாம்பிட்டி வேல் கணக்கப்பிள்ளை ஆகியோரைப் பற்றிப் பாடப்பட்டது.

iv. நாவலப்பிட்டிக்கு அருகாமையிலுள்ள லெட்சுமி தோட்டத்தில் உரிமைக்காக உயிர்கொடுத்த பி. செல்லையா படுகொலைச்சிந்து, 1959.10.23 அன்று நாவலப்பிட்டி லெட்சுமி தோட்டத்தில் நடைபெற்ற தொழிற்சங்கப் போராட்டத்தில் உயிர் நீத்த பி. செல்லையா என்னும் தொழிலாளி பற்றி பாடப்பட்டது.

v. புதுத்தோட்டம் தொழிலாளி கொம்பாடி, பொன்னையா தோழர்கட்டு, உடப்புசல்லாவை, பகளவத்தை பஜாரில் நடந்த பரிதாபக் கொலைச்சிந்து, 1957.07.13ம் திகதி உடப்புசல்லாவை பகளவத்தை பஜாரில், புதுத்தோட்டத்தைச் சேர்ந்த

தொழிலாளிகளை கொம்பாடி, பொன்னையா ஆகியோர் தொழிற்சங்கங்களுக்கிடையிலான போட்டியில் சுட்டுக்கொல்லப் பட்டதைப் பற்றி பாடப்பட்டது.

vi. நுவரெலியா பகுதியில் அமைந்தி ருக்கும் மசா பணியகணக்கு வேலுத்தேவர் கே.பி படுகொலைச் சிந்து, *1966.11.21* ஆம் திகதி பட்டப்பகலில் படுகொலை செய்யப்பட்ட வேலுத்தேவரைப் பற்றிப் பாடப்பட்டது.

இச்சிந்துகள் பத்து பக்கங்களுக்கு மேற்படாத வகையில் அச்சிடப்பட்டு மிகவும் மலிவாக பாடிப்பாடி விற்கப்பட்டதோடு சிலச் சிந்துகள் 2000 பிரதிகள் வரை விற்கப்பட்ட தாகவும் அறியமுடிகிறது இந்த கொலைச் சிந்துகளின் முக்கிய பண்புகளாக பின்வரும் விடயங்கள் வெளிப்பட்டன.

- தொழிலாளர்களுக்கு எதிராகச் செயற் படும் தோட்ட அதிகாரிகளை சாடிப் பாடுதல்.
- தொழிலாளர்களின் எதிர்ப்பு மற்றும் வெற்றிகளை மகிழ்ச்சியாகப் பாடுதல்.
- தொழிலாளர் சார்பாக நின்று பாடுதல்.
- இக்கொலைச் செயற்பாடுகளை பிரச்சாரப்படுத்திப் பாடுதல்.

**"தண்டுகலா தோட்டத்திலே**
**திண்டு முண்டு கணக்கப்பிள்ளை**
**துண்டு துண்டா வெட்டிடாருங்க**
**யாரோ தாங்க**
**கண்ட துண்டமாக போச்சிங்க**
**கழுத்து முண்டம் கைலாசம் சேந்துரிச்சிங்க"**

(i. அட்டன் வெலிஓயா கொலைச்சிந்து)

**"புதுக்காட்டு மேக்கணக்கில் போட்ட போடுங்க**
**கணக்கன் பாட்டை கேளுங்க**
**கையுமே துண்டு ரெண்டுங்க**
**அடடா வெட்டு ஒன்னுங்க -சேர்ந்த**
**கணக்கன் பாடு திண்டாட்டமே தாங்க**
**நன்றாய் கேட்டு பாருங்க"**

(ii, திக்குவலை புதுக்காடு கொலைச்சிந்து)

மேலே எடுத்துக்காட்டப்பட்ட இவ்விரண்டு சிந்துப்பாடல்களும் மிகவும் பிரபல்யமானவை, மக்கள் மத்தியில் இன்றும் நிலைத்திருப்பவை. இப்பாடல்கள் இரண்டும் தொழிலாளர்களுக்கு அநீதி இழைத்த மற்றும் தொழிலாளர்களுக்கு கொடுமைகள் புரிந்து வந்த தோட்ட கணக்குப்பிள்ளைகளை தொழிலாளர்கள் வெட்டிக் கொலை செய்ததைப் பற்றிப் பாடப்பட்டவை. இந்த பாடல்களில் வரும் சொற்கள் தொடக்கம் பாடும் முறை வரையில் மகிழ்ச்சி பிரவகித்து கிடப்பதை காணலாம். மேலும் இப்பாடலில் தொழிலாளரின் எதிர்ப்பு வெளிப்படுவதையும் நேரடியாக அறியலாம். இப்பாடல் தொழிலாருடன் சம்பந்தப்பட்டிருந்தாலும் அவர்கள் பாடவில்லை. அவர்களின் சார்பாக நின்று ஜில் குரல் கொடுக்கிறார். இங்குதான் அவரது பாடல்கள் கலகமாகவும் பிரச்சாரமாகவும் வெளிப்படுகின்றன.

**"அட்டகாசம் பெருத்துப்போச்சி**
**அதிர்வெட்டும் அதிகமாச்சி**
**பட்டம்பெற்ற காவல்காரன்**
**படுகொலையும் செய்யலாச்சி**
**படுகொலையாச்சி செல்லையா**
**உயிருமே போச்சி"**

(iv, நாவலபிட்டி செல்லையா படுகொலைச்சிந்து)

இப்பாடல் தொழிற்சங்க உரிமை கோரி நாவலபிட்டி லெட்சுமி தோட்டத்தில் நடந்த போராட்டத்தில் உயிரிழந்த செல்லையா எனும் இளைஞனைப் பற்றிப் பாடப்பட்டதாகும். இது போலவே உடப்புசல்லாவையைச் சேரந்த கொம்பாடி, பொன்னையா ஆகிய தோழர்கள் தொழிற்சங்கப் போட்டியினால் நடந்த கலவரத்தில் சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பாகவும் பாடியுள்ளார். எனினும் வெறும் கொலைகளை மட்டும் அவர் பாடவில்லை. அக்கொலைகளுக்குப் பின்னால் உள்ள அரசியல் பின்னணியினையும் அவர் வெளிப்படுத்துவதோடு, அக்கொலைகள் நடப்பதற்கு முன்னால் எவ்வாறான அடக்குமுறைக்குட்பட்டிருந்தார்கள் எனவும் அவ்வடக்குமுறையை எதிர்த்து அவர்கள் செயற்பட்டிருந்த விதங்களையும் பல இடங்களில் வெளிப்படுத்தியுள்ளார்.

**"அச்சிய விருசத்திலே அரிசி பஞ்ச காலத்திலே**
**பச்சமுத்து கங்காணியும் படகுலே ஏத்தி**
**கொண்டு வந்தான் பட்ட பாட்டே பாருங்க**
**எங்க பாட்டன் பூட்டன் பாட்டையுமே கேழுங்க**
**ஆசைகாட்டி மோசம் பன்னின அய்யோ**

கங்காணி
மாசியுண்டு தேங்காயுண்டு - என்று
சொன்னது பொய்யே கங்காணி
காணு வெட்டியும் கவ்வாத்து வெட்டியும்
கருமம் தீரலையே
கங்காணி மாருமம் தீரலையே"

(மலைக்காட்டு மகாராஜ குரலோசை)

"அடக்கி தொழிலாளிகள் ஆண்டகாலம்
ஆண்டு மாறி போச்சிங்க
அந்த கிழவங் கிழவி
மண்ணுக்குள் ஆச்சிங்க
அதை நினைத்து ஆடவேண்டாம்
கணக்கப்பிள்ளை மாருங்க
வெள்ளி வெழுக்க பெண்கள் எலும்பி
வேலைக்கு போகணுமே
வேகமாய் மலையும் ஏரணுமே
ஏழுமலை ஏரி இரங்கணுமே
இடையே றாத்தள் கொழுந்து குறைந்தால்
பேருமில்லையே
பெரிய கணக்கன் தொல்லையே"

(மலைக்காட்டு மகாராஜா குரலோசை)

இவை மட்டுமன்றி கணக்குப்பிள்ளைகள் தோட்டத்துரைமார்களிடம் தொழிலாளர்களைப் பற்றி பந்தம் பிடிப்பது பற்றியும் பாடியுள்ளார். இந்த பின்னணிகளின் தொடர்ச்சியில்தான் தொழிலாளர்கள், கணக்குப் பிள்ளைகள் கங்காணிகள் மீதான எதிர்ப்புகளை தெரிவிப்பதும் வெட்டிப் படுகொலைச் செய்வதும் நடந்தேறியது என்பதையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

1959 ஆம் ஆண்டு நாவலபிட்டி லெட்சுமி தோட்டத்தில் இடம்பெற்ற கொலையானது தொழிலாளர்கள் தொழிற்சங்கம் வைப்பதற்காக கோரி போராட்டம் நடத்தினர். அதற்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதலின் விளைவாகவே செல்லையா எனும் இளைஞன் உயிரிழந்தான். இதனை படுகொலைச்சிந்து என்ற தலைப்பில் பாடியுள்ள பாடல்களில் வெளிப்படுத்தி யுள்ளார்.

"ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி
ஐம்பத்தொன்பதாம் ஆண்டிலே
ஆனதொரு பத்தாம் மாதம்
பன்னிரெண்டாம் தேதியிலே
சங்கம் வைத்தாராம் இலங்கைத்
தொழிலாளர் சங்கம்
லெட்சுமி தோட்டத்திலே
நேயர்களும் சேந்ததிலே
பச்சமுடன் சங்கம் வந்து
பலமான கூட்டம் போட்டு
பறக்குது பாரு கதர்கொடி
ஜொலிக்குது கேளு"

(படுகொலை மூனடி சிந்து எனும் மெட்டு)

இப்பாடல் தொழிற்சங்கம் அமைத்து, பின்பு அத்தொழிற்சங்கத்தில் மக்கள் ஆர்வத்துடன் இணைந்து தமது பிரச்சினைகளைப் பற்றி பேசியது பற்றியும் வெளிப்படுத்துகிறார். இச்சூழ்நிலையில் தான் தொழிற்சங்கம் அமைப்பதற்கெதிராகவும் தொழிலாளர்களுக்கு எதிராகவும் தோட்ட அதிகாரிகள் நெருக்கடி கொடுக்கின்றனர். இதற்கெதிரான போராட்டத்தில்தான் செல்லையா எனும் இளைஞன் துடிப்புடன் களத்திலிறங்கி உரிமை கேட்கிறார். பொலிஸ் துப்பாக்கிச் சூட்டில் பலியாகிறான். இந்த சம்பவத்தை அதன் பின்னணியிலிருந்து பாடும் ஜில் தொழிலாளர் உரிமைக்காக குரல் கொடுப்பதை பின்வரும் பாடல்களில் காணலாம்.

"உரிமையற்றத் தோட்டத்திலே
ஒருபோதும் வாழமாட்டோம்
அருமையான சங்கத்திலே
ஆசைவச்சி வாழ்ந்திடுவோம்
முட்டாள் உலகத்திலே
மூடப்பய தோட்டத்திலே
திட்டமாக தோட்டத்திலே
தீவிரமாய் உரிமை வேண்டும்"

இவ்வாறு தோட்ட மக்களின் உரிமைக்காக குரல்கொடுக்கும் ஜில் தோட்டத் தொழிலாளர்களின் வரலாற்றை அறிந்திருந்தமையில் அவர்களது பிரஜாவுரிமைப்பற்றியும் பாடியுள்ளார்.

"உள்ள ரத்தமெல்லாம் சிந்தினோம் - இங்கு
அப்பனும் ஆத்தாளும் பிறந்தது - எங்கே
அத்தாட்சி கொண்டுவா இழந்தது
இப்படி நாளெல்லாம் போகுது - நம்ம
உரிமையும் இல்லாமே யாகுது.
அன்பதஞ்சு வயது வந்தும் - இங்கே
ஆட்சி பலமில்லை என்குது
சாவதற்கு ஏனோ இந்தியா - செல்ல
சரியாச்சு கணக்கு பாத்தனுப்புங்க"

பிரஜாவுரிமை பறிப்புத் தொடர்பாகவும் அதனால் ஏற்பட்ட தொழிலாளர்களின் இரண்டும் கெட்டான் நிலையையும் இப்

பாடலில் வெளிப்படுத்தும் அவர் தன்னை தொழிலாளராக கருதியே பாடியுள்ளார். "மலைக்காட்டு மகாராஜா குரலோசை" என்ற நூலில் அவர் வழங்கியுள்ள ஆசிரியர் குறிப்பிலும் மக்களின் உரிமைத்தொடர்பாக அவரது நிலைப்பாடு தெளிவாகவே விளங்குகின்றது.

"நம் பாட்டன் பூட்டன் கூட்டமாக கூட்டி வந்த கங்காணியோ காலம் சென்றுவிட்டார். அன்று முதல் இன்று வரை ஏச்சிகாலம் கழித்த கங்காணி, கணக்குப் பிள்ளைகள் பாடு இனிமேல் நடக்காது. பாரத நாட்டு வீரர்களை பசப்பி கூட்டிவந்த, வெள்ளி பணம் காட்டிய வெள்ளையர்கள் இன்று கிடையாது. ஆனால் இந்த நாட்டில் உரிமை கொடுத்த வெள்ளைகள் இன்று இல்லை. உரிமை கேட்டு ஒரு ஸ்தாபனங்களின் கூட்டங்கள் கோட்டு கா... கா... என்று கத்தினாலும் உரிமை கொடுப்பவர் யாரும் இல்லை. காங்கிரஸில் கூட்டங்கள் போட்டு கதரி கதரி டில்லிக்குப் போனாலும் ஐம்பத் தைந்து வயதுவரை இந்நாட்டுக்கு உழைத்து கொடுங்கள். ஐம்பத்தி ஆறு வயதில் அக்கறை சுடுகாட்டுக்கு வாங்கள் என்ற சட்டம் பறந்து இருக்கிறது. எந்த உலகத் திலும் இப்போர்கொந்த சட்டதிட்டம் கிடையாது"

ஆகவே ஜில் வெறுமனே தாம் கண்ட விடயங்களை பாடலாக பாடவில்லை. இச்சமூக அவலம் மற்றும் சமூக விடுதலை தொடர் பான பார்வையினூடாக தமது பாடல்களைப் பாடியுள்ளார். தொழிலாளர்களது குடும்ப வீட்டுப் பிரச்சினைகளையும் பாடியுள்ள அவர், அவர்கள் அனுபவிக்கும் பிரச்சினை களை அச்சொட்டாகச் சொல்லுகிறார்.

"நேத்து எடுத்த சம்பளமே
நெறுப்பா பறக்குது
என் புருக்ஷன் கண்கள் இரண்டும்
சிவப்பா கிடக்குது
எடுக்கும்போது விலையுமே
எட்டாய் இருக்குது
எனக்கு ஏழு எட்டு பிள்ளைகள்
பிறந்து கிடக்குது"

இதுவரையில் குறிப்பிட்ட விடயங்களின் அடிப்படையில் அவதானிக்கையில் வீதிப்பாடகராக விளங்கிய ஜில் சுல்தான் அவர்கள் பாடிய கொலைச்சிந்துப்பாடல்கள் அனைத்துமே மலையக சமூகத்தில் நடந்த தொழிலாளர்களின் எதிர்ப்புகளையும், அவர்களது எதிர்ப்பிற்கு எதிரான செயற்பாடு களையும் ஒரு கலகக்குரலாகவே முன்வைக் கிறார்.

பாடல்கள் வாயிலாக மட்டுமல்லாது அவரது எழுத்துக்கள் பேச்சு வாயிலாகவும் தனித்து குரல் கொடுக்காது சமூகத்துடன் இணைந்து குரல் கொடுப்பதும் தொழிலாளர் பாத்திரமாக குரல் கொடுப்பதையும் பார்க்கும்போது அவரது தேவை சமூகப்பிரச்சினைகளைப் பற்றிப் பாடுவதாகவும் அவற்றின் விடுதலையை வேண்டி நிற்பதுமாகவே அமைகிறது. இதனூடாக தொழிலாளர்களை எழுச்சிபெற வைப்பது இவரது அனைத்துப் பாடல் களிலுமே வெளிப்படுவதானது ஜில் அக்காலத்தின் கலகக்குரலாக செயற் பட்டிருந்தமையை உணரமுடிகிறது.

உதவியவை

*01.* ஜில். கே.கே.எஸ், படுகொலைச்சிந்து, சரஸ்வதி அச்சகம், பதுளை, *1961.*

*02.* ஜில். கே.கே.எஸ், பரிதாப கீதம், ரஞ்சித் அச்சகம், பண்டாரவளை.

*03.* சிவலிங்கம், மு, மலையகத் தமிழர் நாட்டுப்புறப் பாடல்கள், குறிஞ்சி தமிழ் இலக்கிய மன்றம், *2007.*

*04.* யோகராசா. செ, ஈழத்து முச்சந்தி இலக்கியம், மகுடம் பப்ளிகேசன், *2013.*

*05.* மு. நித்தியானந்தன், ஊவா நாட்டார் இலக்கிய மரபில் பதுளை, பாவலன் ஜில் சுல்தான், தினகரன் வாரமஞ்சரி, *1996.*

உதவியவர்கள்

*06.* தேவராஜா. வை, ஜேபி, கந்தேகெதர, பதுளை.

*07.* மொழிவரதன், எழுத்தாளர், கொட்டகலை.

*08.* ஜோன், A.C.R. நாட்டாரியல் ஆய்வாளர்.

# காமன் கூத்து



தமிழ் இலக்கியப் பரப்பில் மலையகத் தமிழ் இலக்கியம் ஒப்பீட்டளவில் இன்று சார்பளவிலான வளர்ச்சியை கண்டுள்ளது. மலையக தமிழ் இலக்கியம் எனும் போது கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல், நாடகம் முதலான எழுத்துருவிலான வரிசைகளோடு வாய்மொழிப்பாடல்கள், கூத்து, கலாசாரவிழாக்கள், வழிபாட்டு முறைகள் முதலான எழுத்துருவற்ற இலக்கிய வடிவங்களையும் இணைத்துக் கொள்ள வேண்டிய தேவையுள்ளது.

ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டு கால வரலாற்றைக் கொண்ட மலையகத்தை தம் வாழிடமாகக் ஏற்றுக் கொண்ட மலையகத் தமிழ் தொழிலாளர்கள் தமது பாரம்பரியத்தின் தொடர்ச்சியான அறிவியல், தொழில்நுட்பம், வழக்காறுகள், நம்பிக்கைகள், மொழி, பழக்க வழக்கங்கள், கலைகள், கூத்துக்கள், கடவுள்கள், வழிபாட்டு முறைகள் என்பனவற்றையும் சுமந்து வந்தனர். இதன் தொடர்ச்சியாக காமன் கூத்து, அர்ச்சுணன் தபசு, பொன்னர் சங்கர், லவகுசா, ஏழு கன்னிமார் கதை, நல்லத்தங்காள் கதை, குறவஞ்சி, மாரியம்மன் தாலாட்டு, நொண்டி மேளம், பொய்க்கால் ஆட்டம், காவடியாட்டம், தோகையாட்டம், கும்மியாட்டம், கரகாட்டம், தாலாட்டு, ஒப்பாரி, தெம்மாங்கு, கெங்கையம்மன் கூத்து, காத்தவராயன் கதை, கோடங்கி, உருமி, அளிக்கி போன்ற எண்ணற்ற கலைச் செல்வங்களையும் கொண்டு வந்தனர். இந்த நீண்ட நெடிய மரபு தொடர்ச்சியின் வரலாற்று வழித்தடத்தின் ஒரு உண்ணதமானக் கூறுகளுள் "காமன் கூத்து" மலையகத் தமிழர்களின் மணி மகுடமாக நிற்கின்றது என்றால் மிகையாகாது.[1]

கிராமியக் கலைகள் கிராமிய மக்களின் உணர்ச்சிகளையும், செயல்களையும் வெளிப்படுத்தும் சாதனமாகும்...இட வேறுபாடு, வெட்பத்தட்பம், பழக்க வழக்கங்கள், சூழல் மாறுபாடுகள், கூத்துக்களின் தோற்றங்களிலும் இசையமைப்புகளிலும் ஓசை நயங்களிலும் எண்ணற்ற வேறுபாடுகளை ஏற்படுத்துகின்றன.[2] அதற்கினங்க மலையக கூத்துக்களுக்குப் பல தனித்துவங்கள் காணப்படுகின்றன. இத்தகைய மலையகத் தமிழர்களின் பாரம்பரியங்களில் பெரும் பாலானவை அழிவு நிலையினை எய்துதல் கண்கூடு. இவற்றைப் பேணி பாதுகாத்து வளர்த்தெடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு மலையகத்தைச் சார்ந்த ஒவ்வொருவரின் மீதும் சுமத்தப்பட்டுள்ளது.

மலையக இலக்கியங்களைப் பற்றி பலமட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டிருப்பினும் மலையக நாட்டாரியல் பற்றிய

பழனியாண்டி விஜயகாந்தன்

ஆய்வுகள் போதிய திருப்தியைத் தருவதாக இல்லையென்றே கூறவேண்டியுள்ளது. மலையக கூத்துக்கள் பற்றி சிறப்பாக காமன் கூத்து பற்றிய ஆய்வாளர்கள் என்ற வரிசையில் மாத்தளை வடிவேலன், சோதி மலர் ரவீந்திரன், சந்தனம் சச்சிதாநந்தன், பொன்.பிரபாகரன், லெனின் மதிவாணன், பேரா.கா.சிவதம்பி, சு.முரளிதரன் போன் றோரைக் குறிப்பிடலாம். இதனுள் விரிவான ஆய்வறிக்கைகளும் ஆய்வுக் கட்டுரைகளும் அறிமுகக் குறிப்புகளும் இடம்பெறுதல் குறிப்பிடத்தக்கது. இவற்றோடு லயம், கலையருவி, சாகித்திய விழா மலர்கள் போன்ற சஞ்சிகைகளில் வெளியான கட்டுரைகளும் பிபிசி தமிலோசை, பத்திரிகைகள் போன்றனவற்றில் வெளியான குறிப்புகளும் இணைத்துக் கொள்ளத்தக்கதே.

இக்கட்டுரையைப் பெருத்தமட்டில் பொகவந்தலாவை லெட்சுமி தோட்டம் மத்தியப் பிரிவில் காமன் கூத்து தோன்றிய வரலாறு, அதன் தற்போதைய நிலை முதலானவைப்பற்றிய ஒரு அறிமுகக் குறிப்பாகவே அமைகின்றது. இதனை ஒரு வரலாற்று ஆவணமாகவும் கொள்ளலாம் என நினைக்கின்றேன். இக்கட்டுரைக்கான தகவல்களில் பெரும்பாலானவை நேரடி கள ஆய்வுமுறையில் அத்தோட்டத்தில் வசிக்கும் அண்ணாவிமார்களிடமும் (மாஸ்டர்) முதிய வர்களிடமும் கேட்டுப் பெற்ற விடயங் களாகும். இதைத்தவிர தப்பிசை பற்றிய குறிப்புகளும் பாடல் பற்றிய சில குறிப்புகளும் இங்கு இடம் பெறுகின்றன.

காமன் கூத்து பற்றி இதுவரை இடம் பெற்ற ஆய்வு முயற்சிகள் காமன் கூத்து வெளிப்படுத்தும் தொழில்நுட்பம், அரசியல், பெருளாதார சமூக தாக்கங்கள், மொழியியல், தேச உருவாக்கத்தில் அதன் பங்கு, சமூக உளவியல், திறந்த கற்றல் எண்ணக்கருவில் அதன் பங்கு, மரபுரீதியான அதன் வளர்ச்சி போன்ற பல கூறுகளை ஆராய வழி செய்கின்றது. இவை ஒவ்வொன்றும் மிகவும் ஆழமாகவும் அகல மாகவும் தனித்தனியே ஆய்வு செய்யப்பட வேண்டியது காலத்தின், எம் தேசத்தின் இன்றிமமையாத் தேவையாகும்.

## காமன் கூத்து – கதைச்சுருக்கம்

திருக்கைலாய மலையில் ஈசன் செய்த யாகத்தால் உலகமே துன்பத்தில் ஆழ்ந்துக் கிடந்தது. அப்போது தேவர்கள் இந்திர சபைக்குச் சென்று முறையிட,ஈசனின் தவத்தை கலைக்க துணிந்தவர்கள் எவரும் இல்லை, மன்மதன் ஒருவனுக்கே தனது மலர் கணைகளைத் தொடுத்து ஈசனின் தவத்தை கலைக்க முடியுமென இந்திரன் தீர்மானித்தார்.

ஈசனின் மகள் இரதிதேவியை திருமணம் முடித்த தினமன்று (மதன் - இரதி திருமணத்தை தேவர் சபையினரே நிகழ்தி வைத்தனர்) இந்திரன் மன்மதனுக்கு ஒரு ஓலையனுப்பினார். சேதியறிந்த மன்மதன் தான் ஈசனின் தவத்தை கலைக்கப் போவதாக இரதி தேவியிடம் கூற, இரதி தேவி ஈசனின் ஆற்றல்களையும் சக்தியையும் எடுத்துக் கூறி அதனை தடுக்கவே மன்மதனுக்கும் இரதிதேவிக்கும் இடையில் தர்க்கம் ஏற்பட, மீறியும் மதன் விடைபெற்று கைலாய மலைக்கு செல்கின்றார். சென்று தான் தன் மலர்க்கனைகளை ஈசனின் மீது ஏவ, ஈசன் தனது நெற்றிக்கண்ணை திறந்தார். நெற்றிக்கண் திறந்த போது தெறித்த தீப்பொறிகளில் மன்மதன் எறிந்து சாம்பலாகின்றார்.

தோழியர் மூலம் மன்மதன் எறிந்த சேதியறிந்த இரதி புலம்பலுடன் ஈசனிடம் சென்று தாலி பாக்கியம் வேண்டியழ ஈசன் ஒரு நிபந்தனையுடன் மூன்றாம் நாள் மதனை உயிர்ப்பிக்கின்றார். இரதிதேவியின் கண்களுக்கு மட்டுமே மன்மதன் புலப்படுவார் என்பதே அந்த நிபந்தனையாகும். இதுவே காமன் கூத்தின் வரலாறாகும்.[3]

காமன் கூத்து கதைச்சுருக்கம் ஒவ்வொரு தோட்டங்களிலும் வெவ்வேறு விதமாக கூறப்படினும் மேற்குறித்த கருத்துப்பற்றி சந்தனம் சத்தியநாதன் போன்றோரின் கருத்துக்களும் ஒத்துப்போவது குறிப்பிடத்தக்கது. தென்னிந்தியாவில் போல "எறிந்த கட்சியினர்", "எறியாத கட்சியினர்" என்று இரு வேறு குழுக்கள் தோட்டங்களில் இயங்குவதும் அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

இத்தகைய கதையம்சத்தைக் கொண்ட காமன் கூத்தானது ஒரு புராணக் கதையின் கருவைக் கொண்டே நடிக்கப்படுகின்றது. .காமன் அன்பின் உருவமாகவும் புஜபலம் மிக்கவனாகவும் காட்டப்படுகின்றான். .அவ்வாறு அன்புக் கொள்வதை - மலர்க்கணை எய்துதலை - வடிவற்ற அந்த அன்பை விளக்கவே காமனாட்டம் இடம் பெறுகின்றது.[4] மக்கள் மத்தியில்...காமன்

கூத்தானது பக்திக்காகவும், நேர்த்திகளை நிவர்த்தி செய்யும் பொருட்டும், பிள்ளைபேறு கருதியும், மணவாழ்வின் சிறப்பிற்காகவும் ஆடப்பட்டு வருகின்றது.[5]

ஒரு காலத்தில் சுகாதார வசதி எட்டாதிருந்த மலையக மக்களின் வாழ்வில் வைசூரி, அம்மை போன்ற நோய்கள் விளையாடின. அத்தகைய சோகச் சூழ்நிலையில் அவர்களுக்குப் பற்றுக் கோடாக்கப்பட்டது, தெய்வ வழிபாடொன்றே. அதனால் தெய்வங்களை நேர்ந்து கூத்துக்களை ஆட முற்பட்டனர்.[6] தவிரவும் மலையகப் பெண்கள் தமக்கு ஆண் குழந்தை பிறக்க வேண்டுமெனவும், பிள்ளைப்பேறு இல்லாதவர்கள் மகப்பேறு கருதியும் இக்கூத்திற் பங்கு கொள்வதுண்டு[7]

இவ்வாறு ஆண்களும் பெண்களும் ஒருமைப்பட்டு ஓருயிர் ஈருடலாக இணைந்து இன்பவாழ்க்கையை நடத்தும்படி அருள் செய்வதற்கான கடவுளாகக் காமன் கருதப்படுகின்றான். காமனுக்கு வேள், வசந்தன், மன்மதன், மதன், அனங்கன், உருவிலன், அறுகதன், இரதிமன், ரூபஸ்திரன், மாரன், மால்மைந்தன், முகிரன், பூமான்மைந்தன், சிந்துவண்ணன், மோகன், காற்றோரன், காமந்தகன், கிளிமாவன், சோலைப்படைவீட்டான், மீனக்கொடியான், குயிற்சின்னன், ஆழிமுரசன், வாமன் எனப்பல பெயர்கள் உண்டு ...காமனை கிரேக்கர் "இரான்" என்றும் ரோமானியர் கூப்பிட் என்றும் அழைப்பர்[8]

காம வழிபாடானது தென்னிந்தியாவின் பல பகுதிகளிலும் இலங்கையின் மலைய கத்திலும் (500 தோட்டங்களுக்கு மேல்) பெருவழக்கமாக காணப்படுகின்றது. காமக்கடவுள் வழிபாட்டிற்கு பண்டைக்காலம் தொட்டே பல சான்றாதாரங்கள் இருக்கி ன்றன. கம்பராமாயணம், சிலப்பதிகாரம் (காமவேள் கோட்டம் - ஆட்சி சிறப்பும் காமக்கடவுள் விழாவும்), மணிமேகலை (காமன் வெறுப்புக்கள்), நாச்சியார் திருமொழி (மன்மதன் வழிபாடும் காமப் பண்டிகையும்), கந்தப்புராணம் (காமன் தகனப்படலம்), கலித்தொகை (காமன் கோயில் வழிப்பாடு), வாமன புராணம் (காமன் வழிபாடு), மகாபாரதம், கந்தப் புராணம் முதலான இலக்கியங்களில் இவற்றுக்கான இலக்கிய சாட்சியங்களைக் காணலாம்.புத்தரின் பௌத்தப் போதனை கதைகளில் இடம்பெறும் காமவெறுப்புக் கதைகளுக்கு 2500ஆண்டுகால வரலாறு இருக்கின்றது. இருக்கு வேதத்தில் காமனை போற்றியும், பௌத்த, சமண கதைகளில் காமத்தை வெறுத்தும் பற்பல செய்திகள் விரவிக்கிடக்கன்றன.[9]

இதனடிப்படையில் பார்க்கும் போது இக்காமன் கூத்தின் வரலாற்றின் ஆரம்பத் தினை திட்ட வட்டமாக வரையறுக்க முடியாதுள்ளது. மலையகத்தில் காமன் கூத்தின் வரலாற்றை நோக்கும் போதும், 19ம் நுற்றாண்டின் முற்பகுதியில் நிரந்தரக் கூலிகளாக இம்மக்கள் கொண்டுவரப்பட்ட வரலாற்றோடு இதனை ஒட்டிப்பார்ப்பதா? அல்லது அதற்கு முன்னமே இங்கு வருகைத்தந்த இந்திய வம்சாவளியினரின் வரலாற்றோடு ஒட்டிப்பார்ப்பதா? என்பதுவும், 1948ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பிரஜாவுரிமை பறிப்புச்சட்டத்தின் பின் மலையகத் தமிழர்களை தாய்நாட்டிற்கு திருப்பியனுப்பிய நிகழ்வுகள் இவற்றில் ஏதும் தாக்கத்தை உண்டு பன்னினவா? அதே பிரித்தானியரால் பர்மா, பிஜித்தீவுகள் போன்ற நாடுகளுக்கு இந்திய வம்சாவளித் தொழிலாளர்கள் கொண்டு செல்லப்பட்ட இடங்களில் இவற்றை ஆராய்ந்து தொடர்புபடுத்தி பார்க்க வேண்டியத் தேவையுள்ளதா? போன்ற பல கேள்விகள் எம்முன் எழுகின்றன. கண்டி இராச்சிய காலப்பகுதியிலும் தென்னிந்தியாவைச் சேர்ந்த தமிழ் மக்கள் கணிசமான தொகையினராக மலையகத்தில் வாழ்ந்த மையை ஆதாரங்கள் பல நிரூபிக்கின்ற[10] என்ற கூற்றும் இக்கேள்விகளைப் பலப்படுத்துகின்றன.

## லெட்சுமி தோட்டம் மத்தியபிரிவு

### தோட்ட உருவாக்கமும் காமன் கூத்தின் தோற்றமும்

1917ம் ஆண்டு கிழாத் தோட்டத்திலிருந்த பெரியங்கங்காணி சின்னசாமி என்பவரே 30 குடும்பங்களை இத்தோட்டத்தில் குடியேற் றினார். இங்கு குடியேற்றப்பட்டவர்கள் தென்னிந்தியாவின் திருச்சி மாவட்டம் கோட்டத்தூர் கிராமத்தைச் சேர்ந்த (கவுண்டர்கள்) மக்களே இங்கு கொண்டு வரப்பட்டனர். 1948ன் பின் 17குடும்பங்கள் இந்தியாவுக்கு திருப்பியனுப்பப்பட்டன.[11] தற்போது இத்தோட்டத்தில் 300குடும்பங்கள் இருக்கின்றன. சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன் லெட்சுமிதோட்டம் மேற்பிரிவு என்ற

புதிய பிரிவு ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. தற்போது லெட்சுமிதோட்ட நிர்வாகத்தின் கீழ் ஐந்து பிரிவுகள் காணப்படுகின்றன.

மேற்கண்ட முறையில் தோட்ட உருவாக்கத்தினுள் காமன்கூத்து உருவான வரலாற்றை இனி நோக்குவோம்.

அலுப்புவத்தை (மன்றாசி) தோட்டத்திலிருந்து வீரையா என்பவரால் பிடிமண் எடுத்துவரப்பட்டு 1939ம் ஆண்டு மாசிமாதம் இங்கு காமன் நடபப்பட்டது.[12] என்றும், சுண்டுலாகந்தை தோட்டத்திலிருந்து பிடிமண் எடுத்துவரப்பட்டு இங்கு காமன் நடப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.[13] குப்பை குழியாக இருந்த ஒரு இடம் தூய்மை செய்யப்பட்டு "காமன் பொட்டல்" ஆக பெரியங்கங்காணி சின்னசாமி அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. இதன் பின்னர் வீரையா தனது பெயரையும் மம்முதராசா என மாற்றிக் கொண்டார்.

முதன் முதலில் மன்மதனாக எஸ்.வீரப்பனும் இரதியாக ராமசாமியும் காப்பு கட்டினர். இவர்கள் இருவரும் 15 வருடங்களாக தொடர்ந்து காப்பு கட்டினர் (மாத்துக் கட்டு வேசங்கள் வருடாவருடம் சாதிவாரியாக வழங்கப்படும்). அப்போதிருந்த காமன்கூத்தின் அண்ணாவியான (மாஸ்டர்) மம்முதராசாவே தொடர்ந்து 30 வருடங்கள் கூத்து நடத்தினார். முதன்முதலில் தப்புவாத்திய கலைஞராக ஆண்டி என்பவர் இருந்தார். இதற்குப்பின்னர் குறுகிய கால இடைவெளிகளில் அநேகர் மதன், இரதியாக காப்புக்கட்டிய வரலாறு உண்டு. குறைந்தது மதன், இரதிக்கு காப்புக்கட்டியவர்கள் மூன்றுவருடங்களாவது தொடர்ந்து காப்புக்கட்டுதல் இன்றும் வழக்கமாக இருக்கின்றது. மம்முதராசாவைத் தொடர்ந்து கிட்ணசாமி என்பவர் அண்ணாவியாக இருந்துள்ளார். அதன்பின் திரு எம்.சுப்பையா என்பவர் தான் இறக்கும் வரை (20 வருடங்களுக்கு மேல்) அண்ணாவியாக இருந்து கூத்தை வழிநடத்தினார். இன்றைய நிலையில் பல இளைஞர்கள் அதன் பாரம்பரியத்தில் பங்கெடுத்துள்ளனர். தப்பிசை கலைஞர்கள் வரிசையில் மூப்பன் (இந்தியா சென்றுவிட்டார்) திரு. கிட்ணண், திரு சாமிவேல் ஆகியோரே பொறுப்பாக இருந்து வந்தனர். அவர்களின் வழிவந்த இளைஞர்கள் இன்று அதனை மேற்கொள்கின்றனர். பாடகர்களாக பெரியசாமி, சிவனு, சின்னத்தம்பி, சின்னராசு, அருள், முருகேசு, சிவபெருமான் என்ற வரிசைகிரமத்தில் பலர் இருந்து வருகின்றனர்.[14]

இங்கு கூத்து ஆடப்படும் இடமானது ஒரு நீள் சதுர அமைப்பில் (800 சதுர அடி) காணப்படினும் கூத்து ஆடப்படும் தினத்தன்று ஒரு வட்டக்களரி மாதிரியமைப்பிற்கு இவ்விடம் தாயார் செய்யப்படும். ஈசன் அமருமிடம், இந்திரன் அமருமிடம், ஒப்பனை அறை, மதன்-இரதி மணப்பந்தல், தூதன் போன்ற வேசங்கள் ஆடிவரத்தொடங்குமிடம், காப்புக்கட்டுமிடம், வில்படைக்குமிடம் போன்றனவெல்லாம் சுமார் 50வருடங்களுக்கு மேல் அந்தந்த இடங்களிலேயே இடம் பெறுவது ஒரு சிறப்பம்சமாகும். நூறாண்டு கால வரலாற்றைக் கொண்ட இத்தோட்டத்தில் காமன்கூத்து இன்றும் மரபுகளை பேணிகாக்கின்றது.

## இத்தோட்டத்தில் காமன் கூத்து இடம்பெறும் முறை

வருடாவருடம் மாசிமாதம் மூன்றாம் பிறையன்று காமன் கூத்து தொடங்கப்படும். இவ்விழாவினை இங்குள்ள மக்கள் ஒரு தெய்வீக வழிபாடாகவும் தமது அடிப்படை கடமையாகவும் கருதியே கொண்டாடுவர்.

## காப்புக்கட்டுதல்

மாசிமாதம் மூன்றாம் பிறையன்று ஒரு ஆற்றங்கரைக்குச் சென்று அங்கு நீரெடுத்து பாலித்து பூசை செய்து மதன், இரதி வேசம் கட்டுபவர்களுக்கான காப்புக்கட்டல் நிகழ்வு இடம்பெறும். அண்ணாவியாரின் தலைமையில் பூசாரி, பண்டாரம், பாடகர்கள், தப்பிசைஞர்கள், உதவியாளர்கள், முதியோர், சிறுவர்கள் என எல்லோரினதும் ஒத்துழைப்புடன் இந்நிகழ்வு இடம்பெறும். இவ்வாறு காப்புக்கட்டுபவர்கள் காமன்கூத்து முடியும் வரை மச்சம் உண்ணுதல் தவிர்க்கப்படும். இதனை தோட்டமக்கள் அனைவரும் கடைப்பிடிப்பர்.

## காமன் நடல்

காமன் பொட்டலில் திண்ணையானது சானம் போட்டு மொழுகப்பட்டிருக்கும். காப்பபுக்கட்டல் முடிந்தவுடன் எல்லோருமாக சேர்ந்து தயாரித்த கம்பத்தை அத்திண்ணை மீது ஊன்றுவர். அதற்கு தகுந்தப்படி பூசை இடம்பெறுவதோடு பார்வையாளர்களுக்கு பொங்கல், அவிகடலை, பயறு என்பன பரிமாற்றப்பட்டு மிகவும் மகிழ்ச்சிகரமாக

நிகழ்வு நிறைவு பெறும். கம்பம் ஊன்றிய மறுதினத்திலிருந்து தொடர்ந்து வரும் எட்டு நாட்களில் ஒருநாள் விட்டு ஒருநாள் காமன் வீதி ஊர்வலமும் பிறத்தோட்டங்களுக்கு செல்லும் நிகழ்வும் இடம்பெறும். ஊர்வலம் செல்லாத தினங்களில் காமன் பொட்டலிலேயே மதன்-இரதியாட்டம் இடம்பெறும். இதற்குக்காரணம் காப்புக்கட்டிய இருவருக்கும் "மருள்" வரச்செய்தலேயாகும். இவ்வெட்டு தினங்களிலும் குடும்பவாரியாக நேர்த்திகளை நிறைவேற்றுவதற்கான பூசைகள் இடம்பெறும்.

### ஒன்பதாம் நாள் - தகனதினம்

### விரதமிருத்தல்

மதன் இரதியுட்பட வேசம் கட்டும் அனைவரும் விரதமிருப்பர். எல்லோரும் மிகத்தூய்மையாக அவ்விரதத்தினை அனுஷ்டிப்பர். வேசம் கட்டுபவர்கள், பாடகர்கள், தப்பிசைஞர்கள், அண்ணாவி முதலானோருக்கு பொதுவான ஓரிடத்தில் சமைக்கப்பட்டு உணவு பரிமாறப்படும். அன்றைய தினம் தோட்டத்தில் பெரும் பாலானோர் விரதமிருப்பதுவும் வழக்கமாக காணப்படுகின்றது. அத்தோடு மதன் இரதி தவிர்ந்த ஏனைய வேசம் கட்டுபவர்களுக்கான காப்புக்கட்டல் நிகழ்ச்சியும் இடம்பெறும். மாலைப் பொழுதில் மதன்-இரதி வீதி ஊர்வலமும் இடம்பெறும். கட்டாயம் மாத்துக்கட்டுக்காரர்களே அன்றைய தினம் பங்கு கொள்வர்.

### மதன் - இரதி திருமணம்

காமன்கூத்து நிகழும் களத்தின் ஒரு முனையில் (கம்பம் நடப்பட்ட இடத்திற்கு அருகில்) மணப்பந்தல் அமைக்கப்பட்டி ருக்கும். ஈசன், ஈஸ்வரி, கிருஸ்ணன், இராமன், இலக்குமனன், சீதை, அனுமன், சரஸ்வதி, விநாயகர், சுப்ரமணியன், நாரதர், இந்திரன் முதலான பலர் மணப்பந்தலில் வீட்டிருப்பர். சோதிடர், உதவியாளர், ஆசாரி, முதலான பாத்திரங்களின் பங்கும் பார்ப்போருக்கு சுவாரிசியமாக இருக்கும். சோதிடம் பார்க்கப்பட்டு நாள் குறிக்கப்படும். பின்னர் தாலி செய்யப்படும். உரிய கிரியைகளின் பின் தாலிக்கட்டல் இடம்பெறும். பின்பு பூசையுடன் இரதி-மதன் திருமண ஊர்வலம் இடம்பெறும். இதன்போது பொது மக்கள் அனைவரும் திருமண தம்பதியினரை வாழ்த்துவதும் மொய்ப்பணம் சேர்க்கும் நிகழ்வுகளும் இடம்பெறும்.

### மாவிளக்குப்பூசை

திருமண நிகழ்வின் பின் தோட்டத்தி லுள்ள பெண்கள் தம் நேர்த்திகளை நிறைவேற்றுவதற்காக மாவிளக்குப் பூசையினை நிகழ்த்துவர். மாவிளக்கு, பூக்கள், வெற்றிலை, பாக்கு, விளக்கொளி, பத்திவாசனை என்பன இணைந்து புதுமணத் தம்பதியினருக்கு விருந்து உபசாரம் தயார் செய்துள்ளது போன்ற ஒரு மனநிலைக்கு பார்ப்பவர்களை இட்டுச் செல்லும். இப்பூசை இடம் பெற்று முடிந்தவுடன் கூத்தினைப் பார்க்க வந்த அனைவரும் - வட்டக்களரி முறையில் - சுற்றி வரிசையாக அமர மதன்-இரதியாட்டம் தொடங்கி சிறிது நேரம் இடம்பெறும். இவ்வாட்டமானது மிகவும் மகிழ்ச்சிகரமான ஒரு மனநிலையை தோற்றுவிக்கும்.

### வில்படைத்தல்

புதுமணத் தம்பதியினருக்கு கல்யாண பரிசு வழங்குவதற்காக உரிய முறையில் இரண்டு வில்லுகள் தயாரிக்கப்பட்டிருக்கும். அவ்வில்லினை எடுத்துக்கொண்டு மதன், இரதி முதலானோருடன் ஒரு சிறிய குழுவினர் ஆற்றங்கரைக்குச் செல்வர். அங்கு பூசை நிகழ்த்தி வில்லைப்படைத்து (பூசைகள் நிகழ்த்திய பின் மதனுக்கும் இரதிக்கும் வில்லினை வழங்குதல்) அங்கிருந்து காமன் பொட்டலுக்கு ஆடி வருவர். அன்னளவாக இந்நிகழ்வுகளுக்கு இரண்டு மணித்தி யாலங்கள் எடுக்கும். எனவே அந்த இடைவெளியில் குரவன்-குரத்தியர் இருவர் வந்து காமன் பொட்டலில் குறிசொல்லி ஆடி மகிழ்வித்துக் கொண்டிருப்பர். பின்னர் மதனும் இரதியும் களத்தில் வில்லுடன் காட்சியளிப்பர்.

### ஓலைத்தூதன் வரல்

ஈசனது தவத்தைக் கலைக்க வருமாறு இந்திர சபையிலிருந்து தூதன் ஒருவன் ஓலையொன்றுடன் களத்துக்கு வருவான். பச்சைநிற உடையணிந்திருக்கும் இவன் வாயில் ஓலையுடனும் கையில் பந்தத்துடனும் காட்சியளிப்பான்.

பின்னர் மதன் இரதிக்கு இடையில் தர்க்கம் ஏற்படும். இரதியின் தடையை மீறி மதன் தான் வருவதாக ஒப்புக்கொண்டு

அதனை மற்றொரு தூதனிடம் சேதி கூற, அதனை இந்திரசபைக்கு ஓலை மூலம் கொண்டு செல்ல இன்னுமொரு தூதன் காட்சியளிப்பான்.

### வீரபுத்திரன் வரல்

ஈசனின் கட்டளைக்கேற்ப தக்கனின் யாகத்தை அழிப்பதற்காக வீரபுத்திரன் அனுப்பப்படுகின்றான். வீரபுத்திரன் வரும் வழியில் காளிதேவியிடம் தான் வரம் பெறும் காட்சியும் (காளியின் வருகை மூலம்) இடம்பெறும். காமன் பொட்டலின் ஒரு முனையில் யாகசாலையுடன் தக்கன் காட்சியளிப்பான். வீரபுத்திரனால் தக்கன் தலைக்கொய்யப்பட்டு அழிக்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது. ஆனால் அக்காட்சி இங்கு காண்பிக்கப்படுவதில்லை.

### மோகினி வரல்

தக்கனின் யாகத்தை அழிப்பதற்காக சுப்ரமணியனை (முருகனை) ஈசன் படைத்து அனுப்புவதாகவும் சுப்ரமணியன் போகும் வழியில் கன்னியரைக் கண்டு மயங்கி தக்கனின் யாகசாலைக்குச் செல்ல மறப்பதாகவும் கூறப்படுகின்றது. இதனை விளக்கவே மோகினி வரும் காட்சி இடம்பெறுகின்றது.

### தேர்வேந்தன் வரல்

மன்மதன் தான் ஈசனின் தவத்தைக் கலைக்கும் நிமித்தம் இந்திரசபைக்கு பயணிக்க முற்படுகின்றான். அவ்வேளையில் தனது தென்றலான தேரை தயார் செய்யுமாறு தேர்வேந்தன் (மதனின் தேரோட்டி) அழைக்கப்படுகின்றான். உடனே தென்றலான தேருடன் தேர்வேந்தன் களத்தில் தோன்ற, இரதிக்கும் தேர் வேந்தனுக்கும் இடையிலான உரையாடல் ஒன்றும் இடம்பெறுவதாக காட்டப்படும். இறுதியில் தேரேறி மதன் இந்திரசபைக்கு பயணிப்பார். அங்கு மதனுக்கும் இந்திரனுக்குமிடையிலான உரையாடலும் இடம்பெறும். இவ்வேளை யோடு ஒட்டியே மதன் ஈசனிடம் செல்லும் காட்சியும் காண்பிக்கப்படும். அதன்பின் இரதிதேவி மட்டுமே காமன் திடலில் காட்சியளிப்பாள்.

### யமன், காலன், தூதன் ஆகியோர் வரல்

எறிக்கப்பட்ட மதனின் உயிரைக்காவிச் செல்ல இவர்கள் மூவரும் வருகின்றனர். மூவரும் கருமையான உடைகளோடு கொடூரமான முறையில் காட்சியளிப்பர். யமன் கையில் "பாசகயிறு"டன் கருமையான ஒரு எருதின் மீது வருவதாக காட்சி சித்தரிக் கப்பட்டிருக்கும். கருமையான உடையோடும் கையில் பந்தத்துடனும் நீண்ட நாக்குடனும் தூதன் ஒருவனும் யமனுடன் வருவான்.

### மதன் எறிக்கப்படல்

மலர்க்கணையினை எய்தியவுடன் ஈசனின் நெற்றிக்கண் திறபட மதன் உடனே எறியுண்டான். இக்காட்சி ஒரு வான வெடியினை வெடிக்கச் செய்து ஊன்றப்பட்ட கம்பம் - மிளாறுகள் அடுக்கப்பட்டு- எறிக்கப் படுவதன் மூலம் விளக்கப்படும். இவ் வேளையில் இரதிதேவி காமன் பொட்டலி லிருந்து அப்புறப்படுத்தப் பட்டிருப்பாள். இதற்கிடையே எறிதூதன் எனும் ஒரு வேடமும் காமன் திடலினுள் புகும். இவ்வேடம் மதன் எறியுண்ட செய்தியினை இரதிக்கு அறிவிப்பதாக அமையும்.

### இரதி ஒப்பாரி

மதன் எறியுண்ட காட்சி கம்பம் எறிக்கப்படுவதன் மூலம் இடம்பெறும் இடத்தில் இரதிதேவி வெள்ளை வேட்டி போர்த்தப்பட்டு தனது தாலியை தேங்காய் ஒன்றில் வைத்து தட்டில் ஏந்தியபடி நிலைக்குலைந்த விதத்தில் ஒப்பாரி பாடி அழும் காட்சி இடம்பெறும். இதற்கான ஒப்பாரி பாடல்களும் சாவுத்தப்பும் இசைக்கப்பட்டு "அய்யையோ" என்ற குரல் ஒலித்தவண்ணம் பொழுது விடிந்ததோடு, இரதியுடன் சிறு குழுவினர் முழுதோட்டமும் ஒப்பாரிப்பாடல்கள் பாடி ஊர்வலம் வருவர். தொடர்ந்து வரும் மூன்று நாட்களுக்கு மதன் வேடம் தறித்தவர் வெளியில் நடமாடாது இருப்பதுவும் மரபாக இருந்து வருகின்றது.

### உயிர் எழுப்புதல்

தகனப்படலம் முடிவடைந்து மூன்றாம் நாள் உயிர் எழுப்பும் காட்சி இடம்பெறும். ஈசனிடம் தன் கணவனை உயிர்ப்பித்து தருமாறு தாலிப்பிச்சை கேட்டு இரதிதேவி மன்றாடுவாள். இறுதியில் ஈசன் இறங்கி வருவார். அப்போது தூய்மையான ஆடைகள் அணிவிக்கப்பட்டு மதன் வெள்ளை வேட்டியால் போர்த்தி படுக்க வைக்கப் பட்டிருப்பான். இந்திரன், நாரதர் முதலானோர் அவ்விடத்தில் காட்சியளிப்பர். ஈசன் தன் கையிலுள்ள கமண்டலத்திலிருந்து மூன்று

முறை நீரை தெளித்து தன் பிரம்பால் மூன்று தட்டுதட்ட மதன் மருளுடன் உயிர்ப்பிக்கப் படுவார். அத்துடன் பூசைகள் இடம்பெற்று கூத்து நிறைவு பெறும்.

## காமன் கூத்தில் இடம்பெறும் பாத்திரங்கள

1. மதன்
2. இரதி
3. ஈசன்
4. ஈஸ்வரி
5. விநாயகர்
6. சுப்ரமணியர்
7. காளி
8. இந்திரன்
9. நாரதர்
10. குரவன்
11. குரத்தி
12. ஆசாரி
13. சோதிடர்
14. கிருஷ்ணர்
15. இராமன்
16. இலக்குமனன்
17. சீதை
18. மோகினி
19. சரஸ்வதி
20. வள்ளி
21. தெய்வானை
22. யமன்
23. காலன்
24. எறிதூதன்
25. தக்கன் (உமையின் தகப்பன்)
26. நந்திதேவன் (மதனின் காவலன்)
27. தாதி (இரதியின் தோழி)
28. வீரபுத்திரன் (108பந்தங்களுடனும் ஆயுதங்களுடனும் வருபவன்)
29. ஓலைத்தூதன் (இந்திர சபையிலிருந்து மதனுக்கு ஓலை கொண்டு வருபவன்)
30. தூதன் (மதனிடமிருந்து இந்திரனுக்கு ஓலை கொண்டு செல்பவன்)
31. தேர்வேந்தன் (மதனின் தேரோட்டி)
32. குண்டோதரன் (எறிக்கப்பட்ட மதனின் சாம்பலை ஒன்று சேர்ப்பவன்)

## தப்பிசையும் பாடலும்

காமன் கூத்தில் இசையினை தப்பிசை, பாடல் என இருவடிவங்களில் காணலாம். காமன் கூத்தைப் பொறுத்தமட்டில் தப்பு பிரதானமாகவும் கஞ்சிராகட்டை, அளிக்கி போன்ற இசைக்கருவிகளும் பயன் படுத்தப்படும். கிட்டத்தட்ட 18வகையான தப்பிசைகள் காணப்படுகின்றன. காமன் ஊன்றுதல் தொடக்கம் எறிக்கப்பட்டு குடிவிடுதல் வரை வெவ்வேறான ஓசையில் இவை காணப்படும். ஒவ்வொரு வேடங்க ளுக்கும் ஏற்ற அடி, ஒவ்வொரு லாவணிக்கும் ஏற்ற அடி என தப்பிசையில் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. நடையடி, பூசையடி, லாவணியடி, பல்லவியடி, சாவுதப்பு, கும்மியடி, கலியான அடி போன்றன அவற்றுள் சிலவாகும். ஆட்டுத்தோளை காயவைத்து பின்பு ஊரவைத்து இரும்பு வளையம் ஒன்றில் கட்டியே தப்பு பெறப்படுகின்றது. உரிய முறையில் ஒரு தப்பினை பயன்படுத்தினால் 5 - 7 வருடங்கள் குறையாமல் பாவிக்கலாம்.[15]

காமன் கூத்தில் பாடல்களைப் பொறுத்தமட்டில் ஒப்பாரி, லாவணி, தர்க்கப்பாட்டு, பல்லவி, ஆதியந்தம், நெருக்கப்பாட்டு போன்ற பல வடிவங்கள் காணப்படுகின்றன. இவற்றுக்கு பொருத்தமான முறையில் பின்னனி குரல்களும் (தானானே... னானானே-லாவணி) வழங்கப்படும்.[16] காமன்கூத்தில் லாவணிமுறையில் பாடல்கள் பாடப்படுகின்றன. இவை ஆசிரியப்பாவாலும் கலிப்பாவாலும் ஆன பாடல்களாக அமைகின்றன".[17] இப்பாடல்கள் முழுமையாக தொகுக்கப்பட்டு அவை இராக வேறு பாட்டுக்கு ஏற்ப உரிய முறையில் வகைப்படுத்தப்படும் வரை இப்பாடல் வகைகளை அடையாளப்படுத்தி கூறுவது கடினமாகவே இருக்கும்.

## முடிவுரை

பல வருடகால வரலாற்றைக் கொண்ட காமன்கூத்து இன்றும் இம்மக்கள் மத்தியில் நிலைத்திருக்கின்றது. அதற்கு காரணம் இக்கூத்தினுள் நவீன தொழில்நுட்பங்களோ ஏனைய கலையம்சங்களோ ஊடுறுவ முடியாதிருப்பதுவும், மலையக பெருந்தோட்ட த்துறை சமூக கட்டமைப்புமேயாகும். இருந்தும் அண்மைக்கால போக்குகள் சில

கவலையளிக்கின்றன. காமன்கூத்தினை உரிய முறையில் நடாத்தி முடிப்பதில் பல குழறுபடிகள் ஏற்படுகின்றன. இதற்கு காரணம் பெருந்தோட்ட சமூக கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களே என்றுகூட கூறலாம்.

நகரமயம், உலகமயம் முதலான சர்வதேச நிகழ்ச்சித் திட்டங்களாலும் அபிவிருத்தித் திட்டங்களாலும் பெரும்பாலும் சமூக பண்பாட்டு வேர்களில் இவை ஆட்டத்தை ஏற்படுத்தி வருதல் எமது சமூகத்தில் நாம் கண்ட படிப்பினைகளாகும். இவற்றுக்கு புறம்பாக சமூக சீரழிவுகள், சினிமா, தொலைக்காட்சி மோகம், இளைஞர் களின் ஆர்வமின்மை போன்ற பல காரணி களும் காமன்கூத்து போன்ற கலையம்சங்கள் அருகி வருவதற்கு ஏதுவாக அமைகின்றன. மேலும் காமன்கூத்தை எத்தனை நாட்கள் கொண்டாடுதல் என்பதிலும் இம்மக்களின் வாழ்க்கைச் சுமைகளும் பொருளாதார பின்னடைவுகளும் செல்வாக்கு செலுத்துவதனை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

காமன்கூத்தை பயிற்றுவிப்பதற்கென்று ஏதேனும் நிறுவனங்கள் இருப்பதாக இதுவரை தெரியவில்லை. இருப்பினும் தலைமுறை தலைமுறையாக இக்கூத்துக்கள் கையாளப்பட்டு வரும் விதம் மிக வியப்பிற்குரியதே. உண்மையில் மலையக சமூகத்தில் ஒவ்வொரு பிரசையும் இவைபோன்ற கலையம்சங்களை உள்வாங்கி இருக்கின்றனர் என்றால் “பங்குபற்றலின் ஊடாகக் கற்றல்” என்ற கற்றல் - கற்பித்தல் முறை சிறப்பாக இடம்பெறுவதனை அவதானிக்க முடிகின்றது. கூத்திற்கும் பார்வையாளர்களுக்கும் இடையிலான தொடர்பே இதற்கு அடிப்படையாகும். காமன்கூத்து போன்ற மலையக கூத்துக்கள் மற்றும் கலையம்சங்களில் இத்தகைய பங்குபற்றலினூடாகக் கற்றலின் தன்மை களையும் அதன் சாதகபாதக விளைவு களையும் மரபுரீதியான கூத்து வளர்ச்சியில் அதன் பங்களிப்பினையும் விரிவாக ஆராய வேண்டியது அவசியமான ஒன்றாகும். பாமரர்கள் கற்றுத்தரும் இவ் கற்றல் முறை ஒரு தனியான ஆய்வுத்துறையாக வளர வேண்டும்.

எதிர்கால மலையக சமூக உருவாக்கத் திற்கும், கட்டுமானத்திற்கும் காமன்கூத்து முதலான கூத்துக்கள் ஒரு அடிப்படை பங்கு வகிக்கும் என்பது திண்ணம். இருப்பினும் அதற்கு கூத்துக்களை எவ்வாறு பயன் படுத்துவது என்பது விரிவான ஆய்வு களுக்கும் ஆழமான கருத்தாடல்களுக்கும் வாதப்பிரதிவாதங்களுக்கும் இடம் கொடுப்பதாக அமையவேண்டும்.

இறுதியாக, கைவிடப்படும் நிலையினை எய்திக் கொண்டிருக்கும் காமன்கூத்து (பிற கலையம்சங்களும் கூட) புனரமைப்பு செய்யப்பட்டு பேணி பாதுகாக்கப்படுவது காலத்தின் தேவையாகும். அதற்கான சில விதந்துரைப்புக்களை கூறுதல் பொருந்தும்.

காமன்கூத்தினை முழுமையாக தொகுத்து அவற்றுக்கு எழுத்துரு கொடுக்கப்பட வேண்டியது இன்றியமையாத ஒன்றாகும். வட்டார பாகுபாட்டிற்கேற்ற கல்வி என்ற அடிப்படைகளில் மலையகத்திற்கான கல்விக்கூடங்களில் இதனை ஒரு கற்கை நெறியாக அறிமுகப்படுத்துதல் மற்றும் கட்டாயம் மாணவர்களுக்கு பாடநெறிகளி னூடே வழங்குதல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்தல் வேண்டும்.

இன்று மலையக பாடசாலைகள் பலவற்றிலும் கல்வியியற் கல்லூரிகளிலும் பலகலைக்கழகங்களிலும் கூத்து நிகழ்வுகள் இடம் பெறுவதானது வரவேற்கத்தக்கதே. இருப்பினும் அவை வெறுமனே போட்டி நிகழ்ச்சியாகவும் பொழுதுபோக்கு அம்சமாகவும், காட்சிப் பொருளாகவும் பயன்படுத்தும் நிலையினை மாற்றி ஒரு உயிரோட்டமுள்ள உளவியல் உணர்வு நிலையாகவும், எம்தேசத்தின் அடித்தளத் திற்கான ஆணிவேர் என்ற மனநிலையி னையும் தோற்றுவித்து, இத்தகைய கூத்துக்களில் புதைந்திருக்கும் பாரம்பரிய மான கல்வி முறையினை அடையாளம் காண்டு அதுவே எமது பண்பாட்டு அடையாளங்களின் அடிப்படை என்ற உணர்வினை ஊட்டி வளர்க்க வேண்டியது இன்றியமையாததாகும்.

### அடிக் குறிப்புக்கள்

01. பொன்.பிரபாகரன் - காமன்கூத்தின் அரசியற் பொருண்மியம்
02. சோதிமலர் ரவீந்திரன் - காமன் கூத்தும் மலையக பாரம்பரியமும்
03. தகவல் : எம். சுப்பையா
லெட்சுமி தோட்டம் ம.பி, பொகவந்தலாவை
04. சோதிமலர் ரவீந்திரன் - காமன் கூத்தும் மலையக பாரம்பரியமும்
05. சோதிமலர் ரவீந்திரன் - காமன் கூத்தும் மலையக பாரம்பரியமும்
06. சோதிமலர் ரவீந்திரன் - காமன் கூத்தும் மலையக பாரம்பரியமும்
07. சோதிமலர் ரவீந்திரன் - காமன் கூத்தும் மலையக பாரம்பரியமும்
08. சோதிமலர் ரவீந்திரன் - காமன் கூத்தும் மலையக பாரம்பரியமும்
09. பொன்.பிரபாகரன் - காமன் கூத்தின் அரசியற் பொருண்மியம்
10. சோதிமலர் ரவீந்திரன் - காமன் கூத்தும் மலையக பாரம்பரியமும்
(பேரா.அருணாசலம் அவர்களின் அணிந்துரை)
11. தகவல் : ஆர்.அருணாசலம்
லெட்சுமி தோட்டம் ம.பி, பொகவந்தலாவை
12. தகவல் : எம்.காயாம்பு
லெட்சுமி தோட்டம் ம.பி, பொகவந்தலாவை
13. தகவல் : ஆர்.அருணாசலம்
லெட்சுமி தோட்டம் ம.பி, பொகவந்தலாவை
14. தகவல் : ஆர்.அருணாசலம்
லெட்சுமி தோட்டம் ம.பி, பொகவந்தலாவை
15. தகவல் : எஸ்.கிட்ணன் (தப்பு வாத்திய கலைஞர்)
லெட்சுமி தோட்டம் ம.பி, பொகவந்தலாவை
16. தகவல் : சிவனு (கூத்துப்பாடகர்),
லெட்சுமி தோட்டம் ம.பி, பொகவந்தலாவை
17. சோதிமலர் ரவீந்திரன் - காமன் கூத்தும் மலையக பாரம்பரியமும்

### ஊசாத்துணைகள் நூல்கள்

01. சோதிமலர் ரவீந்திரன் - காமன் கூத்தும் மலையக பாரம்பரியமும்
02. சு.முரளிதரன் - வரவும் வாழ்வும் - மலையக நாட்டாரியல் சிந்தனைகள்
03. பொன்.பிரபாகரன் - காமன்கூத்தின் அரசியற் பொருண்மியம்
04. பேரா க.அருணாசலம் - மலையக தமிழ் இலக்கிய வரலாறு
05. சு.முரளிதரன் - மலையக இலக்கிய தளங்கள்
06. சந்தனம் சத்தியநாதன் - காமன்கூத்து ஓர் கள ஆய்வு
07. இரா.சிவலிங்கம் ஞாபகார்த்த குழு - மலையக பரிசுக்கட்டுரைகள்
08. மலையக தமிழாராய்ச்சி மாநாடு 1996-1997

### சஞ்சிகைகள்

01. குமுதம் - 14.01.2002
02. லயம் - ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி
(2001, 2002, 2003, 2004, 2005, 2006)



# இறைச்சி பெட்டிக்காரன்

## S. தவச்செல்வன்

"ச்சீ தொரத்த தொரத்த பின்னுக்கே வாரியே நாயே!"

என்று கோச்சி ஸ்டேசன் வரை பின்தொடர்ந்த டைகரை ஏசிக் கொண்டே நடந்தான். செவலை நிறம் கொண்ட இராமனது டைகர் நாய் அவனது ஏச்சை வாங்கிக்கொண்டு கோச்சிரோட்டுக்கு கொண்டுவிடும் குறுக்கின் முனையில் வாலை மடக்கி படுத்துகொண்டது. ராமனின் கறுத்ததேகம் பகல்வெயில் பட்டு வழியும் வியர்வையில் மின்னியது தலைப்பாகையை அவிழ்த்துவிட்டு ஒரு பெஞ்சில் உட்கார்ந் தான். ஸ்டேசன் அதிகாரி இராமனைப் பார்த்துவிட்டு அவனது கைக்கடிகாரத்தைப் பார்த்தான் வழமையாக வருபவன் என்ற முகச்சாயல்கூட அவனது பார்வையில் அழுத்தமாய் விழவில்லை. ஆனால் எப்பொழுதுமே ராமன் கோச்சி வருவதற்கு அரை மணித்தியாலயத்திற்கு முன்பே வந்து விடுவான் என்ற கணிப்பில்தான் அவனது கைக்கடிகாரத்தை பார்த்திருக்க வேண்டும்.

கோச்சி வந்துவிட்டுப்போன அடையாளத்தை அங்கு கரைந்து கொண்டிருந்த புகைமண்டலம் அடையாளம் காட்டிக்கொண்டிருந்தது. இறைச்சிப்பெட்டியை தலையில் வைத்தவாறு தண்டவாளங்களைத் தாண்டி தோட்டத்துக்குள் செல்லும் குறுக்கை வந்தடைந்தான். டைகரும் வாலை நெளித்தப்படி எழுந்து நின்று இராமனின் காலை நக்கியது. அவனுக்கு முன்னே ஓடும் டைகர் வழித்தெரியாதவனுக்கு ரோட்டு காட்டுவதுபோல் மெதுவாக ஓடிக்கொண்டிருந்தது. வட்டவளை கோச்சி ஸ்டேசனை கடந்து மீனாட்சி தோட்டத்துக்கு செல்லும் கரத்தை ரோட்டு வழியாக அவனது கால்கள் நடையைகட்டியிருந்தது.

"வெயில் முத்தத்தொடங்கிருச்சி..." என்று மனதுக்குள் முனுமுனுத்தப்படி நெற்றியில் கட்டியிருந்த வேர்வையை ஒத்திக்கொண்டு அண்ணாந்து பார்த்தான். வானத்தை தொடுவதுபோல் இருந்த அவனது ஊர்மலைத்தொடரில் சிறிய சிறிய உருவங்கள் பழுப்புநிறத்தில் காட்சியளித்தது.

சூரியனை பார்த்து "மணி பதினொன்னாயிருச்சி" என்று சொல்லிக்கொண்டு வேகமாக நடந்தான்.

அந்த பாதையில் இம்மாதிரியான நேரத்தில் ஆள் நடமாட்டம் இருக்காது. இருபக்கமும் செறிந்த காட்டுச்செடிகள் அதற்குள் உலாவித்திரியும் காட்டுக் குருவிகளின் குரலொலிகளை கேட்டு டைகர் வியந்து பார்த்தது. உள்ளே நுழைய நுழைய கிர்ர் வண்டுகளின் சத்தமும் காட்டுப்பூக்களின் வாசனையும் அவனது களைப்பை தொலைத்துக் கொண்டிருந்தது.

வழமையாக ஒவ்வொருவருக்கும் ஆலமரச்சந்தியை அடைந்ததும் அருகிலுள்ள சுமைத்தாங்கி கல்லின்மேல் பெட்டியை இறக்கிவைத்து மரத்தடியில் அமர்ந்தான். சுமைதாங்கியின் கல்வெட்டிலுள்ள "அம்மாசி மருதாயி 1879.02.06" என்று பொழியப் பட்டிருந்த எழுத்துக்களை பார்த்து பார்த்து அழுத்துப்போனதால் வாசிக்காமலே அதை வாசித்தான்.

மண்ணை எகிறி படர்ந்திருந்த ஆலமர வேறொன்றில் உட்கார்ந்தான் அவனது கழுத்து வியர்வை நெஞ்சின் வழியே வடிந்து வயிற்றினூடாக இறங்கி அவன் மடித்து கட்டியிருந்த வேட்டியை நனைத்தது. டைகர் நாக்கை அரைவாசி தொங்கவிட்டு வெயிலுக்கு படாமல் சுமைத்தாங்கி கல்லின் மேலுள்ள இறைச்சி பெட்டியின் நிழலில் தனது உடம்பை மறைத்துக்கொண்டு களைப்பாறியது.

அந்த இறைச்சிப்பெட்டி கள்ளிப் பலகையில் செய்யப்பட்ட உறுதிவாய்ந்தது. இறைச்சியில்லாமலேயே ஐந்து கிலோவாவது எடையிருக்கும் போனமாதம் ஒரு நாள் நடந்த சம்பவத்தை நினைத்து அவனையறியாமலேயே பல்லைக் கடித்தான். துரை பங்களாவரை எந்தவித சேதாரமுமின்றி கொண்டுசென்ற பெட்டியை அதை நெஞ்சில்

தாங்கி முட்டிக்காளால் வைத்து இரக்கும்போது பெட்டி கீழே விழுந்து கொண்டிகழன்று இரண்டு மாட்டிறைச்சி தொடைத்துண்டுகள் மண்ணில் விழுந்ததைக் கண்ட துரை தனது பூட்ஸ் காலில் இராமனை உதைக்க வந்தபோது அங்கிருந்தோ பாய்ந்து அவனது நாய் துரையின் நீண்ட குளிர் கோட்டை பற்றி பிய்த்து கிழித்தபோது. அது வாங்கிய அடியில் கதறியது சத்தம் அவனிடம் பெரும் அருட்டலை ஏற்படுத்தியது. அன்றைய நாளிலிருந்து இராமனது டைகர் நாய் பங்களா கேட்வரை மட்டுமே வருவதற்கு அனுமதிகப்பட்டிருந்தது. அதுவும் கேட்வரை வந்து வாலை மடக்கி அந்த இடத்திலேயே படுத்துக்கொள்ளும். நாயை கண்கலங்க பார்த்து தடவிக்கொண்டு மீண்டும் இறைச்சிப்பெட்டியைத் தூக்கிக்கொண்டு நடக்கத்தொடங்கினார்.

அவனது நாய் ஓடி ஓடி நின்று நின்று இராமனை திரும்பி பார்த்து அவன் நெருங்கி வந்ததும் மீண்டும் ஓடவுமாக முன்னாடி சென்றது.

"இவனோடு வாழ்ரதால நம்மளும் இவன மாதிரியே இந்த தொரக்கி அடிமையா இருக்க வேண்டியதாயிருக்கு" என்று அந்த டைகர் நாய் ஒரு தடவையாவது சிந்தித்திருக்கும்.

இராமன் அவனது நாய் நினைப்பதுபோல முழுமையாக அடிமை உணர்வைக் கொண்டவனல்ல பழனிவேலு கங்காணி இந்தியாவிலிருந்து கூட்டிக்கொண்டு வந்தபோது பிரட்டுக்களத்தில் அவன்தான் முதல் ஆளாய் நிற்பான்.



"ஏய் ராமா முன்னுக்கே நிற்காதனு எத்தன தரம் சொல்லிருக்கேன் பின்னுக்கு போயி மறவா நில்லுடா" என்று பழனிவேலு கங்காணி திட்டி அனுப்புவான்.

இராமனின் உடல் கட்டு மீது பழனி கங்காணிக்கு எப்போதும் ஒரு பிரயாசை இருந்தது. அவன் கொண்டு வந்த ஆட்களில் இந்தளவு வைரம்பாய்ந்த உடல் வாகுள்ளவன். இல்லையென்ற திமிறும் அவனிடம் இருந்தது.

ஒரு முறையில் பழனிவேலுவின் மருமகன் என்பதால் இராமனும்...

"மாமே மாமே" என்று அவன் சொல்லும் வேலைகளையெல்லாம் பட்டென்று செய்துவிடும் ஆளாகவே இருந்தான்.

ஆனால் பின்னாட்களில் உறவைவிட உழைப்பே கங்காணிக்கு மேலான தேவையாயிருந்தது என்பதை அறிந்துகொண்டவன் மூன்றாம் நம்பர் கல்லுக்குழி மொடக்கில் வைத்து கங்காணியின் குரல்வளையை இறுக்கி

"ஒன் காட்டுமிராண்டித் தனத்த எந்த நேரமும் ஏங்கிட்ட காட்ட நெனைச்சயினா வகுந்துபுடுவே வகுந்து" என்று மிரட்டிவிட்டான்.

கூலியாக வந்த தொழிலாளர்களின் கடினமான உழைப்பையும் அவர்களின் முரடுகட்டிய உடம்பையும் பார்த்து வியந்து வெள்ளைத்துரை இராமனின் தோள்களை தொட்டு தட்டிக்கொடுத்துச்செல்வான். சுமார் ஆறரை அடிக்கு மேல் உயரமுள்ள அவனது வாட்டமான உம்பு மீது துரையும் ஒரு கவனத்தை வைத்திருந்தான்.

இராமன் தோட்டத்து பங்களாவை அடைய இன்னும் அரைமணி நேரமாவது நடக்கவேண்டும். "தண்ணிகான்மொடக்கில்" ஒரு வங்கியிலுள்ள கட்டடத்தில் பெட்டியை மறுபடி இறக்கி வைத்துவிட்டு இரண்டு முருங்கை இலைகளை பிடுங்கி மடக்கி தண்ணீரை மொண்டு குடித்தான். ஓடும் "தண்ணிகானில்" அவனுக்கு கீழே டைகர் தண்ணீரில் ஏதோ வரைவதுபோல் நக்கி குடித்துக்கொண்டிருந்தது. அந்த தண்ணீரின் ருசியை அதிகமாக கண்டவர்கள் இராமனும் அவனது நாயுமாகத்தான் இருக்க வேண்டும்.

தூரத்தே மலையாள் வேலை

விட்டுப்போகும் காட்சி தென்பட்டது. இராமன் மீண்டும் இறைச்சிபெட்டியை தூக்கி தலையில் வைத்தான். அவன் கொண்டு போன பின்னர்தான் பங்களாவின் "குசினி மேட்டி" யான காத்தான் அந்த இறைச்சித்துண்டுகளை சதுரவடிவில் வெட்டி ஏகம் பிரிப்பான்.

துரைக்கும் பங்களாவுக்கு வரும் விருந்தினர்களுக்கும், மாலை நேரங்களில் பார்ட்டிக்கு வரும் பக்கத்து தோட்டத்து துரைகளுக்கும் மாட்டிறைச்சி ஒரு முக்கியமான டிஸ். கொஞ்சத்தை உப்பும் மஞ்சளும் போட்டு அவித்து வைத்திருக்க வேண்டும். அதை இரண்டு நாட்களுக்கு பிறகு ஒரு வடிவில் துரைக்கு வந்தாக வேண்டும். எலும்புகளை சூப்வைத்து மாலையில் வரும் சக துரைமாருக்கு பரிமாற வேண்டும். கொஞ்சத்தை அடுப்பில் கட்டிபோட்டு பதப்படுத்தி துரை மலைக்கு தோட்டமேற்பார்வைக்கு குதிரையில் செல்லும்போது அனுப்பவேண்டும். அவனது கோட்டுப் பொக்கட்டில் நன்கு காய்ந்து பதப்படுத்தப்பட்ட இறைச்சித்துண்டுகள் கண்டிப்பாக இருக்கும்.

கங்காணிக்கு காசு கொடுத்து அல்லது ஏதாவது சன்மானம் வழங்கியே இராமனை துரை அவனுக்கு கீழ் வேலைசெய்பவனாக கொண்டுவந்திருக்க வேண்டும். ஆரம்பத்தில் "ராமா தொரக்கி பொடிகாட்டா இருக்க ஒன்னைய கூப்புடுரா போறியா?" என்று கேட்டதும்,

"ஆளுகளோட இருந்துபுட்டு எப்புடி மாமு போறது" என்றவன்

பின்னர் பங்களாவில் வேலை செய்யும் அப்பு காத்தான், தோட்டக்காரன் மைக்கலு, மாட்டுப்பட்டி முருகன், நாய்கூட்க்காரன் பாண்டி, காவக்காரன் செந்தாமரை, பூந்தோட்டக்காரன் காளி எல்லோரும்

"அந்த லயத்துல உள்ளவனுங்கதானே நம்மலோட வந்தவனுங்கதானே" என்று யோசித்துவிட்டு அவனும் துரைபங்கனா வேலைக்காரனாக வந்தான்.

ஆரம்பத்தில் பொடிகாட்டாக வந்த இராமன் துரையின் குதிரையுடன்தான் அதிகமாக நின்றுகொண்டிருப்பான் குதிரைக்கு புள் கொடுப்பது அதனை குளிபாட்டி தயார்படுத்துவது கடிவாளம் கட்டுவது என்று இருந்தது அவனது வேலைகள். பங்களாவில் உள்ள ஏனைய தொழிலாளர்கள் அவனை "குதிரைக்காரன்" என்றுதான் அழைத்தார்கள். காலையில் ஆறுமணிக்கெல்லாம் துரை வெளியில் உலாவ போவதற்கு குதிரை தயார் படுத்தப்பட்டு அவனது பங்களாவின் முன் புள்தரையில் நிற்க வேண்டும். துரை உடற்பயிற்சி செய்து கொண்டு கண்ணாடி சுவர் வழியே வெளியே நிற்கும் இராமனின் உடலைப்பார்த்து பொறாமைப்படுவான். பின்பு சுங்கானை புகைத்துக்கொண்டு அவனது அசைவுகளை அவதானித்துக் கொண்டிருப்பான். பின்பு குதிரையில் உலாவ சென்றுவிடுவான்.

குதிரைக்காரனாக இருந்த ஒரு நாள் அவனது பங்களாவின் பூப்பாத்திகளை குதிரை மிதித்து ஓடி விட்டதென்பதற்காக "கதிரைக்கால்" இராமனின் முதுகில் துரை அடித்த இரண்டாவது அடி விழாமல் சவுக்கைப் பிடித்துவிட்டதை தாங்கமுடியாத துரை அவனது துப்பாக்கியால் சுடமுனைந்தான். எந்தவித அசைவையும் அவன் காட்டததால் உயிர் தப்பினான்.

பின்நாட்களில் பங்களாவின் கடினமான வேலைகளைச் செய்வதற்கு பாரமான பொருட்களை சுமப்பதற்குமாக இராமனின் உடலும் அவனது உழைப்பும் பயன்படுத் தப்படுகிறதென்பதையும் அதற்காகத்தான் துரை தன்னை கங்காணியிடமிருந்து கொண்டுவந்திருக்கிறான் என்பதை இராமன் உணர்ந்து கொண்டான்.

மூன்று வருடங்களாக இறைச்சிப்பெட்டி சுமப்பதை நிரந்தர தொழிலாக நினைத்துக் கொண்டு வியர்வை ஒழுக ஒழுக பங்களாவிற்கு வரும் உயர்ந்த கற்படிகளில் ஏறுகிறான். சுமையின் அழுத்தம் நரம்புகளை நசுக்கி குருதியை உயர் அமுக்கம் செய்வதால் வரும் கோபத்தில் "ஒரு நாளைக்கு ஒளிந்திருந்தாவது தொரவுட்டு தலையில கல்ல தூக்கி போட்டுரனும்" என்று முணுமுணுத்துக்கொண்டு பங்களா படியில் ஏறுகிறான் இராமன் தூரத்தே.

சுங்கான் நாற்றம் காற்றோடு பரவுகிறது. அவன் பங்களாவின் பூந்தோட்டத்தில் தொங்கும் ஊஞ்சலில் அமர்ந்திருக்க வேண்டும்.

2015ம் ஆண்டு அரச சேவையாளர்களுக்கான ஆக்க திறன் போட்டியில்
கவிதைத் துறையில்
முதலாம் இடத்திற்கான விருதினை பெற்றுக் கொண்ட கவிதை

# முறிந்து செல்லும் முதுகெலும்புகள்...



மலையகம் மாட்சிபெற
மாட்டுவண்டிச் சில்லுகளாய்
ஓட்டை வீட்டுக் கூரைக்குள்ளே
நாட்டுக்காக தேய்ந்து விட்டாள்
திணற வைக்கும் மலைமுகடும்
பதற வைக்கும் பள்ளத்தாக்கும்
கிடங்குகளால் புதருகளால்
முடங்கிக் கிடக்கும் தேயிலைத் தோட்டம்

மார்கழியில் பனியென்றாலும்
சித்திரையில் வெயிலின் வாட்டம்
ஆடியிலே மாரிகாலம்
ஐப்பசியில் வரண்டே போகும்
இயற்கை கூட மாறினாலும் - இவள்
வாழ்க்கைதனில் ஏது மாற்றம்?
வறுமையதன் கொடுமையினால்
கண்ணீரோடு சதா ஏமாற்றம்

மழையென்று மலைத்து விட்டால்
வெயிலென்று கிறங்கி விட்டால்
நம்பியிருக்கும் குடும்பத்தினது
வயிற்றுப் பசிக்கு வழிதானேது?
கை பிடித்த கணவனவன்
கஸ்டப்பட்டு உழைத்தாலும்
உழைச்ச காசு அத்தனையும்
கள்ளுக்கடன் தீர்த்துடுச்சே
காலையிலே நாலரைக்கு
கலைந்த அந்த தூக்கத்துடன்
அடுப்படிக்கு விறகேற்றி
படுக்கைக்கு தேனீரூற்ற,
பதற்றமற்ற அலட்சியத்தால்
பலமணி நேரம் சென்று
பகற்றாய் எழும்பிடுவான்
பாழாய்ப் போன வீட்டுக்காரன்

"பள்ளிக்கு நேரமாச்சு
இன்னும் எழும்பலையா?"
படுக்கையிலே பள்ளி கொள்ளும்
பிள்ளைகளை திட்டுகிறாள்
காலைக் கடன், கணவன் கடன்,
பிள்ளைக் கடன், வீட்டுக் கடன்
விறுவிறுப்பாய் முடித்துவிட்டு
கொழுந்து பறிக்க விரையுகின்றாள்.

கூடையினை தலையில் மாட்டி
கூனிப் பிரம்பை கையிலேந்தி
கொசுவத்தினை ஏற்றிக்கட்டும்
கொங்காணியை இடுப்பில் சொறுகி
இடையை சுற்றி படங்கு கட்டி
நெற்றியிலே பொட்டுமிட்டு
வாய் நிறைய வெற்றிலையை
பாக்கோடு குதப்பிக் கொண்டு
குற்றுயிரும் கொலையுயிராய்
குடுகுடுத்தாள் குறக்குக் காட்டில்

மேல்மூச்சு கடன் கேட்டி
கீழ் மூச்சுத் திணறயிலே
மேட்டு லய கங்காணி
மேலிருந்து ஓடி வாறான்
முறுக்கிவிட்ட மீசையுடன்
மிரட்டலான ஏச்சுக்கள்.
"அப்படியே அங்கே நில்லு
அஞ்சி நிமிசம் சொணங்கிருச்சி
அதனால நான் உனக்கு
அரைப்பேரு போடப்போறேன்

இதுதான் என் விதி என்றும்
யார் செய்த சதி என்றம்
எண்ணங்களில் கேள்விகளை
தட்டுத் தட்டாய் அடுக்கி விட்டு
தலைகனத்த சுமையதனால்
தலை குனிந்து வாய் மூடி
கிள்ளி விட்டாள் தேயிலையை
துளிர விட்டாள் சிந்தனையை.

மாசமும் பிறந்தாச்சு
தேதியும் பத்தாச்சு
சம்பள தேதியது
தேனாகக் காதில் வார்க்க
மனக்கணக்கில் ஒதுக்குகிறாள்
மாதாந்த செலவுகளை
பக்கத்துக் கடைக்கு அறுநூறு
பாக்கியத்திற்கு ஐநூறு
சீட்டுக்கு இருநூறு
சில்லறை செலவு சில நூறு
சாப்பாட்டுக்கு என்ன செய்ய
சாமத்தியமாய் யோசிக்கின்றாள்.

காசு இன்னும் கையில் வந்து
சேரும் முன்னே கடன்காரன்
கண்டிப்பான பாணியிலே
வாசல் வந்து நின்றிடுவான்
மலையகத்து பெண்ணிவளும்
மானிடப் பிறவியன்றோ?
மனம் குமுறி இளையுகின்றேன்
மற்றப்படி ஒன்றுமில்லை

சுப்பையா சிவராஜா
அறிவிப்பாளர்,
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்
(பழைய மாணவர் - 2004)



எல்லோருமே அந்த இடத்தை அப்படித் தான் அழைப்பார்கள். அண்ணன் தம்பி கிடங்கு என்பதுதான் அந்த இடம்.

தொப்பிதோட்டத்திலிருந்து அரத்தோட்டத் திற்குச் செல்லும் பாதையில் தெம்மதுரையை தாண்டியதும் ஐம்பத்தோறாம் கம்பி என்ற வளைவு ஒன்று உள்ளது. அதை சற்று கடந்ததும் செல்லும் பாதையின் ஓரமாக உள்ள பள்ளத்தாக்கிற்கும் பாதைக்கு அந்தபக்கமாக உள்ள லெட்சுமித்தோட்டம் மத்தியபிரிவு பள்ளதாக்கிற்கும் இடையில் ஒரு ஆறு ஓடுகிறது. லெட்சுமித் தோட்டம் என்று தமிழிலும் "கெர்கஸ்வோல்ட்"என்று ஆங்கிலம் மற்றும் சிங்களத்திலும் பெரும் பாறை யொன்றில் எழுதப்பட்டிருக்கும். அந்த பாறைக்கு பள்ளத்தே உள்ளதுதான் அண்ணன் தம்பி கிடங்கு.

ஆயிரத்து தொளாயிரத்து பதினேழாம் ஆண்டு கெழா தோட்டத்திலிருந்து இந்த தோட்டத்திற்கு மக்கள் நடைவழியாக அழைத்து வரப்பட்டபோது இப்பக்கத்தி லிருந்து அந்தப்பக்க மலைப் பகுதிக்கு ஆறு வழியாக கடந்து செல்லும் வேளையில் அண்ணன் தம்பி இருவரும் அந்த ஆழக் கிடங்கில் மூழ்கி இறந்துவிட்டனராம். அன்றிலிருந்து இந்த ஆழப்பிரதேசம் அண்ணன்தம்பி கிடங்கு என்றே அழைக்கப்படுகிறது.

இந்த ஆற்றில் கரை இருபுறத்திலும் புளிச்சை செடி, தட்டபுல், அறுகு புல் என்பன அதிகமாக வளர்ந்திருக்கும். எங்களூரில் வளர்க்கப்படும் பல கால்நடைகளுக்கு இந்த ஆற்றோர புற்கள் தான் பசியாறி வருகின்றன.

நானும் எங்கள் வீட்டில் வளர்க்கும் ஆட்டுக்கு குழை அறுப்பதற்காக அண்ணன் தம்பி கிடங்கு பள்ளத்தாக்குக்கு ஒன்பதாம் நம்பர் மலை வழியாக இறங்கிக் சென்று கொண்டிருந்தேன். அந்த ஆற்று பள்ளத் தாக்கில் இருந்து ஜோனையா மெதுவாக இடுப்பில் கை வைத்து மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கியவாறு படியேறிக் கொண்டிருந்தார்.

அவரைக் கண்டதும் "ஜோனையா டோக் பொகந்தலா எப்பா" என்றேன்.

வழமைபோலவே சிரித்துக் கொண்டு "எங்கய்யாவு போறிங்க பில்லுக்கா... சரியான வெயிலு தம்பி மனுச ஒக்காந்திருக்கவே முடியல. இந்த நேரத்துல பில்லுக்கு போறிங்க... பில்லு சேறவும் சேறாது.. வெயில் காலந்தானே அய்யாவு பேசாட்டுக்கு முருங்கயெலய வெட்டி போடுங்க.... அதவுட்டுப்புட்டு அண்ணன் தம்பி கெடங்குக்கு தனியாவேற போறிங்க. தொணைக்கு யாராச்சும் கூட்டிட்டு வந்துருக்கலாந்தானே அய்யாவு" என்று பேசிக்கொண்டே நான்கைந்து படிகள் மேலேறிவிட்டார்.



# ஜோனையா

சுப்பையா கமலதாசன்

கொஞ்சம் தூரம் போனதும் முடியாமல் படி வங்கில் உட்கார்ந்து கொண்டார். அவரை திரும்பி பார்த்துவிட்டு...

"மெதுவா போங்கையா" என்று சொல்லிவிட்டு நானும் படி இறங்கினேன்.

அவரைக் கண்டதும், நான் மட்டுமல்ல பெரியோர்கள் முதல் சின்னஞ்சிறு வாண்டுகள் வரை "ஜோனையா டோக் பொகந்தலா எப்பா" என்று சொல்வது வழக்கம்.

இவருக்கு மட்டுமல்ல பலருக்கு பல குறிச்சொற்கள் வைத்திருந்தோம். ஜோனையா என்றால் "ஜோனையா டோக் பொகந்தலா எப்பா, உப்பாலி அண்ணன் என்றால் "கபுஞ்ஜடி கபுஞ்ஞா" உப்பாலி என்பது

அவரது குறிச்சொல்.

உண்மையான பெயர் மாரிமுத்து. அவரும் அப்படித்தான் சின்னஞ்சிறுசுகளை கண்டதும் கட்டியிருக்கும் சாரத்தை தொடைவரைத் தூக்கி தொடையில் பலமாக சத்தம் வருமாறு அரைந்து கபுஞ்ஞடி கபுஞ்ஞா என்பார்.

சின்னதுகளும் சிரித்துக் கொண்டு அவரைப்போலவே செய்யும். ஆனால் உப்பாலி அண்ணன் புத்தி சுயாதீனம் உள்ளவர். அர்த்தம் எதுவும் இல்லையென் றாலும் இதுகளைப்போன்ற சேட்டைகள் எங்களுக்கு மிகவும் குஷியானவை. அந்த குஷியில்தான் இன்றும் ஜோனையாவைப் பார்த்து அப்படி சொல்லிவிட்டு படியிறங் கினேன்.

ஜோனையா ஒரு காலத்தில் எங்கள் தோட்டத்தில் குடியும் குடித்தனமுமாக சந்தோசமாய் வாழ்ந்தவர். ஆனால் இன்று வீடிருந்தும் வீட்டுப் பக்கம் செல்லவே சித்தமில்லாமல் இப்படியே அண்ணன்தம்பி கெடங்கு, கணக்கப்பிள்ளை வீடு கற்பாறை, என்று எங்காவது போய் அமர்ந்து கொள்வார். அப்படியும் இல்லையென்றால் ஒவ்வொரு லயமாக உலாவி வருவார். இதுதான் இப்பொழுது ஜோனையாவின் பொழுதுபோக்கும் வாழ்க்கையும்.

ஒருகாலத்தில் ஜோனையா என்றாலே எங்கள் தோட்டத்தில் ஒரு மதிப்பும் மரியாதையும் இருக்கும். சிறியவர் முதல் பெரியவர்வரை அனைவருமே அவர் வருவதை கண்டாலே சற்று ஒதுங்கி நடக்கும் அளவுக்கு கண்ணியமாக வாழ்ந்தவர். தனக்கு துணையாய் மனைவியும் இறந்தால் மொட்டை அடிக்க ஒன்றுக்கு இரண்டு மகன்மார்களும் ஆசைக்கு ஒரேயொரு மகளுமாக குட்டிக் குடும்பமாய் குதூகலமாகய் வாழ்ந்து வந்தவர்.

இந்தியாவிலிருந்து வந்த எங்கள் பரம்பரை இந்த நாட்டின் பங்காளராகிவிடுவார்கள் என்று பயந்து அவர்களின் பிரஜாவுரிமை பறித்தெடுத்து நாடற்றவர்களாக்கிவிட்ட பேரின தலைமைகள், அது போதாதென்று இந்த நாட்டை விட்டே அனுப்புவதற்காக இந்தியாவுடன் பேசி ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தமும் கொண்டு வந்தார்கள். இலங்கை நாட்டில் நாடற்றவர்களாய் வாழ்ந்தவர்கள் சொந்த நாட்டிற்கு சென்றால் போதும் என்றெண்ணி இந்தியாவிற்கு மூட்டைகட்டத் தொடங்கினர்.

ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்களில் பாதி பேர் இலங்கையிலும் மீதிபேர் இந்தியாவிற்கு சென்றும் சொந்தங்கள் சின்னாபின்னமானதும் அந்த காலப்பகுதியில்தான்.

அந்த ஒப்பந்தத்தினால் ஓரங்கட்டப்பட்டவர் தான் இந்த ஜோனையா.

இவரது குடும்பத்தில் உள்ளவர்களில் இவர் மட்டும் மீதமிருக்க மற்றவர்கள் அனைவரும் இந்தியாவிற்குச் சென்று விட்டார்கள். இவரும் இந்தியாவிற்கு செல்லவிருந்து ஏதோ சிட்டிசன் குளறுபடி காரணமாக செல்ல முடியாமற் போனவர்தான், மனம் பேதலித்து இப்படி மலையும் காடும் என்று சுத்தித்திரிகின்றார்.

இவர் மட்டுமல்ல. இவரோடு ஜோதி கண்ணன், மைனா கிழவி போன்றவர்களும் இப்படித்தான். வீடின்றி கவனித்துக்கொள்ள குடும்பமின்றி ஊரூராய்... தெருத்தெருவாய்... சுயநினைவிருந்தும் பைத்தியங்களாய்....

ஜோனையாவை கண்டாலே "ஜோனையா டோக் பொகந்தலா எப்பா" என்று சொல்லுவதற்கும் காரணமுண்டு.

அதுவும் அவர் எங்களுக்கு சொன்ன கதைதான்.

ஒரு தடவை இவர் யாழ்ப்பாணத்துக்கு சென்றிருந்தவேளை, அங்கிருந்த சீருடை அணிந்த ஒருவன் துப்பாக்கியை அவர் முகத்துக்கு நேரே நீட்டியபடி நின்றானாம். இவர் பயத்தாலும் திடீரென ஏற்பட்ட பதற்றத்தினாலும் சிங்களமும் தெரியாததால் "நான் ஜோனையா, துவக்கால் சுடவேண்டாம், நான் பொகவந்தலாவையில் இருந்து வந்துள்ளேன்..." என்பதை

"ஜோனையா டோக் பொகந்தலா எப்பா" என உளறிவிட்டாராம்.

எங்களிடம் இந்த கதையை சொல்லியதிலிருந்து நாங்களனைவரும் அவரை காணும்போதெல்லாம்...

"ஜோனையா டோக் பொகந்தலா எப்பா" என்று கூறுவோம்.

நாங்கள் அவ்வாறு கூறுவதில் அவருக்கு ஒருவிதமான மகிழ்ச்சி ஏற்படுகிறது என்பதாலேயே நாங்களுக்கும் அதற்கு பழக்கப்பட்டுவிட்டோம்.

"நல்லவர்க்கெல்லாம் சாட்சிகள் உண்டு ஒன்று மனச்சாட்சி..." என்றபாடலை மிக அருமையாக பாடுவார். பலர் அவரது அந்த

பாடலை கேட்பதற்காகவே அழைத்து பாடச்சொல்லி பாடி முடித்ததும் உணவு, அல்லது பீடி கொடுத்தனுப்புவார்கள்.

நான் குழை வெட்டும் விதத்தை ஜோனையா கட்டிட வங்கில் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

மேலே தொரை பங்களா படிக்கட்டிலிருந்து "சின்னவன்..." என்ற எனது அம்மாவின் பலத்த குரல் கேட்டு நிலை தடுமாறியதால் கையில் இருந்த கத்தி பெருவிரலோடு சேர்த்து இருவிரல்களுக்கும் பாய்ந்தது.

வெடுக்கென கையை உதறியவாறே அம்மாவை மேலே ஏறிட்டுப்பார்க்க...

"இந்தியால இருந்து ஏதோ கடதாசி வந்துறுக்காம் சுறுக்கா வர்றியா..." என்று மீண்டும் அம்மா சத்தமிட்டாள்.

அறுத்த குழைகளை சுற்றி கட்டித் தூக்கி தலையில் வைத்து கொண்டு இரத்தம் சொட்டும் விரல்களை வாயில் வைத்து சூப்பியவாறே படியேறினேன்.

என்னுடன் ஜோனையாவும் சேர்ந்து கொள்ள இருவருமாக தோட்டத்து தார் பாதைக்கு வந்தோம். பாதைவரை என்னுடன் வந்தவர் மீண்டும் சுடுகாட்டுப் பாதை பக்கமாக பொடிநடையாக நடக்கத் தொடங்கினார்.

கையில் காயத்தை கண்ட அம்மா வேலியோரமாக வளர்ந்திருந்த லாடாப்பு மரத்தின் சில இலைகளை ஆய்ந்துவந்து அரைத்து அதனுடன் மஞ்சள் சேர்த்து காயத்தில் வைத்துவிட்டாள்.

உயிர்போகும் ஒரு வலி!

இந்த லாடாப்பு இலை மருந்தை காயப்பட்ட இடத்தில் வைத்தால் கொஞ்சநேரம் உச்சந்தலையை குடைவதுபோல் எரியும். பின் காயம் பட்டுப்போய்விடும்.

மருந்து வைத்த எரிச்சலில் முனகிக்கொண்டே இந்தியாவிலிருந்து வந்திருந்த கடிதத்தை வாசித்தேன்.

"பெரியப்பாவிற்கு சுகமில்லை, வைத்தியசாலையில் இருக்கின்றார் கடைசி காலத்திலேயாவது உங்களனைவரின் முகத்தையும் ஒருமுறை பார்க்க வேண்டும் என்று புலம்புகின்றார். முப்பது வருடகாலமாக வருவதாகக்கூறி இதுவரையும் வரவில்லை. அவரின் கடைசி காலத்திலாவது ஒருமுறை வந்து பார்த்துவிட்டு செல்லுங்கள்"

என்று அண்ணா கடிதம் எழுதியிருந்தார்.

ஆடு விற்று மீட்டு வைத்திருந்த செயினுக்கு மீண்டும் அடைவுக் கடைக்குச் செல்ல வேளை வந்துவிட்டது என்று எண்ணிக் கொண்டு...

குடும்பத்தோடு செல்வது குடும்பத்துக்கும், குடும்ப பொருளாதாரத்துக்கும் சாத்தியமில்லை என்பதால் நான் மட்டும் செல்வதாக முடிவெடுத்து விசா போடுவதற்கான ஏற்பாடுகளை செய்யவேண்டும் என்று நினைத்துக் கொண்டேன்.

அப்பாவும் பெரியப்பாவும் உடன் பிறந்தவர்கள்.

என் தாத்தாவிற்கு இருதாரங்கள்.

முதல்தாரத்து மனைவி மூன்று சின்னசிறுசுகளையும் விட்டுவிட்டு இறந்தபிறகு தாத்தா வேறுவழியின்றி மறுமணம் செய்து கொண்டார். துணை இறந்தால் மறுமணம் செய்யக்கூடாது என்ற எங்கள் குல மூடத் தனத்தை எங்கள் குடும்பத்தில் முதலில் தகர்த்தெரிந்தவர் தாத்தாதான்!

இரண்டாம் தாரத்து மனைவிக்கு நான்கு பிள்ளைகள். எனது சித்தப்பாவும் அத்தை மூவர்களுமே அவர்கள்.

இந்தியாவிலிருந்து வந்தவர்களை இலங்கையும் இந்தியாவும் சரிபாதியாக பிரித்துக் கொண்டபோது எங்கள் குடும்பத்தில் உள்ளவர்களும் இந்தியாவில் உள்ள சொந்தவூரான மண்பாறைக்கு சென்றுவிடுவோம் என்று விண்ணப்பித்திருந்தார்கள்.

எல்லோரும் விண்ணப்பித்திருந்தாலும் பெரியப்பா, அப்பா, பெரியத்தை மூவருக்குமே இந்தியா செல்வதற்கான அனுமதி கிடைத்திருக்கிறது.

பெரியப்பாவும் பெரியத்தையும் இந்தியாவுக்கு செல்ல வேண்டும் என்று முடிவு செய்தபின் குடும்பத்தில் உள்ள மற்றவர்கள் விவரம் தெரியாதவர்களாக இருந்ததாலும், தாத்தாவும் சுகமில்லாமல் இருந்ததாலும் அவர்களை பார்த்துகொள்ள வேண்டுமென்பதால் அப்பா ஒருவிதமாகத் தங்கிவிட்டார்.

பெரியப்பாவும் பெரியத்தையும் இந்தியாவிற்கு சென்றுவிட்டார்கள். நம்

சொந்த நாடு என்ற உள்ளுணர்வுடன் செல்ல இந்தியா சிலோன்காரர்கள் என்று இவர்களை தனிக் குழுமமாக்கியது.

இலங்கையில் கொழுந்தெடுத்து பழகிய இவர்கள் அங்கு வேறு தொழில் இன்றி, தொழில் பழக்கம் இன்றி தேயிலை தோட்டங்கள் இருந்த நீலகிரிக்கு அங்கும் தினக் கூலிகளாக வேலைக்கு சென்றனர்.

எனது பெரியப்பா இலங்கையில் இருக்கும்போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தோட்டத் தலைவராக இருந்தவர். இலங்கையில் இருக்கும் வரை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்தான் அவரது மூச்சென்றிருந்தார்.

அந்தவொரு ஆக்ஞையில் சிலோன்காரர்கள், இலங்கை தமிழர்கள், புலிகள் என்று இந்தியா இலங்கையிலிருந்து வந்த இந்திய வம்சாவளிகளை அடக்கியொடுக்கிய விதம் பார்த்து மனம் பொறுக்காமல் இலங்கையிலிருந்து அரசியல் பழிவாங்கலால் தொழிலிழந்து இந்தியாவிற்குச் சென்ற இர.சிவலிங்கம் மற்றும் செந்தூரன் தலைமையில் இடம்பெற்ற மக்கள் மன்றத்துடன் இணைந்து சமூக செயற்பாடுகளில் ஈடுபட தொடங்கினார்.

இந்தியாவிற்கு திரும்பிய இந்தியத் தமிழர்களை இலங்கை தமிழர்கள் என்று அழைப்பதும் அவர்கள் புலிகளின் ஆதரவாளர்கள் என்ற விசமத்தனமான பிரச்சாரம் செய்வதும் அன்றைய காலகட்டத்தில் அரசியல் பொழுதுபோக்காகவிருந்தது.

அப்பொழுது நீலகிரி கலெக்டராக இருந்த லீனா நாயர் இதுபோன்ற பிரசாரங்களை நம்பி ஆராய்ந்து பார்க்காது புலிவேட்டை ஆடினார், தமிழர்களை துன்புறுத்தினார், அவர்களின் ஆலோசனையின் பேரிலேயே மக்கள் மன்றத் தலைவராக இருந்த இர.சிவலிங்கம் அவர்கள் போன்ற சமூக செயற்பாட்டாளர்கள் சிறப்பு முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

மக்கள் மன்ற செயற்பாட்டாளராக இருந்த எனது பெரியப்பாவையும் அவரது திருமணம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை தாலி கட்டும் சில நிமிடங்களுக்கு முன் வந்து,

"உங்களை அழைத்து வர சொல்லியிருக் கின்றார்கள் நீங்கள் எங்களுடன் உடனே வரவேண்டும்" என்று கூப்பிட்டார்கள்.

"திருமணம் முடிந்ததும் வருகிறேன்" என்றதற்கு

"இல்லை உடனடியாக அழைத்து வரும்படி எங்களுக்கு உத்தரவு வந்திருக்கிறது"

என்று தாலிகட்டவிடாமலேயே அழைத்து சென்றுவிட்டார்கள்.

அழைத்து சென்றவரை செங்கல்பட்டு சிறப்பு முகாமுக்கு அழைத்து சென்றார்கள். பெரியப்பாவும் சிறப்பு முகாம் என்றதும் கற்பனை செய்து வைத்திருந்த விதமே வேறு. செங்கல்பட்டு சிறப்பு முகாமிற்கு சென்று பார்த்தபிறகுதான் அதற்கான உண்மையான அர்த்தம் விளங்கியது.

ஆயுதம் தாங்கிய காவலர் ஒருவர் நுழைவாயில் நிற்க, அரைவட்ட வடிவத்தில் அமைக்கப்பட்ட சிறைச்சாலையில் நாற்பத்திரண்டு சிறைக்கூண்டுகள், அதனருகே பெண்களுக்கென்று ஒரு தனிப்பகுதி, அதன் எதிராக நிர்வாக அலுவலகம். அதற்கடுத்தே சமையலறை, தண்ணீர்த் தொட்டி, காவலர்கள் தங்கியிருக்க ஒரு மாடி கட்டிடம், அலுவலகத்திற்கு பக்கத்தே ஒரு பிள்ளையார் சிலை, ஏகேபோர்டிசெவன் தாங்கி இரவு பகல் ரோந்து புரியும் காவலர்கள் சகிதமாக காட்சியளித்ததுதான் செங்கல்பட்டு சிறப்பு முகாம்.

பெரியப்பா, மன்ற செயற்பாட்டாளர் களுக்கும், உயர் அதிகாரிகளுக்கும் கடிதங்கள் எழுதி கியூ பிரிவிடம் அஞ்சலிடுமாறு கூறியிருக்கின்றார். அவர்கள் அதை உரிய அதிகாரிகளிடம் கொடுப்பதாகக்கூறி கிழித்துவிடுவார்கள் என்பதையும், கியு பிரிவு ஒருவகையான உளவு துறை, இலங்கை தமிழர்கள் பற்றிய விவகாரங்களுக்கு இவர்கள்தான் முழு பொறுப்பு என்பதையும் பின்னரே பெரியப்பா அறிந்து கொண்டார்.

காரணம் தெரியாமல் சிறப்பு முகாமில் அடைக்கப்பட்ட பெரியப்பா பல துன்பங் களை அனுபவித்து சுமார் ஒன்றரை வருடத்திற்கு பிறகு விடுவிக்கப்பட்டார்.

இவை அனைத்தும் அவர் சிறப்பு முகாமிலிருந்து விடுதலை பெற்று வந்ததும் அப்பாவுக்கு எழுதியனுப்பிய கடிதத்தின் மூலம் தெரிந்துகொண்டோம்.

ஒவ்வொரு முறை கடிதம் அனுப்பும்

பொழுதும்... "இலங்கையிலிருந்து ஏன்டா இந்தியாவிற்கு வந்தோம் என்றிருக்கு... அங்க இருந்திருந்தாலும் சந்தோசமா இருந்திருக்கலாம்...: என்று நொந்து கொள்வார்.

அக்கரைக்கு இக்கரை பச்சை போலத்தான்....

அதற்கு பிறகு முப்பது வருடங்களாகியும் அவர்களது வாழ்க்கை தரம் உயரவில்லை, உயர்த்தப்படவும் இல்லை. இலங்கையில் உள்ள அதே லயம்போல் இந்தியாவிலும் லயத்திலேயே வாழ்க்கை நடத்தி வருகின் றார்கள். இவர்கள் சிலோன்காரர்கள் என்பதால் இதுவரைகாலமும் சாதி சான்றிதழ் கூட வழங்கப்படாத ஓரங்கட்டப்பட்ட சமூகமாகவே வாழ்ந்து வருகிறார்கள்.

இலங்கையில் இருக்கின்ற தமிழர்கள் பற்றி அரசியல் சுயலாபத்திற்காக செயற்படும் தமிழக அரசியல்வாதிகள் தங்கள் வம்சத்தவர்களை தங்கள் நாட்டிலிருந்து கூலி வேலைக்காக இலங்கை சென்று மீண்டும் திரும்பி வந்த உடன்பிறப்புகளை "சிலோன்காரர்கள்" என்ற அடையாளம் சூட்டி கண்டுகொள்ளாமல் இருப்பது எத்தனை அபத்தமானது.

விசாவிற்கு விண்ணபித்து ஒரு மாதிரியாக விசா கிடைத்துவிட்டது. தொலைபேசி மூலமாக பெரியப்பா குடும்பத்திற்கு அறிவித்து விட்டேன். சென்னை விமான நிலையத்தில் வந்திருக்கும்படி. கடிதங்கள் மூலம் மட்டுமே தொடர்பு கொண்டிருந்த எனது இரத்த உறவுகளை முதன்முறையாக பார்க்க போகின்றேன்.

செல்வதற்கு ஆயத்தமாகி வீட்டை விட்டு வெளியே வரும்போது வீட்டு பக்கமாக ஜோனையா வந்தார்.

"அய்யாவு தூர கௌம்பிட்டிங்க போலருக்கே" என்றார்.

"ஆமா ஜோனையா... இந்தியாவுக்கு... பெரியப்பா வீட்டுக்கு போறேன். பெரியப்பாவுக்கு சொகமில்லையா.. போய் பார்த்துட்டு வந்துறுறேன்." என்றேன்.

"அப்புடினா எங்க புள்ளைகளு நாவனெக்கம்பட்டியிலதான் இருக்குதுங்க... முடிஞ்சா அங்கையும் ஒரு எட்டு போய் பார்த்துட்டு நலம் விசாரிச்சிட்டு வாங்கய்யாவு... பெரிய புண்ணியமா போவும்" என்றார்.

"சரி ஜோனையா உங்களுக்காக போயிட்டுவாறேன்" என்று சொல்லிவிட்டு அவரிடம் விடைபெற்று கொழும்புக்கு வந்து சேர்ந்தேன்.

முதன்முறையாக விமானத்தில் பயணிக்க போகிறேன். ஒருவகையான குஷி வந்துவிட்டது எனக்கு. அதோடு சேர்ந்து பயமும் வந்துவிட்டது.

கட்டுநாயக்கா விமான நிலையம் பிரமாண்டமாக இருந்தது. முழு இலங்கையின் முக்கால்வாசியை முழுங்கிக் கொண்டிருப்பது போல....

இன்னும் உள்ளே செல்லவில்லை. விமான நிலையத்தில் விமானத்தில் ஏறுவதற்கான வலயத்திற்குள் சொல்லும்போது எனது தொலைபேசி கிணுகிணுக்கிறது.

வீட்டிலிருந்து அழைப்பு வந்திருந்தது....

"...ஜோனையா... அண்ணன்தம்பி கிடங்கில்... விழுந்து தவறிவிட்டதாகக் கிடைத்த செய்தி என்னை விமானத்திற்கு "பாய்" சொல்லி வழியனுப்பி வைத்தது.

கனடா "தாய்விடு" சஞ்சிகை - மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் இணைந்து நடாத்திய சிறுகதைப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது

# எலி பொறியில் பூனை



எலிகள் கூட்டம் உணவுத் தேடிக்கொண்டு அங்கும் இங்குமாக பாடலுடனும், ஆடலுடனும் குதூகலமாக உலாவிக் கொண்டு இருக்கிறார்கள். சிறிது நேரத்தின் பின்னர், அவர்களுடைய உரையாடல்கள் தொடர்கிறது...

தாய் எலி : பிள்ளைகளே

குட்டி எலிகள் : அம்மா

தாய் எலி : அங்கே பாருங்கள்

குட்டி எலிகள் : என்னம்மா

(அனைவரும் கீழே கிடக்கும் பொருட்களை கையில் எடுத்துக்கொண்டு அம்மாவிடம்...

குட்டி எலி *01* : அம்மா ஆடுவோமே

குட்டி எலி *02* : அம்மா பாடுவோமே

தாய் எலி : ஆடுவோம் பாடுவோம்

(அனைவரும் பஞ்சு துண்டுகளை கையில் எடுத்துக் கொண்டு)

பாடல் : ஏய் ஆடுவோம் பாடுவோம்
ஆனந்தமாய் கூடுவோம்
ஒன்றாக சேர்ந்திருப்போமே
நாங்கள் வலைக்குள்ளே வாழ்ந்திருப்போமே
மனித வீட்டுக்குள்ளே வலையமைப்போமே
அதிலே மறைந்திருந்து திருடி தின்போமே
நல்லது கெட்டது உயர்ந்தது தாழ்ந்தது
என்று பேதம்காட்ட மாட்டோமே
அத்தனையும் ஒன்றாக நினைத்திருப்போமே
பூனையாரக் கண்டால் ஏய்
பதுங்கிபதுங்கி பழகிய
பாதைக்குள்ளே பாய்ந்தப்படி சேர்ந்து செல்வோம்
பள்ளம் மேடு எல்லாம் பாய்ந்து தாவி குதித்து
பழகிய பாதைக்குள்ளே
பாய்ந்த படி சேர்ந்து செல்வோம் ஆடுவோம்

(பாடல் முடிவுற்றதுடன் குட்டி எலிகள் எல்லோரும் தாய் எலியிடம்)

குட்டி எலி 01 : அம்மா நாம் இந்த அறையில் இருந்து ஆடிப்பாடி அலுத்துப்போய் விட்டதம்மா

குட்டி எலி 02 : அம்மா ஒரே வகையான உணவு சாப்பிட்டு சலிப்படைந்து விட்டதம்மா

குட்டி எலி 03 : அம்மா இந்தவீட்டு எஜமானியம்மா வஞ்சகம் செய்கிறார் அம்மா

தாய் எலி : என்ன வஞ்சகம் பிள்ளைகளே

குட்டி எலி : பூனையாருக்கு மட்டும் தினமும் பால் வைக்கிறார். ஆனால்□ நமக்கு□

தாய் எலி : சரி பிள்ளைகளே! நாம் செய்வதும் ஒரு வகையில் தீங்கான செயல்கள் தானே

குட்டி எலிகள் : என்ன தீங்கான செயல்கள்?

(தாய் எலி ஒன்று கூற, குட்டி எலிகள் அதற்கு ஏற்றார் போல, பாடல் பாடி நடனம் ஆடுகிறார்கள்)

பாடல் : தினக்கு தினக்கு தினக்கு தின்னா
அரிசி மூட்டையில ஓட்டை
அய்யா போடும் சட்டையிலும் ஓட்டை
அலுமாரி லாச்சியிலும் ஓட்டை
அம்மா அட்டாளி மூலையிலும் ஓட்டை

குட்டி எலி 01 : ஆமாம் அம்மா. தீங்கான செயல்கள் தான். அம்மா நான் இந்த வீட்டு சின்ன பொடியனோட ஸ்கூல் டைய என்னுடைய இடைக்கு பட்டியா எடுத்திட்டேன் அம்மா.

(மற்ற குட்டி எலி ஓடிவந்து இடை பட்டியை பிடுங்கி செல்ல, குட்டி எலி 01 அழுதல்)

தாய் எலி : அதை கொடு

குட்டி எலி 02 : அம்மா நான் இந்த வீட்டு

அனைவரும் : ம்... ம்...

குட்டி எலி 02 : ஸ்கூல் பேக்ல சிச்சா பண்ணிட்டேன் அம்மா

குட்டி எலி 03 : நான் அப்போதே சொன்னேன் பண்ண வேண்டாம் என்று. இவன் கேட்கல

குட்டி எலி 02 : சொரி அம்மா

தாய் எலி : சொரி எனக்கு இல்ல. அந்த தம்பிக்கி எல்லோரும் சொரி சொல்லுங்கள்

குட்டி எலி 02 : சொரி தம்பி

குட்டி எலி 01 : சொரி தங்கம்

தாய்எ லி : சொரி செல்லம்.

பாடல் : டட்டாடட்டா டட்டட்டா
சொரி தம்பி தம்பிக்கி சொரி தம்பி
பண்ண மாட்டோம்
சிச்சாபண்ண மாட்டோம்.
கடிக்கமாட்டோம் புத்தகத்தை கடிக்க மாட்டோம்

(இப்போது வெளியில் இருந்துக் கொண்டு பூனையார் சத்தம் இடுகிறார்.

பூனையார் : மியோவ், மியோவ்,

அம்மா எலி : சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்க மாட்டார் போல

குட்டி எலிகள் : என்ன அம்மா சாமி... வரம்...

தாய் எலி : இந்த வீட்டு சொந்தகாரர் வந்திட்டார் போல

குட்டி எலிகள் : அவர்கள் தான் "ட்ரிப்" போயிட்டாங்களே

தாய் எலி : நான் அவர்கள சொல்லல்ல

குட்டி எலிகள் நீங்கள் சொல்வது எமக்கு விளங்கள அம்மா

(பூனையார் மியோவ், மியோவ்.. என்று சத்தம் இட்டுக்கொண்டு அவருடைய கூண்டில் இருந்து வெளியில் வருகிறார்.)

பூனையார் : ஆஹா எங்கிருந்து வருகிறது இந்த வாசனை. என் மேனி புல் அரிக்கின்றது. ரொம்ப நாள் ருசியான சாப்பாடு சாப்பிட்டு. ஆஹா. எலி வலை, இது தனி வலை இல்லையே. பெரும் கூட்டம் ஒன்று இருக்கின்றது. பாலும் சோறும் சாப்பிட்டே வயிறு ஒட்டிவிட்டது. நான் என்ன சைவ சாப்பாட்டு காரனா? மச்சம் உண்ணும் சுவையே சுவை. என் மீசை துடிக்கிறது. என் நகங்கள் நீள்கிறது. மீயோவ்.

(பூனையாரோடு சேர்ந்து எலிகள் கூட்டம் பாட்டு பாடுகிறார்கள்)

பூனையார் : கொண்டாட்டம்மா கொண்டாட்டம்
என் மீசை துடிக்கிது உள்ளம் கொதி கொதிக்கிது
உண்ணும் உணவிலே பல சுவையும் கிடைக்கிது
ஒய்யாரமாய் சிங்காரமாய் ஓடி திரியும் எலிகளே
ஓடி வாருங்கள் என் பசியை போக்குங்கள்
பிடிக்கும் போது நழுவாமல்
உண்ணும் போது வலிக்காமல்
கொண்டாட்டம்மா கொண்டாட்டம்

(பூனையார் இப்பொழுது உணருகிறார் தான் இவ்வளவு நேரம் கண்டது கனவு என்று.)

பூனையார் : ஓஹோ. நான் இவ்வளவு நேரம் கண்டது கனவா? நனவில் நான் இவ்வாறு குதூகலித்தால் எலிகள் கூட்டம் தப்பித்து விடுவார்கள். நான் ஒலிந்து கொள்ள வேண்டும். ஆம் அங்கே தான் ஒலிந்து கொள்ள சரியான இடம் உண்டு. நான் இங்கே இருப்பதை யாரும் கண்டு கொள்ளாத படி மௌனமாக இருக்கவேண்டும். பிள்ளைகளே நான் அவர்களுக்கு தெரியாமல் அங்கே ஒழிந்து கொள்கிறேன். அவர்களிடம் சொல்லி விடாதீர்கள். "ப்ளீஸ்"

தாய் எலி : பிள்ளைகளே. பார்த்தீர்களா? பூனையாரின் தந்திரத்தை. நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து இருக்கும் வரை அவரால் எம்மை எதுவும் செய்ய முடியாது.

குட்டி எலிகள் : சரி அம்மா நீங்கள் சொல்வதை கேட்டு நடப்போம்

(எலிகள் கூட்டம் பாடல் பாடுகிறார்கள், தாய் எலியுடன் சேர்ந்து)

பாடல் : நடப்போம் அம்மா நடப்போம்
சொல்வழி கேட்டு நடப்போம்
தாயின் சொல்லை மதித்து
தடம் மாறி போகாமல் நடப்போம்
ஒன்றாய் இருப்போம் ஒன்றாய் இருப்போம்

குட்டி எலி 01 : ஏன் அம்மா நாம் பூனையாருக்கு பயப்பட வேண்டும்.

குட்டி எலி 03 : அதுதானே! நமக்கும் அவரைப்போல நான்கு காலும், ஒரு வாலும் இருக்கிறது. எதற்கு பயப்பட வேண்டும்.

தாய் எலி : மகனே அவர் உருவத்தில் பெரியவர். நம்மை அவரின் பசிக்கு உணவாக்கு பவர்.

குட்டி 01 : அது எப்படியம்மா நாமும் உயிர் உள்ளவர், அவரும் உயிர் உள்ளவர். ஒரு உயிரை மற்றொரு உயிர் பறிப்பது சரியா அம்மா.?

குட்டி எலிகள் : அதுதானே !

தாய் எலி : பிள்ளைகளே இது தான் உணவுச் சங்கிலி

குட்டி எலிகள் : உணவுச்சங்கிலி என்றால்?

தாய் எலி : இப்போ, உதாரணத்திற்கு. நெல் மணியை வெட்டுக்கிளி உண்கிறது.

அனைவரும் : ம்...ம்...

தாய் எலி : வெட்டுக்கிளியை பறவைகள் உண்கிறன...

குட்டி எலிகள் : பறவைகள்?

தாய் எலி : ஆமாம். கா கா என்று காகமும்...

(குட்டி எலிகள் காகத்தை போல பாவனை செய்கிறார்கள்)

குட்டி எலிகள் : கா.. கா..

அம்மா எலி : கொக்கரக்கோ என்று கோழியும் உண்கிறது...

(குட்டி எலிகள் கோழியை போல பாவனை செய்கிறார்கள்)

குட்டி எலிகள் : கொக், கொக்

அம்மா எலி : அதோ அங்கே பாருங்கள். அந்த கோழியை மனிதன் தானே உரித்து தின்கிறான்.

குட்டி எலிகள் : அம்மா, அப்படியாயின் மனிதனை யார் உண்கிறார்கள்?

அம்மா எலி : மனிதனை ? ஆம் மனிதனை இந்த மண் உண்கிறது

குட்டி எலிகள் : மண்?

தாய் எலி : மனிதனின் உடலில் இருந்து வெளியாகும் புழுக்கள்

குட்டி எலிகள் : ஓஹோ இதுதான் உணவு சங்கிலியா?

தாய் எலி : ஆமாம் அவரவர் உயிர் வாழ்விற்காக இன்னொன்றை தங்கி வாழ்வதுதான் வாழ்க்கை

குட்டி எலிகள் : வாழ்க்கை?

குட்டிஎலி 03 : அம்மா அப்படியானால் பூனையாரின் உயிர் வாழ்விற்காக நாங்களும் இறையாகி விடுவோமோ அம்மா?

குட்டி எலிகள் : எமக்கு பயமாக இருக்கிறது.

தாய் எலி : பயப்பட வேண்டாம். நாம் ஒற்றுமையாக இருக்கும் வரை அவரால் நம்மை ஒன்றும்செய்ய முடியாது. உண்ணவும் முடியாது. நம்மால் அவருக்கு இடையூறு இல்லாமல் இருப்பது நமக்கும், அவருக்கும் நல்லது. கவனம்.

குட்டி எலிகள் : அம்மா நாம் அவரின் கண்களுக்கு படாமல் எத்தனை நாட்களுக்கு இந்த வீட்டிலேயே இருப்பது.

குட்டிஎலி 02 : அம்மா, நாம் வேறொரு வீட்டிற்கு செல்வோமா?

அம்மா எலி : பிள்ளைகளே இவ்வளவு காலம் இருந்த இந்த வீட்டை விட்டு நாம் செல்வது முடியாத காரியம். சரி உங்களுக்காக நாம் கூடிய சீக்கிரம் இங்கிருந்து செல்வதற்கு முயற்சிப்போம்..

குட்டி எலிகள் : அம்மா உங்களை விட்டு என்றும் எங்களால் பிரிந்திருக்க முடியாது.

(குட்டி எலிகள் அம்மாவைப் பார்த்து பாடல் பாடுகிறார்கள்)

பாடல் : **அம்மா, அம்மா பிரிந்து செல்வதா?**
**உன்னை எம்மை பிரிக்க நினைப்பது யாரம்மா**

பூனையார் : ஐயய்யய்ய! இது என்ன ஒரே சோக மயமாக இருக்கிறது. பாவம் எலிகள் கூட்டம் எவ்வளவு வேதனையோடு இருக்கிறார்கள். நான் என்ன கோமாளியா, இல்லை பூச்சாண்டியா? என்னைப் பற்றி இவ்வளவு தப்பாக தெரிந்து வைத்திருக்கிறார்கள். சரி பார்ப்போம் என்ன நடக்குதென்று!

(பார்வையாளர்களிடம்)

ஒரு வகையில் இவர்கள் எனக்கு பயந்தவர்களாக இருக்கட்டும். எனக்கு பசிக்கிறது. ஆனாலும் ஒன்றும் இல்லையே. சரி வீட்டுக்காரர்கள் வந்ததும் ஏதும் கொடுக்க மாட்டார்களா என்ன? நித்திரை மயக்காமாக இருக்கிறது நான் தூங்க வேண்டும்.

(பார்வையாளர்களிடம்)

பூனையார் : இங்கே பிள்ளைகளே நான் தூங்குவதைப்போல பாசாங்கு செய்கிறேன் அவர்களிடம் சொல்லி விடாதீர்கள். "ப்ளீஸ்"! சரி நான் தூங்கபோகிறேன்.

(இப்போது பூனையார் தூங்குவதை போல பாசாங்கு செய்கிறார். எலிகள் பூனையாரை பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள்)

தாய் எலி : பிள்ளைகளே பூனையார் தூங்குகிறார். நான் போய் வேறொரு இடம் பார்த்து விட்டு வருகிறேன். எங்கும் செல்லாமல் இருங்கள்.

குட்டிஎலி *01* : அம்மா என்னையும் கூட்டிச்செல்லுங்கள்.

தாய் எலி : இரு பிள்ளை அண்ணாமார் இருக்கிறார்கள் தானே நான் சீக்கிறமாக வருகிறேன்.

(தாய் எலி செல்ல, குட்டி எலிகள் பாடல் பாட ஆரம்பிக்கின்றார்கள். பூனையார் இப்போது தந்திரமாக வெளியே வருந்து குட்டி எலிகளிடம்)

பூனையார் : ஆஹா! இதுதான் சந்தர்ப்பம். என்ன நடக்குதென்று பார்ப்போம். பிள்ளைகளே ! பிள்ளைகளே !!

குட்டி எலி *02* : ஐயையோ நாம் தொலைந்தோம்

பூனையார் : வெளியே வாருங்கள். வெளியே வாருங்கள் பிள்ளைகளே!

குட்டி எலி *03* : பூனையாரே நீர் எங்கள் அம்மா இல்லாதபோது எம்மை தின்று உன் பசியை போக்கத்தானே போகிறீர்.

(என்று அழுகிறார்கள்)

பூனையார் : இல்லை, இல்லை வெளியே வாருங்கள். வெளியே வாருங்கள்

(குட்டி எலிகள் தனக்குத் தானே பேசிக்கொண்டு இருக்கிறார்கள்)

குட்டிஎலிகள் : சகோதரர்களே நாம் எம்மை பாதுகாத்து கொள்வோம்

(பூனையாரும் தனக்குத்தானே இவ்வாறு பேசிக்கொள்கிறார்)

பூனையார் : வெளியே வந்தால் விருந்து தான். வாருங்கள்..

குட்டி எலிகள் : (கோபத்தோடு) வாருங்கள். தாக்குவோம் ஏய், ஓய், டம், டும்..

(எலிக்குட்டிகள் பூனையாரை தடியால் தாக்க, பூனையர் மயங்கி விழுகிறார். எலிக்குட்டிகள் சந்தோசத்துடன் பாடல் பாடுகிறார்கள்)

பாடல் : சந்தோசம் சந்தோசம் எங்களுக்கு சந்தோசம்
சந்தோசம் கொண்டாடுவோம்
நல்ல காலம் பிறந்தது
எங்கள் பயமும் போனது
பூனையாரின் பயமும் நீங்கி
எலிகள் கூட்டம்பிழைத்து

பூனையார் : (பூனையார் மயக்கத்துடன்) தண்ணீர், தண்ணீர்

குட்டி எலிகள் : தண்ணீரும் இல்லை ஒன்றும் இல்லை

குட்டிஎலி 03 : பாவம் தாகத்திற்கு தானே தண்ணீர் கேட்கிறார் கொஞ்சம் கொடுப்போமே!

குட்டி எலிகள் : சரி கொடுப்போம். பூனையாரே உமக்கு தண்ணீர் தருகிறோம். உம்மால் எமக்கு தீங்கு ஏதும் வராதே?

பூனையார் : வராது !

குட்டி எலிகள் : சத்தியம் ?

பூனையார் : சத்தியம் !

குட்டி எலி 02 : வாயை திறவும்

குட்டி எலிகள் : உம்மை தாக்கியதால் எம்மீது கோபம் ஏதும் இல்லையே?

பூனையார் : இல்லை கோபம் ஏதும் இல்லை.

குட்டி எலிகள் : எப்படி நம்புவது?

பூனையார் : நம்பிக்கை இல்லை! என் மீது நம்பிக்கை இல்லை!! இதோ என் நகங்களை நானே நறுக்கி கொள்கிறேன்

குட்டி எலிகள் : (இரகசியமாக) நாமும் சேர்ந்து பூனையாரின் நகத்தை நறுக்குவோமா?

(அனைவரும் பூனையாரின் நகங்களை நறுக்க முயற்சிக்கிறார்கள்).

குட்டி எலி 01 : நகங்களை வாயால் கடிக்க கூடாது. ஏனெனில் நகங்களில் உள்ள அழுக்குக்கள் நோயை உண்டாக்கும்

(குட்டி எலி 01 ஓடிப்போய் நகவெட்டி ஒன்றை எடுத்து வந்து பூனையாரின் நகங்களை நறுக்குகிறது, மற்றவர்கள் தாளத்திற்கு ஏற்றாற் போல செய்கை செய்கிறார்கள்)

பூனையார் : இப்போது எனக்கு சுகமாக இருக்கிறது.

குட்டி எலிகள் : சுகமாக இருக்கிறதா?

பூனையார் : என்னையும் உங்கள் குடும்பத்தில் ஒருவனாக ஏற்றுக் கொள்ளுங்களேன்.

எலிகள் : (சிறிது நேரம் யோசித்து விட்டு) ஏற்றுக்கொள்வோமே!

பூனையார் : பிள்ளைகளே உங்கள் அம்மா வருகிறார். விளையாட்டுக்காக வந்து ஒழிந்துக் கொள்ளுங்கள் என்ன நடக்குதென்று பார்ப்போம்.

(தாய் எலி அங்குமிங்குமாக தன் பிள்ளைகளை தேடி)

தாய் எலி : பிள்ளைகளே ! பிள்ளைகளே !!

பூனையார் : (எலிக்குட்டிகளை இறுக்கமாக பிடித்துக் கொண்டு) ஏய் எலியாரே நான் உன் பிள்ளைகளை என் பிடிக்குள் வைத்துள்ளேன். உன் கண் முன்னே தின்று என் பசியை போக்க போகிறேன்.

தாய் எலி : பூனையாரே என் பிள்ளைகளை விட்டு விடு அவர்கள் என் கண்முன் அழிவதை என்னால் தாங்க முடியாது.

(பூனையார் விளையாட்டுக்காக எலிக்குட்டிகளை தின்ன முயற்சிக்கிறார்.)

எலிகள் : பூனையாரே எங்கள் அம்மா எம்மீது எவ்வளவு பாசம் வைதிருக்கிறார். வேண்டாம் இந்த விளையாட்டு விட்டுவிடும்.

பூனையார் : இவர்களுடைய அன்பு மிகப் பெரியது. உங்கள் குடும்பத்தில் ஒருவனாக என்னையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். நாம் ஒற்றுமையாக இந்தவீட்டில் ஜாலியாக இருப்போம்

குட்டி எலிகள் : அம்மா ஏற்றுக் கொள்வோமே !

தாய் எலி : ஏற்றுக்கொள்வோம்

(அனைவரும் பந்தை உருட்டி விளையாடிக் கொண்டு இருக்கையில்)

பூனையார் : நண்பர்களே! வீட்டுக்காரர்கள் வந்துவிட்டார்கள் ஜாக்கிரதையாக இருங்கள் அவர்கள் கண்களுக்கு அகப்படாமல் தலைமறைவாகி இருங்கள். என்ன உதவி வேண்டுமென்றாலும் நான் செய்கிறேன்.

(இவ்வேளையில் எலிக் கூட்டம் தலைமறைவாகிறது. பூனையார் மேசையின் மேல் தூங்குவது போல் பாசாங்கு காட்டுகிறார். வீட்டுக்காரர்கள் வந்து)

பிள்ளை 01 : அச்சச்சோ இந்த வீடு என்னா இப்படி உருட்டி பெரட்டி கெடக்கு. ஏய் பூனை நல்லா தின்னிட்டு தூங்குறியா? இந்தா இந்த பிஸ்கட்டையும் தின்னு. எங்க அம்மா வந்தா எங்களத் தான ஏசுவாங்க..

(குட்டி எலி ஒன்று மேசைக்கு கீழாக இருப்பதை பார்த்து. தடியால் அடிக்க முயற்சிக்கிறார்கள்)

அங்கவீன பிள்ளை : அங்க பாருங்க

பிள்ளைகள் : ஐயோ எலி..!

குட்டி எலி : நல்ல வேலை நான் தப்பினேன்

பிள்ளை 02 : இரு உனக்கு

(இரு பிள்ளைகளும் சைகையின் ஊடாக ஏதோ பேசிக்கொண்டு, மேடையின் ஒருபகுதிக்கு சென்று எலிப்பொறி ஒன்றினை கொண்டு வந்து வைக்கிறார்கள்)

அங்கவீன பிள்ளை : தங்கச்சி பார்த்து கை கவனம், கை கவனம் மெதுவாக வையிங்க.

பிள்ளை 01 : நாங்க இப்ப விளையாட போவோம்.

(பிள்ளைகள் விளையாட போகிறார்கள்)

பூனையார் : எலிக் குட்டிகளே. பிள்ளைகள் விளையாட சென்று விட்டார்கள். இதோ பிஸ்கட். வேறு ஏதும் இருக்கிறதா என்று பார்த்து விட்டு வருகிறேன்.

(பூனையார் அங்குமிங்குமாக அலைந்து திரிந்து உணவு தேடிக்கொண்டு இருக்கையில் பூனையாரின் கால் எலிப்பொறியில் சிக்கிக் கொள்கிறது)

பூனையார் : மியாவ்.... மியாவ்... நண்பர்களே

எலிகள் : ஐயோ பூனையாரே!

பூனையார் : உங்களுக்கு வைத்த பொறியில் நான் மாட்டிக் கொண்டேன்

எலிகள் : விளங்கவில்லை

பூனையார் : "எலிகளுக்கு வைத்த பொறியில்... பூனை நான் மாட்டிக் கொண்டேன். காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்.

எலிகள் : கொஞசம் பொறும் பூனையாரே

குட்டி எலி 02 : (ஓடிப்போய் பெரிய கத்தி ஒன்றினை எடுத்து வந்து எலிப்பொறியின் விசையை செயலிழக்க வைக்கிறது.)

குட்டி எலி 03 : அம்மா பூனையாரின் காலுக்கு மருந்து கட்டுவோமே?

(அனைவரும் சேர்ந்து மருந்து கட்டுகிறார்கள்)

தாய் எலி : பூனையாரே இப்போது எப்படி இருக்கிறது

பூனையார் : கொஞ்சம் இதமாக இருக்கிறது

தாய் எலி : எம்மோடுசேர்ந்து பாட முடியுமா?

பூனையார் : பாட முடியும்

தாய் எலி : எம்மோடு சேர்ந்து ஆட முடியுமா?

பூனையார் : முயற்சிக்கிறேன்

அனைவரும் : நாங்கள் பாடுகிறோம். நண்பர்களே நீங்களும் சேர்ந்து பாடுங்கள்.

பாடல் : ஆடுவோம் பாடுவோம்
ஆனந்தமாய் கூடுவோம்
ஒன்றாகசேர்ந்திருப்போமே
நாங்கள் வலைக்குள்ளே வாழ்ந்திருப்போமே
மனித வீட்டுக்குள்ளே சேர்ந்திருப்போமே..

(இப்போது வீட்டுக்கார பிள்ளைகள் மறைந்திருந்து பார்த்து விட்டு, பூனையாரிடம் சென்று)

பிள்ளை 01 : ஏய் பூனை என்ன செய்யிற?

பூனையார் : அண்ணா இவர்களும் நம்மைப் போல உயிர்கள் தானே இவர்களையும் நண்பர்களாக ஏற்றுக் கொள்வோமே!

அங்கவின பிள்ளை: (சிறிது நேரம் யோசித்து விட்டு) ஆமாம், ஆமாம், ஒற்றுமையாக இருப்போமே?

பூனையார் : ஆடுவோமே

அனைவரும் : ஆடுவோம்

பூனையார் : பாடுவோமே

அனைவரும் : பாடுவோம்

அங்கவீன பிள்ளை: (பந்தொன்றை எடுத்து) எல்லோரும் பிடிங்க, ஆடுங்க, பாடுங்க.. என்று பந்தைவீசுகிறார்.)

நாடகம் இனிதே நிறைவு பெறுகிறது)

முற்றும்

## 2014ம் ஆண்டு தேசிய சிறுவர் நாடகவிழாவில் மேடையேற்றப்பட்டு ஒன்பது தேசிய விருதுகளை பெற்றுக்கொண்ட நாடகம்

தயாரிப்பு : "சங்கு கலைக்கழகம்"

நாடகத் தயாரிப்பு : நெறியாள்கை திரு. தியாகராஜா சிவநேசன்.

வழிக்காட்டல் : தலைமை அதிபர் திரு. செல்வராஜ்.

உதவி நெறியாள்கை : ஆசிரியர் திரு. வீ. கதிர்காமன்.

பங்குப் பற்றியோர் : டியன்சின் பாடசாலை மாணவர்கள்.

விருதுகள் : ஆண்டின் சிறந்த நாடகத் தயாரிப்பு
ஆண்டின் சிறந்த நாடக பிரதியாக்கம்
ஆண்டின் சிறந்த இசையமைப்பு
ஆண்டின் சிறந்த ஆடையமைப்பு
ஆண்டின் சிறந்த மேடையமைப்பு
ஆண்டின் சிறந்த நடிகை
ஆண்டின் துணை நடிகை
ஆண்டின் சிறந்த மேடை முகாமைத்துவம்
ஆண்டின் சிறந்த ஒளியமைப்பிற்கான திறமைச் சான்றிதழ் விருது

நாடகத்தில் பங்கு கொண்ட கலைஞர்கள்:

செல்வன். அன்பரசன், செல்வன். காண்டிபன், செல்வன். தக்சன், செல்வன். பிரதீபன், செல்வன். நிலுக்சன், செல்வன். மதூசன், செல்வன். தமிந்த மெண்டிஸ், செல்வன். நிசாந்த குலரத்ன (ஒளியமைப்பாளர்), செல்வி. இவோன் ஏஞ்சல், செல்வி.அருள்சாந்தினி, செல்வி. கௌசல்யா, செல்வி. துசாந்தினி, செல்வி. காயத்ரி,

வாத்திய குழுவினர் : திரு. லோகானந்தன், திரு. சுமுது மல்லவராச்சி (மக்கள் களரி நாடக குழுவினர்கள்)

ஒப்பனை : திருமதி. சாந்தினி மல்காந்தி.

தயாரிப்பில் உதவி : திருமதி. வீரபுத்திரன் சுகந்தா, திருமதி. சாந்தினி மல்காந்தி

இந்நாடகத்திற்காக அனைத்து விதமான ஒத்துழைப்பையும் வழங்கிய மக்கள் களரி நாடக குழுவினர்களுக்கும், அதன் ஸ்தாபகர் பராக்கிரம நிரியெல்ல அவர்களுக்கும், புதிய பண்பாட்டு அமைப்பின் அமைப்பாளர் ஆசிரியர் திரு. பொன். பிரபாகரன் அவர்களுக்கும் மற்றும் ஆசிரியர் திரு அ.ஜெகன்தாசன் அவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

# மணங்கொள்வோம் மகுட வாசகத்தை

*"காலங்கள் மாறலாம்...*

*நேரங்கள் கழியலாம்...*

*என்*

*இனிய பாடசாலை நாட்கள்*

*என்றுமே அழியாது !*

*என்*

*இதயத் துடிப்புக்கு*

*அர்த்தம் தேடித்தந்தது*

*பள்ளிக்கூடமே !"*

எப்போதோ வாசித்த கவிதையின் ஞாபகம்...

எத்தனையோ பேரை வளர்த்துவிட்ட ஒரு இடம்... ஆளாக்கிய வீடு... அரவணைத்த குடும்பம்... என பல உருவங்களை கொண்டதே பாடசாலை.

நம் வாழ்க்கையில் எதை வேண்டுமானாலும் மறந்து விடலாம். ஆனால் பாடசாலை வாழ்க்கையை எப்போதுமே மறந்துவிட முடியாது.

காலங்கள் மாறும்போது நாமும் மாறிவிடுகின்றோம். அதற்கு சிறந்த உதாரணம் தான் பாடசாலை வாழ்க்கை. காரணம் பாடசாலையை கல்வியை முடித்துவிட்டு உடனே பாடசாலைக்கும் எமக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என விலகிவிட முடியாது.

இந்த உலகில் தானாக உயர்ந்தவர் என யாரும் இல்லை. ஒவ்வொரு மனிதரின் வாழ்விலும் பாடசாலை, கல்வி, ஆசிரியர்கள், நண்பர்கள் இன்றியமையாதவைகளாகும்.

அப்படித் தான் எனக்கும் கெர்க்கஸ்வோல்ட் இல.02 தமிழ் மகா வித்தியாலயமும்! இந்த கட்டுரையின் வழியாக எனக்கு கற்பித்த ஆசிரியர்கள், என் சக நண்பர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

ஏன் என் வாழ்வில் திடீரென அந்த அழகிய குழந்தைப் பருவம் மாறிப்போனதென ஏங்கியுள்ளேன்.

இன்று ஒரு ஊடகவிய லாளராக என்னுடைய பணியைத் தொடர்ந்து செல்வதற்கு கெர்க்கஸ்வோல்ட் பாடசாலை என் வாழ்வில் ஒரு அத்தி வாரமாக அமைந்தது என்றே சொல்லவேண்டும்.

அதற்காக ஒரு முக்கிய விடயத்தை இங்கு குறிப்பி டுவது பொருந்தும் எனக் கருதுகின்றேன்.

அது, 2015ஆம் ஆண்டிற்கான சிறந்த சுகாதார துறைக்கான ஊடகவியலாளராக அகில இலங்கை ரீதியாக தமிழ் மொழிப் பிரிவில் நான் தெரிவு செய்யப்பட்ட போது, அந்த மகிழ்ச்சியான தருணத்தை எனது தமிழ் ஆசிரியை செல்வி. லில்லிகிறேஸ் அவர்களிடம் பகிர்ந்து கொண்டபோது, அவர் என்னை பாராட்டி, ஆனந்தக் கண்ணீர் சொறிந்தது இன்றும் என் மனதில் நிழலாடுகிறது.

"இன்று என்னிடம் படித்த ஒரு மாணவி என உன்னை கூறுவதில் நான் பெருமை கொள்கின்றேன்" எனக் குறிப்பிட்டார்.

அந்த தருணம் உண்மையிலேயே என்னை மெய்சிலிர்க்கச் செய்தது. அரிடம் கற்ற தமிழ் மொழி அறிவே என்னை அந்த இடத்திற்கு இட்டுச் சென்றதை நான் ஒருபோதும் மறந்ததில்லை. இனி மறப்பதும் இல்லை.

கஜேந்திரன் ஆசிரியர் சைவநெறி கற்பிக்கும் போது நானும் என் நண்பர்களுடன் சைவநெறி கற்றதை யும் மறக்க முடிய வில்லை!



திரு. ஜீவகணேசன் ஆசிரியரிடம் ஆங்கிலம் கற்றது இன்று என் வாழ்வில் பெரும்

எஸ். டொரின்
ஊடகவியலாளர்

உதவியாக இருப்பதையும் நினைத்துப் பார்க்கின்றேன்.

திரு. இக்னேசியஸ் ஆசிரியரிடம் குறும்பு செய்து மூங்கில் குச்சியால் அடி வாங்கியதையும் மனது பசுமையாக நினைக்கிறது. இன்னும் பல ஆசிரியர்கள் பெயர் குறிப்பிடாவிட்டாலும் அவர்கள் இன்றும் என் மனதில் பசுமையான நினைவுகளாகவே இருக்கின்றனர்.

நான் கெர்க்ஸ்வோல்ட் பாடசாலையில் க.பொ.த. சாதாரண தரத்தையோ அல்லது உயர் தரத்தையோ தொடந்து கற்க முடியவில்லை. தரம் 08 வரை மாத்திரமே என்னால் அங்கு கற்பதற்கான சந்தர்ப்பம் வாய்த்தது. அதனால் அங்கு கடமையாற்றிய பல ஆசிரியர்களிடம் கல்வி கற்கும் வாய்ப்பை இழந்தது இன்றும் மனதுக்கு பெரும் வேதனையாக இருக்கிறது.

அதில் குறிப்பிடத்தக்க ஒருவர் தான் திரு. ஜெகன்தாசன் ஆசிரியர்!

இன்று கெர்க்கஸ்வோல்ட் இல. 02 தமிழ் மகா வித்தியாலம் 25 ஆண்டுகளைக் கடந்து வெற்றிநடை போடுகின்றது. ஆனாலும், இந்த 25 வருட காலத்தில் எத்தனை ஆசிரியர்கள் எத்தனை... மாணவர்கள் கடந்திருப்பார்கள்..!

அவர்களில் பல மாணவர்கள் இன்று பலதுறைகளிலும் சாதித்துவிட்டனர்... சாதித்தும் வருகின்றனர்.

ஆனால், என்னைப் பொருத்தவரை சில மாணவர்கள் தங்களின் வாழ்க்கையை தொலைத்துவிட்டு இருப்பதைகாணக் கூடியதாகவும் இருக்கின்றது.

சிறந்த சித்திகளைப் பெற்றவர்கள், கல்வியில் சிறந்து விளங்கியவர்கள், விளையாட்டு, கலை துறைகளில் பல சாதனைகளைப் புரிந்த மாணவர்களே அவ்வாறு தங்களுடைய திறமைக்கான தொழில்களைத் தெரிவுசெய்யாது தடம்மாறி சென்றுகொண்டிருப்பதை மிக்க வேதனையுடன் இங்கு பதிவுசெய்ய வேண்டியுள்ளது.

பாடசாலைக்கும் கற்பித்த ஆசிரியர்களுக்கும் பெருமை சேர்க்கும் விதமாக கெர்க்கஸ்வோல்ட் பாடசாலையில் பயின்ற மாணவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய வகையிலேயே உள்ளனர். அவர்கள் இன்று (18.03.2017) வெள்ளிவிழா கொண்டாடும் மாணவச் செல்வங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமையவேண்டும் என்பதே எனது அவா!

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்பதற்கமைய பாடசாலை மட்டத்திலிருந்தே பாடசாலை மீதான அக்கறையும், மரியாதையும் மாணவர்கள் மத்தியில் வளர்க்கப்பட வேண்டும்.

ஆசிரியர்களை பொருத்தவரை பாடசாலையில் சேவைசெய்த காலம் மட்டுமே அந்த பாடசாலையைப் பற்றி எண்ணிவிடாது, தொடர்ந்து அவர்களிடம் படித்த மாணவர்கள், பாடசாலையில் கல்வி வளர்ச்சியிலும் அவர்கள் தொடர்ந்து அக்கறை செலுத்த வேண்டுமென்பதே எனது தனிப்பட்ட கருத்தாகும்.

இந்த வெள்ளிவிழாவில் ஒரு பழைய மாணவரான என்னுடைய பங்களிப்பும் இருப்பதையிட்டு பெருமை கொள்கின்றேன். அதுமட்டு மல்லாது, வெள்ளிவிழாவை முன்னிட்டு பழைய மாணவர் சங்கத்தில் ஒன்றிணைந்து செயலாற்றிய அனைத்து சகோதர சகோதரிகளுக்கும் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

“கற்று உழைத்து உயர்”

என்ற எமது பாடசாலையின் மகுட வாசகத்தின் கீழ் நாமும் வாழ்வில் உயர்ச்சிபெறுவோம்!



# தாய்வாசம்

நான்கு வரி கவிக்குள்
நாசூக்காய் சொல்லிவிட
நாதியற்றவளா நீ
இல்லை
ஆதலால்
உன் தலைப்பில்
உனை பற்றி கவி எழுத
உயிரோடு இருக்கும்வரை
பேனை பிடிப்பதில்லை என்று
பிடிவாதம் செய்ததெல்லாம்
உண்மைதான்...

இன்று நீ இல்லை என்றதும்
கண்ணீருக்கு பதிலாக
கவி வடிக்கிறேன்
உன்முகம் காணும்
பொழுதுகளில்
என் கண்ணீர்
வற்றாமல் இருப்பதற்கு

அம்மா நீ
அடிவயிற்றில் - எங்களை
அணைத்து வைத்த
பாவத்திற்காய்
ஆகாய வழி சென்று
அவதியுறும் - உன்
கொடுமையைத் தான்
கொட்டி தீர்க்கப் போகின்றேன்

இருபத்திரண்டில் கைபிடித்து
நாற்பத்தாறு ஆனப்பின்னும்
இன்றுவரை இயலவில்லை
உன்னால்
நிம்மதியாய் வாழ்வதற்கு

அடுத்தடுத்து மூவருமே
கருவிலேயே
களைந்திருந்தால் - இல்லை
கட்டாயக்
கருத்தடை செய்து - உன்
கையில் நூறு தந்தபோதே
நீயும் போய்ச் சேர்ந்திருந்தால்
அலைகடல் கடந்துழைக்கும்
அவலநிலை வந்திருக்குமோ
உனக்கு!

ஈரேழு ஜென்மத்துக்கும்
இவன்போதும் என்று
தலைச்சன் பிள்ளையொன்றை
தவிப்போடு நீயும் பெற்றெடுக்க
ஈன்றெடுத்த
இரவு மாறுமுன்னே
பெற்றவள் நீ பெயர் சூட்டி
பார்க்கும் முன்னே
மண்ணில் புதையுண்டானே
என் அண்ணன் - இந்த
மலையகத்தில்
சீரழிய வேண்டாமென்றா?

அவன் முகம் மாறுமுன்னே
அடுத்த பிள்ளை நீ சுமந்து
ஈற்றில் இவனையும்
ஈன்றெடுத்து
ஈராக் பக்கம்
சென்றெதென்னவோ
எமை ஈடேற்றத்தானே!

தோட்ட வருமானம்
கை நனைக்க போதாதென்று
தோட்டையும் அடகு வைத்து
சின்னவன் படிப்புக்கு
சிமிக்கியையும் அடவு வைத்து
வாங்கிய கடனடைக்க
மாட்டலையும் மாற்றாக வைத்து
கணவன் கண்முன்னே
கட்டிய தாலியையும்
அவிழ்த்தெடுத்து
கடைக்கனுப்பி - நீ
மூளியாய் நின்றெதெல்லாம்
மூன்றில் எஞ்சிய இரண்டை
இவ்வுலகம் போற்ற வேண்டும்
என்றுதானே...

இருபது வயதிலும் - வீட்டில்
உப்பின்றி உணவின்றி
தேனீரை உணவாக்கி...
உடம்பை
தேத்திய நாள் மறந்திடுமோ...
குருனையிலே சோறாக்கி ...
குந்தியிருந்து
நால்வருமாய்
நாளுக்கு ஒருவேளை
நாமுண்ட வாழ்க்கைத்தான்
மறந்திடுமோ..

அடிவயிற்றில் - எங்களை
அணைத்து வைத்த
பாவத்திற்காய்
ஆகாய வழி சென்று
அவதியுறும் - உன்
கொடுமையைத் தான்
கொட்டி தீர்க்கின்றேன் - நீ
கடல் கடந்து சென்றதினால்
கலையிழக்கும் என்
வாழ்வைத்தான்
இக்கவிதையிலே பதிக்கின்றேன்

பொங்கல்
புதுவருடம்
தீபாவளி
திருக்கார்த்திகை என்றெல்லாம்
குடும்பங்கள் கூடி
இறைவனை நெஞ்சில்
நினைத்து வணங்கும்
பொழுதிலும்கூட
எனக்கு அவனை
வஞ்சிப்பதற்கு மட்டுமே
வார்த்தைகள் வந்தது
அவனை துதிப்பதற்கும்
துண்டாய் நான்
நின்றதினால்

பல பேரை
அம்மாவென்றழைத்த போதும்
அவையனைத்திலுமே
உனையழைக்கும்
ஆனந்தம்
இருப்பதில்லை
எனக்கு

இறைவனென்றொருவன்
இருந்தால் அவனை
நினைப்பதற்கு பதிலாக
நிந்தித்துக் கொள் - இன்று
நம் நால்வரும்
நாலா பக்கமாய்
நாதியற்றவர்களாய்
நாடோடி வாழ்க்கை வாழ
அவனும் காரணம் ஆதலால்...

விமானத்தை விட்டிறங்கி
வீடு வந்து சேர்ந்ததும்
வாசித்துப்பார்
என் வரிகளை
உனக்கு முன்னே
எனைத் தழுவும்
உன் கண்ணீர்!

தசரதனின் வார்த்தையினால்
இராமனுக்கு
வனவாசம்
தவறு செய்தலுக்கு
தண்டனையாய்
சிறைவாசம்
என்ன செய்தேனென்று
எனக்கில்லாது போனது
தாய்வாசம்!

# மகனே! கேள்

பெற்றவன் நான் தான் வாதமில்லை
பெரியவன் தான் மறுக்கவுமில்லை
உன் துர்திஷ்டம் தொழில் கிடைக்கவில்லை
என் வாழ்கை சுமையும் குறையவில்லை

வாழ்வாதாரம் அதிகரிக்கவில்லை
வாழ்க்கை செலவும் குறையவில்லை
வாழும் வழி எனக்குத் தெரியவில்லை
வாழ்க்கையும் தான் பிடிக்கவில்லை
வலிந்துழைக்க உடலில் தெம்புமில்லை

உனக்கோ சகோதரி இல்லாமலில்லை
எனக்கோ சாதி சனமுமில்லை
கூடிவாழ குடிசையுமில்லை
குடும்ப பொறுப்பும் உனக்கில்லை
குமாரனை கரை சேர்க்க எனக்கு துப்புமில்லை

ஆறுதல் கூற எனக்கு தாரமுமில்லை
ஆற்றுப்படுத்த உனக்கு தாயுமில்லை
உன் போக்கிலும் மாற்றமில்லை
நான் சாகும் காலமும் தூரமில்லை

உழைக்க நீ முயற்சிக்கவில்லை
ஊர்சுற்றுவதை விடவுமில்லை
அரசு உத்தியோகமும் பலனளிக்கவில்லை
உண்ணாவிரதமும் பலனளிக்க வில்லை- உன்னை
ஊதாரியென்றும் கூறவில்லை

கைத்தொழில் ஒன்றை கற்றுக்கொள்
கண்ணியமாய் வாழ்வாய் புரிந்து கொள்
கடைசிவரை எல்லோர் மனதிலும்...

நாரயணசாமி சரண்யா
ஆசிரியை- கர்நாடக சங்கீதம் (2015)

# புது யுகம் படைப்பாய்

மலையகத்து மாணவனே!
மனதில் என்றும் கொள் - இந்த
மண்ணுக்காய் தினம் உழைத்தும்
மகிழ்வற்ற உன் கூலிக்கு
காரணத்தை இன்றுவரை - உன்
அடிமனதில் நினைத்தாயா!
கல்வி என்ற கருவி ஒன்றே
இக்கவலையை தூரத்திடும்.

சலிக்காத உன் உழைப்பில்
வலி தாங்கி ஊற்றெடுக்கும்
வெள்ளி விழா வேட்கையாக
வியர்வை சிந்தி உழைத்திடும்
புரட்சியை எதிர்கொள்ளும்
புத்தி ஜீவிகள் நீங்கள்

காலங்கள் கவிப்பாடும் - என்ற
புகழாரங்களுக்கு செவி சாய்க்காமல்
கலியுக கயவர்களை வென்று
புதிய சாதனை படைத்திட
அறிவினை அணையாக்கி
உதிரத்தை உருக்கியள்ளி
உழைத்திடும் எம் சமுதாய
வித்துக்களே
நீ வாழி!

என் தாயே நான் உன்னை
வாழ்த்துகின்றேன்
உன் மௌன பணிக்காக
புது யுகம் படைத்திடும்
பழைய மாணவ சமூகமே
நீர் வாழியவே!

ஆசிரியை : திருமதி A.ஜெயசித்ரா

# வெள்ளி உலா

துள்ளித் திரிந்த துடிப்பான பருவம்
பள்ளி வாழ்வு பசுமைதனை மீட்ட
சொல்லால் எண்ணாத சுதந்திரம்
பண்பாய் செல்லும் வாழ்கை பயணம்
இன்று உலாவும் வெள்ளி உலா!

கனவுகள் நனவாகி காணும் காட்சி
காதவழி தூரம் நின்று மனதில்
களிப்பாட்டம் பருவம் காட்டிய வழிதனை
பாங்காய் கற்றுயந்த பழைய
மாணவராம் ஒன்று கூடி பாங்கிதமாய்
கொண்டாடும் வெள்ளி விழா!

உன் வாயிலில் கால்வைத்த
மாணவரின் வாழ்வில் நித்தம்
பசுமையாய் சுரக்கும் பால் முகங்கள்
ஆசான் எனும் ஆயுதம் ஏந்தி
அறநெறியும், புலமையும் அகத்தே சுரந்து
சுயநல வளையறுத்து தூய்மையான
அறிவை தந்து வானுயர சுற்றி வரும்
வெள்ளி உலா!

ஆசிரியை செ.பௌலினா



# தாயின் துயரம் கல்லறையில்

பத்து மாதம் பக்குவமாய்சுமந்து
பக்குவமாய் பாரினிலே ஈத்தவளே!
உதிரத்தை பாலக்கி தந்தீரே-இன்று
உதிரத்தை கண்ணீராய் விடுவதேனோ?

பிள்ளைகளுக்காய் - நீ
கூடை சுமந்தாய்
இன்றோ உனக்காய் பிள்ளைகள்
சுமப்பது என்னவோ?

உனக்கு நிரந்தரம் என்று
ஆயிரம் முறை கூறுவாயா
வாயார? பிள்ளைகள் தான் என்று
ஆனால் உனக்கு சொந்தமானதோ - இன்று
கண்ணீரும், கல்லறையும் தானே

என் பிள்ளை பெயர் பெற்றாய் என்று
ஊர் முழுவதும் கூறினாயே - இன்று
உன் பிள்ளை என் தாய் இவள் என்று
கூற தலைசாய்கின்றாளே ஏனோ!
இதுவா நீ பட்ட துன்பத்திற்கு
கிடைத்த பலன்?

உன் கணவன் இல்லையென்று கலங்காது
நான் உள்ளேன் என்று பிள்ளைகளை தேற்றி
நலம் கொடுத்தாயே - இன்று
உன் அருகில் யாரும் இல்லை
என்று கலங்குவதும் ஏனோ?

பாசங்கள் எல்லாம் வேஷம் என்றும்
உறவுகள் உன்னை அழைக்காது
இருந்த போதும்
நீ ஓடோடி சென்று அழைத்தாயே!
உன் பிள்ளை வரவில்லை

பட்ட துன்பம் ஓடின - இனி
வாழ்வதோ அமோகம்
என்று நினைத்த உனக்கு- இன்று
உன் பிள்ளை கொடுத்த பரிசு
நிம்மதியான கல்லறைதானம்மா..!

உனக்கு இன்னொரு ஜென்மத்தில்
பிள்ளையாய் பிறக்க
ஏங்குகின்றேன் அம்மா

தியாகராஜ் ரிஷா - தரம் - 10

# அம்மா

தியாகராஜ் பார்த்திபன் - தரம் - 11



என்னை ஈரைந்து மாதங்கள்
சுமந்து பெற்றவளே - என் தாயே
எனக்கு அன்பையும் பண்பையும்
ஊட்டியவளே - என் தாயே
குழந்தையாக இருந்த போது
பாலூட்டி வளர்த்தாயே
தற்போது என்னை
சோறுாட்டி வளர்க்கிறாய் - தாயே
சிந்தனைக்கு அளவுண்டு - ஆனால்
உன் அன்பிற்கோ அளவில்லை - தாயே
அல்லும் பகலும் உழைக்கின்றாய் - தாயே
என் கல்விக்கு உதவுகிறாய் - உன்
உழைப்பை வெளிக்காட்டினாய்,
அறிவின் உருவம் தாய்,
அன்பின் உருவமும் தாய்
அம்மா எனும் சொல்லில்

"அ" என்றால் அறிவு
"மா" என்றால் மாது என்றும்
குறிக்கிறது தாயே
அது அம்மா என்றால் அறிவுள்ள மாது
என்றாகிறது தாயே
மறுப் பிறவி என்று இருந்தால்
செருப்பாக பிறப்பேன்
என் தாய் காலில் மிதிப்படுவதற்கு அல்ல
என்னை சுமந்த தாயை ஒரு முறை நான்
சுமப்பதற்க்காக,
தவம் செய்கிறேன் - என்
தாயே. என்றென்றும்...



# இவள் தான் தாய்

அன்பின் வடிவமாய் நின்று
அன்பை அட்சயமாக பொழிபவள் தாய்
அவள் கருணையின் மறுமுகம்
கடவுளின் திருமுகம்
கண்ணை இமை காப்பது போல
கருவரையில் எம்மை வைத்து
காத்தவள் தாய்
தன்னில் உருவான உயிருக்கு - புற
உலகைக் காட்ட
உயிர் விடவும் துணிந்தவள் தாய்

ஈன்றெடுக்கும் இடுப்புவலி
பொறுப்பதோடல்லாமல்
இரத்தத்தை பாலாக ஈந்தவள் தாய்
சிறுவயதில் நாம் அளித்த
துன்பத்தையும்
இன்பமாக நினைத்து
பழகுபவளும் தாயே
நாம் அவள் மார்பில் படுத்துறங்கும்
வலி ஏற்பட்டாலும் - அதை
சுமையாக நினைக்காது
சுகமாக நினைப்பவளும் தாயே

மடியிலும் மார்பிலும்
அரவணைத்த அன்னைக்கு
வாழும் இல்லத்தில் கூட
இடமளிப்பதில்லை
கருவறையில் இடமளித்த தெய்வத்திற்கு
கல்லறையில் தான்
இடமளிக்கின்றோம்
இது சரிதானா?
பிள்ளை என்ற இடத்திலிருந்து
பிதிர் கடன் பெற்ற நாம்
தாய் என்ற கடவுளுக்கு
செய்யும் நன்றி கடன்
இதுதானா?

இத்தனையும் செய்த தாயிற்கு
எதையுமே செய்வதில்லை
தன்னையே வறுத்தி
வாழும் தாயே - உன்னை
என்னகமாற போற்றுகின்றேன்.

ஐயசங்கர் மதுஷானி - தரம் 10

# வெண்ணிலாவே

விண்ணில் மின்னும் மீன்களிடை
விளங்கும் நல்ல வெண்ணிலாவே!
மண்ணில் மக்கள் மகிழ முழு
மதியாய் என்றும் வாராயோ.

நிலவே நீயும் நீள் வானில்
நிலவுவதே நிலவென்றாரோ?
உலகமே உவக்க ஒளிந்து
உலவும் உனக்கேன் உருமாற்றம்?

வளர்பிறை வந்தால் வளர்வாய்
தேய்பிறை வந்தால் தேய்வாய்
கார்மேகம் தினம் வந்து உன்னை
மறைப்பது எமக்கோர்
மனப் போராட்டம் தினம் தினம்
நீ வந்து தரவேண்டும்
சந்தோச வெள்ளோட்டம்
வெண்ணிலாவே!



# தந்தை

என்னை வளர்த்த தந்தையே
என்னை நல்வழி ஆக்கிய தந்தையே
என்னை பாதுகாத்த தந்தையே
வீட்டின் ஆயுதம் தந்தையே
தாயின் சொல் தந்தையே
வீட்டின் பெரியவர் தந்தையே
எங்களின் கடவுள் தந்தையே
அன்பும் கருணையும் அளித்திடும் தந்தையே
கோபமும் பற்றும் என் தந்தையே
பூவின் குறி என் தந்தையே
முகத்தின் விழி என் தந்தையே
மரத்தின் அடி தந்தையே
விண்ணின் மீன் என் தந்தையே
சூழலின் பொக்கிஷம் தந்தையே
எதிலும் மேலான என் தந்தையே

எஸ்.கந்தசாமி பவித்ரா

# ஆசிரியர்களின் மனப் பதிவுகள்...

"கெர்கஸ்வோல்ட் இல.2 பாடசாலை கடந்து வந்த நாட்கள் வெறுமனே கழியாது. காலத்துக் காலம் பல சாதனைகளுடன் தனது 25 வது ஆண்டை கொண்டாடுவது பெருமைக்குரியதே."

*A. இராதாகிருஸ்ணன் - பிரதி அதிபர்*

"199ம் ஆண்டு திருவாளர் லோகநாதன் அவர்கள் அதிபராக கடமையேற்றபோது இப்பாடசாலையில் தொண்டராசிரியையாக இருந்து, இன்று அரச நியமனம் பெற்ற ஆசிரியையாக இருந்து பழைய மாணவர்களுக்கு ஆசியும் அருளும் கிடைக்க வாழ்த்துகிறேன்."

*ஆசிரியை பௌலினா*

"கெர்கஸ்வோல்ட் இல.2 தமிழ் வித்தியாலயத்தின் இருபத்தைந்தாண்டு அகவையை கொண்டாலும், எமது பாடசாலை தாய் ஈன்றெடுத்த பழைய மாணவ சமூகத்தின் அளப்பரிய சேவையை உளமாற வாழ்த்துகின்றேன்."

*ஆசிரியை திருமதி. M. ஜெயசித்ரா*

"“கல் சிலையாவதும் ஒரு கிறுக்கல் கவிதையாவதும் ஒரு வெற்றுத்தாள் ஓவியமாவதும் பாடசாலையிலே” பாடசாலை வாழ்க்கையின் மையக்கரு அது அறிவை மட்டும் கற்றுத்தருவதல்ல. மனித நேயம், ஒற்றுமை, என்பவற்றின் கலவையே பாடசாலை."

*ஆசிரியை T. ருத்ரவாணி*

"மாணவர்கள் இப்பாடசாலையில் கற்ற காலங்களும் ஆசிரியர்கள் கற்பித்த காலங்களும் அவர்களுக்கு பொற்காலங்களாகும்."

*திருமதி. S. சத்தியவாணி*

# ஒரு தாயின் மணிக்கொடி

ஆசிரியை
திருமதி ச. கலைவாணி

வாகன நெரிசல்களுக்கும், இரைச்சல்களுக்கும் முகம் கொடுக்க முடியாது திணறி கொண்டிருந்த கொழும்பு வீதியில் பச்சைநிற காரரொன்றில் கைராசிக்கார வைத்தியர் என பெயர் எடுத்த நிவேதா அமர்ந்து கொண்டிருக்க, அவளது எண்ண அலைகள் மட்டும் வேறு எங்கோ சென்றது. அவளது இதயமோ ஓயாது அலறி துடித்துக் கொண்டிருக்கிறது.

அவளது கைத் தொலைப்பேசி விடாது ஒலியெழுப்பி அவளை மேலும் மேலும் வேதனைக்குழியில் விழச்செய்து கொண்டிருந்தது.

நிவேதா ஒரு மருத்துவர் என்பதாலோ என்னவோ அவளது வாழ்க்கையின் ஒவ்வொரு மணித்துளியும் வைத்தியசாலையிலேயே கழித்து கொண்டிருந்தது. நிவேதா உடனே வைத்தியசாலைக்கு சென்றே ஆக வேண்டும். அவளின் வரவுக்காக ஒரு சின்ன பாலகனின் உயிர் எமனிடம் போராடிக்கொண்டிருந்தது.

வேதனை மனதை அரிக்க, வாகன நெரிசல் வேறு அவளை தாமதப்படுத்திக் கொண்டே இருக்க, ஒருவாறு நிவேதா வைத்தியசாலையை சென்றடைகிறாள்.

அந்தோ ஒரு தாய் ஓடோடி வந்து,

"என் பிள்ளையை காப்பத்துங்கம்மா"

என அலறுகிறாள்.

"நான் இருக்கிறேன் அம்மா" என்ற ஆறுதல் மொழியோடு ஆப்ரேஷன் தியேட்டரினுள்ளே நுழைகிறாள் நிவேதா. அவள் கைராசிக்காரி என்பது உண்மைதான். பிள்ளையவன் அவள் ஆசியோடு பிழைத்துக் கொண்டான். தாயின் முகம் மகிழ்ச்சியால் மலர, நிவேதாவின் உள்ளமோ ஆனந்தகடலை அடைய அவளது உதடுகள் மென்மையான கீறல்களை உதிர்க்கின்றன.

"என்ன நிவேதா! கனவு காண்கிறாயா? பள்ளிக்கு போக வேண்டாமா?"

என்ற தாயின் ஓயாத குரல் கேட்டு நிவேதா விழித்துக்கொண்டாள்.

நிவேதா இத்தனை நொடியும் கண்டது கனவு தான் என்றாலும், அது வெறும் கனவல்ல இலட்சிய கனவுகள் அவை அதனை சுமந்து 11 வருடமாக அவள் பள்ளிக்கு சென்று வருகிறாள். எழில் கொஞ்சும் மலையக மண்ணின் தேயிலைக்கு பெயர் போன பொகவந்தலாவை தான் அவளது கிராமம். அந்த கிராமத்தின் அரவணைப்பில் வாழ்ந்த குடும்பங்களுக்கு சக்தியின் குடும்பமும் ஒன்றாகி போனது.

சக்தியின் மனைவி லக்ஸ்மி, அவர்களுக்கு 4 பெண் பிள்ளைகள். அதில் மூத்தவளே நிவேதா. பிள்ளைகளுடன் அவர்களது குடும்ப ஓடம் எவ்வித சலனமுமின்றி செவ்வனே ஓடிக்கொண்டிருந்தது. சக்தியும் லட்சுமியும் எப்பாடுபட்டாலும் தன் பிள்ளைகளை வறுமை புயல் தாக்காது வளர்த்து வந்தனர்.

வறுமை புயல் தாக்காது, மகிழ்வோடு வாழ்ந்த அந்த சிறு குடும்பத்தில் யாருடைய கண்பட்டதோ? தெரியவில்லை பல கனவுகளுடன் கவ்வாத்து வேலைக்கு சென்ற சக்தி போனது போனது தான் மீண்டும் உயிரற்ற உடலாகவே வந்தார். கவ்வாத்து கத்தி தேயிலையின் தலையை கொய்யும் என்று வீச, அது தவறி போய் சக்தியின் தலையை கொத்தி உயிரைப் பறித்துச் சென்றது. ஊர் எங்கும் கவலை மேகங்கள் சூழ,



அவல குரல்கள் இடிகளாய் ஒலிக்க கண்ணீர் மழை இடைவிடாது பொழிய சுடுகாட்டை வசமாக்கி கொண்டான் சக்தி.

"ஐயோ! ஐயோ!" என்ற ஓயாத ஊமை அலறல்கள் ஒருவாறு கழிந்து தன் குழந்தைகளுக்காக குடும்ப சுமையின் பல மடங்கினையும் சுமக்க தயாரானாள் லட்சுமி.

கணவன் தன்னை விட்டு தனியே சென்ற சோகத்தை மறைத்து தன் குழந்தைகளை படிக்கவைத்து ஆளாக்கி ஓடாய் மெலியத் தொடங்கினாள்.

நிவேதாவின் தாய் தான் படிக்காவிட்டாலும் தனது பிள்ளைகளாவது படிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மழையோ வெயிலோ எந்த நாளானால் என்ன? இவள் மட்டும் வீட்டில் இருப்பதே இல்லை.

தனக்கு பிணி வந்த போதும் கூட அதனை அலட்சியம் செய்து விட்டு அட்டைகள் அவளது இரத்தத்தை உறிஞ்ச, முட்கள் கால்களை பதம் பார்க்க சொல்லொணா துயரங்களுடன் வாழ்க்கையோடு போராடிக் கொண்டிருந்தாள் லட்சுமி.

லட்சுமிக்கு தனது தாய் வீட்டிலும் எந்த குறையும் இருக்கவில்லை. அத்தனை நகைகளை தன் மகளுக்கு அலங்கரித்து அனுப்பினர். சக்தியும் தன் பங்கிற்கு தன் அன்பு மனைவிக்காக எத்தனையோ நகை நட்டுகளை தேடி வைத்துவிட்டேதான் சுடுகாட்டிற்கு சென்றான்.

அத்தனை நகை இருந்தும் என்ன? இப்போது கழுத்திலே தொங்கிக் கொண்டிருந்த தாலி கூட வேறு எதுவும் அவருக்காக இல்லை என்றானது.

நிவேதாவின் குடும்பம் வறுமை புயலிலி சிக்கித் தவித்தது. நிவேதாவால் தன் தாயின் அவலங்களை சகித்தக் கொள்ள முடியவில்லை. தனது படிப்பை கைவிட்டு வேலைக்கு போகலாம் என்ற முடிவிற்கு வந்து விட்டாள்.

தன் பிள்ளை படித்தே ஆக வேண்டும் என்ற தாயின் கண்ணீர் அலறல்கள் அவளை தடுத்து, அவளது இலட்சியத்தை நோக்கி புறப்பட மேலும் உந்தியது.

தன்னை 10 மாதம் சுமந்து தன்னையே அர்ப்பணித்த தன் தாயை என் வாழ்வின் இறுதிவரை மகாராணி போல் வாழ வைப்பேன் என்ற சபதத்துடன் சிறப்பாக கற்க தொடங்கினாள். அவள் முயற்சி வீண் போகவில்லை சாதாரண தர பரீட்சை எழுதி, அதில் "9A" சித்திகளை பெற்று மாவட்டத்திலேயே முதல் மாணவியாக தேர்வாகினாள்.

சிறந்த பெறுபேற்றை பெற்ற அவள், ஹட்டனில் உள்ள பிரல்யமான பாடசாலையொன்றில் உயர் கல்வியை தொடரும் வாய்ப்பினை பெற்றாள்.

அவளது இலட்சிய கனவு தொடர்ந்த அதே வேளை, தாயின் அவலமும் தொடரத்தான் செய்தது. பிள்ளைகளின் படிப்பு செலவிற்காக லட்சுமி உலகின் மொத்த துன்பங்களையும் அனுபவித்துக் கொண்டிருந்தாள்.

தாயின் துயரம் தன் மனதை புழுவாய் அரிக்க, ஒருவாறு இரு வருடங்களை நிறைவு செய்த அவள் நிம்மதி பெரு மூச்சுடன் பரீட்சை எழுதி முடித்தாள். கடவுளின் அருளும் தாயின் ஆசிர்வாதமும் அவளின் பெறுபேற்றை சிறப்படைய செய்தது.

நிவேதா உயர் தரத்தில் விஞ்ஞான பிரிவில் ஆங்கிலம் உட்பட 4 A சித்திகளை பெற்று கல்லூரியில் முதல் மாணவியாய் மணிமகுடம் சூடினாள்.

நிவேதா இன்று வைத்திய படிப்பை தொடர்வதற்கு பல்கலைக்கழகம் செல்கிறாள்.

அவளது தந்தை வானில் இருந்து மௌனமாய் ஆசிர்வதிக்க, தாயோ கண்ணீரால் விடைகொடுக்க...

தாயையும் தங்கைகளையும் பிரிந்து லட்சியத்தின் எல்லையை தொடச்செல்கிறாள்.

மீண்டும் ஒரு தாயின் மணிக் கொடியாய், வைத்தியராய் தனது மண்ணில் கால் பதிப்பாள் நிவேதா.


கடந்துவந்த
சுவடுகள்...



பாடசாலை ஆசிரியர் குழாம்




மாணவத் தலைவர்கள்




வகுப்புத் தலைவர்கள்



Cadet மாணவர்கள் - ஆண்




பெண்கள் - வாத்தியக் குழு



● பாடசாலையின் பழைய கட்டிடம்



● 10வது ஆண்டு கொண்டாட்டத்தில்



● 10வது ஆண்டு கொண்டாட்டத்தில்




● 10வது ஆண்டு நினைவு மலர்



குளத்துப் பிள்ளையார் ●



முன்னாள் ஆசிரியர்கள்



முன்னாள் ஆசிரியர்கள்



கண்காட்சியின் போது



கல்விச் சுற்றுலாவின் போது



ஆசிரியர் அமரர் கோவிந்தராஜ்



1998 பாரதி விழாவின்போது



பாடசாலை கலைவிழாவின்போது



நவராத்திரி விழாவின்போது



திருவிழாவின்போது



கண்காட்சியின்போது



கண்காட்சியின்போது



கண்காட்சியின் போது



சிரமதானப் பணியில்....



குளத்துப் பிள்ளையார் திருவிழாவில்



சாரணியம்



ஆசிரியர்களுடன் மாணவர்கள



குளத்துப் பிள்ளையார்



ஆசிரியர் தினத்தில்...



சாரணிய நிகழ்வில்...



புலமைப் பரிசு பரீட்சையில் சித்தி



ஆசிரியர் கௌரவிப்பு



ஆசிரியர் தின நிகழ்வு



நாடக விழாவில்...

# வரலாற்றின் வழித்தடம் தேடி

## சில பதிவுகள்

# கட்டுரைக்கான ஆதாரங்கள்...

நுவரெலியா / அட் / கெர்க்கஸ்வோல்ட் இல 02 தமிழ் வித்தியாலயம்

க.பொ.த (சாதாரண) பரீட்சை – 2003

| | இல | மாணவர் பெயர் | தரம் | சேர்விலக்கம் | பிறந்த திகதி | பிறப்பு சான்றிதழ் இலக்கம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | 17 | [illegible] | 11 | 0078 | 1984.12.10 | 1080 | விண்ணப்பித்துள்ளார் |
| | 18 | [illegible] | 11 | 273 | 1985.07.29 | 7858 | " |
| | 19 | [illegible] | 10 | 808 | 1986.07.20 | 7892 | " |
| | 20 | [illegible] | 10 | 229 | 1987.08.22 | 8810 | இல.பி.007997 |
| | 21 | [illegible] | 11 | 059 | 1987.10.08 | | விண்ணப்பித்துள்ளார் |
| | 22 | [illegible] | 7 | 886 | 1989.11.04 | 1929 | " |
| | 23 | [illegible] | 8 | 476 | 1990.03.[illegible] | 5417 | " |
| | 24 | [illegible] | 7 | 977 | 1989.10.21 | 1370 | " |
| | 25 | [illegible] | 8 | 777 | 1988.11.15 | 4015 | " |
| | 26 | [illegible] | 8 | 783 | 1988.12.16 | 2639 | " |
| | 27 | [illegible] | 10 | 281 | 1987.08.28 | 2011 | " |
| | 28 | [illegible] | 10 | 209 | 1988.10.21 | 3849 | " |
| | 29 | [illegible] | 10 | 228 | 1988.04.18 | 2578 | " |
| | 30 | [illegible] | 8 | 473 | 1990.07.15 | 2297 | " |

அதிபர்

திகதி 25.03.2003

CP/HT/ KIRKOSWALD - 2 TAMIL MAHA VIDYALAYAM, BOGAWANTALAWA.

**Annual Inter House Athletic Meet - 2003**

This Certificate is awarded to V. GANESAN of ........ Adhyakan House for securing First / Second / Third place in ........ under / over ........ Boys / Girls

Chief Guest

Prefect of Games — Sports Secretary — Principal

CP/ HT/ Kirkoswald T.M.V. Bogawantalawa.

அகில இலங்கை தமிழ் மொழித்தினப் 1999

மத்திய மாகாணம்

நுவ/அட/கெர்க்கஸ்வோல்ட் இல.2 த.ம.வி

மாணவன் / மாணவி K. நவப்பிரியா

பொகவந்தலாவ பிரதேச மட்டத்திலான

பேச்சு ........ போட்டியில்

........ பிரிவில்

........ இடத்தைப்

பெற்றமைக்காக இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது

திகதி :–1999 12

விழா செயலாளர்

வட்டக் கல்வி தமிழ் மொழிக்கல்விப் பொறுப்பாளர் (உதவி கல்வி பணிப்பாளர்) — பொகவந்தலாவை பிரதேச பொறுப்பாளர் (உதவிக் கல்வி பணிப்பாளர்)

HATTON

மமா/அட் /கெர்கஸ்வேல்ட் (இலட்சுமி தோட்டம்) இல.2 தமிழ் வித்தியாலயம், பொகவந்தலாவ.

வர்த்தக மாணவர் ஒன்றியம்

வாசகர் வட்டம்

செல்வன் /செல்வி K. நவப்பிரியா ........ தமிழ் ........ 19.10.1999

**CP/HT/KIRKOSWALD (LETCUMI THOTTAM) NO.2 TAMIL VIDYALAYAM, BOGAWANTALAWA.**

COMMERCE STUDENTS UNION

Readers Circle

This Certificate is Awarded to Mas/Miss K. NAVAPRIYA for her/his Achievement of COMMERCE on the Occasion of Vani Vira Dated on 19th October 1999

P.Prabakaran BBA. Teacher Incharge — E.Loganathan BA. (Dip-in-AD) Principal — Zonal Director of Education

மமா/அட் /கெர்கஸ்வேல்ட் (இலட்சுமி தோட்டம்) இல.2 தமிழ் வித்தியாலயம், பொகவந்தலாவ.

வர்த்தக மாணவர் ஒன்றியம்

வாசகர் வட்டம்

செல்வன் /செல்வி K. லதா ........ நாடக பயிற்சி பட்டறை ........ 19.10.1999

**CP/HT/KIRKOSWALD (LETCUMI THOTTAM) NO.2 TAMIL VIDYALAYAM, BOGAWANTALAWA.**

COMMERCE STUDENTS UNION

Readers Circle

This Certificate is Awarded to Mas/Miss K. LATHA for her/his Participation of DRAMA WORKSHOP on the Occasion of Vani Viza Dated on 19th October 1999

P.Prabakaran BBA. Teacher Incharge — E.Loganathan BA. (Dip-in-AD) Principal — Zonal Director of Education



1520A

# KIRKOSWALD .2. TAMIL MAHA VIDYALAYAM
## BOGAWANTALAWA.

20th Years 1982 Anniversary 2002

Date: 03/06 200 3

To Whom It May Concern:

Hereby I certify that Mr.P.Prebakaran had been worked in this school scince 27 th January 1997.

During his perioed he was a Sectional head inthe year 2000 for the secondery division.

He did the Enviormmental Works Exatra curriculum activities including cultultural,literarel works.

He teached Mainly Commerce& Finance,History &Social Studies,Tamil English and Development studies.

The G/C/E(O/L) Results that he praduced as Follows:

| SubJect | Years and Precentage of pasees | | | | |
|---|---|---|---|---|---|
| | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 |
| Commerce &Finance | 65 | 72 | 55 | 65 | 73 |
| Social studies | 71 | 51 | - | 98 | 65 |
| English | 06 | - | - | 07 | 09 |
| Tamil language | - | - | - | 67 | - |

Thanking You

Faithfully

A.Velusamy
Principal

CERTIFIED Correct

# CP/HT/KIRKOSWALD NO 02 TAMIL MAHA VIDY
## BOGAWANTALAWA.

COMMERCE STUDENTS UNION
READERS CIRCLE

SEMINAR AND WORKSHOP ON CHILD RIGHTS AND STUDENTS

THIS CERTIFICATE IS AWARDED TO MR./MISS... K. NAVAPRIYA ........ FOR THE PARTICIPATION OF THE ABOVE SEMINAR HELD ON 12 TH FEBRUARY 2000 AT THE SCHOOL HALL.

P.PRABAKARAN B.B.A

A.VELUSAMY B.A
PRINCIPAL

A. VELUSAMY
Principal
CP/HT Kirkoswald No. 2. T.M.V.
Bogawantalawa.

ZONAL DIRECTOR OF EDUCATION
HATTON

A. RASIAH
Assistant Director of Education
Zonal Education Office
Hatton

1999.02.10

வர்த்தக மாணவன்

லெட்சுமி தோட்டம் இல 2 த.வி.
வர்த்தக மாணவர்
ஒன்றிய வெளியீடு.





வர்த்தக மாணவர் ஒன்றியம்
மமா/அட்/ கெர்கஸ்வேல்ட் இல 2 தமிழ்வித்தியாலயம்
பொகவந்தலாவ
COMMERCE STUDENTS FORUM
CP/HT/KIRKOSWALD NO 2 TAMIL VIDYALAYAM
BOGAWANTALAWA
1997/1998
This Certificate is awarded to Mas/Miss ........K. VASANTHAPRIYA.............. for the best participation at Barathy Viza/Programmes/Debate/Essay Competition/Editorial/Committee in the commerce students union during the period of 1997/1998.
பொறுப்பாசிரியர்
Teacher in Charge
Date : 9/12/98
வலயக்கல்விப்பணிப்பாளர்
Zonal Director of Education
அதிபர்
Principal









குறிப்புகள்

# கெர்கஸ்வோல்ட் இல.02 தமிழ் வித்தியாலயம்

1800களின் ஆரம்பத்தில் தமிழகத்திலிருந்து இலங்கைக்கு கடல் வழியாக அழைத்துவரப்பட்ட மக்கள் மன்னார் துறைமுகத்திலிருந்து கால்நடையாக பல மலைப் பிரதேசங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டனர். இவர்கள், வயிற்றுப் பிழைப்புக்காக வந்து, இந்து சமுத்திரத்தின் முத்தான இலங்கையைச் செல்வம் கொழிக்கும் நாடாக உருவாக்கினார்கள். இவர்கள் உருவாக்கிய பிரதேசங்களில் மத்தியமாகாணத்தில், நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள பொகவந்தலாவையும் முக்கிய இடம் கொள்கிறது.

மலையக போராட்டத் தளங்களில் ஒன்றான தேயிலையின் தங்கப் பள்ளத்தாக்கு (The Golden Valley of Tea) என அழைக்கப்படும் பொகவந்தலாவை பிரதேசம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமாகவும் விளங்குகின்றது.

கண்டி திரித்துவக் கல்லூரியின் றகர் அணியின் தலைவராகவிருந்த "தொழிற்சங்கத் துறவி" என்றழைக்கப்படும் வீ.கே.வெள்ளையன், இந்திய சினிமாத்துறையில் தடம் பதித்திருக்கும் ஏ.ஈ.மனோகரன், ஈழத்துக் கவிதை இலயக்கியத்திலும் மலையகக் கவிதை இலக்கிய தளத்திலும் தவிர்க்க முடியாதவரான குறிஞ்சி தென்னவன், இலங்கையின் இனக்கலவர கறுப்பு வரலாற்றில் இடம்பிடித்த "ஸ்ரீ" போராட்டத்தில் உயிர்நீத்த பிரான்சிஸ், ஐயாவு போன்றோர் இம்மண்ணின் வரலாற்று தடங்களாகின்றனர்.

உலகப்புகழ் பெற்ற புகைப்படப்பிடிப்பாளரான ஜூலியா மாக்ரட் கெம்ரூன் அவர்களின் கல்லறை அமைந்துள்ளதும் இப்பிரதேசத்திலேயே.

மலையக மக்கள் உதிரத்தை உதிர்த்து உழைத்தன் விளைவாக உலகச் சந்தையில் அதிக விலைபோகும் பொகவந்தலாவை தேயிலை (Bogawanthalawa Tea) இப்பிரதேசத்தின் பெருமையை உலகுக்கு பறைசாற்றுகின்றது.

இயற்கைக் கனிய வளமான மாணிக்கக் கற்கள் அதிகமாகக் காணப்படும் வளமிக்க பிரதேசமாகவும்... மலையக பாரம்பரிய கலைகளான காமன் கூத்து, அர்சுணன் தபசு, பொன்னர் சங்கர், கெங்கையம்மன் கூத்து இன்றும் வாழும் இடமாகவும் அமைந்துள்ளது.

இத்தனை வரலாறு கொண்ட இப்பிரதேசத்தில் மற்றுமொரு வரலாறே கெர்கஸ்வோல்ட் இல.02 தமிழ் வித்தியாலயம்.

1992களுக்கு முன் இப்பாடசாலை இருந்ததாக கூறப்பட்டாலும் உறுதியான சான்றாதாரங்கள் இன்மையினால் 1992னையே ஆரம்பமாகக் கொள்ளவேண்டியுள்ளது. கெர்கஸ்வோல்ட் மத்திய பிரிவு, மேற்பிரிவு, கீழ்பிரிவு, எல்படை மேற்பிரிவு, கீழ்பிரிவு, வானகாடு, டன்பாரை, சிங்காரவத்தை, மோரார் மேற்பிரிவு, பொயிஸ்டன், சாஞ்சிமலை போன்ற தோட்டங்களில் உள்ள மாணவர்களுக்குத் தாய் பாடசாலையாகவும் தலைமை பாடசாலையாகவும் விளங்குகின்றது.

அதிபர் உட்பட 4 ஆசிரியர்களுடன் தனது சேவையினை தொடங்கிய இப்பாடசாலை இன்று 25 வருடங்களை எட்டியிருக்கின்றது. இப்பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்கள், கல்வி... கலை... ஊடக துறைகளிலும், புகையிரத சேவை... இலங்கை போக்குவரத்து சேவை... தபால் சேவை... உள்ளூராட்சி மன்றங்கள்... தனியார்துறை... மற்றும் அரசியல் என பலதுறைகளிலும் உயர்ந்து நிற்கின்றனர். இக்கல்விசேவையின் உச்ச அடைவாக இப்பாடசாலையில் பயின்ற ஒரு மாணவன் இன்று பல்கலைகழகத்தில் மருத்துவபீட மாணவன் என்பதில் இப்பாடசாலை பெருமைகொள்கிறது.

கெர்கஸ்வோல்ட் இல.02 தமிழ் வித்தியாலயம் 2020இல், உயர்தர வகுப்பினை கொண்ட பாடசாலையாகவும், அதிகமான மாணவர்களை உயர்தர வகுப்பிற்கும், பல்கலைக் கழகத்திற்கும் அனுப்பும் கல்விக் கூடமாகவும், வெறுமனே ஏட்டுக் கல்வியோடு நின்றுவிடாது இணைப் படவிதான செயற்பாடுகளோடும் சிறந்த தலைமைத்துவ பண்பினை உருவாக்கும் பாசறையாகவும் அமைய வேண்டுமென்பதை இலக்காகக் கொள்ள வேண்டும் என்பதே எமது எதிர்ப்பார்ப்பு.

சமூகமாற்றத்தின் மூலமாக அமையும் கல்வியை வழங்கும் இப்பாடசாலை தசாப்தங்கள் கடந்தும் அதன் சேவை தொடர... ஒன்றிணைவோம் ! ஒத்துழைப்போம் !! மீளெழுச்சி பெறுவோம் !!!

ISBN 978-955-7382-00-5

Rs. 350.00